# கானலில் மான்




தெணியான்

பூபாலசிங்கம் பதிப்பகம்

# கானலில் மான்

- தெணியான் -

## பதிப்பு விபரம்

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | "கானலில் மான்" |
| பதிப்பு | : | ஆகஸ்ட் 2002 |
| பதிப்புரிமை | : | ஆசிரியர் |
| ஆசிரியர் | : | தெணியான் |
| வெளியீடு | : | R. P. ஸ்ரீதரசிங்<br>'பூபாலசிங்கம் பதிப்பகம்'<br>340, செட்டியார் தெரு, கொழும்பு - 11. |
| கணினி வடிவமைப்பு | : | ப. காத்யாயினி<br>பவானி கிருஷ்ணமூர்த்தி |
| நூல் வடிவமைப்பு | : | சு. கிருஷ்ணமூர்த்தி |
| அச்சுப் பதிப்பு | : | சக்தி என்டர்பிரைஸஸ் |
| அட்டைப்பட ஓவியம் | : | ரமணி |
| விலை | : | 200/- |

| | | |
|---|---|---|
| TITLE | : | KAANALIL MAN |
| AUTHOR | : | THENIYAN |
| PUBLISHED BY | : | R. P. SRITHARASINGH<br>'POOBALASINGHAM PATHIPPAKAM'<br>340, SEA STREET, COLOMBO -11. |
| LAYOUT & DESIGN | : | S. KRISHNAMOORTHY<br>BHAVANI KRISHNAMOORTHY<br>P. KATHYAYINI |
| ARTWORK (COVER) | : | RAMANI |
| PRINTED BY | : | SHAKTHI ENTERPRISES |
| PRICE | : | 200/- |
| ISBN | : | 955-9396-07-2 |

**தெணியான் அவர்களுடைய மணிவிழாவையொட்டி**
**இந்நூல் வெளியிடப்படுகின்றது**

## பதிப்பு விபரம்

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | "கானலில் மான்" |
| பதிப்பு | : | ஆகஸ்ட். 2002 |
| பதிப்புரிமை | : | ஆசிரியர் |
| ஆசிரியர் | : | தெணியான் |
| வெளியீடு | : | R. P. ஸ்ரீதரசிங்<br>'பூபாலசிங்கம் பதிப்பகம்'<br>340, செட்டியார் தெரு, கொழும்பு - 11. |
| கணினி வடிவமைப்பு | : | ப. காத்யாயினி<br>பவானி கிருஷ்ணமூர்த்தி |
| நூல் வடிவமைப்பு | : | ஸ. கிருஷ்ணமூர்த்தி |
| அச்சுப் பதிப்பு | : | சக்தி என்டர்பிரைஸஸ் |
| அட்டைப்பட ஓவியம் | : | ரமணி |
| விலை | : | 200/- |

| | | |
|---|---|---|
| TITLE | : | KAANALIL MAN |
| AUTHOR | : | THENIYAN |
| PUBLISHED BY | : | R. P. SRITHARASINGH<br>'POOBALASINGHAM PATHIPPAKAM'<br>340, SEA STREET, COLOMBO -11. |
| LAYOUT & DESIGN | : | S. KRISHNAMOORTHY<br>BHAVANI KRISHNAMOORTHY<br>P. KATHYAYINI |
| ARTWORK (COVER) | : | RAMANI |
| PRINTED BY | : | SHAKTHI ENTERPRISES |
| PRICE | : | 200/- |
| ISBN | : | 955-9396-07-2 |

# பதிப்புரை

எழுத்தாளர் தெணியானின் 'கானலில் மான்' எனும் நாவலை பூபாலசிங்கம் பதிப்பகத்தின் ஒன்பதாவது வெளியீடாய் உங்கள் முன் படைப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம். வெறும் வியாபாரியாய் மட்டுமன்றி இலக்கியவாதிகளின் நண்பனாகவும், காவலனாகவும் விளங்கிய எங்கள் தந்தையார் பூபாலசிங்கம் அவர்களின் கனவுகளில் ஒன்றை நனவாக்குகிறோம் எனும் உண்மையில் எமது மனம் எல்லையற்ற மகிழ்ச்சி அடைகிறது.

ஆயிரம் புத்தகசாலைகள் நம் மண்ணில் இருந்தாலும் ஆக்ககர்த்தாக்களும் அறிஞர்களும் தம் வீடு போல் உரிமை பாராட்டும் உறவு எமது புத்தகசாலைக்கே இருக்கின்ற தனித்தகுதி. அத்தகுதியை ஆக்கித் தந்தவர் எமது தந்தையார். மாக்ஸ்சீய கொள்கைகளை ஏற்றுக்கொண்டு அதன்வழி நடந்து விரிந்த மனத்தோடு அனைவரையும் அணைத்துக் கொண்டதால் எமது தந்தையாரை அறிவுலகு, சாதி, மத, இனம் கடந்து உறவாய்ப் பேணிற்று. அவ்வுறவு தந்த உரிமை இன்றுவரை எம்மோடும் தொடர்கிறது.

எம் தந்தையின் நெருங்கிய நண்பராய்த் திகழ்ந்தவர் எழுத்தாளர் தெணியான் அவர்கள். அவ்வுறவால் இன்றும் எம்மையும் எமது நிறுவனத்தையும் உண்மையாய் நேசிக்கும் பண்பாளர். சமூகப் பிரச்சனைகளை உட்சென்று காணும் திறம் வாய்ந்த எழுத்தாளர். தான் கண்டவற்றை வாசகரும் உணரும் வண்ணம் உரைக்கவல்ல எழுத்தாற்றல் பெற்றவர். இம்மண்ணில் இனங்காணப்பட்ட எழுத்தாளர்களுள் ஒருவர். முன்னரே இவரது நாவல்கள் பலவற்றை எமது பூபாலசிங்கம் பதிப்பகத்தால் வெளியிட்டுள்ளோம். இப்போது இவரது 'கானலில் மான்' எனும் நாவல் எமது ஒன்பதாவது வெளியீடாய் வெளிவருகின்றது.

நம் மண்ணில் பதிப்பு முயற்சிக்கான ஆதரவு அருகி வருகின்றது. இலாபம் தராது எனத் தெரிந்தும் இப்பதிப்பு முயற்சியைத் தொடர்கிறோம். நம் மண்ணுக்கெனத் தனித்துவமான ஓர் வாழ்க்கை முறை உண்டு. ஈழத் தமிழினத்தின் விழுமியங்களாய் இனங்காணப்பட்ட பல விடயங்கள் இன்றைய போர்ச்சூழலால் சிதைவுற்று நலிவுறும் இவ்வேளையில் அவ்வுயர் விழுமியங்களைப் பதிவு செய்வது அவசியமாகின்றது. நம் இளைய தலைமுறைக்கு ஈழத்தமிழர் வாழ்வை இனங்காட்ட நம்

மண்ணில் ஊறிய ஆக்ககர்த்தாக்களால் மட்டுமே முடியும் என்பது திண்ணம். அத்தகு ஆற்றல்மிகு ஈழத்து எழுத்தாளர்களின் சிறந்த ஆக்கங்களை நம் மண்ணின் மைந்தர் முன் படைப்பது இன்றைய சூழலில் வரலாற்றுக் கடமையாய்ப்படுகின்றது.

எம் தந்தை காட்டிய பாதையில் இலாபம் கருதாது அவ்வரலாற்றுக் கடமையை செய்ய முனைகின்றோம். அம்முயற்சியின் விளைவே எழுத்தாளர் தெணியானின் 'கானலில் மான்' என்னும் இந்நூல். வாசகர்களைப் பயன்பெற வேண்டிப் பணிகிறோம்.

நேசத்துடன்

பூ. ஸ்ரீதரசிங்

அதிபர்
'பூபாலசிங்கம் பதிப்பகம்'
340, செட்டியார் தெரு
கொழும்பு - 11

## முன்னுரை

### நானும் இந்த மானும்

**வி**த்தியாசமான எனது இன்னொரு படைப்பு "கானலில் மான்" என்னும் இந்த நாவல். ஒரு நாவல்போல எனது இன்னொரு நாவல் இருப்பதில்லை என்பதனை இந்த நாவல்மூலம் மீண்டும் நான் உறுதிப்படுத்தி இருக்கின்றேன். வாழ்ந்து கொண்டிருக்கும் இந்தச் சமூகத்தை நன்கு படித்து, இந்த நாவலுக்கூடாகச் சமூகத் துக்கு எடுத்துச் சொல்லும் செய்தி, அந்தச் செய்தியை எடுத்துச் சொல்லி இருக்கும் உத்திமுறை என்பன தமிழ் நாவல் இலக்கிய உலகுக்குச் சராசரியானவை அல்ல. எனக்கு, என்றுமுள்ள சமூகப் பிரக்ஞையோடு இந்த நாவலைப் படைத்திருக்கும் அதேவேளையில், வாசகர்கள் விரும்பிப் படிக்கும் இலக்கியச்சுவை மிகுந்த ஒரு கலைப் படைப்பாக இது விளங்கவேண்டும் என்னும் அக்கறையுடன் இதனை எழுதி யிருக்கின்றேன். எனது இந்த அக்கறை "பொற்சிறையில் வாடும் புனிதர்கள்" (1987), "மரக்கொக்கு" (1994), "காத்திருப்பு" (1999) என வளர்ந்து வந்து இன்று "கானலில் மான்" வரை மேலும் தொடர்ந்து செல்வதாக நான் கருதுகின்றேன்.

1987இல் நான் ஓய்வாக இருந்த ஒரு சமயத்தில் இந்த நாவலை எழுதி முடித்தேன். அன்றிருந்த சூழ்நிலைகள் காரணமாக அப்பொழுது இதனை நூலாக வெளியிடும் முயற்சிகளில் ஈடுபாடு காட்டாது, ஒரு புறம் தூக்கி வைத்துவிட்டு, பின்னர் நான் மறந்து போனேன். எனது எழுத்தாக்கங்கள் பற்றிய பெருமளவு விவரங் களை அறிந்து வைத்திருக்கும் எனது சின்ன மகள் ஜானகி, அண்மையில் இந்த நாவல் பிரதியைத் தூக்கிவந்து எனது கையில் தந்தாள். கையில் கிடைத்த எனது பிரதியை மிகுந்த ஈடுபாட்டுடன் மீண்டும் படித்துப் பார்த்தேன். அந்த முதற் பிரதி மனசுக்கு நிறைவை, மகிழ்ச்சியை எனக்குத் தந்தது. இப்படியொரு பிரதியை எழுதி வைத்துக்கொண்டு பின்னர் இதனை ஏன்தான் மறந்திருந்தேன் என்பதனை உண்மையில் நான் விளங்கிக்கொள்ள இயலாது வியந்துபோனேன். எனது ஞாபகக்குறைவை எண்ணி நானே மனம் நொந்துகொண்டு மறுபடியும் நாவலை எழுதி, இப்பொழுது மனநிறைவோடு முடித்திருக்கின்றேன்.

பதின்நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் இந்த நாவல் எழுதப்பட்டு, இப்பொழுது காலங்கடந்து நூலாக வெளிவரும் ஒரு பழைய நாவலென வாசகர்கள் கருதுவார் களேயானால், அது மிகப் பெரிய தவறு. சமகால நிகழ்வுகளை உடனுக்குடன் பதிவு

செய்யும் ஓர் ஆவணமல்ல இந்த நாவல். காலங்கடந்து வரலாற்றுத் தரவுகளெனப் பேசப்படும் நிகழ்வுகளின் தொகுப்பல்ல இந்தப் படைப்பு.

மனித இதயங்களில் இருந்து எழும் ஏக்கப் பெருமூச்சுகளை எடுத்துச் சொல்லும் இந்த நாவல் எந்தக் காலத்துக்கும் ஏற்புடைய ஓர் இலக்கியப் படைப்பு. அன்புக்காக ஏங்கிக்கொண்டிருக்கும் பரிதாபத்துக்குரிய ஒரு மனிதன் வாழும்வரை இந்த நாவலும் இந்தச் சமூகத்துக்கு வேண்டிய ஓர் இலக்கியமாக இருக்குமென நான் நம்புகின்றேன்.

இன்று இந்த நாவல் பூபாலசிங்கம் புத்தகசாலை நூல் வெளியீட்டுப் பகுதியினரால் அதன் உரிமையாளர், எனது அன்புக்குரிய பூபாலசிங்கம் ஸ்ரீதரசிங் அவர்களால் நூலாக வெளியிடப்படுகின்றது. இந்த நூலுக்கான அட்டை ஓவியத்தை நண்பர் ஓவியர் ரமணி அவர்கள் வரைந்து தந்துள்ளார்கள். இவர்களையும் இந்த நூல் வெளிவருவதற்கு உதவியாக இருக்கும் ஏனையவர்களையும் நன்றியுடன் நினைவு கூருகின்றேன்.

தெணியான்

'கலையருவி'
கரணவாய் வடக்கு
வல்வெட்டித்துறை

# கானலில்மான்

– தெணியான் –

## 01

அந்த அறையின் கதவுக்கு நேர் எதிர்ச்சுவரில் கை உயர்த்தித் தொடும் உயரத்தில் திறந்து போட்டுக் கிடக்கிறது சிறிய ஒரு யன்னல். காலை ஒளிக்கதிர்கள் அந்த யன்னல் கம்பிகளில் உராய்ந்து உராய்ந்து கூரேற்றிக்கொண்டு உள்ளே பாய்ந்து வந்து இவனைத் தாக்குகின்றன.

இவனுக்கு அப்போதுதான் உறக்கம் கலைந்து திடீரென விழிப்புத் தட்டுகிறது.

நேரம் என்னாகிறது!

ஏழு மணி தாண்டி விட்டது.

ச்சே, இவ்வளவு நேரம் படுத்துக் கிடந்திருக்க வேண்டாம். உள்ளத்தில் திடீரென ஒரு பரபரப்பு.

படுக்கை விட்டு உடனே எழுந்துவிட வேண்டும் என்னும் எண்ணம் மனசில் உதிக்கிறது. ஆனால், எழுந்திருக்கவில்லை. உடல் அசையவில்லை. அப்படியொரு அயர்வு.

கூரையை வெறித்து நோக்கிய வண்ணம் அசைவின்றித் துவண்டு கிடக்கின்றான்.

கடந்த இரவு வீடு வந்து சேர்ந்த வேளை நேரம் என்ன என்பது உண்மையில் இவனுக்குத் தெரியாது. இவன் கையில் ஒரு ‘வோர்ச்’ கட்டிக்கொள்வதற்கில்லை. வீட்டுச் சுவரில் அல்லது மேசைமீது ஒரு மணிக்கூடு இல்லை. நேரம் அறிந்து கொள்ளும் ஆவலும் இவனுக்கு மனசில் இல்லை. எட்டு மணி தாண்டிய பிறகுதான் வீடு வந்து சேர்ந்திருக்க வேண்டும். அல்லது ஒன்பது மணியாகவும் அந்த நேரம் இருந்திருக்கக்கூடும். நிச்சயமாக எதையும் சொல்வதற்கில்லை.

கடந்த இரவு அமாவாசை இரவு. கிருஷ்ண பட்சம். அமாவாசை என்றால் கருமைதான் நினைவுக்கு ஓடி வருகிறது. அமாவாசையில் பிறக்கின்றவர்கள் தோற்றத்திலும் அமாவாசைக் கருமையாக இருப்பார்களாம். உள்ளமும் அவர்களுக்கு அப்படித்தானாம். அதனால்தான் ‘அமாவாசைக் கள்ளன்’ என்று அவர்களைச் சொல்லிக் கொள்வார்கள். அப்படியான ஒரு மை இருட்டு, தொட்டால் கையில் ஒட்டிக் கொள்ளும் கரி இருள், படுபயங்கர அமாவாசை இருள்.

வாழ்வில் எந்தக் கொடிய இருள், செல்லும் வழியை அடைத்துக் கொண்டு கிடந்தபோதும் பழகிப்போன பாதையில் தட்டுத்தடங்கல் இல்லாது வெகு வேகமாக ஓடிச்செல்ல வல்லது மனித மனம். அந்த மனசுக்குப் பார்வை எதற்கு! குருட்டு விழிகள் மாத்திரம் போதுமானவைகளல்லவா! இவன் எண்ணிக்கொண்டு இருளைக் குடைந்து வழி சமைத்த வண்ணம் என்றும் போலச் சிரமமின்றி வீடு வந்து சேர்ந்தான்.

இவன் வீட்டில் அப்போது விளக்கெரியவில்லை. அது அணைந்து போய்விட்டது. விளக்கை அணைத்து வைத்துவிட்டு அடுத்துள்ள அறைக்குள் சென்று அவள் படுத்துக்கொண்டு விட்டாள்.

இவன் வருகைக்காக எப்பொழுதேனும் அவள் எதிர்பார்த்துக் காத்திருந்ததில்லை.

வீட்டு வெளிப் படலையை மெல்லத் திறந்து உள்ளே வந்து, சயிக்கிளை நிதானமாகத் தூக்கி எடுத்து விறாந்தைச் சுவரோடு சார்த்தி நிறுத்திவிட்டு, பூட்டாமல் மூடிக்கிடக்கும் தனது அறைக் கதவைத் தள்ளித் திறந்துகொண்டு அறைக்குள் நுழைகின்றான். உடலெங்கும் வியர்த்துக் கொட்டுகிறது. உடைகள் எல்லாம் சொட்டச்சொட்ட நனைந்து தெப்பமாகிக் கிடக்கின்றன. உடலில் எண்ணெய் படிந்து கிடப்பதான ஒரே பிசுபிசுப்பு. எழுந்து நிற்பதற்கும் இயலாத சோர்வு. வீடு வந்து சேரும் வரை இவை எவையும் இவனுக்குத் தெரியவரவில்லை. சில்லென்று குளிர்ந்த நீரை மொண்டுமொண்டு தலையில் ஊற்றிக்கொள்ள வேண்டுமென மனசில் ஒரு ஆவல். அப்படி ஊற்றிக் கொண்டால் இப்பொழுது எவ்வளவு சுகம்! களைப்பும் சோர்வும் எல்லாம் முற்றாக நீங்கி சுகமாக

உறங்கலாம். சுகமாகப் படுத்துத் தூங்கித்தான் எவ்வளவு காலம்; மெல்லச் சரிந்து படுத்துக் கொண்டு உடலைத் தளரவிட்டு ஆழ்ந்து உறங்கும்போது பெறும் இன்பத்துக்கு ஈடாக வேறு எதைத்தான் சொல்ல லாம்? நீராட வேண்டுமானால் இப்போது கிணற்றுக்குப் போயாக வேண் டும். இந்த இருளில் கிணற்றில் போய்நின்று நீராடுவது என்பது நடக்கக் கூடிய காரியமா?

வியர்வையில் நனைந்து கிடக்கும் உடைகளை களைந்து மூலையில் தொங்கும் சீலைக்கொடியில் தூக்கி வீசுகின்றான். இவனிடமுள்ள ஒற்றைக்கொற்றையான சாறத்தை அந்தக் கொடியிலிருந்து இழுத் தெடுத்து அரையில் சுற்றிக்கொண்டு தொப்பென்று விழுந்து படுத்துக் கொண்டான்.

இப்போது உறக்கம் கலைந்த பிறகும் உடலில் இருளின் கருமை ஒட்டிக்கொண்டு கிடப்பதான உணர்வு மனசில் படிந்து கிடக்கிறது. கைகளைத் தூக்கி முகத்துக்கு நேரே உயரப் பிடித்துக் கொண்டு உற்றுப் பார்க்கின்றான். சிரிப்பு பொத்துக் கொண்டு வருகின்றது. சிரிப்பை இவனால் அடக்க முடியவில்லை. சிறுபிள்ளைத்தனமான தன் செயலை எண்ணி, "ஹா. . . . ஹா. . . . ." என வாய் விட்டு நகைக்கின்றான்.

சூடாக ஒரு கோப்பி, வாசனை கமகமக்க இப்போது குடித்தால் நாவுக்கும் மனசுக்கும் இதமாக இருக்கும். உடல் சோர்வும் சோம்பலும் இருந்த இடம் அறியாமல் பறந்துபோகும். காலையில் எழுந்து சுடச்சுட ஒரு கோப்பி குடிப்பதற்கு மனசு தவிக்கும். காலைக் கோப்பிக்கு மற்றைய நேரங்களில் இல்லாத ஒரு தனிச்சுவை. ஆசிரியராக மலையகத்துக்குப் பணிபுரியச் சென்ற பிறகு தேநீரிலும் மனசை மயக்கும் சுவையொன்றி ருப்பதைக் கண்டு கொண்டான். அந்த அலாதியான சுவையை அனுபவித்துச் சுவைப்பதற்கென்று யாழ்ப்பாணத்தில் 'சிற்றி பேக்கரி' இருந்த காலத்தில் ஆவலுடன் பலர் அங்கு போவதுண்டு. இவனும் சில சமயங்களில் அந்தப் 'பிளேன்ரீ'யைச் சுவைத்துப் பருகி இருக்கின்றான்.

திருமணம் நடந்தேறிய மறுதினம் காலையில் எழுந்து கால், முகம் கழுவி வாய் கொப்பளித்துவிட்டு ஒரு தேநீருக்காக இவன் காத்திருந் தான்.

நேரம் நீண்டு கொண்டு போனது. ஆனால் தேநீர் வருவதாக இல்லை.

பல் துலக்கி முகம் இன்னும் கழுவிக்கொள்ளவில்லை. அதனால் தான் தேநீர் ஒரு வேளை தாமதம் ஆகின்றதோ!

ஆசிரியராக மலையகம் போவதற்கு முன்னர் இவனும் அப்படித் தான்.

மலையகத்தில் இந்த ஆசாரங்களை எல்லாம் கடைப்பிடிப்பதற்கு இவனுக்கு இயலாமல் போனது. உதிரத்தை உறைய வைக்கும் காலைக் குளிரில் கண் விழித்ததும் மெல்லிய வெந்நீரில் வாய் கொப்பளித்து ஆவி பறக்கும் தேநீரைக் கட்டிலில் இருந்தே பருகினான். அந்தப் பழக்கம் இவன் ஊருக்கு வந்த பிறகும் இவனுக்கு விட்டுப்போகவில்லை.

புதுமாப்பிள்ளை என்றால் எப்படி இருக்கும் வரவேற்பு!

தேநீரா! கோப்பியா! எது என்றாலும். ஆவி பறக்கும் முட்டைக் கோப்பியை நினைக்க நாவில் நீர் ஊறிக்கொண்டு வருகின்றது.

இப்பொழுது என்ன செய்யலாம்!

நேற்றுத்தான் இந்த வீட்டுக்கு வந்திருக்கும் புது மாப்பிள்ளை. வாய் விட்டு வலிந்து கொண்டு தானாக எப்படிக் கேட்பது?

வீட்டு விறாந்தையில் கிடக்கும் கதிரையில் அமர்ந்திருந்து அடுக் களை நோக்குகின்றான். மனைவியின் தாய் - மாமியானவள் அதற்குள் இருப்பது கண்ணில் படுகிறது. புது மருமகனைக் கண்டால் மாமி எப்படி யெல்லாம் ஓடியோடி உபசரிப்பாள்! ஆனால் அடுப்பில் நெருப்புமில்லை. புகை வெளிப்படும் அறிகுறியும் அங்கில்லை.

அவள் எங்கே போய்விட்டாள்! மனைவி. . . . ஜெகதாம்பிகை. அம்பிகை. . . . இல்லை, அம்பிகா என்று நாகரிகமாக அழைக்கலாம். இவன் எண்ணிக் கொண்டிருக்கும் போது அடுத்துள்ள அறையிலிருந்து ஜெகதாம்பிகை வெளியே வருகின்றாள்.

அவளை எப்படி இப்போது அழைப்பது!

அம்பிகையா? அம்பிகாவா?

வீட்டில் எப்படி அழைக்கின்றார்களோ!

சரி, அம்பிகா என்றே அழைப்போம்.

"அம்பிகா" மெல்ல அழைக்கின்றான்.

அவள் பார்வையும் முகமும் இவன் மனசுக்குக் குழப்பமாகிறது.

ஓ! தவறு செய்து விட்டேனோ! முன்னமே அவளிடம் கேட்டு வைத் திருக்க வேணும்!

இவன் தடுமாற்றத்தை அவள் விளங்கிக் கொண்டு சங்கோசத்துடன் மெல்லச் சொல்லுகின்றாள்.

"'செகம்' எண்டுதான் இஞ்சை சொல்லுறவை"

ஓ! அப்பிடியா!

பல்லை முதலில் துலக்குவோம்.

"பேஸ்ற் இருக்கா?"

"இல்லை"

"அப்ப. . . . ."

". . . . ."

"நீங்க. . . . . பேஸ்ற் பாவிக்கிறதில்லை?"

"இல்லை"

"ஏன்?"

"வீண் சிலவு"

"என்ன!"

"பல்லுப் பழுதாப்போகும்"

"அப்பிடியா?"

"கண்டதாலையும் தீட்டித்தான் உங்கடை பல்லிலே செழும்பு"

"என்ன?" உள்ளுக்குள் இவன் அதிர்ந்து போகின்றான். தொடர்ந்து "அப்ப நீங்க . . . . ."

"நாங்கள் கரிதான். வேணுமெண்டால் உமிக்கரி இருக்கிது"

ஓ . . . . . ! இதுவும் இயற்கை வைத்தியந்தான்! மனசில் நினைத்துக் கொண்டு உள்ளத்துள் சிரித்த வண்ணம் சாம்பல்மேடு நோக்கிப் போகின்றான். கோழிகள் ஒன்றுகூடி கிளறிவிட்டிருக்கும் சாம்பல் மேடு. அங்கொன்றும் இங்கொன்றுமாக கரித்துண்டுகள் சிதறிக் கிடக்கின்றன. இரண்டு கரித்துண்டுகளைத் தேடி எடுத்து அவைகளை வாயில் இட்டு மொறமொற என்று கடித்து விரலை வாய்க்குள் விட்டு பல் துலக்கத் தொடங்கினான். இவனுக்குப் பழக்கமில்லாத பல் துலக்கல். கரியோடு கலந்த உமிழ்நீர் கடைவாயிலும் கைவிரலிலும் வடிந்து ஒழுகுகிறது.

சாம்பல் மேட்டில் இவன் நிற்கின்றான். இவன் கோலம் கண்டு வீட்டு முற்றத்துக்கு வந்த புதுப்பெண் இவனை ஏறிட்டுப் பார்த்து உதட்டுக்குள் இளக்காரமாக சிரிக்கின்றாள்.

'இது கூடவா உனக்குத் தெரியாது?' அவள் விழிகள் இவன் மனசோடு இப்படிக் கேலி பேசுகின்றன.

இவன் ஒருவாறு பல் துலக்கி முடித்து, கிணற்றுக்குச் சென்று முகம் கழுவித் துவாய் ஒன்றினால் துடைத்து விட்டுக்கொண்டு மீண்டும் விறாந்தைக்கு வந்து கதிரையின் மீது அமர்ந்து கொள்ளுகின்றான்.

இனி என்ன ஒரு கப் கோப்பி அல்லது தேநீர்.

தேநீராக இருக்காது. கோப்பி, அதுவும் முட்டைக் கோப்பி, புது மாப்பிள்ளைக்குக் கொடுப்பதுதானே இங்குள்ள வழக்கம்.

இவன் மீண்டும் காத்திருக்கின்றான்.

எவ்வளவு நேரம் இப்படிக் காத்திருக்க முடியும்! இறுதியில் பொறுமையை இழந்து அவளிடம் கேட்கின்றான்.

"ரீ இல்லையா?"

"இதென்ன பழக்கம்? விடிய வெள்ளணச் சுடுதண்ணி வயித்திலை விடுகிறது?"

இவனால் வாய் திறந்து இதற்குமேல் பேச இயலவில்லை. மௌனமாகச் சில கணங்கள் அவளையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தவன், பின்னர் மெல்ல எழுந்து சயிக்கிள் வண்டி ஒன்றினை எடுத்துக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டு வெளியே போனான்.

## 02

தினம் அதிகாலை எழுந்ததும் தேநீர்க்கடை நோக்கி இவன் புறப்பட்டுவிடுவான். கடை திறக்கும் சமயம் முதல் ஆளாக அங்கு போய் நிற்பது இவன்தான். இன்று வழக்கத்துக்கு மாறாக இவ்வளவு நேரம் தாமதமாகிப்போனது. தேநீர்க்கடை நோக்கி இரண்டு கிலோமீற்றர் தூரம் வீட்டிலிருந்து போயாக வேண்டும். அந்தத் தூரம் தினமும் இவனுக்குப் பழகிப் போனதில், எம்பி எழுந்து ஒரு பாய்ச்சலில் குதித்து விழும் அளவு தூரமாக இப்பொழுது தோன்றுகின்றது.

வீட்டு விறாந்தையில் கடந்த இரவு சயிக்கிளைக் கொண்டு வந்து நிறுத்தியபோது தடம் பதிந்த ஈர மண்கோடுகள் இன்னும் அழிந்து போகவில்லை.

இப்பொழுது அந்தச் சயிக்கிளை எடுத்துக்கொண்டு வெளியே செல்வதற்கு மீண்டும் இவன் புறப்படுகின்றான்.

சயிக்கிள் வீட்டு வெளிப் படலை வரை வந்து விட்டது. இவன் தகரப் படலையை ஒரு கரத்தினால் மெல்லத் திறந்தவண்ணம் உள்ளே

திரும்பிப் பார்க்கின்றான். இவன் விழிகள் மகளைத் தேடுகின்றன. இவன் பார்வையில் அவள் வந்து இன்று விழவில்லை. பாடசாலைக்கு இன்று விடுமுறை நாள். ஞாயிற்றுக்கிழமை. இன்னும் அவள் துயில் கலைந்து எழுந்திருக்கவில்லை. இன்று உறங்குவதில் தன்னோடு அவளுக்குச் சரியான போட்டி. அவள்தான் இந்தப் போட்டியில் ஜெயித்து விட்டாள். யார் வெற்றி பெற்றால் என்ன! தன்னுடைய மகள்தானே! எனப் பெருமைப்பட்டுக்கொள்ளலாம் போல மனசுக்குத் தோன்றுகின்றது. மறுகணம் இதற்காகவா மகளை எண்ணிப் பெருமைப்பட வேணும்? என நினைத்துத் தனக்குள்ளே நகைத்துக் கொள்ளுகின்றான்.

மனசுக்கொரு சுகம், புறப்பட்டு வெளியே செல்லும் சமயங்களில் அவள் தரிசனம் கிடைக்கப் பெறுவதில்.

இந்த மனசில்தான் எத்தனை நம்பிக்கைகள்! எத்தனை கற்பனைகள்!

இது மூட நம்பிக்கையோ, அல்லது குருட்டு நம்பிக்கையோ! மனசில் திடமாகப் பதிந்து போய்க் கிடக்கும் பெரிய நம்பிக்கை. மகள் தரிசனம் பெற்றுக்கொண்டு புறப்பட்டு வெளியே போனால் அன்று செல்லுமிடமெல்லாம் காரியங்கள் சிறப்பாக நடந்தேறும். அந்த திருப்தி இன்று இந்த மனசுக்கில்லை. இவனுக்கு ஏமாற்றமாக இருக்கிறது. நெஞ்சு பொருமிக்கொண்டு வருகின்றது. மகளைத்தான் கண்டு கொள்ள முடியவில்லை. வீட்டிலிருந்து புறப்பட்டு வெளியே போகும் சமயம், வேறு யாருக்காவது சொல்லிக் கொண்டுபோக வேண்டாமா? அப்படிச் சொல்லிச் செல்லவேண்டுமென்று யார் இங்கே எதிர்பார்த்து இருக்கின்றார்கள்?

மகள் படுக்கை விட்டெழுந்து வெளியே வரப்போவதில்லை. அவளுக்காக அதில் காத்து நிற்பது வேண்டாத வேலை. ஓசைப்படாமல் தகரப் படலையை மெல்ல மூடிக்கொண்டு ஒழுங்கையில் இறங்குகின்றான்.

சயிக்கிளை மெல்ல உருட்டித் தள்ளி, இடது காலைத் தூக்கி பெடலில் வைத்து மெல்ல எம்பி எழும்பி, வலது காலைப் பின்புறமாகச் சுழற்றி எடுத்து சீற்றில் குந்தி இருப்பதற்கு எத்தனிக்கின்றான். அப்பொழுதென்று வலது கால் றப்பர் செருப்பு கழன்று தொப்பென்று கீழே வந்து விழுகின்றது. இவனுக்கு நெஞ்சு திக்கிடுகிறது. இரண்டு தடவைகள் முன்னரே அறுந்து தையல் போட்டுக் கொண்டுள்ள செருப்பு. மீண்டும் 'அறுகிறேன் அறுகிறேன்' என்று உயிர் விட்டுக் கொண்டிருக்கிறது. திரும்பவும் இப்போது அறுந்து போய்விட்டால், தைத்துக் கொடுக்கின்றவன் வேறு கேலி பண்ணுவான். தைத்தெடுப்பதற்குச் செலவு வேறு. தைத்துக் கொள்ள முடியாமல் போனால் புதுச் செருப்பு வாங்கியாக வேண்டும்.

வேட்டி கட்டிக் கொண்டு விட்டால் செருப்பெதுவும் போட்டுக்கொள்ள வேண்டாம்.

வெறும் காலோடு எங்கும் திரியலாம். ஆனால் அது நட்டம். வேட்டியை அடிக்கடி வெளுத்துக் கொண்டிருக்க வேண்டும்.

சயிக்கிளில் ஏறும்போது அந்தரப்படாமல் பார்த்தேறி இருக்க வேண்டும். ஏறும் சமயம் உந்தித் தள்ளியதில் சயிக்கிள் இப்போதும் முன்னோக்கி உருண்டு கொண்டிருக்கிறது. இவன் பதற்றத்துடன் கீழே குதித்து நிலத்தில் விழுந்து கிடக்கும் செருப்பை நோக்குகின்றான். நல்ல காலம், செருப்பு இன்னும் அறுந்து போய் விடவில்லை. சயிக்கிளைத் திரும்பப் பின்னோக்கி உருட்டிச் சென்று நிதானமாக செருப்பைக் காலில் கொழுவிக்கொள்ளுகின்றான். பின்பு இடது காலைப் பலமாக நிலத்தில் ஊன்றி, வலது காலைத் தூக்கி சீற்றுக்கு மேலாகப் போட்டு சாவதான மாக ஏறிச் சீற்றில் அமர்ந்து, படகு வலிப்பது போல அப்படியும் இப்படி யுமாக உடலை அசைத்தசைத்து சயிக்கிள் ஓட்ட ஆரம்பிக்கின்றான்.

பாம்புபோல வளைந்து வளைந்து செல்லும் கிராமத்துக் குச்சொ ழுங்கைகளுக்கு ஊடாக சயிக்கிள் வந்து கொண்டிருக்கிறது. ஒழுங்கை களை அண்மித்துள்ள வீடுகளின் ஓலை வேலி ஓரமாக சயிக்கிள் வந்து கொண்டிருக்கின்றது. இன்னும் ஒரு முடக்கில் திரும்பி நேராகச் சென்று மிதந்தால், வருவது பெருந்தெரு. சயிக்கிள் அந்த முடக்கில் வந்து மெல்லத் திரும்புகிறது.

“மாஸ்ரர் . . . . . மாஸ்ரர் . . . . .”

ஒழுங்கைக்கு அண்மையிலுள்ள வீட்டு முற்றத்தில் விளையாடிக் கொண்டு நிற்கும் சுட்டிப் பயல்கள் வெளியே ஓடி வருகின்றார்கள். இவன் வெகுதூரத்தில் வரும்போதே இவன் சயிக்கிள் இவன் வருகையைக் கட்டியம் கூறிவிடும். இவன் வருகையைத் தினமும் எதிர்பார்த்துக் காத்தி ருக்கின்றார்கள் இந்த வாண்டுகள். இவர்கள் பள்ளிக்கூடம் போவதற்கு இதுவரை ஆரம்பித்திருக்கமாட்டார்கள், ஒருவேளை நேசறிக்குப் போய் வரக்கூடும்.

இவர்கள் தினமும் காத்திருக்கின்றார்கள் என்பது மனசுக்கு என்ன தித்திப்பு! தன்மீது இவர்களுக்கு எவ்வளவு பிரியம்! தனக்காகக் காத்தி ருக்கின்றார்கள். சுட்டிப்பயல்கள், இவர்கள் வளர்ந்து பெரியவர்களான பிறகும் இப்படி நேசத்துடன் நெருங்கி வருவார்களா?

“மாஸ்ரர் . . . . . மாஸ்ரர் . . . . . ஒண்டு”

கையைத் தூக்கி ஆட்காட்டி விரலை நீட்டிக் காட்டி ஒன்று கேட்கும் போதுதான் எவ்வளவு அழகு. குழந்தை அழகு; கொள்ளை அழகு; மாசு படியாத மலர் அழகு.

இவர்கள் எப்பொழுதும் இப்படி ஒன்று கேட்டுக் கொண்டிருக் கின்றார்கள். அந்த ஒன்றுதான் என்ன? இவர்களைப் பரிச்சயம் இல்லாத வர்களுக்கு இந்த விளையாட்டு நிச்சயம் விளங்காது.

காலை மாலை இரு வேளைகளிலும் ஒரு பூசகர் இந்தத் தெருவில் போய் வந்து கொண்டிருக்கின்றார். ஏதோ ஒரு சின்னக் கோயிலுக்குப் பூசை பண்ணுகின்றவர். பூணூல் போடாதவர்; பண்டாரம், அந்தப் பண்டாரக் கிழவனைக் கண்டு கொண்டால் இந்த வாண்டுகளுக்கெல் லாம் ஒரே குதூகலம்.

அவர் சயிக்கிள் இருக்கிறதே அதன் நேர்த்தியை நாளெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கலாம். அவ்வளவு அக்கறையாகத் தன்னைத் தானும் அவர் பேணுவதில்லை. முன்வெட்டும் பின் குடுமியும், தொந்தி வயிற்றில் தூக்கிக் கட்டிய வேட்டியும், அதற்குமேல் சுற்றிய முண்டுச் சால்வையும் திருநீறு சந்தனமுமாகத் தோன்றும் கட்டைக் கிழவர். அந்தச் சயிக்கிள் அவரது பஞ்சகல்யாணி. தினம் ஒயிலில் குளிப்பாட்டி துடைத்து பளபள என்று மினுக்கம் காட்டும். சிவப்பு நிறக் கற்கள் முன்னும் பின்னும் அக்கினித் துண்டங்களாக ஜொலிக்கும். சக்கரங் களுக்கு மத்தியில் நைலோன் தும்பினாலான வண்ணப் பூச்சரங்கள் புதுமெருகு குலையாமல் சக்கரங்களோடு சேர்ந்து எப்பொழுதும் மெல்லச் சுழன்று கொண்டிருக்கும். ஹான்டிலுக்கு முன் தலையாக நீண்டிருக்கும் 'ஹெட்' மஞ்சள் துண்டொன்றினால் குளிருக்குக் கட்டியது போல மூடிக் கட்டப்பட்டிருக்கும். நீள்சதுரக் கண்ணாடிகள் சோடியாகப் பக்கத்துக்கொன்று ஹான்டிலில் இருந்து தாங்கிக் கம்பிகளில் மேலு யர்ந்து பளிச்சிட்டு நிற்கும். அந்தக் கண்ணாடிகளுக்குக் கீழ் சுழன்று சுழன்று ஒலி எழுப்பும் இரண்டு பெல்கள் ஹான்டிலில் பூட்டிக் கிடக்கும். ஹான்டிலின் நட்ட நடுவே இன்னொரு பெரிய பெல். சீற்றுக்குப் பின்னே பெரிய ஒரு இரும்புக் கரியர். கோயில் பூசைக்குரிய பண்டங்களை அந்தக் கரியரில் வைத்து நைலோன் கயிற்றினால் கட்டிக் கொண்டு பண்டாரக் கிழவர் தனது பஞ்சகல்யாணியில் ஆரோகணித்து வந்துகொண்டிருப்பார்.

இந்த வாண்டுகளின் கண்களில் அவர் பட்டுவிட்டால் போதும் எல்லோரும் தெருவுக்கு ஓடிவந்து விடுவார்கள். குதித்துக் கும்மாளமிட்ட வண்ணம் அவரைத் தொடர்ந்து பின்னால் ஓடுவார்கள். “ஐயா ஒண்டு” என்று இவர்கள் கோரிக்கை கோரசாக எழும். அந்தக் கோரிக்கையை எதிர்பார்த்து இருந்தவர்போல முகம் மலர்ந்து உற்சாகத்துடன் ஒரு தடவை சயிக்கிள் பெல்லைக் 'கிணிங்' என்று அடிப்பார். சுட்டிப் பயல்கள் அந்த அளவில் திருப்திப்பட்டுவிட மாட்டார்கள். தொடர்ந்து “ஐயா இரண்டு” என்று கோரிக்கை விடுவார்கள், அவர் சிரித்துக் கொண்டு “கிணிங் கிணிங்” என்று இரண்டு தடவைகள் ஒலி எழுப்புவார். திரும்பவும் “ஐயா மூண்டு” என்று கூவுவார்கள். அவரும் சலிக்க

மாட்டார். "கிணிங் . . . . கிணிங் . . . . கிணிங்" என்று பெல்லை அடிப்பார். அந்த நேரம் அவரும் ஒரு சிறுபிள்ளையாக மாறிவிடுவார். சயிக்கிளில் மெல்ல ஊர்ந்த வண்ணம் இவர்களுடன் இணைந்து தானும் விளையாடு வார். ஒன்று மாறி ஒன்றாக மூன்று பெல்லையும் அடித்தடித்துப் போய்க் கொண்டிருப்பார். அவருக்கும் இவர்களுக்குமிடையில் இப்படி இனம் புரியாத ஒரு பிணைப்பு. அவர் மனசுக்கு அந்தப் பிணைப்பு, அந்த நெருக்கம் தேவைப்பட்டிருக்க வேண்டும்.

பண்டாரக் கிழவருடன் இவர்கள் வைத்துக் கொண்டுள்ள அந்த விளையாட்டுத்தான் "மாஸ்ரர் . . . . . மாஸ்ரர்" எனக் குரல் கொடுத்துக் கொண்டு பின்னால் ஓடிவருகின்றார்கள்.

இவர்கள் தனக்காகக் காத்திருக்கின்றார்கள். இப்படிக் காத்திருக்கும் இவர்கள் மனசை மகிழ்விப்பதற்கு ஒரு தடவை 'கிணிங்' என்று ஒலி எழுப்ப முடியவில்லை. இவர்கள் மனசில் ஏமாற்றம் தோன்றி வளர்ந்து வரக் கூடாது. இவர்களை எப்படியும் மகிழ்விக்க வேண்டும். வருகின்ற மாதம் சம்பளத்தில் ஒரு பெல் வாங்கி சயிக்கிளில் பூட்டிக் கொள்ள வேணும். எத்தனை தடவைகள் இப்படி எண்ணிக் கொண்டாயிற்று. ஆனால் ஒரு சயிக்கிள் பெல் மாத்திரம் வாங்குவதற்கு இயலவில்லை.

சயிக்கிள்களில் இப்பொழுது பெல் இருக்கின்றதோ! இல்லையோ! யார் பெல் அடிக்கின்றார்கள்? பெல் அடித்தால் அவன் நயினரி - பழைசு. நாக்கை மடித்து 'டொக் டொக்' என்று சத்தம் எழுப்பவேண்டும். அல்லது மெல்லச் சீழ்க்கை அடிக்க வேண்டும். இதுதான் இளவட்டங் களின் இப்போதைய பெல். வீதியில் சென்று கொண்டிருக்கும் இளங் கன்னியரின் பார்வையைத் தமது பக்கம் இழுக்கும் நவீன யுக்திதான் இந்த வாய் ஒலிகள்.

இவனுக்கும் மனசில் ஒரு ஏக்கம்.

கிராமங்களுக்கு மின்சார வசதி வந்துவிட்டதால் வீட்டுக்கு வெளியே பொதுக்கிணறுகள் நாடி இப்போது எந்தப் பெண் இடுப்பில் குடம் சுமந்து வருகின்றாள்! மின்சாரம் தடைப்படுகின்ற சமயங்களில் தண்ணீர்க் குடங் களைச் சுமந்துகொண்டு தெருக்களில் இறங்கிவிடுவார்கள் பெணகள். அந்த இளநங்கைகளைக் காணும்போதெல்லாம் இவனுக்கும் மனசில் ஓர் ஆசை.

ஆசைகள் எல்லாம் சொல்லிக் கொண்டா வந்து பிறக்கின்றன? பிறந்த வீட்டுக்குள் மடிந்து போகும் ஆசைகள் சில. அப்படி இல்லாது உயிர்ப்புடன் கிடந்து மனத்தொட்டிலில் ஊசலாடும் ஆசைகளும் இல்லாமல் இல்லை. அவைகளை எல்லாம் வளர்த்தெடுத்தால் இறுதி யில் என்ன ஆகும்.

கடிவாளம் போட்டு மனதை இழுத்திழுத்து அடக்கிக் கொண்டுதான் எப்பொழுதும் இவன் போய்க் கொண்டிருந்தான்.

ஒருதினம் கன்னிப் பெண்ணொருத்தி இடையில் தண்ணீர்க்குடம் ஏந்தித் தெருவில் இவன் முன்னே போய்க் கொண்டிருந்தாள். படம் விரித்தாடும் கருநாகம் போன்று வாரிமுடித்த நீண்ட சடையும், தண்ணீர் குடம் வைத்துச் சுமந்து செல்வதற்கென்றே கடைந்தெடுத்த மெல்லிய இடையும், மெல்லமெல்ல அடி எடுத்து வைக்கும் அவளின் ஒயிலான நடையும் இவனைக் கிறங்க வைத்தன.

அவள் பின்னழகில் இவன் தன்னை மறந்தான். நேசம் நிறைந்த குளிர்ச்சியான ஒரு பார்வையை ஒரு தடவை அவள் வீசமாட்டாளா?

மதுரமான ஒரு யௌவனப் புன்னகை தன்னை நோக்கி அவள் சிந்தமாட்டாளா?

இவன் மனசு தவித்துக் கொண்டு அவள் பின்னால் போய்க்கொண்டிருக்கிறது.

அவள் பார்வை எப்படியும் தன் பக்கம் திரும்ப வேண்டும்.

இளவட்டங்கள் போல நாக்கை மடித்து 'டொக்டொக்' என்று அடிக்கலாம், அல்லது மெல்லிய ஒரு சீழ்க்கை. அது அவள் கவனத்தை ஈர்க்கும் ஒரு பெல்லாகவும் இருக்கும்.

தனக்கென்ன வயதாகிப் போய்விட்டதா? கிழப் பருவமா வந்து விட்டது? நாற்பதுதான் நெருங்கிக் கொண்டிருக்கிறது.

சயிக்கிள் வேகத்தைத் திடீரெனத் தணித்து மெல்லமெல்ல வந்து கொண்டிருக்கின்றான்.

அவள் கவனத்தை ஏன்தான் கவரவேண்டும்!

அவள் பின்னழகையே அனுபவித்துக் கொண்டிருக்கலாம். அவள் பின்னால் தொடர்ந்து இப்படியே போய்க் கொண்டிருக்கலாம்! ஆனால் எப்படியும் அவளின் இணக்கமான ஒரு பார்வை தன்னை நோக்கித் திரும்புமானால் அது என்ன சொர்க்கம்!

நாக்கினை மடித்து இளைஞர்கள் போல் 'டொக் . . . . டொக்' என்று சப்தம் எழுப்ப இவன் எத்தனிக்கின்றான். ஆனால் வாயிலிருந்து அந்தச் சப்தத்தை இவனால் எழுப்ப முடியவில்லை. அப்படி இதுவரை இவன் ஓசை எழுப்பி அனுபவமுமில்லை. சரி, சீழ்க்கையாவது அடிக்கலாம் என்று முயற்சித்துப் பார்க்கின்றான். அதுவும் இயலவில்லை.

அந்தத் தெருவில் வேறு யாருமில்லாத ஏகாந்தம். அவள் மாத்திரம் போய்க்கொண்டிருக்கும் தனிமை. இந்தத் தருணம் தப்பினால் இனி எந்தத் தருணம் இங்கிதமாக வந்து வாய்க்கப் போகிறது?

இவனுக்குப் புல்லரிக்கிறது.

இவனுக்குள் ஒரு வெறி.

அவள் கவனத்தை எப்படியும் தன்பக்கம் திருப்பி ஆக வேண்டும்.

வேறு என்னதான் வழி!

அடித்தொண்டையினால் மெல்லிய ஒரு செருமல்.

ஆனால் அவள் கவனம் திரும்புவதாக இல்லை, இயல்பான செருமல் இது என்று அவள் கருதி இருக்கவேண்டும். இவனுக்கு ஏமாற்றம், ஆனாலும் இவன் சோர்ந்து போய்விடவில்லை. இயல்பை மீறிச் சற்று உரமாக மீண்டும் ஒரு தடவை செருமுகின்றான்.

அவள் சட்டென்று பின்புறம் தலையைத் திருப்பி நிமிர்ந்து நேருக்கு நேர் இவனை வெறித்து நோக்குகின்றாள்.

இவன் வேட்கையுடன் எதிர்பார்த்த அந்தப் பார்வை, அந்தச் சிரிப்பு, அந்த நளினம் எல்லாம் அக்கினியாக அவள் விழிகளில் இருந்து எழுந்து சுட்டெரிக்கின்றன.

இவனைப் பிடித்து இதுவரை அவன் தலைசுற்றிக் கொண்டிருந்த மயக்கம் பட்டென்று தெளிந்து கைகால்கள் உதற ஆரம்பிக்கின்றன. சயிக்கிள் தளம்புகின்றது. அவளைக் கடந்து முன்னே சென்றவன், தடுமாறி மணல்மீது குப்புற விழுந்துவிடப் போனவன், ஒருவாறு சமாளித்துக் கொண்டு வேகமாக ஓட ஆரம்பிக்கிறான்.

அவள் காறி உமிழும் ஓசை இவன் பின்னால் இருந்து வந்து, செவிகளில் விழுந்து குத்துகின்றது.

இவனுக்கு நெஞ்சில் மூச்சு முட்டுகிறது.

ஒரு பெண் தன்னை நோக்கி இணக்கமான ஒரு புன்னகை உதிர்ப்பதற்குத் தகுந்த ஒரு ஆணாகத் தான் இல்லையா?

இவன் தனக்குள் கேட்டுக்கொண்டான்.

ஒரு பெல் வாங்கத்தான் வேணும்.

# 03

“மாஸ்ரர் . . . . மாஸ்ரர் . . . . ஒண்டு . . . . ஒண்டு”

“டேய், அதென்ன மாஸ்ரர்! ‘ஸேர்’ எண்டு சொல்லுங்கோ.”

தெருவோர வீட்டிலிருந்து யாரோ ஒரு இளம் பெண் குரல் கொடுக்கின்றாள். அந்தச் சுட்டிப்பயல்களை எச்சரித்து நல்வழிப்படுத்த எண்ணுகின்றாள்.

அவள் அவர்களில் ஒருவனின் தாயாக இருக்கலாம். இல்லை, அவள் சித்தியாகவே இருப்பாள். அந்தச் சித்தி படித்த பெண்ணாக இருப்பாள்.

நிச்சயம் கல்யாணமாகாத கன்னிப்பெண் அவள். ஆனால் கல்யாணம் நிச்சயமானவளாக இருக்கவேண்டும். யாரோ ஒரு மாஸ்ரருக்கு மணமாலை சூடக் காத்திருக்கின்றாள். அந்த மாஸ்ரரின் இனிய நினைவுகளை மனசில் பவித்திரமாகச் சுமந்து வைத்திருக்கும் ஒருத்தி அவள். ஒரு கன்னிப் பெண்ணின் காதலைப் பெறுவது என்பது சாதாரணமான ஒரு காரியமா? அவன் அதிஷ்டசாலி. அவன் வாழ்க! அவன்மீது கொண்டுள்ள காதலால் மாஸ்ரருக்கு அவள் இவ்வளவு மதிப்பு. அவன் அவளுக்குக் கணவனான பிறகும் மாஸ்ரருக்கு இந்த மதிப்பு மரியாதைகள் அவள் தரவேண்டும். அவனைப் பார்த்து பூனையாக அவள் சீறிக் கொண்டு விழ வேண்டாம்.

இவன் சயிக்கிள் பெருந்தெருவுக்கு வந்து மிதந்து கிழக்கு நோக்கிச் சற்றுத் தூரம் ஓடி நாய் வீட்டை அண்மிக்கிறது. அந்த வீட்டுக்கு இவன் தனக்குள் சூட்டிக் கொண்டுள்ள திருநாமந்தான் அது. தெருவோரத்திலுள்ள அந்த வீட்டுக்கு முன்னுள்ள தெருவில் போவோர் வருவோரை எதிர்பார்த்துக் கிடப்பதுபோல மூன்று நாய்கள் எப்பொழுதும் படுத்துக் கிடக்கும். உடல் மெலிந்து வயிறு ஒட்டிப்போன பசித்த நாய்கள். இவன் வெகுதூரத்தில் வரும்பொழுதே அவைகள் இவனைக் கண்டு கொண்டன. அந்த நாய்கள் இனி இவனைச் சும்மா விடப்போவதில்லை. இவன் நெருங்கி நெருங்கி வந்து கொண்டிருக்கும்போதே, இவனுள் குழப்பமும் பதற்றமும் கொஞ்சம் கொஞ்சமாகப் பெருகிக் கொண்டு வருகின்றது. இவன் அவைகளை அண்மித்து விடுகிறான். அவைகள் உறுமிக் கொண்டு எழுகின்றன.

அவைகளுள் ஒன்று தவிட்டு நிறம், நீண்டு உயர்ந்த நெடிய உருவம். எலும்புகளை எண்ணிக் கணக்கிட்டுச் சொல்லலாம். அப்படியொரு மெலிவு. அது படுத்துக் கிடந்த இடத்திலிருந்து எழுந்து அசையாது நின்று, இவனைப் பார்த்து ஒரு தடவை பலமாக உறுமி, பின் அப்படியே தரித்து விடுகிறது.

மற்றொன்று கறுப்பும் வெள்ளையுமான மறையன். அது முறுகிக் கனைத்த வண்ணம் சில மீற்றர் தூரம் இவன் பின்னால் ஓடிவந்து, பின்னர் பட்டென்று தரித்து, வந்த வேகத்தில் திரும்பி, மெல்லப் போய்க் கொண்டிருக்கின்றது.

அடுத்த நாய் கண்ணீரும் பீளையும் வடிந்து கொண்டிருக்கும் சொறி பிடித்த கறுப்பி. இவன் முன்னே பாய்ந்து மறித்து மறித்துக் குரைக்கிறது. திரும்பிப் பின்புறம் ஓடி வந்து இளைக்க இளைக்க விரட்டுகிறது. கால்களைக் குறி வைத்து பாய்ந்து விழுகின்றது. இவன் தன் கால்களை மேலே தூக்கி ஹான்டிலின்மேல் வைக்கின்றான். பின்னர் பாதங்களை பெடலில் எடுத்து வைத்து அழுத்தமாக மிதிக்கின்றான். மீண்டும் கால்களை நோக்கி அது குதித்து விழுகிறது. மறுபடியும் கால்களைத் தூக்கி ஹான்டிலின்மீது வைக்கின்றான். மழை வெள்ளம் பாய்ந்து ஓடிய தெருவில் பரந்து கிடக்கிறது மணல் பரப்பு. மணல் இல்லாத திடல் நிலத்தில் மாட்டுவண்டிகள் வெட்டிவிட்டிருக்கும் தடங்கள். சயிக்கிளுடன் மணலில் சுழித்து சரிந்து கீழே விழப்போனான். நாய் இவன்மேல் பாய்கிறது. இவனைப் பிடுங்கிக் குதறும் ஆக்கிரோஷம் அதற்கு. வெறியுடன் பல்லுக்குப் பதம் பார்க்கத் துடிக்கிறது.

மணல்மீது பொத்தென்று சரிந்து விழுந்துவிடப் போனவன் உடலை மெல்ல வளைத்து முதுகை நெளித்து ஒருவாறு சுதாகரித்து வேகமாகச் சயிக்கிளை ஓட்டுகின்றான். குடியிருப்புகளைத் தாண்டித் தெருவின் இரு மருங்கிலும் பனை வடலிகள் நெருக்கமாக நிறைந்து நிற்கும் பகுதிக்கு வந்துவிட்டான். இவன் பதகளிப்பும் ஓட்டமும் குட்டை நாய்க்கு உற்சாகத்தைக் கொடுத்திருக்க வேண்டும். தொடர்ந்து சில மீற்றர்கள் குரைத்துக் கொண்டு பின்னால் ஓடிவருகின்றது. தன் பிரதேசம் தாண்டிவிட்டது; இனி போதும் என்று தீர்மானித்துக் கொண்டதுபோல வேகத்தைச் சற்றுக் குறைத்து மெல்ல நின்று, பெருமிதத்துடன் திரும்பிப் போய்க் கொண்டிருக்கின்றது.

இவன் ஒரு கண்டம் நீங்கியது போல நிம்மதியாக மூச்சு விடுகிறான். இந்தக் காலை வேளையிலும் முத்து முத்தாக நெற்றியிலும், கன்னங்களிலும் வியர்வை அரும்பி, கன்னங்களில் வடிந்து கொண்டிருக்கிறது. மூச்சிழுத்து மூசிமூசி இரைக்கிறது. இவன் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு கிழக்குத் திசை நோக்கித் திரும்பி சயிக்கிளை ஓட்டுகின்றான்.

எதிரில் பரந்து விரிந்து கிடக்கிறது ஒரு வெளி. அந்த வெளியை ஊடறுத்துக்கொண்டு இனிச் செல்ல வேண்டும். தலையைத் தூக்கி ஒரு தடவை அந்த வெளியை நோக்குகின்றான். எந்தப் பொருள்மீதும் தலையை மேலே தூக்காது பார்வையை இவனால் பதிக்க இயலாது, விழிகளுக்கு நேரே நேர்கோட்டில் பார்க்கும்போது இவனது அகன்ற கண் மடல்கள் மூடிக்கிடப்பது போலத் தோன்றும். பகலவன் சோம்பலின்றி

இன்று சுறுசுறுப்பாக இருக்கின்றான். தன் கதிர்க்கரங்களை நீட்டி இவன் விழிகளில் குத்துகின்றான்.

அந்த வெளியின மேற்கு எல்லைத் திட்டித்திடலில் இருந்து சயிக்கிள் மெதுமெதுவாகக் கீழ்நோக்கி இறங்குகிறது. பிறேக் இல்லாத சயிக்கிள். அந்தச் சரிவில் மிக்க சாவதானமாகச் சயிக்கிளை இறக்க வேண்டும். கரணம் தப்பினால் மரணம். ஒரு கணம் நிதானம் தவறினால் வேகமாக உருண்டோடி முள்ளுப்பற்றைகளுக்குமேல் போய் விழவேண்டிநேரும். வேகத்தை மட்டுப்படுத்துவதற்கு இரண்டு குதிக்கால்களினாலும் பின் ரயரை அழுத்தி அழுத்திப் பிடிக்கவேண்டும். இதுதான் இவன் பிறேக், அதற்கும் இடையூறாக இருக்கிறது, காலில் கொளுவிக் கொண்டிருக்கும் செருப்புகள்.

ஒருவாறு செருப்புகளை மெல்ல ஒதுக்கி விட்டுக்கொண்டு கால்களை ரயருடன் சேர்த்து அழுந்தி எடுத்து அழுந்திப்பிடித்து வேகத்தைத் தணிக்கின்றான். ரயர் உரோஞ்சலில் குதிகள் சூடேறி சுள்ளென்று சுடு கிறது. கால்களை எடுத்துக்கொண்டுவிட்டால் குப்புற விழவேண்டி நேரும், சயிக்கிள் வேகரித்து தலைதெறிக்க உருண்டோட, அழுந்திப் பிடித்துக் கொண்டால் கொள்ளி நெருப்பால் சுடுவது போலச் சுடுகிறது. பல்லை இறுகக் கடித்து வேதனையைத் தாங்கிக்கொண்டு சமதரைக்கு ஒருவாறு வந்து சேருகின்றான். எலி ஆமணக்கம் பற்றைகளைத் தாண்டி வந்து சேர்ந்துவிட்டான். அதற்கு அப்பாலுள்ள புல்வெளியையும் கடந்து மக்கள் குடியிருப்புகளுக்கு மத்தியில் செல்லும் தெருவுக்கூடாக றோட்டுக்கு வந்து சேருகின்றான்.

அங்கிருந்து தெற்குத் திசை நோக்கிப் போய்க்கொண்டிருக்கின்றான்.

அந்த வீதியோரத்தில் இருக்கும் பொதுசன நூல் நிலையத்தை இவன் அண்மித்துக் கொண்டிருக்கின்றான். நூல் நிலைய வாசலில் வாலிபர்கள் சிலர் கூடிப் பேசிக்கொண்டு நிற்கின்றார்கள். நூல் நிலையத் துக்கு அண்மையில் வாழும் வாலிபர்கள் இவர்கள், வானொலி கேட்டு, பத்திரிகைகளைப் படித்து நாட்டு நிலைமையை அறிந்துகொண்ட பிறகு தான் வீட்டிலிருந்து வெளியே புறப்படவேண்டும் என்னும் இன்றைய யதார்த்தத்தைப் புரிந்து கொண்டவர்கள். காலை வேளையில் இவர் களுடன் தானும் ஒருவனாக இணைந்துகொள்வது இவன் வழக்கம். அப்படி இணைந்து நிற்கும்போது அவர்களை ஒத்த இளைஞனாகி நிற்பதாக இவனுக்குள் ஒரு எண்ணம்.

இவன் வந்து கொண்டிருப்பதை அவர்கள் கண்டு கொண்டு விட்டார் கள். இவன் வந்து சேர்ந்து கொண்டால் அவர்கள் மத்தியில் ஒரு தனி உற்சாகம் பிறந்துவிடும். இவன் நேரே வந்து என்றும் போலப் பொத் தென்று குதித்து, சயிக்கிளிலிருந்து இறங்கப் போகின்றான் என்று

அவர்கள் எதிர்பார்த்து நிற்கின்றார்கள். பத்திரிகைகள் வந்து சேருவதற் குச் சற்றுத் தாமதமாகிப் போனால் இவனை ஆவலோடு எதிர்பார்ப் பார்கள். இவன் அப்பொழுது அங்கு நின்றால் காலம் கழிந்து போவது அவர்களுக்குத் தெரியாது. அப்படியொரு குதூகலமும், கேலியும் கிண்ட லுமாக இருக்கும். அவர்கள் பேச்சுக் கேட்டு இவன் அவர்களை என்றுமே கோபித்துக் கொண்டதில்லை, ஆனால் சில சமயங்களில் உள்ளே உடைந்து போவான். அது அவர்களுக்கு எங்கே தெரியப் போகிறது?

அவர்கள் எதிர்பார்த்ததுபோல இன்று அவன் அங்கு தரித்து நிற்க வில்லை. வீட்டிலிருந்து புறப்படுவதற்கு தாமதமாகிவிட்டதல்லவா? வீதி யில் தொடர்ந்து போய்க் கொண்டிருக்கின்றான்.

இவனை எதிர்பார்த்த அவர்களுக்கு ஏமாற்றமாக இருக்கிறது. அவர்களுள் ஒருவன் "ஹலோ முத்துலிங்கம்!" என்று குரல் கொடுக் கின்றான். இவன் அவர்களைக் கௌரவித்து நாகரிகமாகத் தலையை ஒருபுறம் சரித்துத் தாழ்த்தி 'ஹலோ' சொல்லிக்கொண்டு பயணத்தைத் தொடருகின்றான்.

## 04

தேநீர்க்கடை வரை இவன் வந்து சயிக்கிளை விட்டு மெல்ல இறங்கு கின்றான். அந்தக் கடை வாசலில் நிழலுக்காக வைத்த மரவள்ளி ஒன்று சடைத்து வளர்ந்து நிழல் பரப்பி நிற்கின்றது. சயிக்கிளை அந்த மரவள்ளியில் சார்த்துகின்றான். தினமும் சயிக்கிளை அந்த இடத்தில் அப்படி நிறுத்திவிட்டு கடைக்குள்ளே இவன் போவது வழக்கம். சயிக்கி ளுக்குப் பூட்டில்லை, ஸ்ராண்டும் சரியா இல்லை. கடைக்குள் இவன் இருக்கும் போதில் ஒரு கண் சயிக்கிள் மீது வைத்துக் கொள்வதற்குத் தகுந்த இடம் அது.

இவன் தலையை மெல்லத் தூக்கி, விழிகளைத் திறந்து பார்வையை உள்ளே செலுத்தி, உடலை இடம் வலமாகச் சரித்துச்சரித்து பெருஞ் சுமையைச் சுமப்பவன்போல அசைந்தசைந்து கடைக்குள்ளே நுழை கின்றான்.

"வாங்கையா . . . . இருங்கோ!" முதலாளியின் குரல் அன்பாக, ஆதர வாக நெஞ்சுக்கு நெருக்கமாக வரவேற்கிறது.

இவனுக்கு உள்ளம் குளிருகிறது.

அந்த உபசரிப்பை மகிழ்ச்சியுடன் ஏற்று மெல்லச் சிரித்து, தலையைப் பலமாக ஆட்டியவாறு, ஒரு கதிரையைத் தொட்டு ஓசை

ஏழாவண்ணம் மெல்ல நகர்த்தி வைத்துவிட்டு, அதில் அமர்ந்து கொள்ளுகின்றான். இந்தக் கடை நாடி இவன் வருவதே இந்த உபசரிப்பு ஒன்றுக்காகத்தான்.

காலையில் எழுந்ததும் தேநீர் பருகும் பழக்கதோஷத்தினால் ஆரம்பத்தில் இங்கு வரத்தொடங்கினான். இப்பொழுது காலைத் தேநீர் இல்லாமல் இவனால் இருப்பதற்கு இயலும், ஆனால் இந்த அன்பான உபசரிப்பு இவனுக்குத் தேவைப்படுகின்றது. இதற்காகவே தினம் இவன் இங்கு வந்து கொண்டிருக்கின்றான். அவர் கையினால் தரும் தேநீர் மதுரமாகச் சுவைக்கிறது. காலையில் எழுந்து அவசர அவசரமாக இவன் இங்கு ஓடி வருவது இது ஒன்றுக்காகத்தான்.

அருகிலுள்ள நகரம் ஒரு சில மீற்றர் தூரந்தான் இருக்கும். அந்த நகர வீதியில் கண்ணையும் மனசையும் கவரும் எத்தனை ஆடம்பரமான ஹோட்டல்கள். நாள் ஒரு ஹோட்டலில் தேநீர் பருகி ஆனந்தமாகப் பொழுது போக்கிக்கொண்டிருக்கலாம், ஆனால் இவனுக்கு அது முடிய வில்லை, எந்த ஹோட்டலில் இப்படி சுகமான ஒரு ஆதரவு, அரவ ணைப்பு கிடைக்கப் போகிறது?

சொந்த வீட்டுக்குள் இது கிடைக்குமானால் . . . . . ஏன் இப்படி அலைந்து கொண்டு திரியவேண்டும்? நினைந்து உள்ளம் உளைகிறது.

காலையில் புறப்பட்டு வந்துவிட்டால் இந்தத் தேநீர்க்கடை வாசலில் வந்து தரித்து நிற்பது இவன் வழக்கமில்லை. கடை தாண்டி நேரே நகரத்துக்குப் போவான். பின்னர் திரும்பி வந்துதான் தேநீர் பருகுவான். பாண் வாங்குவதற்கும் பத்திரிகை வாங்குவதற்கும் நகரத்துக்குப் போய் வருவதாக இவன் சொல்லிக் கொண்டிருப்பான். உண்மையில் இவன் பத்திரிகைகள் படிக்கின்ற ஓர் ஆசிரியன்தான். ஆனால் பொதுசன நூல் நிலையத்தில் தவறாமல் எல்லாப் பத்திரிகைகளும் படித்து விடுவான். பணம் கொடுத்துப் பத்திரிகை வாங்கிப் படிப்பது இவனுக்கு இயலாத காரியம். என்றாவது ஒரு நாள், 'மகள் படிக்கட்டும்' என்று ஒரு பத்திரிகைக்குப் பணம் செலவு செய்து வாங்கிப் போவான். அன்றைய தினம் இவன் மனைவி செகம் இவன் மீது சீறிவிழுவாள். காசை மண் ணாக்கிறான் என அவள் குற்றம் சாட்டுவாள். அவள் பேச்சுக் கேட்டு இவன் வாய் திறப்பதில்லை.

காலை உணவுக்காக இவன் பாண் வாங்கிப் போகின்றான் என்று எல்லோரும் நினைத்துக்கொண்டார்கள். இவன் காலை உணவு உண்ண மறந்து பல காலம். மதிய வேளையில் உணவாக பாண் இவனுக்குப் பயன்படும். சில தினங்களில் இரவு நேரங்களில் இவன் வயிற்றில் மூண்டு எரியும் நெருப்பை அது அணைக்கும். இவன் மனைவியைப் பொறுத்தவரை பாண் ஆசாரம் இல்லாத ஒரு உணவு. அவள் அதைக்

கையால் தொட்டுத்தானும் பார்க்கமாட்டாள். மகள் உண்பதற்கும் அவள் அனுமதிப்பதில்லை. இவன் காலை எழுந்து சயிக்கிளை எடுத்துக் கொண்டு அவசியமில்லாது வெளியே ஓடிப்போகின்றான் என்று அவள் தனக்குள் சொல்லிக் கொண்டிருக்கிறாள்.

இந்தத் தேநீர்க்கடையில் கிடைக்கும் வரவேற்பு . . . . ஆதரவு . . . . . உபசரிப்பு . . . . அணைக்கும் அன்பு . . . . . உடல் புல்லரிக்கின்றது. இதற்காக எவ்வளவு பணம் வேண்டுமானாலும் கொடுக்கலாம். ஆனால் பணம் கொடுத்து வாங்கத் தகுந்ததல்லவே இந்த அன்பும், ஆதரவும்! இங்கு வந்து போவதை இவன் வழக்கமாக்கிக் கொண்டதன் பின்புதான், இந்த உபசரிப்புகள் எல்லாம் என்று சொன்னால் அது தப்பு. இப்படி ஒரு ஆதரவைக் கண்டு மனசு நெகிழ்ந்துபோன பிறகுதான் இங்கு வருவதை இவன் வழக்கப்படுத்திக் கொண்டான்.

எப்பொழுதும் சனம் ஓகோ என்று வந்து போய்க் கொண்டிருக்கும் பிரபல்யமான தேநீர்க்கடையல்ல இது. ஒருவர் இருவருக்கு மேல் ஒரே சமயத்தில் இங்கு காண்பது அரிய ஒரு காட்சிதான். வீதியில் பஸ் போக்குவரத்து இல்லாத ஒரு நாற்சந்தியில் உள்ள சிறிய கடை இது. நாட்டில் குழப்பமான சூழ்நிலைகள் உருவானதன் பிறகு பருத்தித்துறை யில் இருந்து காங்கேசன்துறை நோக்கிச் செல்லும் கடலோர வீதியில் வாகனப் போக்குவரத்துக்கள் தடைப்பட்டு, இப்போது இந்த நாற்சந்தி வீதிகளுக்கூடாகவே பஸ் வண்டிகள் போய் வந்து கொண்டிருக்கின்றன. அந்த பஸ்ஸுக்காக பிரயாணிகள் வந்து இந்தச் சந்தியில் காத்து நிற்கின்றார்கள். அவர்களால் கடந்த காலங்களைவிட தேநீர்க்கடையில் வியாபாரம் சற்று அதிகம்.

முதலாளி, பரிசாரகன், தேநீர் தயாரிப்பவன் என்று எல்லாருமே இங்கு ஒருவர்தான், முதலாளி ஒருவரே அத்தனை வேலைகளையும் கவனித்துக் கொள்ளுகின்றார். அதனால் கூலிக்கு மாரடிக்கும் கடமை கழிப்புகளுக்கு இங்கு இடமே இல்லை. கடையினுள்ளே ஒரு கண்ணாடி அலுமாரி, அதில் கொஞ்சம் பணிக, வடை, வாய்ப்பன், காலை வேளை யில் இடியப்பம், தோசை, பிட்டு. தொங்கிக் கொண்டிருக்கும் சின்னதாக ஒரு வாழைப்பழக்குலை. உள்ளே ஒரு புறத்தில் சுவருக்கு நெருக்கமாக உணவு அருந்துவதற்கான நீண்ட ஒரு மேசை, அந்த மேசைக்கும் சுவருக்குமிடையே வருகின்றவர்கள் அமர்ந்து கொள்வதற்குரிய வாங்கு. மறுபுறத்தில் அந்த மேசையை அண்டி மூன்று கதிரைகள். முன்புறத்தில் முதலாளியின் சின்னஞ்சிறிய ஒரு மேசை. முதலாளிக்குப் பின்புறமாக தேநீர் தயாரிக்கும் சாம்பல் பூத்த மேசை. வாசலுக்கு நேர் எதிராக உட்புற சுவரில் மாட்டிவிட்டிருக்கும் சிவன், முருகன், விநாயகன், இலக்குமி தெய்வப்படங்களுக்கு மலர்கள் சார்த்தி சாம்பிராணிக் குச்சி கள் கொளுத்தி கமகமத்துக் கொண்டிருக்கும்.

"ஐயா, சுணங்கிப்போனியள்"

"ஓமோம்" மனசுக்குக் கொஞ்சம் வருத்தமாக இருக்கிறது.

அவர் இப்படிக் கேட்பதில் ஒரு நியாயம் இல்லாமல் போய்விட வில்லை. இன்றைக்கு இவ்வளவு தாமதித்திருக்கக்கூடாது. காலையில் கடை திறந்ததும் முதல் தேநீர் எனக்குத் தந்துவிடவேண்டும் என்பது அவர் மனசின் அந்தரங்கமான ஒரு விருப்பம்.

அன்று வியாபாரம் ஓகோ என்று நடக்குமாம். அவரைப் பொறுத்த வரையில் இவன் நல்ல கைராசிக்காரன். ஒரு தினம் நேரில் அதை வாய்விட்டு இவனிடம் அவர் சொன்னபோது இவன் அதிசயப்பட்டான். மனசுக்குப் பெருமையாகவும் அப்பொழுது இவனுக்கு இருந்தது. தனக்கும் இப்படியான ஒரு மதிப்பு, ஒரு செல்வாக்கு! கடைக்கு முதல் ஆளாக நித்தமும் வந்து பணத்தை தன் கையில் இவன் தரவேண்டும் என்று அவர் எதிர்பார்க்கின்றார். இவனும் மனசில் பிரார்த்தித்துக் கொண்டு அவர் கரங்களில் அர்ச்சனை செலுத்துவதுபோல காசை வைப்பான். அவர் கைவிரல்களை மடக்கி மடமட என நெட்டி முறித்துக் கொண்டு மேசை லாச்சிக்குள் மெல்லப் போடுவார்.

அந்தக் கடைக்குள் மெல்லத் தளம்பியவண்ணம் இப்போது ஒருவன் வந்து சேருகின்றான். அவன் வந்து இவன் அருகில் கதிரை ஒன்றை இழுத்துப்போட்டுக் கொண்டு விட்டார்த்தியாக அமருகின்றான். அவன் சுருள்முடி பல நாட்கள் சீவி விடப்படாது ஒழுங்கின்றிக் கலைந்து கிடக் கிறது. மீசை கருகரு என வளர்ந்து அடர்ந்து தடித்துத் தொங்குகிறது. சிவந்து கலங்கும் அவன் கண்களின் அகம்பாவமும் அலட்சியமும் தெறிக்கும் பார்வை குத்திட்டு நெஞ்சைத் துளைக்கிறது.

"ஒரு பிளேன் ரீ"

அதிகாரத் தோரணையில் அவன் கட்டளை இடுகின்றான். குடிகார னுக்கே இயல்பான கம்மிக் கரகரக்கும் குரல். மயங்கிக் கீழே விழுந்து படுக்கும்வரை கடந்த இரவு எல்லாம் அவன் தொடர்ந்து குடித்துக் கொண்டே இருந்திருக்க வேண்டும். இந்தக் காலை வேளையில் அவன் வயிற்றில் எழும் புகைச்சலைப் போக்கிக் கொள்வதற்கு இந்தப் பிளேன் ரீ ஒன்று மாத்திரம் இன்று குடிக்கக்கூடும். இதன் பிறகு கள்ளு, சாராயம் அல்லது கசிப்புத்தான் அவன் தாகத்தைத் தீர்த்து சாந்தி செய்து வைக்கப்போகிறது. காலையில் ஆரம்பித்து தாகம் தீராத வேட்கை இரவு வரை நீண்டு செல்லலாம். இரவான பிறகும் ஒண்டு பாதிவரை அல்லது அதன் பிறகும் வளர்ந்துகொண்டு போகலாம். அவன் இன்றுபோல் நாளைக்கும் வரத்தான் போகின்றான்.

முதலாளி அவனை நன்றாகப் படித்து விளங்கி வைத்திருக்கின்றார். விரைவாகத் தேநீர் தயாரித்து தாமதிக்காது அவன் முன் கொண்டு வந்து வைக்கும் வேகமும் லாவகமும் அவனைத் தெளிவாக அவர் விளங்கிக் கொண்டுள்ளதைப் புலப்படுத்துகின்றது. அவர் சற்றே சுணங்கிப்போனால் அவன் கோபித்து ஆரவாரித்துக்கொண்டு கெம்பி எழுந்து கூத்தாடவும் கூடும்.

இவன் மனசுக்கு வெறுப்பாக இருக்கிறது, தன் அருகில் அவன் வந்து அமர்ந்து கொண்டது. இவன் மனசுக்கு அவன் கொஞ்சமும் பிடிப் பாக இல்லை. இவன் தந்தையை மனசில் அவன் இப்பொழுது நினைவு படுத்துகின்றான். இவன் தந்தைக்கும் அவனுக்கும் உருவத்தில் குறிப் பிட்டுச் சொல்லத்தகுந்த அப்படியொரு ஒற்றுமை இல்லை. அவர் அதிக உயரமில்லாத தடித்த குரக்கன்மாப் பிட்டு. இவன் அப்படியானவன் அல்ல. இவனது இந்த விழிகள், இந்தக் குரல், காய்ந்து வரண்ட முகம் எல்லாம் அவரை நெஞ்சுக்குக் கொண்டுவருகின்றன. எத்தனை இரவுகள் தடித்த பலகை போன்ற அவரது பரந்த கைகள் இவன் முதுகைப் பதம் பார்த்திருக்கின்றன. உருண்டு திரண்டு ரோமம் அடர்ந்த அவர் கால் களை இவன் கண்டாலே இவனுக்குக் குடல் நடுக்கம் எடுக்கும்.

அந்தக் குடிகாரத் தந்தையின் பிள்ளையாக இருந்தவன்; குடிகாரர் கள் என்றால் இவனுக்குத் தீராத வெறுப்பு; மாறாத பகை. தந்தையைப் பார்த்தபிறகு 'மதுவைக் கையினாலும் வாழ்கையில் தொடமாட்டேன்' என்பது அந்தப் பிஞ்சு மனசில் உறுதியாக இவன் எடுத்துக்கொண்ட ஒரு சபதம். அந்தச் சபதம் தவறாமல் மன வைராக்கியத்துடன் என்றுமே இவன் காத்து வந்திருக்கின்றான். ஆனால் அந்தச் சபதம் . . . . அந்த மனவைராக்கியம் எல்லாம் ஒரு தடவை . . . . ஒரே ஒரு தடவை காக்க இயலாது தவறிப் போனது. அது அவளுக்காக . . . . தேவமனோகரி என்னும் மனோவுக்காக ஓ! மனோபலம் எல்லாவற்றையுமே இழந்து போக நேர்ந்தது.

## 05

பலாலி ஆசிரிய கலாசாலையில் ஆசிரிய மாணவனாக இவன் படித்துக் கொண்டிருந்த காலம்.

ஆசிரிய கலாசாலை அனுமதி அக்காலத்தில் பெறுவதென்பது, இன்று வெட்டுப்புள்ளிகளைத் தாண்டி பல்கலைக்கழகத்துக்குள் ஒரு மாணவன் நுழைவது போலத்தான். நாடு தழுவிய பொதுப் பரீட்சை முதலில். குறித்த ஒரு சிறு தொகையினர் மாத்திரம் அந்த எழுத்துப் பரீட்சையின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். நேர்முகப் பரீட்சைக்கு

அதன் பின்னர் அவர்கள் முகம் கொடுத்தாக வேண்டும். அந்தத் தடை தாண்டலிலும் வெற்றிபெற்ற பிறகுதான் ஆசிரிய கலாசாலை அனுமதி கிடைக்கும்.

பலாலி ஆசிரிய கலாசாலையில் அளிக்கப்படுவது விசேட பயிற்சி. சம்பளமும் அப்போது அதிகம். அனுமதி பெறுவதில் இறுக்கமான போட்டி. இந்துக்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் ஆகப் பல மதத்த வர்கள் மாணவர்களாக அங்கு வந்து கூடுவார்கள். எல்லோரும் கலா சாலை விடுதியில் தங்கி இருக்கவேண்டும் என்பது பொதுவிதி.

வாலைப்பருவ ஆண்கள், பெண்கள் ஒன்றாகக் கலந்து கல்வி கற்றுக் கொண்டிருக்கும் கலாசாலை. அரசினர் வழங்கும் சம்பளமும் மாதந் தோறும் அவர்களுக்குக் கிடைத்துக் கொண்டிருக்கின்றது. அவர்களது உல்லாசத்துக்குச் சொல்லவா வேண்டும்! அது ஒரு தனி உலகம். நெஞ்சம் எல்லாம் இன்பக் கனவுகள் நிறைந்த இளம் பருவத்து, ஆண்கள் விடுதியிலும், பெண்கள் விடுதியிலும் எப்பொழுதும் அவர்கள் கூத்தும் கும்மாளமுந்தான். அவர்களுக்கு நாட்களெல்லாம் திருநாட்கள்; கொண்டாட்டங்கள். இரண்டு விடுதிகளுக்கும் இடையே ஊடலும் கூடலும், ஏக்கமும் தவிப்புந்தான். இவை எல்லாம் இளமையின் இன்ப சுகங்கள் என்பது அறியாமல் அனுபவித்துக் கொண்டிருக்கும் யௌவனப் பருவம். ஆசிரிய கலாசாலையின் இரண்டாண்டு கால வாழ்வு இனி என்றும் வந்து சித்திக்காத ஒரு வசந்த காலம்.

வசந்தகால மலர்கள் மலர்ந்து சொரிவது போலத்தான் இளம்பருவ எதிர்ப்பாற் கவர்ச்சி. ஆசிரிய மாணவன் ஒவ்வொருவனுக்கும் தான் ஒரு கதாநாயகன் என்று தனக்குள் ஒரு நினைப்பு. மனசு கவர்ந்த மங்கையின் அன்பைப் பெறுவதற்கு அவன் எதையும் செய்யத் தயாராக இருந்தான். மங்கையர்கள் என்ன சளைத்தவர்களா? அழகழகாக வண்ணவண்ண ஆடைகள் அணிந்து ஆடவர் கண்களில் விழுந்து நெஞ்சில் இடம் பிடிக்க ஏதும் அறியாத அப்பாவிகள்போல கவர்ச்சி காட்டிக் கொண்டிருந் தார்கள். அவர்களுக்கிடையில் எப்பொழுதும் ஓயாத பனிப்போர்.

காலத்துக்கேற்ற நாகரிகமான நவீன வாலிபர்கள் பெண்கள் நட்பைச் சுலபமாகத் தட்டிக்கொண்டார்கள். ஒருவன் உண்மையானவனாக இருந் தால் அவனது பலங்கள் மாத்திரமல்ல, பலவீனங்களும் பெண்களுக்குக் கவர்ச்சியாக இருக்கின்றன. அந்தப் பலவீனங்கள் அவனுக்குப் பெண்ணின் நட்பைச் சம்பாதித்துக் கொடுத்துவிடுகின்றன. பெண்களுக்கு பிடிக்காதது போலித்தனம். புனிதர்கள்போல இருக்கும் ஆசாடபூதித் தனம். ஆடவனின் ஆசாடபூதித்தனத்தை அந்தரங்கமாக அறிந்து வைத்திருப்பவர்கள் பெண்கள்தான்.

பெண்கள் நட்பைப் பெற்றுக்கொள்வதற்குத் தகுதியானவன்தான் என இவன் தன் மனசில் எண்ணிக்கொண்டான். கலாசாலைக்குள

எடுத்து வைக்கும் ஒவ்வொரு கால் அடியும் அந்த நினைவை இவன் மனசில் ஆழ அழுந்தும். தான் இளமை குன்றாத இளம் வாலிபன். நவீனமானவன். நாகரிகமானவன். பெண்ணின் நட்பைப் பெறுவதற்குத் தகுதியானவன். கன்னிப்பெண்ணால் காதலிக்கப்பட வேண்டியவன்.

அவளை நினைக்கும் போதிலெல்லாம் இவன் இதயம் வேகமாக அடிக்கும். இதயத்தின் அந்த மன ஓசை மனோ. . . . . மனோ. . . . . என்றே செவிகளில் வந்து ஒலிக்கும். மனோ. . . . . இவன் மனசுக்கு மனோரம்மியமான தேவமனோகரி. அந்தச் சௌந்தரிய தேவதையின் இணக்கமான குளிர்ச்சிப் பார்வை தன் பக்கம் திரும்பவேண்டும். மனசு அவளை எண்ணி எண்ணி சதா ஏங்கிக்கொண்டிருக்கின்றது.

அவளுக்காக. . . . . அவளின் அருள் நோக்குக்காக. . . . . என்னதான் செய்ய வேண்டுமோ! அதையெல்லாம் செய்துமுடிக்கத் தயாராக இவன் துடியாகத் துடித்துக் கொண்டிருந்தான்.

ஆசிரிய கலாசாலையில் திங்கள் முதல் வெள்ளிவரை காலை மாலை வகுப்புகள். சனிக்கிழமை நடுப்பகலுடன் வகுப்புகள் முடிந்து போகும். ஞாயிறு முழுநாள் விடுமுறை. வீடுகளுக்குப் போய்வரத் தகுந்த வர்கள் சனிக்கிழமையே புறப்பட்டு விடுவார்கள். திருமணமானவர்கள் மாத்திரம் ஒவ்வொரு வாரமும் அப்படி வீடுகளுக்குப் போய்வருவதற்கு அனுமதி உண்டு. மற்றையவர்கள் விசேட அனுமதி பெற்றாகவேண்டும். வெளி மாவட்டங்களில் இருந்து வந்திருப்பவர்கள் தவணை விடுமுறைக் காகக் கலாசாலை மூடும்பொழுது ஊருக்குத் திரும்புவார்கள்.

விடுதியில் தங்கியிருக்கின்றவர்களுக்கு ஞாயிறு சலிப்பான நாள். கலாசாலை விடுதி சிறைக்கூடம் போலத் தோன்றும். யாழ்நகருக்குச் சென்று மகிழ்ச்சியாகப் பொழுதுபோக்கித் திரும்பி வரலாம். ஆனால் ஞாயிறு கடைகள் அடைத்துக் கிடக்கும். நகரம் வெறிச்சோடிக் கிடக்கும். அப்படியானால். . . . . எங்கே போகலாம்? எப்படிப் பொழுது போக்கலாம்? இருந்தாற்போலத் திடீர்திடீரெனத் தீர்மானம் எடுப்பார்கள். குழுக்குழு வாகப் பிரிந்து கிளம்பிக்கொண்டு வெளியே போய்விடுவார்கள்.

அன்று ஒரு ஞாயிற்றுக்கிழமை. அந்த வாரந்தான் சம்பளம் அவர் கள் கையில் கிடைத்திருந்தது. பணத்துக்கும் பிரச்சினை இல்லை. காலையில் எழுந்து சிலர் ஒன்றுகூடி இருந்து ஆலோசித்தார்கள்.

"எங்கே போகிறது?"

"எங்கிட்டாவது போனாச்சரி"

"கால்போன போக்கிலா!"

"படத்துக்குப் போகலாம்"

"பாக்காத படங்களா?"

"எனக்கொரு புது ஐடியா வருகிது"

"சொல்லு. . . . . சொல்லு. . . . ."

"கீரிமலைக்குப் போவம்"

"என்ன, குளத்திலே குளிக்கவா?"

"இல்லை, தண்ணிலே குளிக்க"

"வெரிகுட், கிளம்புவம்"

"அந்தியிலேதான் திரும்புறது"

நாளை இதுதான் கதையாக இருக்கப்போகிறது. விரிவுரைகள் முடிந்து வெளியே வரும்போதும், ஓய்வு வேளையிலும், மாலையிலும் கூடிக்கூடிப் பேசப்போகின்றார்கள். கீரிமலை அனுபவங்களைத் தங்கள் மனம் கவர்ந்தவருக்குச் சொல்லிச் சொல்லிப் பெருமைப்பட்டுக் கொள்ளப் போகின்றார்கள். கீரிமலைக் குளத்து நீரில் மூழ்கி எழுந்த ஒவ்வொருவனும் பாக்குநீரிணையை நீந்திக் கடந்த தீரனாக அவன் மனம் கவர்ந்த மங்கையின் கண்களில் தோன்றப் போகின்றான்.

இந்த வாய்ப்புத் தவறிப்போனால், இனி எந்த வாய்ப்பு வந்து விடப் போகின்றது! மனோவின் மனசைக் கவர்ந்திழுப்பதற்கு.

இவனை வாவென்று யாரும் அழைப்பாரில்லை. ஆனால் இவனும் அவர்களோடு புறப்பட்டுவிட்டான்.

கலாசாலைக்குள்ளே வான் ஒன்று வந்து தரித்து நிற்கின்றது. மாணவர்கள் ஒவ்வொருவராக அங்கு வந்து வானில் ஏறிக்கொள்கின் றார்கள். சுமார் இருபத்தைந்து பேர். திட்டமிட்ட எல்லோரும் வந்து சேர்ந்துவிட்டார்கள். வான் அங்கிருந்து கிளம்பிச் செல்ல தயாராகிறது. இவன் வாகனத்தை நோக்கி வேகமாக ஓடி வருகின்றான்.

"டேய், முத்து வாறான்ரா"

"அவன் ஏன்ரா வாறான்?"

இவன் வாகனத்திற்கு அருகே வந்து சேர்ந்துவிட்டான்.

"முத்து, நீயும் வாறியா?"

"ஓமோம்"

"முதலில் நீ சொல்லயில்லை"

"ஏன், இடமில்லையா?"

"அப்பிடியில்லை. . . . ."

"அப்ப. . . . .?"

"உனக்கு ஒத்து வராது"

"டேய், நானும் உங்களைப்போல ஆள்தான், நாகரிகமானவன்"

"அது தெரியும்" வான் குலுங்குகிறது அவர்கள் சிரிப்பில்.

"என்னடா சிரிக்கிறியள்!"

"டேய் முத்து! கீரிமலைத் தண்ணி உனக்கு ஒத்து வருமா?"

"டேய், சும்மா விளையாடாதே!"

"சரி. . . . . சரி. . . . .முத்து ஏறு"

இவன் ஏறிக்கொண்டதும் வான் புறப்படுகின்றது. கீரிமலை நோக்கி ஓடிக்கொண்டிருக்கின்றது. அவர்களில் ஒருவன் வாயிலிருந்து அப்போது இசை வெள்ளம் பெருகுகின்றது. எல்லோரும் சேர்ந்து தாளம் போடுகின்றார்கள். அவர்களோடு சேர்ந்து இவனும் வாயசைத்து, தலையாட்டி தாளம் போடுகின்றான். ஆனால் மனசு மட்டும் அங்கில்லை. கற்பனையில் மூழ்கி நீந்திக்கொண்டிருந்தது. கீரிமலை சென்று நீரில் குதித்து மூழ்க வேண்டும். நீருக்குமேல் மீன்போல மிதந்து வந்து நீந்தி விளையாடவேண்டும். பின்னர் தண்ணீருக்குள்ளே மூழ்கிச் சுழியோட வேண்டும். நண்பர்கள்மீது நீரை அள்ளி அடித்தடித்து மூச்சுத் திணற வைக்கவேண்டும். நாளை கலாசாலையில் இந்தச் சாகசங்கள் எல்லாம் கதைகதையாகப் பரவவேண்டும். மனோவின் செவிகளில் போய் இது விழுந்து. . . . . ஆக. . . . . ஆக. . . . . நல்ல சந்தர்ப்பம்.

வான் கீரிமலை கரை வந்துவிட்டது.

இனி என்ன! கீழே இறங்கி, நேராகக் குளத்திற்குப் போய். . . . .

இவன் எதிர்பார்த்ததுபோல் வான் அங்கு தரித்து நிற்கவில்லை.

கீரிமலை கடந்து அப்பால் அது போய்க்கொண்டிருந்தது.

"டேய் நிறுத்துங்கடா!"

"முத்து பேசாமலிரு"

"எங்கே போகிறியள்?"

"கீரிமலைக்கு" எல்லோரும் கைதட்டி ஏளனமாகச் சிரிக்கின்றார்கள். சிரிப்பு அடங்கியதும் ஒருவன் சொல்லுகின்றான்; "உனக்கு ஒத்துவராது எண்டு சொன்னால் கேட்கமாட்டியே!"

"எனக்கு ஒத்துவரும், நானும் உங்களைப்போல ஆள்தான்" சொல் லிக் கொண்டு இவன் மௌனமாகின்றான்.

வான் தொடர்ந்து ஓடிக்கொண்டிருக்கின்றது. இரண்டு கிலோமீற்றர் தூரம் ஓடிச்சென்று சந்தியாப்பிள்ளை வீட்டுக்கு முன் வந்து தரித்து நிற்கிறது. சந்தியாப்பிள்ளை முதலில் கீழே இறங்குகின்றான். வான் வந்து தரித்து நிற்பது கண்டு அவன் மனைவி, மகன், மாமன், மாமி, மைத்துனன் என்று எல்லோரும் கேற்றுக்கு வருகின்றார்கள். வந்தவர்கள் எல்லோரையும் வரவேற்று உள்ளே அழைத்துப் போகின்றார்கள். வீட்டின் ஹோலுக்குள் கதிரைகள், வாங்குகளை மேலும் தூக்கி வந்து போட்டு எல்லோரையும் அமரச்செய்து உபசரிக்கின்றார்கள். சந்தியாப்பிள்ளை தனது குடும்பத்தவர்களை கலாசாலை நண்பர்களுக்கு அறிமுகஞ் செய்து வைக்கின்றான்.

இவனுக்கு இப்பொழுதுதான் ஒன்று தெளிவாகின்றது. சந்தியாப் பிள்ளை திருமணமானவன். அவனுக்கு ஒரு மகனும் இருக்கின்றான்.

இன்று வந்து இவர்களை நேரில் கண்டுகொள்ளாமல் இருந்திருந் தால், சந்தியாப்பிள்ளை திருமணமானவன் என்று எவர் சொன்னாலும் சத்தியமாக இவன் நம்பி இருக்கமாட்டான். சந்தியாப்பிள்ளை அப்படி இருந்தான்.

சந்தியாப்பிள்ளை தன் மைத்துனனை அழைத்து அவன் காதுகளில் எதையோ மெல்லச் சொல்ல, அவன் சிரித்துத் தலை அசைத்துவிட்டு வேகமாக வெளியே வந்து சயிக்கிள் ஒன்றை எடுத்துக்கொண்டு விரைந்து ஓடுகின்றான்.

எல்லோரும் அமர்ந்து பேசிக்கொண்டிருக்கின்றார்கள். உற்சாகமும் கலகலப்புமாகக் காலம் கடந்து கொண்டிருக்கிறது. காலம் நீண்டு கொண்டு செல்வதை யாரும் கணக்கெடுத்ததாகவும் தெரியவில்லை. சந்தியாப்பிள்ளை எல்லோருடனும் அமர்ந்து நயமாகப் பேசுவதும், இடையிடையே எழுந்து உள்ளே போவதும் பட்டென்று திரும்பி வருவது மாகத் திரிந்து கொண்டிருக்கின்றான்.

அவன் வீட்டுக்கு வந்திருக்கின்றோம், எல்லோருக்கும் தேநீர் தரப் போகின்றான், தேநீருடன் சிற்றுண்டியும் வழங்கக்கூடும், அவன் மைத்து னனை அதற்காகத்தான் வெளியே அனுப்பி இருக்கவேண்டும். வரட்டும் வரட்டும் என்று இவன் காத்திருக்கின்றான்.

நீண்ட பொழுதாயும், இவன் எதிர்பார்த்தது போல எதுவும் நடக்க வில்லை. மனசு சலித்துப்போகிறது. கேலியும் கிண்டலும் செய்து எல்லோரும் சளசள என்று பேசிக் கொண்டிருக்கின்றார்கள். இவன் தானும் அவர்களைப்போல இருக்கவேண்டும் என்றதற்காக ஏதோ பேசுகின்றான்.

இவன் எதிர்பார்த்த தேநீர், சிற்றுண்டி வருவதாக இல்லை.

எல்லோரும் அங்கிருந்து கிளம்புவதற்கான அறிகுறியும் இல்லை.

இவன் கொஞ்சம் கொஞ்சமாகப் பொறுமையை இழந்து போகின்றான்.

"எழும்புங்கோ! வந்த வேலையை முதல் முடிப்பம்"

"என்ன முத்து சொல்லுறாய்?" எல்லோரும் பலமாகச் சிரிக்கின்றார்கள்.

"கொஞ்சம் பொறுங்கோ. . . . . மிஸ்ரர் முத்துலிங்கம்" சந்தியாப்பிள்ளை இவனைச் சமாதானப்படுத்துகின்றான்.

"கீரிமலைத் தண்ணியிலே குளிக்கிறதுக்கு வந்து. . . . "

"அது பிறகு. முதல் கூவில் தண்ணியிலே குளிப்பம்"

"என்னப்பா சொல்லுறாய்?"

"முத்து உனக்கு வடமராட்சிக் கூவில்தானே தெரியும். இது கீரிமலைக் கூவில். . . . "

"ஓமோம். . . . . "

"இப்ப விளங்கிறதா? அதுதானே உனக்கு இதெல்லாம் ஒத்து வராதெண்டு சொன்னால். . . . "

"ஆர் சொன்னது. . . . . நானும் உங்களைப்போல ஆள்தானே" சொல்லிக்கொண்டு முகத்தை இறுக்கமாக வைத்துக்கொண்டு இவன் அமர்ந்திருக்கின்றான்.

# 06

வெண்ணுரை தள்ளும் புத்தம்புதுக் கள்ளு இரண்டு பானைகளில் அங்கு வந்து சேர்ந்தது. பேர்பெற்ற கூவிற்கள்ளு, மெல்ல இரைந்து கொண்டிருக்கிறது. கள்ளுக்கு இசைவாக இதமூட்டி போதை தரும் காரமாக பொரித்த மரவள்ளி, கச்சான், பருப்பு, தட்டை வடை எல்லாம் வந்து குவிந்துவிட்டன.

இவனுக்கு வெட்கமாக இருக்கிறது, அவர்கள் பூடகமாகச் சொன்னவைகளை எல்லாம் தான் விளங்கிக் கொள்ளாமல் இதுவரை இருந்ததை எண்ணி. கீரிமலைக்கு இரண்டு விசேடங்கள். ஒன்று கேணிக் குளிப்பு.

மற்றொன்று கூவிற் கள்ளு என்று இவன் கேள்விப்பட்டதுண்டு. பல நடவைகள் கேணியில் குளித்த அனுபவம் ஏற்கனவே இவனுக்கு, ஆனால் குடிப்பழக்கத்தை இவன் முற்றாக வெறுப்பவன். மதுவைக் கையினாலும் தொடுவதில்லை என்று தனக்குள்ளே சபதம் எடுத்துக் கொண்டு விட்டவன்.

இப்பொழுது என்னதான் செய்வது? கள்ளைக் குடிக்காது ஒதுங்கி இவர்களுக்கு மத்தியில் எப்படி இருக்கமுடியும்? எல்லோருமாக சேர்ந்து வலிந்துநின்று குடிக்க வைப்பார்கள். வேண்டுமானால் இவர்களை விட்டு ஒதுங்கி இங்கிருந்துவிட்டுப் போய்விடலாம். அப்படிப் போய்விட்டால் இவன் நாகரிகம் இல்லாத ஒருவன் என்றுதான் கருதுவார்கள். சமூகத் தில் ஒருவனாக இருந்தும் அந்தச் சமூகத்தில் இணங்கிப் போவதற்கு அறியாத காட்டு மனிதன என்று கேலி செய்வார்கள். இதை மனோ அறிந்தால். . . . . ? அவளுக்காக . . . . . அவள் அன்புக்காக. . . . . அவளின் ஓரவிழிப் பார்வைக்காக. . . . . குடிக்கத்தான் வேண்டும்.

இவன் கூவிற் 'தண்ணியில்' குளிக்க ஆரம்பித்தான். அவர்கள் குடிப்பது போலத் தானும் குடிக்கவேண்டும். அவர்களுக்கு தான் என்ன சளைத்தவனா? துணிந்தவனுக்குக் கீரிமலைக் கடலே முழங்கால்வரை என்றால் கூவிற் கள்ளென்ன ஆளை விழுங்கும் ஆழச் சமுத்திரமா!

ஆரம்பத்தில் அங்கு கொண்டு வந்த கள்ளு விரைவில் குடித்து முடிந்துபோகிறது. திரும்பவும் பானையில் வந்து சேருகின்றது.

நேரம் நடுப்பகல் வேளை நெருங்கிக் கொண்டிருக்கின்றது.

முற்றாகக் 'கூவிற் தண்ணியில்' எல்லோரும் மூழ்கிப் போய்விட் டார்கள்.

அடுத்த முழுக்கு கீரிமலைக் கேணியில்.

அங்கே இப்போது எல்லோரும் போயாக வேண்டும்.

இங்கு வரும்போதில் அவர்கள் எல்லோரும் பாடி ஆடிக்கொண்டு வந்தார்கள். இப்பொழுது அவர்களின் சுயமான பாட்டும் ஆட்டமும், முற்றாக நின்றுபோய்விட்டன. அவர்களுக்குள்ளே புகுந்துவிட்ட 'கூவி லான்' அவர்களைப் பாடவைத்து ஆட வைக்கிறான். அழுவதற்கும், சிரிப்பதற்கும் தூண்டுகிறான். அணைக்கும்படி, அடிக்கும்படி செய்கிறான்.

கேணிக்குப் புறப்படுவதற்கு முன்பு மீண்டும் ஒரு தடவை 'கூவிலா னைப்' பருகி முடிக்கிறார்கள்.

இவன் முன்னுள்ள கிளாசும் நிரம்பி இரைந்து கொண்டு கிடக்கிறது, இவன் வாயில் சினிமாப்பாடல் ஒன்றை முணுமுணுத்தவண்ணம், கை

நீட்டி தனக்கு முன்னுள்ள கிளாசை எடுக்கின்றான். கை தடுமாறி கிளாஸ் கீழே விழுந்து நொருங்குகிறது.

"டேய் முத்து, என்ன வேலை இது?" தடுமாறும் குரல்கள் சில சேர்ந்து ஒலிக்கின்றன.

"டேய் நான் எதுவும் செய்வன், நீ ஆரடா கேட்கிறது?" கைகளை ஊன்றி மெல்ல எழுவதற்கு முயன்று தடுமாறிக் கதிரைக்குள் தொப் பென்று மீண்டும் இவன் விழுந்து விடுகின்றான்.

"ஹாய். . . . . ஹாய். . . . . மிஸ்ரர் முத்துலிங்கம் விழுந்துபோனான்"

"டேய் நானா விழுகிறன். . . . . நான் எழும்பி நிற்பன் பாரடா!"

இவன் கைகளை ஊன்றி பட்டென்று எழுந்து நிதானமாக நிற்பதற்கு எத்தனிப்பதற்குள் நிலை தளர்ந்து கீழே சரியப் போகின்றான். இந்தச் சமயம் பார்த்து சந்தியாப்பிள்ளை பாய்ந்து வந்து, இவன் கீழே விழுந்து போகாதவண்ணம் தாங்கிப் பிடித்துக் கொள்ளுகின்றான்.

"மச்சான் சந்தியா, நீதான் என்ரை உண்மை நண்பன். பெஸ்ற் பிறண்ட்"

"முத்து நீங்கள் இதிலே இருங்கோ"

"மச்சான், நீ என்ன சொன்னாலும் நான் செய்வன்"

இவன் மெல்லக் குனிந்து பொக்கென்று கதிரையில் குந்துகின்றான்.

"எனக்கொரு கிளாஸ் கொண்டு வாங்கோ"

"மிஸ்ரர் முத்து. . . . . உங்களுக்குப் போதும்"

"மச்சான் சந்தியா, நீ சொன்னால் நான் கேட்பன். ஆனால் இது கேட்கமாட்டன்"

"ஆ. . . . . நேரமாகிறது எல்லோரும் வெளிக்கிடுங்கோ, கேணிக்குப் போவம்"

ஒருவர் தோள்மீது ஒருவர் கைபோட்டு அணைத்த வண்ணம் வீதி யில் நிற்கும் வானை நோக்கி எல்லோரும் தளர்ந்து தளர்ந்து நடக்கின் றார்கள்.

இவனுக்குக் கதிரையைவிட்டு எழுந்திருக்க இயலவில்லை. கை களை ஊன்றி எழுவதும் திரும்பவும் கதிரைக்குள் விழுவதுமாகத் தடுமாறிக் கொண்டிருக்கின்றான்.

"மிஸ்ரர் முத்து நீங்கள் படுத்து கொஞ்ச நேரம் றெஸ்ற் எடுங்கோ. . . நாங்கள் போவிட்டுவாறம்"

“மச்சான் சந்தியா, நானும் கேணிலே குளிக்க வேணும்”

“வேண்டாம். அது உங்களுக்கு ஏலாது”

“ஆர் சொன்னது! நானும் உங்களைப்போல ஆள்தான்”

“சரி. . . . சரி. . . . போவம்” சந்தியாப்பிள்ளை இவனை அணைத்துப் பிடித்துக்கொண்டு வானை நோக்கி நடக்கின்றான்.

கீரிமலைக் கேணியை வான் வந்து அடைந்துவிட்டது.

ஆடைகளைக் களைந்து உள்ளாடையின் மேல் துவாய் ஒன்றினைச் சுற்றிக் கட்டிக்கொண்டு கேணியை நோக்கி எல்லோரும் ஆடியாடி ஓடுகின்றார்கள்.

சந்தியாப்பிள்ளை மாத்திரம் இவனைக் கேணிக்கு அழைத்துப் போவதற்குத் தயாராக, இன்னும் கீழே இறங்கிப் போகாது வானிற்குள் காத்து நிற்கின்றான்.

இவன் ‘சீற்’றில் அமர்ந்திருந்து கொண்டே ‘சேட்’டை மெல்லக் கழற்றிப் போடுகின்றான். பின்னர் அந்தச் ‘சீற்’றில் பிடித்து மெல்ல எழுந்து ‘லோங்ஸை’ கழற்றத் தொடங்கியதும், சந்தியாப்பிள்ளை இவன் கையைப் பிடித்துத் தடுக்கின்றான்.

“மச்சான் நான் குளிக்க வேணும்”

“குளிக்கத்தான் வந்திருக்கிறம்”

“அப்ப, கழட்டவிடு”

இவனுக்கு எப்படி எடுத்துச் சொல்வதென்று சந்தியாப்பிள்ளை ஒரு கணம் யோசிக்கின்றான்.

“இரு மச்சான் நான் ஒருக்கால் கேணிக்குப் போவிட்டு வாறன்”

“என்னை விட்டிட்டுப் போகப் பாக்கிறியா?”

“நான் அப்பிடிச் செய்யமாட்டன்”

“எனக்குத் தெரியும் நீ ஒரு ஜென்ரில்மன்”

சந்தியாப்பிள்ளை கீழே இறங்கிப் போகின்றான்.

அந்தக் கேணியை கண்காணிக்க நியமிக்கப்பட்டிருக்கும் காவலாளியிடம் சென்று துவாய் ஒன்றை வாங்கி வந்து இவன் கையில் கொடுக்கின்றான்.

இவன் லோங்ஸைக் கழற்ற ஆரம்பித்ததும் சந்தியாப்பிள்ளை பார்வையை மறுபக்கம் திருப்பிக்கொண்டு பொறுமையாகக் காத்து நிற்கின்றான்.

தடித்த அகன்ற இவன் இடுப்பை மூடிமறைப்பதற்கு அந்தத் துவாய்க்கு இயலவில்லை. என்ன செய்வது! இவனை வானிலிருந்து இறக்கி, தோளின்மீது மெல்லப் பிடித்து கேணியை நோக்கி நடத்திச் சென்று கேணிக்குள்ளே இறக்குகின்றான் சந்தியாப்பிள்ளை.

கேணியில் கலாசாலை நண்பர்களும் வேறு சிலரும் நீராடிக் கொண்டு இருக்கின்றார்கள். நீருக்குள் அமிழ்ந்து சுழியோடுவதும், மேலே மிதந்து நீந்துவதும், படிக்கட்டிலிருந்து உள்ளே குதிப்பதுமாக ஒரே கும்மாளம். கேணி நீர் பொங்கிப் பெருகிப் பெருகி வடக்குக் கரை யோடு இணைந்து கிடக்கும் கடலோடு சங்கமிக்கிறது. நீச்சல் அனுபவம் உள்ளவர்கள் கேணியைவிட்டு கடலுக்குச் சென்று ஆழமான நீரில் நீந்திக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் மீண்டும் கேணிக்கு வந்து நன்னீரில் மூழ்கித்தான் நீராடி முடிப்பார்கள். கேணிக்கு கிழக்குப் புறமாக உள்ள பரந்த மணற்பரப்பில் நீராடுவதற்கு வந்திருக்கின்றவர்களின் வாகனங்கள் தரித்து நிற்கின்றன. இறந்துபோன தங்கள் உறவினருக்குச் செய்ய வேண்டிய அந்தியேஷ்டிக் கிரியைகளை சிலர் அங்கு வந்து ஒரு புறத்தே நின்று செய்துகொண்டிருக்கிறார்கள். கேணிக்குள் மூழ்கி நீர் விளையாட் டில் திளைத்திருக்கின்றவர்களைப் பார்த்து இரசித்தவண்ணம் கேணி யைச் சுற்றியுள்ள மேற்கட்டில் வந்து நிற்கின்றார்கள். கேணியின் மேற்குப் புறத்தில் ஓடையாகக் கிடக்கும் மறைத்துக் கட்டிய நீரோடையில் பெண் கள் பலர் கூடி நின்று நீராடுகின்றார்கள்.

இவன் குளத்துள் நீர்மட்டம்வரை இறங்கி, நீருக்குட் கால்களைத் தோய்த்தவண்ணம் படிக்கட்டில் உட்கார்ந்திருக்கின்றான்.

சந்தியாப்பிள்ளை இவனை அப்படியிருக்கும்படி விட்டு வைத்து விட்டு அவன் நீருக்குட் குதித்துவிட்டான். இவன் சிறுபிள்ளைபோல நீரைக் கால்களினால் அடித்து விளையாடிக்கொண்டிருக்கின்றான்.

“முத்துவைப் பாருங்கோ. . . . . நல்லாய்க் குளிக்கிறான்.”

“அவன் குளிச்சுப்போட்டுத்தான் இங்கே வந்திருக்கிறான்.”

“டேய், நான் பருத்தித்துறை கடலிலே நீந்தினவன். இந்தக் குளம் எனக்குப் பெரிசா!” சொல்லிக்கொண்டு எழுந்தவன் தடுமாறித் தொப் பென்று நீருக்குள் சரிந்து விழுந்தான்.

நீருக்குள்ளே இவன் ஆழ்ந்துசென்று, பின்னர் மிதந்து மேலே வந்து மீண்டும் அடி ஆழத்துப்போய் நீரைக்குடித்து, இவனுக்கு மூச்சுத் திணறு கின்றது. இவன்மீது ஒரு கண் வைத்துக்கொண்டிருக்கும் சந்தியாப் பிள்ளை இவன் நீரிற்குள் மூழ்கிப்போவது கண்டு, நீரைக் குடைந்து கொண்டு உள்ளே சென்று இவனைப் பிடித்து இழுத்து நீர்மட்டத்திற்குக் கொண்டுவந்து நண்பர்கள் உதவியுடன் படிக்கட்டின்மீது கிடத்துகின்றான்.

நீரில் மூழ்கி விளையாடிக்கொண்டிருக்கும் நண்பர்கள் அதை நிறுத்தி விட்டு ஓடிவந்து வேடிக்கையாக இவனைச் சூழ்ந்து கொள்கிறார்கள். இவன் சற்றுநேரம் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு எதுவும் நடக்காததுபோல எழுந்திருந்து அவர்களைப் பார்த்துச் சிரிக்கின்றான். அவர்கள் வாயை கையால் மூடிமூடி இவன் கோலம் கண்டு நமுட்டுச் சிரிப்புச் சிரிக்கின்றார்கள். இரண்டொருவர் ஹூ, ஹூ, ஹூ என்று பலமா கச் சத்தம் எழுப்புகின்றார்கள். இவனும் அவர்களோடு சேர்ந்து ஹூ அடிக்கின்றான்.

"முத்து நீ நல்ல சிமாட்டான ஆள்"

"யெஸ், என்னை எல்லோரும் விரும்புவார்கள்" நெஞ்சை நிமிர்த்தி உடலை ஒரு தடவை குலுக்குகின்றான்.

"இப்ப கண்டால் பயந்தோடிவிடுவார்கள்" சொல்லிக்கொண்டு இவன் மீது தண்ணீரை எத்தியடிக்கின்றார்கள். பதிலுக்கு இவனும் நீரை அவர் கள் மேல் எத்துகின்றான்.

சந்தியாப்பிள்ளை மெல்லச் சிரித்தவண்ணம் எதனையோ அங்கு தேடிக்கொண்டு நிற்கின்றான்.

"ஆரும் எடுத்து வைச்சிருந்தால் தாருங்கோ"

"என்ன தரவேணும் மிஸ்ரர் சந்தியாப்பிள்ளை?" இவன் வினவுகின் றான்.

"ஒண்டுமில்லை. . . . . உமக்கொண்டுமில்லை" சொல்லிச் சொல்லிக் கைகொட்டிக் கும்மாளம் இடுகிறார்கள்.

அவர்களில் ஒருவன் தான் ஒளித்து வைத்திருந்த இவன் அரையிற் கட்டியிருந்த துவாயைச் சந்தியாப்பிள்ளை கையிற் கொடுக்கின்றான்.

"முத்து இதை அரையிலே கட்டு."

இப்பொழுதுதான் இவனுக்குத் தான் இருக்கும் நிலை சற்றுத் தெளி வாகின்றது.

ஆசிரிய கலாசாலையில் மறுநாள் இதுதான் கதை.

இவனைப் பற்றியே எல்லோரும் பேசிக்கொண்டார்கள். இவனுக்குப் பெருமையாக இருந்தது. தன்னைப் பற்றி எல்லோரும் பேசுவதை தனது பலமாகக் கருதினான். காலத்திற்குத் தகுந்த நாகரிகமான வாலிபன் தான் என்பதை நிரூபித்துவிட்டான்.

விரிவுரை முடிந்து மண்டபத்தை விட்டு வெளியே வரும்போது மனோவின் வருகைக்காகச் சற்றுத் தாமதித்து மெல்ல நடக்கின்றான்.

மனோ வருகின்றாள்.

தனித்து வருகின்றாள்.

இவனைப் பார்த்து உதடுகள் மலர மென்மையான ஒரு சிரிப்பு. மனோவின் முதற் சிரிப்பு.

'நான் வென்றுவிட்டேன். ஒரு கன்னிப் பெண்ணின் அன்பை பெற்றுக் கொண்டுவிட்டேன்' என்ற பெருமிதம் இவன் நெஞ்சை நிறைக்கிறது.

அன்று மாத்திரம் வாழ்வின் ஒரேயொரு நாள் இவன் குடித்திருக் கின்றான். இவன் மனசில் எடுத்துக்கொண்டிருக்கும் சபதத்திலிருந்து தவற நேர்ந்தது அன்றுதான்.

மது வெறியர்களை கண்டால் இன்றும் இவனுக்கு அடங்காத வெறுப்பு.

இவன்முன் அமர்ந்திருக்கும் குடிகாரனைப் பார்க்கப் பார்க்க இவனுக் குள் பற்றிக்கொண்டு வருகிறது. அந்தக் கடையின் முதலாளி தன் நேசக் கரங்களால் தயாரித்து வழங்கும் தேநீரை ஆறியமர்ந்திருந்து ருசித்துப் பருகுவதில் என்ன இன்பம்! அன்று அந்த இன்பத்தையும் இவன் இழந்து போனான். இப்பொழுது இந்தக் குடிகாரனை விட்டு விலகிப் போனால் போதும் என்று மனசில் தோன்றுகின்றது. தேநீரைக் கையிலெடுத்து மடமடவென்று குடித்து முடிக்கின்றான். முதலாளியின் மேசையின்மேல் காசை வைத்துவிட்டு, "வாறன்" என்று சொல்லிக்கொண்டு கடையை விட்டு வெளியே வந்து சையிக்கிளை எடுத்துக்கொண்டு புறப்படுகின்றான்.

# 07

தந்தை பற்றிய நினைவுகள் மனசுக்குள் வந்ததும் இன்றும் அந்தத் தாகம் உள்ளத்தில் திடீரென்று எழுகிறது. வீட்டுப்பக்கம் போகவேண்டும், வீட்டை ஒரு தடவை பார்க்கவேண்டும், 'எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்தது இந்நாடே' என்று பாரதியார் பாடினார் அல்லவா? தான் பிறந்த மண்ணின்மீது அவருக்கு அப்படி அலாதியான ஒரு பற்று. தாய்நாட்டின்மீது எல்லையற்ற ஒரு மோகம். பிறந்த நாட்டின்மேல் அவர் கொண்ட பற்று இப்படியானதென்றால் இவனுக்குத் தான் பிறந்த மண், தன் வீட்டின்மீது இவன் கொண்ட தாகம் தணியக்கூடியதா? தன் பிஞ்சுக் கால்களை முதன்முறை எடுத்துவைத்து பாதச் சுவடுகளைப் பதித்த மண், தவழ்ந்து, ஓடியாடி உருண்டு மகிழ்ந்த மண். அந்த வீட்டைக் காணும் பொழுதெல்லாம் 'எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்த தும் இவ்வீடே' என்று வாய் திறந்து பாடி மகிழவேண்டும் போல இவன்

நெஞ்சில் ஒரு கணம் தோன்றும். அவர்கள் இருவரும் மகிழ்ந்து குலாவி இருந்ததன் விளைவுதான் இவனும் இவன் தங்கையும் இந்த மண்ணில் வந்து பிறந்தது.

அவர்கள் இருவரும் உண்மையில் மகிழ்ந்து குலாவி இருந்தார் களா? என்பதில் இவனுக்கு மனசில் மாறாத சந்தேகம் சில சமயம் எழுவதுண்டு. தந்தையின் மலர்ந்த முகம் என்றும் இவன் கண்டதில்லை. அவர் முகத்தில் சினம் எப்பொழுதும் கொப்பளித்துக்கொண்டிருக்கும். கண்களில் ஒரு வெறி. வாய்திறந்து சிரித்தறியாத ஒரு மனிதர் அவர்.

அம்மா பாவம்! அவள் மனநோயாளியாகிப் போனவள். அவள் எப்பொழுது சிரிப்பாள், எப்பொழுது அழுவாள் என்று சொல்வதற் கில்லை. அழுக்கடைந்த ஆடையும் கூந்தலுமாக வாயில் வந்த எதை எதையோ எல்லாம் சதா முணுமுணுத்துக்கொண்டே இருப்பாள். அவளுக்குப் பகல் என்றும் இரவென்றும் பேதமில்லை. அவள் உடலில் இனம் புரியாத ஓர் துர்நாற்றம் எப்பொழுதும் அவளைச் சூழ வீசிக் கொண்டேயிருக்கும்.

அவளை இப்படிப் பைத்தியமாக அடித்தவர் அப்பாதானாம். அம்மா குடும்பத்திற்கும் அவருக்கும் ஏதோ சொத்தினால் வந்த தகராறு. அம்மாவை அவள் உறவுகளிலிருந்து முற்றாகப் பிரித்து, அவளைத் தனி மைப்படுத்தி கொடுமைகள் செய்தார்.

அம்மாவுக்கு மிக மென்மையான மனசு, அவர் செய்த கொடுமை களினால் அவள் மனசு பேதலித்துப் போனது.

அப்பா மகாமூடர், பிடிவாதக்காரர், வியாபாரிகளுக்கு இயல்பான கருணை அற்ற இறுகிய இதயம்.

அவர் குடிகாரனாகவும் இருந்தார்.

அந்த அப்பா, அம்மா மகிழ்ந்து குலாவி எப்படி இருவரையும் பெற்றிருப்பார்கள்?

இவன் தோற்றத்தில் அப்பாவை ஒத்தவன். ஆனால் அவருக்கு இவனைக் கண்டால் ஒருபோதும் பொறுக்காது. இவன் பிறந்தநாள் முதல் தன் வாழ்வில் துன்பங்களைத்தான் அனுபவித்துக் கொண்டிருப்பதாகச் சொல்லிக் கொண்டிருப்பார். இவனை இழுத்துப் போட்டு அடிப்பதற்கு வாய்த்த சந்தர்ப்பங்களைத் தவறாமல் அவர் நன்றாகப் பயன்படுத்திக் கொண்டார்.

இவனைவிட இவன் தங்கை நான்கு வயதுக்கு இளையவள், அவள் மீது அவருக்கு மிகுந்த வாத்சல்யம், அவள்தான் தனது தள்ளாத காலத்தில் தன்னைப் பராமரித்துப் பாதுகாப்பாள் என்று அவர் நம்பினார்.

அவளைத் தூக்கி தன் மடிமீது பிரியமாக வைத்துக் கொள்வார். அவளைச் செல்லமாக அணைத்தணைத்து முத்தமிடுவார்.

அப்பொழுது இவன் உள்ளம் அது கண்டு ஏங்கும், அந்த முத்தங் களில் ஒன்றைப் பெறுவதற்கு மனசு தவிக்கும்.

அப்பாவின் அன்பான ஒரு முத்தம் இவன் வாழ்வில் இவனுக்குக் கிடைக்காமலே போனது.

அன்போடு ஒரு முத்தம் அப்பா தரவில்லை. அம்மா. . . . . தன் ஊனாக, உயிராக வயிற்றில் சுமந்து பெற்றவள் அருகில் இருந்தும், அவள் முத்தத்தைப் பெறாத குழந்தை இவன். அம்மாவின் பால் அமுதம் பருகாத பிள்ளை இவன்.

ஒரு தடவை, ஒரேயொரு தடவை இவனை அணைத்து அன்பைச் சொரிந்து ஒரு முத்தம் அவள் தந்திருக்கலாம்.

அன்பொழுகும் வார்த்தையினால் ஒருமுறைதானும் இவனை அவள் அணைத்திருக்கலாம்.

பாவம்! அவள் தன்நிலை மறந்த மனநோயாளி.

முத்தம் என்பது என்ன? ஒருவர் இன்னொருவர்மீது நெஞ்சில் கொண்ட பாசத்தை இறுகப் பதிக்கும் முத்திரை.

அந்த ஒரு முத்தத்துக்காக இன்றும் இவன் இதயம் ஏங்கிக் கொண் டிருக்கிறது.

சயிக்கிள் மாலை சந்தைவரை வந்துவிட்டது. மாலை வேளையில் கூடும் சந்தையாக ஒரு காலத்தில் இது இருந்தது. இப்போது இங்கு சந்தை இல்லை. யாழ்ப்பாணம், கொடிகாமம் போகும் பிரயாணிகள் பஸ்ஸுக்காக வந்து தரித்து நிற்கும் பிரதான தரிப்பிடமாகிப் போனது. மாலைச் சந்தை என்பது மாலிசந்தி என்றாகிப்போனது. அங்கிருந்து வளைந்து செல்லும் பருத்தித்துறை, யாழ்ப்பாணம் பிரதான வீதியில், உடுப்பிட்டி வீதியும் அல்வாய் வீதியும் வந்து சந்திக்கும் பிரதான சந்தி. பருத்தித்துறை, யாழ்ப்பாணம் வீதி ஓரத்தில் சந்தியை அண்டி அந்தப் பஸ்தரிப்பு நிலையம். வழமைபோல பஸ்ஸுக்காகக் காத்திருக்கின்ற வர்கள் நிறைந்து கூட்டமாக நிற்கின்றார்கள்.

இவன் சயிக்கிள் சந்தியைக் கடந்து போய்க்கொண்டிருக்கிறது, அடுத்து வருபவர் வீதி ஓரத்திலிருக்கும் பிள்ளையார். அந்தப் பிள்ளை யாரின் கிழக்கு வீதி அந்தத்தில் இன்னொரு சின்னக் கோயில். அது வயிரவராக இருக்கலாம், அந்தக் கோயிலுக்கும் பிரதான வீதிக்கும் இடையேயுள்ள மிகக் குறுக்கலான துண்டு நிலத்தில் நிற்கிறது ஒரு அரச

மரம். கிளைத்து வளர்ந்து அடி பருத்த அந்த அரச மரத்தை இவன் வியந்து நோக்குகின்றான். அந்த மரத்தின் அடிப்பாகத்தில் திருநீறு பூசி, சந்தனம், குங்குமம் அண்மைக் காலத்தில் இடுகிறார்கள். கல்லொன் றைத் தூக்கி வந்து அடிமரத்துடன் வைத்து அதன்மீது கர்ப்பூரம் ஏற்றி வழிபாடு செய்கின்றார்கள். அரச மரத்தின் அடியில் பிள்ளையார் திரு முகம் தோன்றி இருப்பதாகக் கண்டு அடியார்கள் கூட்டம் கூட்டமாகத் திரண்டு வந்து வழிபட்டுப் போகின்றார்கள். இந்த அரச மரத்துப் பிள்ளை யாரைத் தினமுந்தான் இவன் வழிபாடு செய்கின்றான். மனத் துயரங் களை எல்லாம் சொல்லிச் சொல்லி வேண்டுதல் செய்கின்றான். ஆனால் இறைவனுக்கும் இவன்மீது இரக்கமில்லை.

வீதியோரத்து வீடுகளுக்கு அப்பால் வெங்காயத் தோட்டங்கள். அடுத்துத் தெருமூடிமடம், பெயர் மட்டும் இன்று எஞ்சி நிற்கின்றது. மடம் இல்லை. வீதியை மூடி உயர்ந்தெழுந்து நின்றது அந்த மடம். மலைகளைக் குடைந்து அந்தச் சுரங்கப் பாதைக்கூடாகப் புகைவண்டி கள் போவது போல எந்த ஒரு பெரிய வாகனமும் மடத்துக்கூடாகப் போய் வரலாம். அந்த வீதியில் நடந்து செல்லும் பிரயாணிகள் தங்கி இருந்து இளைப்பாறிச் செல்வதற்கு வசதியாக அந்தக்கால மனிதர்கள் ஈரநெஞ்சுடன் கட்டிவைத்த மடம், இன்று பேர் மாத்திரம் அந்தச் சந்ததிக்கு நிழல் கொடுக்கின்றது.

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு முன்னுள்ள சந்திக்கு வந்து, அங்கிருந்து பருத்தித்துறை நோக்கிச் செல்லும் வீதியில் சயிக்கிள் திரும்புகின்றது. அந்தச் சந்தியில் இருந்து சற்றுத் தூரம் சென்றால் இன்னொரு சந்தி. கொடிகாமம் வீதி துன்னாலைக்கூடாக வந்து பருத்தித் துறை வீதியில் இணையும் இடம், அந்தச் சந்தியில் தமிழ்த் தாத்தா கந்த முருகேசனார் சிலையாக இருக்கின்றார், தாத்தா பெரியவர். தமிழ்க் கடல் என்று பலர் சொல்லுவார்கள். தாத்தா பிறந்த மண்ணில் பிறந்தேன் என்பது பெருமைதான். அவர் முற்போக்கானவர்: புத்துலகச் சிந்தனைச் சிற்பி என்றெல்லாம் சொல்லக் கேள்வி. இவனுக்கு அதுபற்றியெல்லாம் அவ்வளவாகத் தெரியவராது. அருகிலுள்ளவர்களுக்கு எப்பொழுதும் அருமை தெரிவதில்லை. யாராவது ஒருவர் வெளியிலிருந்து வந்து எடுத்துச் சொல்லவேண்டும். அந்தப் பெருமையில் பங்குகொள்ள மாத்திரம் எல்லோரும் முந்திக்கொண்டு முன்னுக்கு வந்துவிடுவார்கள். தாத்தா திருமணமாகாதவர். நடமாட இயலாதவர். அவருக்குச் சிலை வைக்கும் அளவுக்கு அவர்மீது மக்களுக்கு இத்தனை அன்பு.

இவனும் இந்த மண்ணில் பிறந்தவன்தான். இந்த மக்களில் யாரொ ருவன் இவன் மீது அன்பு செலுத்துவதற்கு இருக்கின்றான்?

எதிரில் வந்து போய்க்கொண்டிருக்கும் வாகனங்களைக் கடந்து கிராமக்கோட்டுச் சந்தி வரை சயிக்கிள் வந்துவிட்டது. அங்கிருந்து

கிழக்குத் திசை நோக்கித் திரும்பினால் அரைக் கிலோமீற்றர் தூரம்தான் 'எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்த இடம்', இவன் பிறந்த வீடு.

சயிக்கிள் வேகம் தணிந்து மெல்ல உருளுகின்றது.

இவன் ஆவலுடன் திரும்பிப் பார்க்கிறான்.

இவனுக்கு இன்று அந்நியமாகிப்போன இடம்.

இவன் தங்கை விலைபேசி, யாருக்கோ விற்றுத் தீர்த்துவிட்டு, கணவனுடன் அவள் சுவிஸ் போய்ச் சேர்ந்தபிறகு இவனுக்கு அந்த மண்ணின்மீது என்ன சொந்தம்?

ஆனால் இவன் உள்ளத்திற்கும் உணர்விற்கும் அந்த மண்மீது உள்ள சொந்தத்தை யாரால் பிரிக்க முடியும்!

இவன் தாகத்தோடு அந்த மண்ணைத் தரிசிக்கின்றான்.

வீட்டுக் கேற்றுக்கு நேரில் நட்டநடு முற்றத்தில் ஒரு மாமரம். கறுத்தக் கொழும்பான். கிளைகள் தாழ்ந்து காயும் பிஞ்சுமாகத் தரையை முத்தமிட்டு நின்றது. அணில் குஞ்சுபோல அந்த மரத்தில் தாவி ஏறி காயும் பழமுமாகக் கடித்துச் சுவைத்த மரம் இப்பொழுது உயர்ந்து முது மரமாகத் தோன்றுகிறது. வீட்டுக்குப் பின்புறத்தில் ஆழமான ஒரு கிணறு.

இரண்டு கொய்யாமரங்கள், மாமரங்கள், எலுமிச்சைகள், ஐந்தாறு தென்னைகள், அவற்றில் ஒன்று செவ்விளநீர், கிணற்றைச் சுற்றி வாழை கள். அவைகள் எல்லாம் எப்படி நிற்கின்றனவோ!

வீட்டு முற்றத்தில் இப்போது புதிய குறோட்டன்கள் வரிசையாக வளர்ந்து நிற்கின்றன. வீடும் அந்தக் குறோட்டன்கள்போல புதுமெருகு பெற்றுக் காட்சி அளிக்கிறது.

வீட்டு முன் கதவு திறந்து கிடக்கிறது. அந்த வீட்டுக் குழந்தைகள் உள்ளே விளையாடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களும் தாங்கள் பிறந்த வீட்டைப் பார்த்து ஒரு காலத்தில் இப்படி ஏங்குவார்களோ! என்னவோ!

திறந்து போட்டுக் கிடக்கும் வெளிக்கதவிற்கூடாக உள்ளேயுள்ள அறையில் கதவொன்று இவன் கண்களுக்குத் தென்படுகின்றது. அந்தக் கதவைக் காண இப்பொழுதும் இவனுக்கு உள்ளத்திலும் உடலிலும் இனம்புரியாத ஒரு வகைக் கூச்சம் ஓடிப் பரவுகின்றது.

# 08

யாழ்ப்பாணத்தில் கல்லூரி விடுதியில் தங்கியிருந்து அந்தச் சமயம் இவன் படித்துக் கொண்டிருந்தான். இவன் தங்கை பெண்கள் கல்லூரியொன்றின் விடுதியில் இருந்தாள்.

அம்மா உயிரோடு இருந்தபோதும், அப்பாவைப் பெற்ற பாட்டிதான் வீட்டிலிருந்து இருவரையும் பார்த்து வந்தாள். பாட்டி இறந்த பிறகு கல்லூரி விடுதிகளுக்கு இருவரையும் கொண்டு போய்த் தங்கவைப்பது தவிர அப்பாவுக்கு வேறு மார்க்கம் இருக்கவில்லை.

"நீ படிச்சால்தான் நல்ல மாப்பிளை எடுக்கலாம்" அவளைப் பார்த்து அப்பா சொல்லுவார்.

"கெதியாய் படிச்சு ஒரு உத்தியோகத்தை எடுத்துக்கொண்டு போ" இவனைப் பார்த்து கண்டிப்பாகக் கூறிக்கொண்டு இருப்பார்.

காலையில் எழுந்து பருத்தித்துறை நகருக்குப் போய் அப்பா கடை யைத் திறந்தால் பின்னர் வீடு திரும்ப இரவு பத்து மணியாகும். திரும்பி வரும்வேளை அவர் நிதானமாக வருவதில்லை. மது போதையில் நிமிர்ந்து, வெறித்தபடி வருவார். வீடு வந்தால் ஒழுங்காக வீட்டில் தங்க மாட்டார். அம்மா உயிரோடு இருந்த காலத்திலும் அவர் இப்படித்தான்.

கல்லூரி விடுதியில் கடுமையான காய்ச்சல் இவனைப் பீடித்தது. மருந்துக்குக் கட்டுப்படாத காய்ச்சல். மருந்து சாப்பிட்டால் அப்போது காய்ச்சல் வேகம் தணியும். சற்று நேரம் கழிந்து மீண்டும் நெருப்பாகச் சுடும். விடுதியிலிருந்து இரு தடவைகள் டொக்டரிடம் அழைத்து சென்று காண்பித்தார்கள். அப்பொழுதும் பூரணமாகச் சுகப்படுவதாக இல்லை.

இவனை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்று அங்கு அனும திக்கவேண்டும். அல்லது வீட்டுக்குக் கூட்டிச்சென்று விட்டுவிடவேண்டும் என்று விடுதி மேற்பார்வையாளர் தீர்மானித்தார்.

இவன் வீட்டுக்குப் போக விரும்பினான்.

இவன் விருப்பம்போல இவனை வீட்டுக்கு அழைத்துச்சென்று பெற்றோரிடம் ஒப்படைத்துவிட்டு திரும்புவதற்கு அவர் தயாரானார்.

இவன் தடுத்தான். தான் தனித்து வீடுபோய்ச் சேரமுடியும் என்று உறுதியாகச் சொன்னான்.

அவர் பஸ் நிலையம் வரை வந்து பஸ்ஸில் ஏற்றி வீட்டுக்கு அனுப்பி வைத்தார்.

இவன் கிராமக்கோட்டுச் சந்தியில் பஸ்ஸிலிருந்து இறங்கி மெல்ல மெல்ல நடந்து வீட்டுக்கு வருகின்றான்.

மாலைச் சூரியன் மறைந்து கொண்டிருக்கும் வேளை. உலகின் ஒளி மங்கி இருள் சூழ்ந்து வரும் சமயம்.

அன்று ஞாயிற்றுக்கிழமை, கடைகள் திறக்கப்படமாட்டாது. அப்பா வெளியே போயிருக்கமாட்டார். அப்படிப் போனாலும் இந்த நேரம் நிச்சயமாக வீட்டுக்கு வந்திருப்பார்.

இவன் வீடுவரை வந்துவிட்டான். வெளிக் 'கேற்' பூட்டப்படவில்லை. அந்தக் 'கேற்'ரைத் திறந்து உள்ளே வந்து முற்றத்தைத் தாண்டி முன் கதவுவரை வருகின்றான். அந்தக் கதவு பூட்டப்பட்டுக் கிடக்கிறது. வீட்டுக்குள் வெளிச்சம் இல்லை.

பிற்பகல் படுத்த ஐயா இன்னும் உறக்கம் கலைந்து எழுந்திருக்க வில்லை. அவர் உள்ளேதான் படுத்துக்கிடக்கவேண்டும். வெளியே போயிருந்தால் வெளிக்கேற்ரை பூட்டிவிட்டுப் போயிருப்பார்.

கதவில் மெல்ல இவன் தட்டுகின்றான்.

"அப்பா. . . . . அப்பா. . . . ."

எந்தவிதச் சத்தமுமில்லை.

மீண்டும் தட்டிக்கொண்டு குரல் கொடுக்கின்றான்.

"அப்பா. . . . . அப்பா. . . . ."

மீண்டும் . . . . .மீண்டும். . . . .

"அப்பா. . . . . அப்பா. . . . . அப்பா. . . . ."

இவன் உடலைச் சுட்டெரித்துக் கொண்டிருக்கும் சுரம் தணிந்து உடல் குளிர்ந்து வெடுவெடுவென்று நடுக்கம் எடுக்கிறது. எழுந்து நிற்ப தற்கும் இவனுக்கு இயலவில்லை. தோளில் கொளுவித் தொங்கும் 'பாய்க்'கைக் கழற்றி கீழே வைக்கின்றான். கதவில் உடலை மெல்லச் சாய்த்துக் கொள்ளுகின்றான்.

இருள் வேகமாகக் கவிந்து கொண்டு வருகின்றது. அச்சம் நெஞ்சில் மெல்ல மெல்லப் பரவ ஆரம்பிக்கிறது.

"இப்ப என்ன செய்கிறது?"

"ஆர் வீட்டுக்குப் போகலாம்!"

"உறவென்று ஆர் இருக்கிறார்கள்?"

இவன் தடுமாறிக்கொண்டு நிற்கின்றான். 'சரிந்து கீழே விழுந்து விடுவேனோ' என்று மனசு அஞ்சுகிறது.

சில நிமிடங்கள் யுகங்களாகக் கரைந்து போகின்றன.

இவனுக்குக் குரல் கொடுக்க இயலாதநிலை. கதவில் மெதுவாகத் திரும்பவும் தட்டுகின்றான்.

சில நிமிடங்களின் பின்னர் இரகசியம் பேசுவதுபோலத் தாழ்ந்த குரலில் உள்ள பேச்சொலி.

"ஆர் பேசுகிறது. . . . .? ஆர். . . . .?"

அம்மாவின் ஆவியாக இருக்குமோ?

வீட்டுக் கிணற்றில் விழுந்து அம்மா தற்கொலை செய்து கொண்ட பின்னர் அவள் ஆவி சுற்றித் திரிவதாகப் பாட்டி சொன்னாள். வீட்டுக்குள் நடமாடுகின்றாள். பிள்ளைகளைத் தேடி அலைந்து கொண்டிருக்கின்றாள் என்றெல்லாம் பாட்டி கதைபோலச் சொன்னாள். அவள் சொன்னபோது இவன் அதை நம்பவில்லை. தங்களை அச்சுறுத்துவதற்காகச் சொல்கிறாள் என்றே இவன் நினைத்திருந்தான்.

இப்போது அது உண்மையாக இருக்கலாம். அம்மா முணுமுணுப்பது போலத்தான் பேச்சொலி எழுகிறது.

உள்ளத்தில் பீதி பெருகுகின்றது. உடல் வெடுவெடுவென்று நடுங்குகின்றது. 'சாய்ந்து தரையில் விழுந்து விடுவேனோ' என்று தடுமாறுகின்றான்.

வீட்டுக் கதவு படாரென்று திறக்கிறது.

சாராயவாடை வந்து குப்பென்று அடிக்கின்றது.

"என்ரா கழுதை! படிக்க அலுப்பாய்க் கிடக்கோ"

இவன் தலைமயிரில் பிடித்து இவனைக் கதவிற்குள்ளே இழுத்து தலையைத் தாழ்த்தி பளார் பளாரென்று முரட்டுத்தனமாக முதுகில் அடிக்கின்றார். பின்னர் பிடித்த பிடி விடாது வீட்டுக்குள் இழுத்துப் போகின்றார். உள்ளே வைத்துக் காலாலும் கையாலும் மிருகத்தனமாக அடித்து உதைக்கின்றார்.

இவன் என்ன நடக்கின்றது என்று உணரமுடியாமல் திகைத்துப் போய் நிற்கின்றான்.

இவன் அழவில்லை, கண்ணீர் சிந்தவில்லை, உணர்ச்சியற்று மரமாக விறைத்துப்போய் நிற்கின்றான்.

பாட்டி இப்போது உயிருடன் இல்லை. அவள் இருந்திருந்தால் எல்லாம் நடந்து முடியும்வரை ஏதும் அறியாதவளாக விலகி இருப்பாள்.

பிறகு மெல்ல வந்து இவனுக்காக அனுதாபப்படுகின்றவள்போல நடித்து கடமைக்காக அணைத்துக்கொள்வாள்.

"அவன்ரை குணம் தெரியும். அதுக்குத் தகுந்த மாதிரி நடக்க வேணும்"

இவன் ஏதோ தவறு செய்துவிட்டான். அந்தத் தவறுக்காகவே அவர் தண்டித்தார். இனி இப்படித் தவறு செய்து தண்டனை பெறக்கூடாது. திருந்தி நல்ல பிள்ளையாக நடக்கவேண்டும் என உபதேசம் பண்ணுவ தாக அவள் பேச்சு இருக்கும்.

என்னதான் சொன்னாலும் அவர் அவளுடைய பிள்ளை, அவள் பெற்ற பிள்ளையல்ல நான். ஆனால் அவருக்கு. . . . . அப்பாவுக்கு இப்படி ஏன் ஒரு மனமில்லை.

அம்மா ஒரு வேளை இருந்திருந்தால். . . . . பாவம்! அவள் தன்னைத் தான் உணராத நோயாளி.

ஆசாரபூசாரம் பண்ணுவதற்கு இன்று அந்தப் பாட்டியும் இல்லை.

விடுதியிலிருந்து புறப்பட்டு இங்கு வரும்போது அவர் அன்பை எதிர் பார்த்து வரவில்லை. சுகவீனம் என்பதால் அனுதாபம் கிடைக்கும் என்று எதிர்பார்த்தான். ஆனால் அவர் இவ்வளவு குரூரமாக இருப்பார் என்று இவனால் நம்பவே முடியவில்லை.

இவன் அந்தக் கூடத்தின் ஒரு மூலையில் பிரமை பிடித்தவன் போலக் குந்தி இருக்கின்றான்.

இப்பொழுது பச்சை வண்ணச் சேலை ஒன்று அந்த அறைக்குள் இருந்து வேகமாக வெளியே வந்து, வெளிக் கதவு தாண்டி அவசரமாக முற்றத்தில் இறங்கி விரைவாகப் போய்க் கொண்டிருக்கிறது.

அதன்பிறகு அந்த அறையின் கதவைப் பார்க்கும் போதெல்லாம் இவனுக்கு மாறாத வெறுப்பு.

# 09

சொந்த மண்ணில் கால் வைக்க இயலாத அவல நிலைக்கு இவன் தள்ளப்பட்டிருக்கக் கூடாது. அவளுக்குச் சீதனமாகக் கொடுத்த வீடு என்பது உண்மை. ஆனால் அதை விற்கையில் ஒரு வார்த்தை இவனுக்குச் சொல்லி இருக்கவேணும். தகப்பன் என்று இருந்தவர் இறந்த பிறகு அவளுக்கு இரத்த உறவு என்று இருப்பவன் இவன்

ஒருவன்தான். அந்த உறவை எதற்காக அவள் முற்றாக நிராகரிக்க வேண்டும்?

அப்பா அப்படி அவளை வளர்த்து விட்டிருக்கிறார். சகோதர பாசம் என்றால் என்னவென்று அவளுக்குத் தெரியாது. அவளிடம் இவன் அதைப் பெற்றுக்கொள்ளவில்லை.

அதிகம் ஏன்! ஒரு கடிதம்தானும் அவள் இன்று இவனுக்கு அனுப்பு வதில்லை.

அவளுடன் சில சமயங்களில் இவன் கடுமையாக நடந்திருக்கின் றான். அது யாருக்காக? அவள் நன்மைக்காகவா? அல்லது அவள் மீது தனக்குண்டான குரோதம் காரணமாகவா? இவனுக்கு அதை உணர முடியவில்லை. அந்தக் குரோதம் ஒருவேளை பொறாமை காரணமாக இருக்கலாம்.

இவன் ஆசிரிய கலாசாலையில் படித்துக்கொண்டிருந்த சமயம், அவள் பள்ளிப் படிப்பை நிறுத்திவிட்டு வீட்டோடு வந்திருந்தாள்.

ஆசிரிய கலாசாலையில் இருந்து அடிக்கடி இவன் வீட்டுக்கு வந்து போவதில்லை. வந்தால், ஞாயிறு காலையில் வருவான்; அன்று மாலை திரும்பிவிடுவான். திருமணமானவர்கள் ஒவ்வொரு வாரமும் வீடு சென்று வருவதற்குக் கலாசாலையில் அனுமதிக்கப்படுவார்கள். இவன் போன்ற வர்கள் வீடு செல்ல விரும்பினால் மாதத்தில் ஒரு தடவை மாத்திரம் அங்கு போய் வரலாம். இருந்தும், சிலர் ஒளித்து மறைந்து ஒவ்வொரு வாரமும் வீட்டுக்குப் போய்விடுவார்கள். ஆசிரிய கலாசாலை விடுதி உணவு எல்லோருக்குமான பொது அவியல், அதைத் தினமும் தின்று தின்று நா வெந்து போய்விட்டது. நாவின் சுவை கெட்டுப் போய்விட்டது. வீடு போனால் தாய், சகோதரி அல்லது மனைவி சுவையாகச் சமைத்துத் தரும் உணவுகளை இதம்பதமாக அனுபவித்து உண்ணலாம், அதற்கா கவே சிலர் தங்கள் வீடுகளுக்கு ஓடிப்போவார்கள்.

இவன் வருகையை ஆவலுடன் வீட்டில் எதிர்பார்த்து யார் காத்திருக் கின்றார்கள்? இவன் விரும்பும் உணவுகள் எவை எவை என்று உணர்ந்து சுவையாகச் சமைத்துக் கொடுக்க அங்கு எவர் இருக்கின்றார்கள்? தங்கை என்றொருத்தி வீட்டோடு இருக்கின்றாள். அவள், 'அண்ணா' என்று நெஞ்சுக்கு நெருக்கமாக ஒரு தடவைதானும் அழைத்ததை இவன் அறியான்.

இவன் என்றாவது ஒரு தினம் வீட்டுக்கு வருவான். அப்படி வந்து போகாமல் இருந்தால் கலாசாலைச் சக மாணவர்கள் சந்தேகிப்பார்கள், கேலி செய்வார்கள்.

அன்று ஒரு சனிக்கிழமை. மதிய உணவு முடிந்து கலாசாலை விடுதியில் இவன் படுத்துக் கிடக்கின்றான். இவன் மனசில் என்றுமில் லாத ஒரு எண்ணம்; திடீரெனத் தோன்றிய எண்ணம். வீட்டுக்குப் போக வேணும். இப்போது ஏன் வீட்டுக்குப் போகவேணும்? என்று இவனுக்கு விளங்கவில்லை. ஆனால் போக வேண்டும் என்று ஒரு உந்தல், இவன் விடுதியிலிருந்து புறப்படுகின்றான்.

இவன் வீடு வந்து சேர வீட்டுக்கு விளக்கேற்றுகின்ற நேரமாயிற்று.

வீட்டின் முன் கதவு பூட்டிக் கிடக்கவில்லை. சும்மா மூடிக்கிடக்கிறது. திறந்து கிடக்கிறது என காட்டிக்கொள்ளவேண்டும் என்பதற்காக பூட்டாத கதவுபோல விட்டு மூடிக்கிடக்கிறது.

கதவைத் தள்ளித் திறந்து கொண்டு இவன் உள்ளே வருகின்றான்.

இவன் தங்கை, இன்னொரு வாலிபன், இருவரும் எதிர் எதிரே கதிரையில் அமர்ந்திருக்கின்றார்கள். அவன் இவனைக் கண்டு திகைக் கின்றான். அவன் முகத்தில் குழப்பம் தெரிகின்றது. பொறுமையாக அவன் கதிரைமீது அமர்ந்திருக்க இயலவில்லை. உடலில் திடீரென்று உண்டான பதற்றம். நிமிர்ந்து ஒரு தடவை இவனைப் பார்த்துவிட்டு அச்சத்துடன் தலை கவிழ்ந்து கொள்கின்றான்.

எப்படி இவன் நடந்து கொள்ளப் போகின்றான்!

இவன் தன்னைத் தாக்கக்கூடும். அந்தத் தாக்குதலில் இருந்து எவ்வாறு தப்பித்துக்கொள்வது? என்ற எண்ண அலைகள் அவன் உள்ளத்தில் எழுகிறது.

அங்கிருந்து எழுந்தோடுவதற்குத் தயாரான நிலையில் கதிரையில் பட்டும் படாமல் அவன் குந்தி இருக்கின்றான்.

இவனுக்குள் சினம் பொங்கிக்கொண்டு வருகிறது. கண்களில் குரூர மான வெறி. கரங்களில் முறுக்கேறி அவனை அடித்து நொருக்கக் கைகள் துடிக்கின்றன.

வீட்டுக்குள் ஒரு கலாட்டாவை உருவாக்கினால், வந்தவன் இரண்டு அடியை வாங்கிக்கொண்டு ஓடிப்போய் விடுவான். ஆனால் அவள் எதிர் காலம் அல்லவா அதனால் பாதிக்கப்படும். அவளை மணந்து கொள்வ தற்கு அவன் தகுந்த ஒருவனா? அப்படி ஒரு மனக்கருத்துடன் அவன் அவளோடு பழகுகின்றானா? அல்லது சும்மா பொழுது போக்கிவிட்டுத் தப்பித்துப் போவதற்குத் திட்டமிட்டு இருக்கின்றானா?

அப்பா என்ன சொல்லப் போகின்றார்!

அவள் எப்பொழுதும் முந்திக்கொண்டு விடுவாள். இவனைப் பழி காரனாக்கிவிட்டு, தான் தப்பிக்கொண்டு விடுவாள்.

"அப்பா வரட்டும் சொல்லுவன்"

"அப்பாவுக்குச் சொல்லி அடிவாங்கித் தருவன்"

"அப்பா எனக்கடியார்"

சின்னப் பருவத்தில் இப்படிச் சொல்லிக் கொண்டிருப்பாள்.

அவளுக்கு இப்பவும் அந்த மனநிலைதான்.

அவள் சொல் கேட்டு அவரும் இவனைத்தான் கண்டித்துக் கொண் டிருப்பார்.

அவன்மீது இப்பொழுது இவன் சீறி விழுந்தால், அப்பா வீடு வந்து சேர்ந்ததும் வீட்டுக்குள் ஒரு பூகம்பத்தை அவள் உருவாக்கி விடுவாள்.

என்ன செய்வது?

அவனை இப்போது அடித்து நொருக்குவதா?

அல்லது. . . . .?

சில கணங்கள் இவன் தடுமாறிக்கொண்டு நிற்கின்றான். திடீரென இவனுக்குள் ஒரு எண்ணம் உருவாகிறது. அங்கிருந்து வேகமாக வீட்டுக் குப் பின்புறம் நோக்கி ஓடுகின்றான்.

மனசில் பொங்கி எழும் சினத்தைக் கட்டுப்படுத்தி அடக்க வேண்டும்.

அவளோடு சேர்ந்திருப்பவன் அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அங்கிருந்து தப்பித்துச் செல்லவேண்டும்.

இவன் கையில் ஒரு கொட்டனைத் தூக்கிக்கொண்டு திரும்பி வரு கின்றான்.

எதிர்பார்த்ததுபோல அவன் அங்கில்லை. அவன் எழுந்து அங்கி ருந்து சொல்லாமல் கொள்ளாமல் நழுவிப் போய்விட்டான்.

இவன் திடீர் வருகை, இவன் சினம் எதைக் கண்டும் அவள் கலங்கிப் போய் விடவில்லை. அமர்ந்திருக்கும் கதிரையை விட்டெழுந்து இவன் எதிரில் வந்து கிறுங்காமல் நிமிர்ந்து நிற்கின்றாள்.

இவன் இரு கரங்களையும் எடுத்து இடுப்பில் முண்டு கொடுத்து, நிமிர்ந்து நின்று தலை முதல் கால்வரை சினம் பொங்க அவளை ஏற இறங்கப் பார்க்கின்றான்.

"என்ன பாக்கிறாய்?"

அவளுக்கு என்ன நெஞ்சழுத்தம், இப்படிக் கேட்கின்றாள்!

"ஆரடி அவன்?"

"நான் கட்டப் போறவர்"

"மாப்பிள்ளை நீ பிடிச்சுப் போட்டாய்"

"அதென்ரை விருப்பம்"

"எதுன்ரை விருப்பம்"

"அதைக் கேட்க நீ ஆர்?"

கையில் வைத்துக் கொண்டிருக்கும் கொட்டனைக் கீழே போட்டு விட்டுக் கேட்கின்றான்.

"நான் ஆர்"

"ஓம் நீ ஆர், என்னைக் கேட்கிறது?"

"என்னடி சொல்லுறாய்?"

பாய்ந்து அவள் தலைமயிரில் பிடித்து இழுக்கின்றான்.

இதன் பிறகு என்ன நடக்கின்றது என்பது இவனுக்குத் தெரியாது. என்ன செய்கின்றேன் என்பது அறியாத ஒரு வெறி, கொலை வெறி என்பார்களே அத்தகைய ஒரு வெறி. கைகளால் ஓங்கி ஓங்கி அடிக்கின்றான். கால்களால் போட்டு உதைக்கின்றான். எத்தனை அடிகள்! எத்தனை உதைகள்! சினம் அடங்கும்வரை அவளை அடித்து உதைத்து நொருக்குகின்றான்.

அவள் சற்றும் எதிர்பார்க்கவில்லை, இவன் கட்டுக்கடங்காமல் இப்படிப் பொங்கி எழுவான் என்று. வழமைபோல தன் அதட்டலைக் கேட்டு இவன் அடங்கிப் போய்விடுவான் என்று அவள் எதிர்பார்த்தாள். இன்று அவளுக்கு அதிர்ச்சியாக, ஆச்சரியமாக இருக்கின்றது.

அவள் வாய்விட்டு அழவில்லை, கண்களில் இருந்து ஒரு சொட்டுக் கண்ணீர்தானும் சிந்தவில்லை. இவன் கொடுத்த அடி உதைகளைத் தாங்கிக்கொண்டு மௌனமாக இருக்கின்றாள்.

அப்பா இரவு வீடு வந்து சேருகின்றார்.

அவள் பொய்களைச் சோடித்துக் கதையை உருவாக்கி அவருக்கும் தனக்கும் மோதலை உருவாக்குவாள் என இவன் எதிர்பார்த்தான்.

அப்படி எதுவும் நடக்கவில்லை.

அவள் வாய் திறக்கவில்லை.

அவர் வருவதற்கு முன்பு வீட்டில் ஒரு சம்பவம் இப்படி நடந்ததாக அவள் காட்டிக்கொள்ளவே இல்லை.

இவனுக்கும் இதைப்போய் அப்பாவிடம் சொல்லவேண்டும் என்னும் எண்ணம் மனசுக்கு வரவில்லை. மௌனமாக இருந்து விடுகின்றான்.

இவன் வீடு வந்தாலென்ன! வராது இருந்தாலென்ன! அவரைப் பொறுத்தவரையில் எல்லாம் ஒன்றுதான். ஒரு நாகரிகத்துக்காக அல்லது தகப்பன் என்ற கடமைக்காகவேனும் இவனிடம் எதுவும் விசாரிக்க மாட்டார். இவனாக அவரிடம் வலிந்துகொண்டு போவதற்கும் இவனுக்கு மனசு இடம் கொடுப்பதில்லை.

இவன் மறுநாள் நடுப்பகல் வீட்டிலிருந்து ஆசிரிய கலாசாலைக்குப் புறப்பட்டுவிட்டான்.

இவனுக்கு வீட்டில் அன்று உணவு கிடைக்கவில்லை.

அதன்பிறகு இவன் முன்போல இல்லை. முற்றாக மாறித்தான் போனான். மனசில் வீட்டுக்குப் போய் வரவேண்டும் என்னும் உந்தல் இடையிடையே உள்ளத்தில் உண்டாகும். எவ்வளவு தடுத்தாலும் மனசு கேட்கமாட்டாது. அதன் வழியில் தடுக்காமல் விட்டுவிடுவான். வீட்டுக்குப் புறப்பட்டு வருவான்.

அண்மைக் காலத்தில் இவன் நடத்தையில் உண்டான வித்தியாசம் ஆசிரிய கலாசாலை சக மாணவர்கள் கவனத்தை ஈர்த்துவிடுகிறது.

“மிஸ்ரர் முத்துலிங்கம் இப்ப அடிக்கடி வீட்டுக்கு ஓடிப்போகிறார்.”

“ஓமோம். . . . . என்ன விசேஷம்?”

“ஊரிலே ஒரு மீனைக் கொத்திப்போட்டர் போல”

“பாவம்! அப்பிடியாவது கொத்தட்டும்”

அவர்கள் அனைவரும் கேலியாகச் சொல்லிச் சிரிக்கின்றார்கள்.

இவன் வீட்டுக்கு வந்த சமயங்களில் எல்லாம் அவளைப் போட்டு அடித்துக் கொண்டிருக்கின்றான். நாட்கள் நகரநகர அவள் முற்றாக இறுகிப்போனாள். இவனை, இவன் செயல்களை எல்லாம் அலட்சியம் செய்துகொண்டு தன் இஷ்டம்போல நடந்து கொண்டிருக்கின்றான்.

ஒரு தினம் முகத்துக்கு நேரே இவனிடம் சொன்னாள்.

“நீ ஏன் அடிக்கிறாய்?”

அவள் இப்படிக் கேட்டபிறகுதான் இவன் தனக்குள்ளே தன்னைத் தானே கேட்டுக் கொண்டான்.

'நான் ஏன் அடிக்கிறேன்?'

இந்த வினாவுக்கான விடை சட்டென்று இவன் மனசுக்கு வர வில்லை. மௌனமாக அவளைப் பார்த்து முறைத்துக்கொண்டு நிற்கின் றான்.

"நான் சொல்லுறன்"

"என்ன சொல்லப் போகிறாய்?"

"உனக்கு என்னிலை பொறாமை"

"என்னடி பொறாமை"

"உன்னை எவளும் விரும்பவில்லை"

இவன் உயிர்க்குருத்தில் வார்த்தைகளால் அவள் ஓங்கிக் குத்து கின்றாள்.

இவன் அதிர்ந்து போகின்றான்.

அவள்முன் இவன் தலை நிமிர்ந்து நிற்க இயலவில்லை.

அவள் சொல்வது உண்மையாக இருக்குமா? அவளைப்போட்டு ஏன்தான் அடித்துக் கொண்டிருக்கின்றேன். அவள்மீது என் நெஞ்சில் பாசமா இருக்கிறது? அவள் எதிர்காலம் பற்றிய அக்கறையா? அவளிடம் அன்புகொள்ள, அவளை நெருங்கி வந்து உறவு கொண்டாட, அவளுக்கு ஒருவன் கிடைத்துவிட்டான். பெண்ணாக இருந்துவிட்டால் எந்தக் குரூபிக் கும் வாலைக் கவர்ச்சியில் எவனாவது ஒருவன் அணைப்புக்குப் பாத்திர மாகும் பாக்கியம் கிடைத்து விடுகின்றது. அவளைக் கைவிட்டு அவன் பிரிந்துபோக நேர்ந்தால் ஆடவன் ஒருவனின் அன்புக்குரியவளாக வாழ்ந் திருந்தேன் என்னும் நினைவுச் சுகத்தில் அவள் தன் வாழ் நாளைக் கழித்து விடுவாள். அந்தப் பாக்கியம் ஆடவர் எல்லோருக்கும் எங்கே கிடைக்கப்போகின்றது?

அவள் அம்மாபோல் ஒடிசலான, கொடிபோலத் தோற்றம். சுமாரான அழகி.

அப்பாபோல இருக்கும் இவனில் அப்படி என்ன கவர்ச்சி!

ஆனால் எவளோ ஒருத்தி அப்பாவிடம் வந்துதான் போனாள்.

ஆனால் இவனிடத்தில். . . . ?

மனசின் அடி ஆழத்தில் அவள்மீது வளர்ந்திருப்பது அக்கறையா! பொறாமையா! மனசில் தீராத வன்மத்துடன் கடுமையாக நடந்து கொள்ளுகின்றான்.

திருமணப் பேச்சு ஆரம்பமான சமயம் தன் காதல் பற்றி அப்பா விடம் அவள் பிரஸ்தாபிப்பாள் என்று இவன் எதிர்பார்த்தான். அவள் வாய் திறக்கவில்லை. அவளுக்கு வந்த புதுக் கணவனுடன் கூடிக் குலாவி உல்லாசமாக மகிழ்ந்திருந்தாள்.

ஆனால் இவன்மீது அவள் கொண்ட வெறுப்பு உள்ளூர மேலும் மேலும் வளர்ந்து கொண்டு வந்தது. அந்த வெறுப்பை அவள் கணவன் கண்டுகொள்ளாதவாறு மிக நிதானமாக நடந்துகொண்டாள். அவள் கடந்த காலத்தை அறிந்து வைத்திருக்கின்றவன் இவன் என்பது உணர்ந்து மிக எச்சரிக்கையாக நடந்தாள். அவள் நிதானத்தில் விளைந்த போலித் தனம் கண்டு இவன் பல தடவை வியந்துபோய் இருக்கின்றான். அந்தச் சாகசம் பெண்களுக்குக் கைவந்த கலை என்பதை உணர்ந்து கொண்டான்.

இவன் பிறந்த இடத்தில் நெருக்கமான நட்புக்குரியவர்களாக ஒருவர் தானும் இவனுக்கு வந்து சேரவில்லை. இவன் வளர்ந்த வளர்ப்புமுறை அப்படி. நீளமான தடியொன்றைக் கழுத்தில் குறுக்காகத் தொங்கக் கட்டி வீட்டு வேலிக்கு வெளியே போகமுடியாதவாறு வேலிக்குள் சிறைப்பட்டி ருக்கும் நாய்க்குட்டி வாழ்வு இவன் வாழ்வு. இப்படி வளர்ந்த இவனால் எப்படி ஒரு நல்ல நண்பனைத் தேடிக்கொள்ள முடியும்.

பிறந்த வீட்டைப் பார்க்கவேண்டும் என்னும் ஆவல் கட்டுக்கடங்கா மல் மனசில் எழுகின்ற வேளைகளில் எல்லாம் இங்கு வந்து வீதியில் நின்று பார்த்துக்கொண்டு திரும்புகின்றான்.

இவன் வீதியில் தரித்து அந்த வீட்டை அடங்காத ஆவலுடன் நோக்குகின்றான். வீட்டுக்குள் இருந்து விளையாடும் சிறுவர்கள் கண் களில் இவன் பட்டதும் அவர்கள் எல்லோரும் எழுந்து ஓடிச்சென்று இவன் பார்வையில் இருந்து மறைகின்றார்கள்.

அடுத்த கணம் தலை நரைத்து முதிர்ந்த பெண்ணொருத்தி திறந்து கிடக்கும் அக்கதவிற்கு வெளியே வந்து வீதியை எட்டிப் பார்க்கிறாள்.

"அது விசரியின்ரை மோன் இவனுக்கும் அப்படித்தான்" உள்ளே பார்த்துச் சொல்லிக்கொண்டு கதவை இழுத்து மூடிக்கொண்டு திரும்பிப் போகின்றாள்.

இவனுக்கு 'ஓ'வென்று கதறி அழவேண்டும் போல நெஞ்சுக்குள் பொருமிக்கொண்டு வருகிறது.

தட்டுத்தடுமாறிய வண்ணம் சயிக்கிளை அங்கிருந்து மெல்லத் திருப்புகின்றான்.

# 10

தான் சென்ற பாதையில் திரும்பி நகர்ந்து நகர்ந்து வந்து மாலி சந்தியை அடைந்து அங்கிருந்து இவன் நெல்லியடிச் சந்திக்கு வந்து சேருகிறான். நெல்லியடி வடமராட்சிக் கிராமங்கள் பலவற்றுக்கு மத்தியில் இருக்கும் கேந்திரமான பட்டினம். சனநடமாட்டம் எப்பொழுதும் குறையாமல் இருக்கும். இன்று ஞாயிற்றுக்கிழமை. இந்த நாட்களில் கடைகளை அடைக்கும் வழக்கம் இப்பொழுது இங்கு இல்லாமல் போய் விட்டது. ஆனால் கல்லூரிகள், அலுவலகங்கள் எல்லாவற்றிற்கும் வழமையான விடுமுறை நாள். அதனால் மற்றைய தினங்களிலும் பார்க்க சன நடமாட்டம் இன்று அதிகம்.

இந்தப் பட்டினத்தின் மையப்புள்ளி இதன் சந்தி. சந்தியிலிருந்து தெற்குத் திசைநோக்கிச் செல்கிறது கொடிகாமம் வீதி. கிழக்கு நோக்கிச் செல்கிறது பருத்தித்துறை வீதி. வடக்கு நோக்கிச் செல்கிறது தேவரையாளி இந்துக் கல்லூரி தாண்டி திக்கம் கடற்கரையைத் தொடும் வீதி. மேற்கில் யாழ்ப்பாணம் வீதி. வீதிகள் சந்தியிலிருந்து வளர்ந்து வளர்ந்து செல்வது போலப் பார்வைக்குத் தோன்றும். வீதியின் இரு பக்கங்களிலும் பலவிதமான வியாபார நிலையங்கள்.

சந்திக்கு மேற்கில் சில மீற்றர் தூரத்தில் வீதிக்கு வடக்குப் புறமாக நவீன சந்தைக் கட்டிடம். அந்தச் சந்தியை ஒட்டி கொடிகாமம் வீதியும் யாழ்ப்பாண வீதியும் சந்திக்கும் இடத்தில் குறுகிய முக்கோண வடிவிலான நிலப் பரப்பில் இப்பட்டினத்து பஸ்தரிப்பு நிலையம் இருக்கிறது. இது சாதாரண வீதியோர பஸ்தரிப்பு நிலையங்கள் போன்று இந்தப் பட்டினத்திற்குப் போதாத சிறிய ஒரு பஸ்தரிப்பு நிலையம். பஸ்தரிப்பு நிலையக் கட்டிடத்துக்கு உள்ளேயும் இதனைச் சுற்றியும் எங்கும் பிரயாணிகள் கூட்டம் நிறைந்து நிற்கிறது. இந்த வீதிகளில் ஓடும் பஸ் வண்டிகள், வான்கள் எல்லாம் இந்த பஸ்தரிப்பு நிலையத்துக்கு வந்து தரித்துப், பின்னர் புறப்பட்டுச் செல்கின்றன. கொடிகாமம் வீதிக்குள்ள சிறப்பம்சம் இன்னும் அந்த வீதியில் தட்டிவான்கள் ஓடிக்கொண்டிருப்பதுதான். கொடிகாமம் சந்தையில் இருந்து தட்டிவான்களில் தேங்காய்கள், பருவ காலங்களில் பலாப்பழங்கள், மாம்பழங்கள், கும்பல் கும்பலாக இங்கு வந்து குவியும்.

பஸ் நிலையத்துக்கு எதிர்த்திசையில் சந்தியை அண்டி வீதி ஓரத்திலுள்ள புத்தகக்கடை முன் சயிக்கிளைத் தன் உடலில் சாய்த்தும் சாய்க்காமலும் கையில் மெல்லப் பிடித்தவண்ணம் யாரையோ எதிர்பார்த்துக் காத்து நிற்பது போன்ற பார்வையில் இவன் தரித்து நிற்கின்றான். இங்கு வந்து பஸ்தரிப்பு நிலையத்தில் இப்படி நோட்டமிட்டுக் கொண்டு நிற்பது இவனுக்கு புதிதல்ல. இது இவனுக்கு வழக்கமானதுதான்.

இன்றும் அந்தப் பொழுதுபோக்கு இவனுக்குத் தேவையென மனசுக்குத் தோன்றுகிறது.

இன்றுள்ள போர்க்காலச் சூழ்நிலையில் இருள் முற்றாகக் கரையாத அதிகாலை வேளையில் சன நடமாட்டத்தைப் பட்டினத்தில் காண்பது அரிது. வீடு விட்டு வெளியில் வரலாம் என்று சூழ்நிலை தெரிந்த பிறகு தான் பட்டினத்துக் கடைகள் திறக்கின்றன. சந்தை கூடுகிறது. மக்கள் கூட்டம் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்து நடுப்பகல் தாண்டும் வரை வீதிகளில் நடமாடுவது சிரமமாக இருக்கின்றது.

பட்டினத்துச் சனக்கூட்டத்தைப் பார்த்து இரசிப்பதில் இவனுக்கு அலாதியான ஒரு பிரியம்.

நீண்ட நேரம் தனித்து சும்மா ஓர் இடத்தில் எப்படி நிற்கலாம்? இவன் இப்படி நின்று கொண்டிருப்பதை அவதானித்தவர்கள் இவனைப் பற்றி என்ன நினைப்பார்கள்? அந்தப் பழியிலிருந்து தப்பிக் கொள்வதற்கு ஒரு வழி, இவனுக்கு அறிமுகமான யாராவது ஒருவர் கிடைத்துவிட்டால் அவரைப் பிடித்து வைத்துக்கொண்டு இவன் பேசிக் கொண்டிருப்பான். அவர் இவனிலிருந்து விடுபட்டுப் போவதற்கு விரும்பினாலும், இவன் அதை விளங்கிக் கொண்டதாகக் காட்டிக் கொள்ளமாட்டான். தொடர்ந்து பேசிக்கொண்டிருப்பான். அந்தச் சமயத்தில் விழிகள் பஸ்தரிப்பு நிலையம், வீதி என்று அலைந்து கொண்டிருக்கும்.

பஸ்வண்டிகள், மினிவான்கள் அடிக்கடி பருத்தித்துறை, யாழ்ப் பாணம் வீதியில் வந்துபோய்க்கொண்டிருக்கின்றன. ஆண்கள், பெண்கள், ரியூட்டரிகளுக்குப் போகும் மாணவ மாணவிகள் வந்து இறங்கிக் கொண்டிருக்கின்றார்கள். இந்தப் பெண்களில்தான் எத்தனை ரகங்கள், இவர்கள் அணியும் ஆடைகளில் எத்தனை வகைகள், அவைகள் எல்லாம் எத்தனை எத்தனை வண்ணங்கள்! இவன் விழிகளுக்கு இவை கள் எல்லாம் பெருவிருந்துகள். தான் நிற்குமிடத்தில் இருந்து அசை வதற்கு இவனுக்கு மனசில்லை. பிரமனின் சிருஷ்டி அற்புதங்கள், அந்த அற்புதங்களுக்கு மெருகூட்டும் மனிதனின் அழகுக்கலை நுணுக்கங்கள், இவை யாவையும் இவன் விழிகள் துல்லியமாக இரசித்து அனுபவித்துக் கொண்டிருக்கின்றன.

நேரம் காலை பத்து மணி நெருங்கிக் கொண்டிருக்கின்றது. காலை உணவு இன்னும் இவன் உண்ணவில்லை. வயிற்றில் மெல்லிய பசி அரும்ப ஆரம்பிக்கிறது. ஆனால் இங்கிருந்து இவனால் இப்பொழுது நகர முடியவில்லை. இனிப் புறப்படவேண்டும், புறப்படவேண்டும் என இடையிடையே நினைத்துக்கொள்ளுகின்றான். ஆனால் புறப்படுவதற்கு இயலவில்லை. இங்கு நிலைத்துப்போய் நிற்கின்றான்.

மினிவான் ஒன்று யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கி வேகமாக வந்து பஸ்தரிப்பு நிலையத்தில் கிறீச்சிட்டு நிற்கின்றது. வான் தரிப்பதற்கிடையில் கீழே குதித்த நடத்துநர் "வாங்கோ. . . . வாங்கோ. . . பருத்தித்துறை. . . . பருத்தித்துறை. . . ." என்று மிக அவசரமாகக் குரல் கொடுக்கின்றான். அவனுடைய அவசரம் வானை உடனே செலுத்திக் கொண்டு ஓடவேண்டும் என்னும் அந்தரம், பின்னால் பஸ்வண்டி வந்து கொண்டிருக்கின்றது என்பதை உணர்த்துகின்றது. அவன் அழைப்பைத் தொடர்ந்து முண்டியடித்துக்கொண்டு சிலர் அந்த வானில் ஏறுவதற்கு முற்படுகின்றார்கள். "பொறுங்கோ. . . . பொறுங்கோ. . . . நாங்கள் இறங்க வேணும்" என்று குரல் கொடுத்த வண்ணம் வானுக்குள் நிறைந்து நெருக்கமாக நிற்கும் பிரயாணிகளுக்கு இடையில் புகுந்து வழியமைத்து கொண்டு சிலர் இறங்குகின்றனர். "உங்கை என்ன செய்கிறியள். . . . .! கெதியா இறங்குங்கோ! கெதியா. . . . இறங்குங்கோ!" என அவசரப் படுத்துகின்றான். "சரி. . . . . நீங்கள் ஏறுங்கோ. . . . . நீங்கள் ஏறுங்கோ" என அழைத்து வெளியில் நின்றவர்களை உள்ளே திணித்துக்கொண்டு வானின் வாசல் ஏறுபடியில் ஒற்றைக் காலை வைத்துத் தொங்கிய வண்ணம் "றயிற்" எனக் குரல் கொடுக்கின்றான். வான் உறுமிப் புகை கக்கிக்கொண்டு புறப்படுகின்றது.

அந்த வான் அங்கிருந்து புறப்பட்டுப்போன பிறகு, அதில் வந்திறங் கியவர்கள் இவன் விழிகளில் தட்டுப்படுகிறார்கள். ஆண்களும் பெண்க ளுமாக இளவட்டங்கள் சிலர் இறங்கிக் கொடிகாமம் வீதி நோக்கிப் போய்க் கொண்டிருப்பது தெரிகிறது.

பெண்ணொருத்தி புதிதாக அங்கு வந்து நிற்கின்றாள். வான் புறப் பட்டுப்போன பிறகும் அவள் இறங்கிய இடத்தில் நின்று நகரவில்லை. அவள் வானிலிருந்து மெல்ல இறங்குவதில்தான், அந்த வான் அவ்வ ளவு நேரம் தரித்து நின்றிருக்கவேண்டும். அலுங்காமல் குலுங்காமல் அவள் மெல்ல இறங்கி நின்றாள். தோட்பட்டைக்குக் கீழ் இறங்காத முந்தானை. சடைத்துப் பம்மிய குட்டையான குதிரைவால் கொண்டை. பளபளக்கும் குதி உயர்ந்த செருப்பு. உதட்டுக்குச் சிவப்புச் சாயம். கண் களில் குளிர்தரும் கவர்ச்சியான கறுப்புக் கண்ணாடி. தகதகக்கும் தங்க வண்ண மேனியில் மெல்லிய செவ்வந்தி வண்ணத்தில் தடித்த நட்சத் திரப் பூக்கள் சிந்திக் கிடக்கும் சேலை. அந்தச் சேலை மடிப்புக்களை நீவி முந்தானையை இழுத்துச் சரிசெய்து கொண்டு கைக்குட்டையால் கழுத்தையும் பின்பு நெற்றியையும் ஒற்றி விட்டுக் கொள்கின்றாள். தன்னைச் சரிசெய்து கொள்வதில் திருப்தி கண்ட பின்னர் அலங்காரம் கலையாமல் நளினமாக மெல்ல அடியெடுத்து வைக்கின்றாள்.

உருண்டு திரண்ட உயர்ந்த வாளிப்பான உடற்கட்டு. அந்த உடற் கவர்ச்சியை வெளிக்காட்டுவதற்கென்று சுற்றி இறுகக் கட்டிய சேலை.

மொத்தத்தில் எடுப்பான அவள் தோற்றம் ஒரு பந்தயக் குதிரையை இவன் நினைவுக்குக் கொண்டு வருகின்றது.

அவள் அழகு ஆராதிக்கத் தகுந்ததல்ல. மனசில் இச்சையைத் தூண்டி மோகிக்க வைக்கும் கவர்ச்சி அழகு! மயக்கும் அழகு. அவள் மீது பதித்த விழிகளை இவனுக்கு அகற்ற முடியவில்லை. அவள் பின்னால் வந்து கொண்டிருக்கும் அவன், இவன் கண்களுக்கு அப்போது தோன்றவில்லை. சில நிமிடங்கள் கழிந்த பிறகுதான் இவன் அவனைக் கண்டுகொள்கின்றான்.

அவன். . . அவனுக்கா இப்படி மோகினி மனைவியாக வந்து வாய்த்திருக்கிறாள். அவன் மிக நாகரிகமாக உடை அணிந்து மொழுமொழு என்று மெழுகுப் பொம்மையாகத் தோன்றுகின்றான். கண்களில் தங்கப் பிறேமிட்ட கண்ணாடி. சிகரெற் ஒன்றைப் பெட்டியிலிருந்து உருவியெடுத்து நாகரிகமாக அதை வாயில் வைத்து, லைற்ரரால் தீ மூட்டிப் புகையை இழுத்து விட்டவண்ணம் அவளுக்குப் பக்கமாக இணைந்து நடந்து வருகின்றான். அவளுக்கு இணையான சோடியாக விளங்குவதற்குத் தான் பிடிக்கும் அந்தச் சிகரெற் தன்னை ஒரு கம்பீரமான ஆடவராக எடுத்துக்காட்டும் என்று அவன் கருதி இருக்கவேண்டும். அவன் என்னதான் முயன்றும் இப்போது தெரிகிறது அவள் தோளுக்குள்மேல் அவன் இல்லை. அவள் காதைத்தான் தலை தொடும்.

இவன் நின்றுகொண்டிருக்கும் திசையை நோக்கி இருவரும் வருகின்றார்கள். வீதியில் போய்க்கொண்டிருக்கும் வாகனங்களைத் தவிர்த்து வீதியைக் கடப்பதற்காக வீதியோரத்தில் ஒரு கணம் தரித்து நிற்கின்றார்கள். அந்தத் தரிப்பில் தாமதித்து நிற்கையில் அவன் அவள் கரத்தை மெல்லப் பற்றிக்கொள்கிறான்.

அவன் எப்பொழுதும் இப்படித்தான். யாராவது ஒருவரைச் சார்ந்து நிற்பது அவன் இயல்பு. அவன் தன்னைப் பாதுகாக்க, வளப்படுத்த எப்பொழுதும் இன்னொருவரில் படருகின்றவன். அவன் பற்றிப்படரும் கொழுகொம்பாக அவள் இன்று கிடைத்திருக்கின்றாள். கொழுத்த சீதனம் அவனுக்குக் கொண்டு வந்து கொடுத்திருப்பாள்.

அவர்கள் இருவருட முன்னாலுள்ள வீதியைத் தாண்டி வந்து கொண்டிருக்கின்றார்கள்.

இவன் அவர்கள் இருவரையும் வைத்த விழி வாங்காமல் பார்த்துக் கொண்டு நிற்கின்றான்.

வீதியைக் கடந்த பிறகு அவன் பார்வை அண்மையில் நின்று கொண்டிருக்கும் இவன்மீது தற்செயலாக வந்து விழுகின்றது. அந்த ஒரு பார்வையில் அவன் இவனை இனம் கண்டு கொண்டான். ஒரு கணம் ஆச்சரியம் அவன் பார்வையில் ஒளிருகிறது.

இப்பொழுது இவன் எதிர்பார்க்கின்றான். "ஹலோ முத்துலிங்கம்" என விரைந்து வந்து இவன் கையைப் பற்றி அவன் குலுக்கப் போகிறான். நாகரிகமாக இவனை அவளுக்கு அறிமுகஞ்செய்து வைக்கப் போகின் றான்.

அந்தச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து இவன் தனது கரத்தை நீட்டுவ தற்குத் தயாராகின்றான். அவன் சட்டென்று முகத்தை மறுபக்கம் திருப்பிக்கொண்டு சிகரெற்ரை இழுத்து அலட்சியமாகப் புகையை ஊதிய வண்ணம் போய்க்கொண்டிருக்கின்றான்.

இவனுக்கு உள்ளே உடைந்து போகின்றது. அவன் தன்னை அவம தித்துவிட்டதாக மனசுக்குத் தோன்றுகின்றது. அவன் நன்றாக இழுத்து ஊதிவிட்ட சிகரெற் புகை வேண்டுமென்று தன் முகத்தில் ஊதிய கரும் புகையாக இவன் கருத்தில் படுகின்றது.

இவனைத் தாண்டி அப்பால் சென்று அவள் காதில் எதையோ சொல்லி அவன் மெல்லச் சிரிக்கின்றான். அந்த ஏளனம் இவன் பற்றிய தாக இருக்கவேண்டும். இல்லை, அவள் ஏன் பட்டென்று இவன் பக்கம் திரும்பிப் பார்க்கின்றாள். பின்னர் இருவரும் சேர்ந்து பரிகாசமாகச் சிரிக் கின்றார்கள்.

இவன் உள்ளத்தில் சினம் மூண்டு எரிகிறது.

'அவனுக்கு அவ்வளவு கர்வம்? ஒரு நாகரிகத்துக்காவது இரண்டு வார்த்தைகள் பேசி இருக்கலாம்'

வேதனையால் மனசு பொசுங்குகிறது.

உள்ளத்தில் எழுகிறது திடீரென ஓர் ஆசை.

'அவனைப்போல சிகரெற் ஒன்றைப் புகைக்கவேண்டும்'

இவனுக்குச் சிகரெற் புகைப்பது வழக்கமில்லை.

'ஆனால் அவனைப்போல. . . . .'

அந்த வெறி என்ன சமாதானத்துக்கும் அடங்கக் கூடியதல்ல.

இவன் எதிரிலுள்ள தேநீர்க்கடையை நோக்கி நடக்கின்றான். காசைக் கையில் எடுத்து மேசையின்மேல் வைத்துவிட்டு "ஒரு பிறிஸ்ரல்" எனக் கேட்கின்றான். மேசை அருகே அந்த ஓழிகடையின் உரிமையாளர் வீற்றி ருக்கின்றான். இவன் அங்கு வந்து நிற்பதை அவன் கண்டுகொண்ட தாகக் காட்டிக்கொள்ளவில்லை. ஆனால் சிகரெற் ஒன்றை எடுத்து இவனை நோக்கி மேசையின்மேல் வீசுகின்றான். இவன் இப்பொழுது இருக்கும் மனநிலையில் அவன் முகத்தில் ஓங்கி அறைய வேண்டும்

போல இவனுக்குச் சினம் பொங்கிக்கொண்டு வருகின்றது. ஆனால் அப்படி நடந்தால் அடுத்து என்ன நடக்கும்? இவன் மிகுந்த சிரமப்பட்டு தன்னை அடக்கிக்கொண்டு அந்தச் சிகரெற்றைக் கையில் எடுத்து எரிந்து கொண்டிருக்கும் குப்பி விளக்கில் பற்ற வைக்கின்றான். அதன் பிறகு சந்தியைக் கடக்கும் வரை சயிக்கிளை உருட்டிக்கொண்டு வருகின்றான். பின்பு சயிக்கிளில் ஏறி அமர்ந்து அந்தச் சோடி சென்று கொண்டிருக்கும் திசை நோக்கி ஓடுகின்றான்.

அவர்கள் இருவரும் இணையாக முன்னே போய்க் கொண்டிருக் கின்றார்கள். அவர்களுக்கு வேண்டிய யாரோ ஒருவரைக் காண்பதற்கு இருவரும் போய்க் கொண்டிருக்க வேண்டும். இருவரும் இப்படி நடந்து செல்லக்கூடிய குடும்பமாகத் தோன்றவில்லை. சொந்தக் காரில் வந்தி ருக்க வேண்டியவர்கள். ஏதோ காரணத்தால் நடந்து போய்க் கொண்டி ருக்கின்றார்கள். கையில் ஒரு குடைகூட எடுத்து வரவில்லை. குடை விரித்துப் பிடித்து தன்னை மறைத்துக்கொள்ள அவன் விரும்பாமல் இருக்கலாம்.

அவன் அவளோடு அணைந்தணைந்து இணையாகச் செல்வதைப் பார்க்க இவன் நெஞ்சில் பொறாமை பெருகுகிறது.

'அவன் அதிஷ்டசாலி. அவனுக்கு இப்படி ஒரு மனைவி வந்து கிடைத்திருக்கின்றாள். ஒரு நாளாவது அவனைப்போல இப்படிச் சோடி சேர்ந்து வெளியே செல்லக் கிடைத்தால். . . . ?'

இவன் நெஞ்சின் ஆழத்தில் இருந்து ஏக்கப் பெருமூச்சொன்று வெளிப்படுகின்றது.

இவன் அவர்களுக்கு மிக நெருக்கமாக வந்துவிட்டான். இப்பொழுது அவர்களுக்குப் பின்புறம் இருந்து அவர்களை நோக்குகின்றான். அவள் பந்தயக் குதிரைபோல என்று நினைத்துக் கொண்டது மிகச் சரியான கணிப்பு. நன்றாகக் கொழுத்த குதிரை, மெல்ல ஓடிக்கொண்டு செல்ல மாகத் துள்ளுவதுபோல அவள் நடை, சற்றுத் தூர இடைவெளியில் அவர்கள் பின்னே இவன் வந்துகொண்டிருக்கின்றான். இப்படி எவ்வளவு தூரம் அவர்களைப் பின் தொடரலாம்? அவர்கள் அவதானித்துவிட்டால் இவன் பற்றி என்ன நினைப்பார்கள்?

இவன் சயிக்கிள் அவர்களை மெல்லக் கடந்து அவர்களுக்கு முன்னே வருகின்றது.

சிகரெற்றை இழுத்து அநாயாசமாகப் புகையை ஊதுகின்றான்.

அவன் நன்றாகப் பார்க்கவேண்டும், சிகரெற்றை இழுத்து புகையை ஊதும் தோரணையில் ஒரு பெரிய மனிதனைக் கண்டுகொள்ள வேண்டும். பெரிய மனிதனின் ஒய்யாரம் கண்டு உயர்வாக மதிக்க வேண்டும். இவன்

அலட்சியம் செய்யப்பட வேண்டிய ஒ வனல்ல என்னும் பெரிய உண்மை அவன் நெஞ்சில் எழுந்து உதைக்கவேண்டும். அவனால் மாத்திரமல்ல, இவனுக்கும் அலட்சியம் பண்ண இயலும் என்பது இன்றாவது அவன் உள்ளத்தில் உறைக்க வேண்டும்.

அவன் எப்பொழுதும் இவனை இளக்காரமாகக் கருதி வந்திருக் கின்றான்.

# 11

யாழ்ப்பாணம் கல்லூரி விடுதியில் தங்கியிருந்து இவன் கல்வி கற்றுக் கொண்டிருந்த காலத்தில் இவனுக்கு நான்கு அல்லது ஐந்து வகுப்பு கீழே அவன் படித்துக் கொண்டிருந்தான். அவன் வயதிலும் நான்கு, ஐந்து இவனுக்குக் குறைவாக இருப்பான். அவனும் கல்லூரி விடுதியில் தங்கி இருந்தான். அந்தக் காலத்திலும் அவன் இப்படித்தான், மெழுகுப்பொம்மைபோல.

கல்லூரியில் இவனுக்கு அப்பொழுது நெருக்கமான ஒரு நட்புத் தேவைப்பட்டது. அந்த நட்பு நாடி இவன் நேசக்கரம் நீண்ட போதிலெல் லாம் அதைப் பற்றிப் பிடிப்பதற்கு ஒருவனும் முன்வரவில்லை. அந்த விடுதி மாணவன் ஒவ்வொருவரும் தனக்கென்று மிக நெருக்கமான ஒரு நட்பை வைத்துக்கொண்டுதான் இருந்தான். அவர்களுக்கிடையில் இருந் தது அது வெறும் நட்பென்று சொல்லமுடியாது. அது ஒரு வகைக் காதல். அவர்களுக்குள் எத்தனை அந்தரங்கங்கள்! பேரீச்சம்பழம் போல ஒன்றோடு ஒன்று ஒட்டிப் பிணைந்து கிடக்கும் உறவுகள். அத்தகைய நட்புறவுக்குத் தகுந்த ஒருவனாக இவனை யாரும் கருதவில்லை. இவன் இயல்பில் தன்னுளடங்கி. இன்னொருவன் நட்பை இவனால் சுலபமாகப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. அவர்கள் உதாசீனம் இவன் மனசைப் போட்டுப் பெரிதும் வருத்தியது. இவன் தனக்கென ஒ உறவைச் சுவீகரித் துக்கொள்ள மனசில் பிரதிக்ஞை எடுத்துக்கொண்டு செயற்படத் தொடங் கினான்.

தான் நட்புறவு கொள்ளத் தகுந்த ஒருவன், அவன்தான் என இவன் மனசுக்குத் தோன்றியது. அவன் வயதில், தோற்றத்தில் சின்னவனாக இருந்தது, இவனுக்குத் தோதாகப்பட்டது. ஒரு தீர்மானம் எடுப்பது வெகு சுலபம். அந்தத் தீர்மானத்தைச் செயற்படுத்த முற்படும் வேளை பல பிரச்சினைகள் பூதாகரமாக முன்னெழுந்து நிற்கும்.

அவனை நட்புக் கொள்வதற்கு என்ன வழி?

வலிந்து வலிந்து அவனோடு பேச்சுக் கொடுத்தான். சந்தர்ப்பம் வாய்த்த வேளைகளில் எல்லாம் அவனை நாடி நாடிச் சென்றான்.

ஆனால் அவன் இவனோடு இணங்கி இவனை நெருங்கி வருவதாக இல்லை. இவன் நெருங்க நெருங்க அவன் விலகி விலகிப் போய்க் கொண்டிருக்கின்றான். இவனை ஒதுக்கிவிட்டு, இன்னொரு மூத்த மாணவனின் நிழலாக அவன் ட தொடர்ந்து கொண்டிருக்கின்றான். அந்த மூத்த மாணவனின் நெருக்கம், அவன் தனக்குத் தேடிக் கொள ளும் ஒருவகைப் பாதுகாப்பு என இவன் கருதினான். விநயமாக நடந்து தனக்கும் ஒரு நட்பைப் பெற்றுவிட வேண்டுமென இவன் விடாப்பிடி யாக இருந்தான். அதற்கான சந்தர்ப்பம் வரும்வரை கொக்காக இவன் காத்திருந்தான். அப்போது தைப்பொங்கல் தினம் எதிரில் வந்து சேர்ந்தது.

தன் அன்பின் வெளிப்பாடாக ஒரு பொங்கல் வாழ்த்து அவனுக்குத் தான் அனு்ப்பி வைக்க இவன் மனசு இச்சை கொண்டது. அந்தப் பொங்கல் வாழ்த்து அவன் மனசை வசீகரிக்க வேண்டும். எழில் சிந்தும் ஓவியமாக அந்த வாழ்த்துமடல் அமையவேண்டும். இவன் கொண்டுள்ள அன்பின் ஆழத்தை அது வெளிப்படுத்துவதாக இருக்கவேண்டும். கண்ணன் ராதை காதல் செய்யும் மனோரம்மியமான ஒரு ஓவியம் இவன் மனசைக் கவர்ந்தது. இற்றைவரை ஒரு வாழ்த்து மடல் இவன் யாருக் கும் அனுப்பி வைத்த அனுபவமில்லாதவன். வாழ்த்துக்கள் பரிமாறிக் கொள்ளுமளவுக்கு நெஞ்சுக்கு நெருக்கமான நண்பர்கள் என்று இவனுக்கு யார் இருந்தார்கள்? இன்று இவனுக்கு இது ஒரு புதிய அநுபவம். அந்த வாழ்த்து மடலைக் கையில் எடுத்து வைத்துக்கொண்டு நீண்ட நேரம் விழிகளை அசைக்காது அந்த ஓவியத்தை ஒருவகைத் தாபத்துடன் நோக்குகின்றான். வேங்குழல் கையில் ஏந்தி அமுதகான மிசைக்கும் கண்ணன், அவன் மார்மீது முல்லைக் கொடி எனத் தவழும் ராதை. . . . . இவன் கண்களில் குழலூதும் கண்ணனில் தன்னைக் கண்டு, மார்மீது சாயும் ராதையில் அவனைக் காணுகின்றான். அப்படிக் காண பதில் மனசுக்கு எத்தனை சுகம்! இவன் மனசின் கோலமாக, இந்த வாழ்த்து மடல் விளங்குகின்றது. அவன் பிரியத்தை இவன்மீது அள்ளிச் சொரியப்போகிறது.

வாழ்த்துமடல் எண்ணம்போல வாங்கி ஆயிற்று. ு தை அனுப்பி வைப்பதற்கும் தயாராகி விட்டான். மனசில் சிக்கலான ஒரு பிரச்சினை இப்போது எழுகின்றது. இந்த வாழ்த்துமடல் அனுப்பி இருப்பது இவன் தான் என்பதை அவன் அறியவேண்டும். அப்படியானால் தன் பெயரை அதில் எழுதுவதா? மூத்த மாணவன் ஒருவனுடன் அவன் ஒட்டிக் கொண்டு திரிகின்றான். தனது பாதுகாப்புக்காக அந்த மாணவனோடு அவன் ஒட்டிக்கொண்டிருக்க வேண்டும். அந்த மாணவனை நினைக்க உள்ளூர இவனுக்கு நடுக்கம் எடுக்கிறது. அந்த மாணவன் மகாமுரடன். சகல வல்லமைகளும் உடையவன். நினைத்ததைச் செய்து முடிப்பவன். வாழ்த்து மடலை அவன் கொண்டு போய் அந்த மாணவனிடம்

முறைப்பாடு செய்து முடிச்சுப் போட்டு விட்டால் வந்தது ஆபத்து. பெயரை எழுதாமல் வாழ்த்து அனுப்புவோம். அது போய் அவன் கையில் சேரட்டும், பிறகு நடப்பதைப் பார்ப்போம்.

இவன் நினைத்ததுபோல வாழ்த்து அனுப்பி வைத்து விட்டான். பொங்கலும் வந்து போனது. மாணவர் கரங்களில் கொள்ளை கொள்ளை யாக வாழ்த்து மடல்கள், வாழ்த்துக்கள் 'போய்பிறண்ட், கேள்பிறண்ட்' என்று பலரும் அனுப்பி வைத்திருப்பதாக அவர்கள் பெருமைப்பட்டுக் கொள்ளுகின்றார்கள். சிலருக்கு அம்மா, அப்பா, உடன் பிறந்தவர்கள் என்று வாழ்த்துக்கள் தெரிவித்திருக்கின்றார்கள். இவனுக்கு ஆசை அருமையாக ஒரு வாழ்த்துமடல் வந்து சேரவில்லை. ஒரேயொருவரின் அன்புக்குத்தானும் பாத்திரமாகவில்லை; அதற்கான தகுதி தனக்கில்லை என இவன் மனசு புழுங்குகிறது. இன்று மட்டுந்தானா, இந்த வேதனை? இவன் நினைவறிந்த நாள் முதல் எத்தனை பொங்கல்கள்? எத்தனை புத்தாண்டுகள்! எத்தனை தீபாவளிகள்! எல்லாம் வந்து போயின. தனக்கும் பிறந்த தினம் ஒன்றிருக்கின்றது என்பது இவனுக்கு மறந்து போயிற்று.

இந்தப் பொங்கல் இவனைப் பொறுத்தவரை என்றுமில்லாத இனிய பொங்கல் என ஆரம்பத்தில் இவன் எண்ணி இருந்தான். ஆனால் இவனுள் பெரும் புயலை அல்லவா இது இப்போ கிளப்பிவிட்டிருக்கின் றது. அந்த வாழ்த்துமடல் கையில் கிடைத்த பின்னர் நட்புக்கான பச்சைக் கொடி காட்டப்படும். இந்த வாழ்த்து அனுப்பியவன் இவன் என்பது அவனுக்குத் தெரிய வந்திருக்கும். ஒருவேளை அறிந்தும் அறியாதவன் போல இருக்கின்றானா! உண்மையில் அவன் அறியாதிருந்தால் எப்படி அதை அறியவைக்கலாம்! இரண்டொரு தினங்கள் யோசித்து யோசித் துக் குழம்பிக் கொண்டிருந்தான். இறுதியில் ஒரு முடிவுக்கு வந்தான். எவ்வாறாயினும் இந்த இரகசியம் அவன் அறியத்தான் வேண்டும். முடிவு செய்த பின்னர் இன்னொரு கேள்வி இவன் நெஞ்சில் எழுகிறது. அவனுக்கு இதை எப்படி அறிய வைப்பது? அவனிடம் நேரில் சொல்லி விடலாம். ஆனால். . . . மனசில் இனம் புரியாத ஒரு தயக்கம். வார்த்தை கள் வெளிப்படாத ஒரு கூச்சம். ஒன்று செய்யலாம். ஒரு துண்டுக் காகிதத்தில் எழுதி இரகசியமாக அவனிடம் சேர்த்து விடலாம்.

இரண்டு தினங்கள் அந்தத் துண்டுக் காகிதத்தைச் சுமந்து கொண்டு இவன் அலைந்து திரிந்தான். ஆனால் அதை அவனிடம் சேர்த்துவிடும் வாய்ப்புக் கிட்டவில்லை. மறுநாள் மதியவேளை, இவன் எதிரில் அவன் வந்து கொண்டிருந்தான். யாருமில்லாத தனித்த சமயம், இவன் சட்டைப் பையில் வைத்துக்கொண்டிருக்கும் காகிதத் துண்டைப் பரபரப்புடன் எடுத்து, எதிரில் வந்து கொண்டிருக்கும் அவன் சட்டைப்பையினுள் திணித்து விட்டுப் பறந்து போய்விட்டான்.

அன்று மாலை அவனைத் தன்னோடு வைத்திருக்கும் அந்த மூத்த மாணவன் இவனைத் தேடி வந்தான். இவனை வகுப்பறை ஒன்றுக்குள் அழைத்துச் சென்று ஆசிரியர்கள் அமருகின்ற கதிரையில் தான் அமர்ந்து கொண்டான். ஆசிரியர் எதிரில் நிற்கும் குற்றம் புரிந்த மாணவனாக அவனுக்குமுன் கூனிக் குறுகி இவன் நின்று கொண்டிருக்கின்றான். ஆசிரியர் கதிரையில் அமர்ந்திருக்கும் அவன் முகம் இறுகிக் கிடக்கிறது. சில கணங்கள் இவன் முகம் பார்த்து முறைத்துவிட்டு, பின் தனது சேட்பையில் மடித்து வைத்துக் கொண்டிருக்கும் அந்த வாழ்த்து மடலை வெளியே எடுத்து மேசையின்மேல் போடுகின்றான்.

"இந்த வாழ்த்து நீ தானே அனுப்பினது?"

". . . . ."

இவனுக்குத் தொண்டை கட்டிக் கொண்டது.

"என்ன பேசாமல் நிற்கிறாய்?"

வார்த்தைகள் இப்போதும் வெளிவரவில்லை.

"நீ என்ன ஊமையா? வாழ்த்து அனுப்பிறதுக்குத் துணிச்சலிருக்கு. வாய் திறந்து பேசிறதுக்கு மட்டும் ஏலாது. அவனுக்கு நீ ஏன் கரைச்சல் குடுக்கிறாய்? இனி தொந்தரவு குடுத்தால் நடக்கிறதைப் பிறகு பார்"

எச்சரித்து விட்டு விசுக்கென்று எழுந்து போய்விட்டான்.

இவனுக்கு உள்ளூரச் சினம் பொங்கிக்கொண்டு வருகிறது. வாழ்த்து மடல் அனுப்பியதற்காக அவன் ஏன் ஆத்திரப்பட வேண்டும்?

அந்த மூத்த மாணவன் ஏதோ ஒரு தீவுப் பகுதியைச் சேர்ந்தவன். வசதியான குடும்பம். யாழ்ப்பாணத்தில் பெரிய ஒரு கடை இருக்கிறது. கொழும்பு, மாத்தளை, கண்டியிலும் கடைகள் உண்டு. யாழ்ப்பாணக் குடாநாட்டில் பெயர் சுட்டிச் சொல்லத் தகுந்த பெரிய தனவந்தரின் செல்ல மகன். அவனுக்குப் பணம் என்பது திறந்துவிட்ட பைப்பில் பாய்ந்து வரும் நீர்போல, தன்னோடு நெருக்கமாக இருக்கும் அவனுக்கும் சேர்த்துச் செலவுகள் செய்து கொண்டிருக்கின்றான். ஆடம்பரமாக உடுப்பான். ஹோட்டல்களில் இருந்து சுவையான உணவுகள் அடிக்கடி வாங்கி வந்து அவனுக்குக் கொடுத்து உண்பான்.

வசதிபடைத்த அந்த மூத்த மாணவன் இவனைவிட ஒரு வயது அதிகமாக இருப்பான். அந்த மாணவனுடன் எந்த வகையிலும் போட்டி போட்டு மோதுவது தனக்கு இயலாத காரியம் என்பதை இவன் உணருகின்றான். அவனை எதிர்த்து இவனுக்கு அங்கு ஆதரவு காட்டுவதற்கு எந்த ஒரு நேசக்கரமும் இல்லை. மாறாக, கேலி செய்வதற்கென பலர்

காத்திருக்கின்றார்கள். இவன் வாழ்த்து மடல் அனுப்பின செய்தி எப்படியோ வெளிவந்து விட்டது. "முத்து தூண்டில் போட்டுத் திரிகிறான்" என எல்லோரும் சேர்ந்து கிண்டல் பண்ணுகின்றார்கள்.

இவன் மனசில் இது தன்மானப் பிரச்சினையாக வலுப் பெற்று விட்டது. அவன் மனசைத் தன் பக்கம் ஈர்ப்பதற்கான மார்க்கம் என்ன என்று ஆராய ஆரம்பித்தான். யாரிடம் போய் இதற்கு ஆலோசனை கேட்கலாம்? ஒவ்வொருவனுக்கும் உயிருக்குயிரான உற்ற நண்பன் யாரோ ஒருவன் இருக்கின்றான். இவனுக்கு அப்படி யார்தான் இருக் கின்றான்? வாய்திறந்து ஒரு வார்த்தை எவனாவது ஒருவனிடத்தில் சொன்னால் போதும்; அது கை கால் முளைத்து அந்த மூத்த மாணவன் செவிக்குத் தவறாது போய்ச் சேரும். அப்படியொரு நெருக்கடியில் சிக்கிக்கொள்ளாமல், அந்தரங்கமாக அவன் அறியாமல் அவன் உள்ளம் கவர்ந்து உறவைப் பெற்றுக் கொள்ளத் தீர்மானித்தான்.

சாப்பாட்டு மேசையில் இவனும் அவனும் அமர்ந்து கொள்ளும் இடங்கள் அதிக தூரத்தில் இல்லை. இவன் உணவு உண்ணும் வேளை களில் அவனது உணவுக்கோப்பையை நன்றாக அவதானித்தான். அவன் கோப்பையின் மேல் விளிம்பு வட்ட வடிவமாக தங்க நிற முலாம் பூசப்பட்டது. அந்த விளிம்புக்குள்ளே சுற்றிவர செந்நிறமான சின்னஞ் சிறிய மல்லிகைப் பூக்களின் நேர்த்தியான அடுக்கு வரிசை, நட்டநடுவில் சந்திர வட்டக்கல் போன்ற சித்திர வடிவில் செம்மையும் பசுமையும் கலந்த அழகுக் கோலம். அது போன்ற ஒரு கோப்பை தான் வாங்கி அவன் கண்களில் பட மேசையின் மேல் வைத்து உணவு உண்ண வேண்டுமென்று இவன் விரும்பினான். அதற்காக யாழ்ப்பாணத்து நகர வீதிகளில் அலைந்து, பல கடைகளுக்குள் ஏறி இறங்கி, இறுதியில் அப்படி ஒரு கோப்பை வாங்கிக் கொண்டான். இவன் உடுப்புகள் வாங்கிக் கொள்ளும் தருணங்களில் எல்லாம் அவன் அணியும் ஆடைகள் போலச் சிரமப்பட்டு வாங்கி அவன் கண் பட அணிந்து கொண்டான்.

ஒரு சமயம் கல்லூரி விடுதியில் இருந்து வீட்டுக்குப் போன அவன் மூன்று தினங்கள் கழிந்தும் திரும்பி வந்து சேரவில்லை. இது ஒரு நல்ல சந்தர்ப்பமாக இவன் மனசுக்குத் தென்பட்டது. இந்த வாய்ப்பைச் சரியா கப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அவன் நட்பை இந்தச் சந்தர்ப்பத் தில் சம்பாதித்துக் கொள்ளவேண்டும். இவன் உள்ளத்தில் அதைப் பெறுவதற்கு உறுதி பூண்டான்.

மறுநாள் ஒரு சயிக்கிளை எடுத்துக்கொண்டு புறப்பட்டான். தான் போகும் இடம் மற்றவர்கள் அறியாத வண்ணம் இரகசியமாக மறைத்து வைத்துக்கொண்டான். பதினைந்து கிலோமீற்றர் தூரம் சயிக்கிளில் ஓடிச் சென்று இடையில் சந்தித்தவர்களிடம் விசாரித்து, இறுதியில் அவன் வீட்டைக் கண்டுபிடித்தான். வீடு வசதியானதல்ல, சாதாரண வீடு என்பது

வெளிப்பார்வைக்குத் தெளிவாகத் தெரிகிறது. அந்த வீட்டின் வீதியில் குறுக்கும் நெடுக்குமாக இரண்டு தடவைகள் சயிக்கிளை ஓட்டிக்கொண்டு திரிந்தான்.

இவன் எதிர்பார்த்து வந்ததுபோல அவனைக் கண்டுகொள்ள முடிய வில்லை. இப்போது என்ன செய்யலாம்? அவன் வீட்டுக்கே நேரில் சென்று சந்திக்கலாம். ஆனால் அவனைத் தேடிக்கொண்டு வீட்டுக்கு வந்திருப்பதற்கான காரணம் வீட்டிலுள்ள பெரியவர்கள் கேட்பார்கள். அவர்களுக்கு என்ன நியாயம் சொல்லித் தப்பித்துக்கொள்ளலாம்? அவன் தன்னுடன் ஒத்துழைத்து தன்னைக் காப்பாற்றுவான் என நம்புவ தற்கில்லை.

மீண்டும் அந்த வீதியில் இவன் சயிக்கிளை விட்டான். ஒரு தடவை அவன் வீடு கடந்து இவன் போய்க்கொண்டிருக்கும்போது, அவன் தனது வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தான்.

இவனைக் கண்டு தனக்கு உண்டான அதிசயத்தை அவனால் மறைக்க முடியவில்லை. திறந்த வாய் மூடாமல் இவனைப் பார்த்துக் கொண்டு நிற்கின்றான்.

அவன் தன்னோடு பேசுவான். வீட்டுக்கு வருமாறு நாகரிகமாக அழைப்பான் என்ற எதிர்பார்ப்பு இவன் மனசில் அரும்புகிறது.

ஆனால் அவனைக் கடந்து வெகுதூரம் இவன் வந்து விட்ட பின்னரும் அவன் தன் வீட்டு வாசலில் நின்று கொண்டிருக்கின்றான்.

இவனுக்கு ஏமாற்றம்தான் மிஞ்சுகிறது. இனி அவன் பக்கம் திரும்பா மல் அப்படியே வந்து விடலாம் என்று மனசு உந்துகிறது. இருந்தும் ஒரு நப்பாசை, மீண்டும் திரும்பி அந்தப் பாதையில் இவன் வருகின்றான். இப்போதும் அவன் தனக்கு உண்டான வியப்பில் இருந்து விடுபடாதவ னாகத் தான் நின்ற இடத்தில் இருந்து அசையாமல் நிற்கின்றான், அவன் வீட்டைக் கடந்து சில மீற்றர் தூரம்வரை சென்று, மீண்டும் இவன் திரும்பி வருகின்றான். அவன் வீட்டுக்கெதிரில் இவன் வரும்போது இவனைப் பார்த்து ஏளனமாக ஒரு தடவை சிரித்து விட்டு அவன் திரும்பி வீட்டுக்குள் போகின்றான்.

இவனுக்கு அந்த அவமதிப்பைத் தாங்கிக்கொள்ள இயலவில்லை. அவமானத்தால் மெல்லக் குறுகிப் போகிறான். நெஞ்சம் குமுறிக் கொண்டு வருகின்றது. கண்ணீர் பெருகிக்கொண்டு வரும்போலத் தெரி கிறது. சயிக்கிளில் ஏறி அமர்ந்து வெறி பிடித்தவன் போல வேகமாக ஓட்டுகின்றான்.

அந்த வாழ்க்கை இவனுக்கு வழங்கிய ஒரு பரிசு.

பல்கலைக்கழகத்துக்கு இவன் புகுவதற்கு இயலாமல் போனதுதான்.

# 12

இவைகள் எல்லாம் நடந்து முடிந்து எவ்வளவு காலம்? இவனுக்கு அப்போது வயது இருபதுக்குமேல் சென்றிருக்காது. அவன் பதின் நான்கு, பதினைந்து தாண்டி இருக்கமாட்டான் ஓ. . . . .! இரண்டு தசாப்த காலம் கழிந்து போய்விட்டது. கால வெள்ளம் எத்தனை வேகமாக சுழித்துக் கொண்டு ஓடுகின்றது. முன்னுள்ள அழுக்குகளை அடித்துத் தள்ளிக் கொண்டு அது பாய்ந்து ஓடிப் போய்த்தான் என்ன பயன்?

அவன் எந்தவித மாற்றமுமின்றி இன்றும் அப்படித்தான் இருக்கின் றான். கடந்தகால அழுக்குகள் நெஞ்சை விட்டு நீங்கி, அவன் மனசு இன்னும் வெளுக்கவில்லை. உள்ளத்தில் வாழ்வின் வழி வந்த அநுபவ அறிவில் அவன் ஆளுமை வளர்ந்திருக்கவில்லை. கால நீரோட்டம் அழுக்குகளைக் கொண்டு போயிருக்குமானால் அவன் இன்று ஒதுங்கிப் போவானா? இவனிடம் ஓடோடி வந்து நட்புடன் இவன் கரம் பற்றி உரிமையுடன் குலுக்கி இளமையின் பேதைமைகளைக் களைந்து பூரண மனிதனாக அல்லவா நின்றிருப்பான்?

இன்றும் அவன் மாறவில்லை. பழைய அவன்தான். அன்று போலச் சார்ந்துதான் நிற்கின்றான். ஒரு வேறுபாடு, இன்று மனைவி அவனுக்குப் பற்றுக்கோடு. கல்லூரி விடுதியில் அந்த மாணவனோடு இணைந்து குழைந்து குழைந்து இரகசியங்கள் பேசிக்கொண்டு பின்னால் சுற்றுவான். அவனோடு மெல்லப் பேசுவது கொஞ்சுமொழி பேசி மகிழ்வது போலத் தோன்றும். அந்த மாணவனுடன் பேசுவது போலத்தான் இப்பொழுது மனைவி காதில் மென்மையாகக் கிசுகிசுக்கின்றான். அவன் உயர்ந்த பதவியில் நிச்சயமாக இன்று இருப்பான். பதவியில் உயர்ந்து மேலே மேலே போவதில் அவனுக்கு எந்தவொரு சிரமமும் இருந்திருக்க மாட்டாது. அங்கும் அவன் சார்ந்து நின்று மேலே உயர்ந்தெழும்பு வதற்கு ஊன்றுகோல் ஒன்றை உறுதியாகப் பற்றிப் பிடித்திருப்பான்.

அவன் மனைவி அவன் சொன்னது கேட்டு இவன் பக்கம் திரும்பி, இவனைப் பார்த்து ஒரு முறை பரிகாசமாகச் சிரித்தாளே! அந்தச் சிரிப்பு. . . . இவன் பற்றி மாத்திரம் அவன் தரக்குறைவாக அவளுக்குச் சொல்லி இருப்பான். தன் பாலிய காலச் சிநேகம் பற்றி ஒரு வார்த்தை அவன் வாய் திறந்து பேசி இருக்கமாட்டான். அவற்றை எல்லாம் அவன் அவளுக்குச் சொல்லத்தான் முடியுமா? மனைவியுடன் தன் கடந்த காலங்களை மனந்திறந்து பகிர்ந்துகொள்ள ஒரு கணவனுக்கு முடியலாம். ஆனால் அவனுக்கு அது இயலாத காரியம்.

அவன் மனைவி இவனைப் பார்த்து அப்படிச் சிரித்தாளோ. . . . அந்தச் சிரிப்பு. . . . . அந்தப் பல்வரிசை. . . . . முத்துக்கோத்ததுபோல.

இவன் உள்ளத்தில் முத்துக்கோத்த அந்தப் பல்வரிசை இன்றும் பதிந்து போய்க் கிடக்கிறது.

அந்தப் பல் வரிசை நளினியின் கோத்த முத்துக்கள். பலாலி ஆசிரிய கலாசாலையில் அந்த நளினியை இவன் சந்தித்தான். அவள் வித்தியா சமான ஒரு பெண்ணாக இருந்தாள். ஆண்கள் பலருடனும் வேறுபாடில் லாது பழகுவாள். தயக்கம் காட்டாது சிரித்துச் சிரித்துப் பேசுவாள். ஆண் களைத் தன்பக்கம் கவர்ந்து வைத்திருக்கவேண்டும் என்பதில் மிகக் கவனமாக இருந்தாள். அவள் ஒரு சேலைக் கடையைச் சொந்தமாக வைத்திருக்கின்றாள் என்று மற்றவர்கள் சொல்லக் கேட்டுப் பெருமைப் பட்டுக்கொள்வாள். காலை நேர வகுப்புக்கு வரும்போது ஒரு சேலை அணிந்து வந்தால் மாலையில் இன்னுமொரு சேலை அணிந்து வருவாள். கவர்ச்சி காட்டுவதில் சினிமா நடிகைகள் அவளுக்கு தோற்றுப் போவார்கள். 'போயிலை விரிக்கிற' யாழ்ப்பாணத்துப் பழமொழி எல்லாம் அவளிடம் தோற்றுப்போனது.

சிரிப்பினால் கவர்ந்து 'சிரிப்பழகி' எனப் பட்டம் பெற்ற சினிமாக் கதாநாயகி போல அவள் அழகு காட்டினாள். அந்தச் சினிமாக் கதாநாயகி பெயரை சக மாணவர்கள் அவளுக்குச் சூட்டி விட்டார்கள். நளினி என்ற அவள் பெயர் மறைந்து விஜயா ஆகப் பெருமை பெற்றாள். நளினி விஜயாவானதும் அவள் நளினங்கள் மேலும் வளர்ந்துகொண்டு போயின. ஆண்களுடன் ஒருவர் மாறி ஒருவருடன் சிநேகமாக இருந் தாள். ஒருவருடன் நட்பாக இருந்து கொண்டு அதே சமயம் இன்னொரு வருடன் சிநேகத்தை வளர்த்தாள். அவளுக்கு இவைகளெல்லாம் ஒரு சித்து விளையாட்டு. ஆண்கள் மத்தியில் கவர்ச்சிக் கன்னியாக விளங்க வேண்டும். அழகு தேவதையாக இருக்கவேண்டும். கடைக்கண் வீச்சில் ஆண்கள் தனது காலடியில் வந்து விழவேண்டும். யார் மேலும் தனக்கு நாட்டமில்லை. வலிந்து வலிந்து ஆண்கள், பின்னால் சுற்றித் திரிகிறார் கள் என்று சொல்லிக்கொள்வாள்.

மாணவர்கள் மத்தியில் எப்பொழுதும் சுழன்று கொண்டிருக்கும் அவள் மீது இவனுக்கு ஒரு கண் இருந்தது. சக மாணவர்களைத் தேடித் தேடிப் பேசுகின்ற அவள் இவனை மாத்திரம் நெருங்கி வருவதில்லை. இவனுக்கு அவளோடு உறவு வைத்துக் கொள்வதில் உள்ளூர ஒரு நாட்டம் இருந்தது.

ஒரு தினம் அவளைப் பார்த்து இவன் சொன்னான்

"முத்துக் கோத்ததுபோல. . . . ."

"என்ன மிஸ்ரர் முத்து" அவள் கேட்கிறாள்.

"முத்துக் கோத்ததுபோல. . . . ."

"என்ன. . . . .?"

"உங்க பல்வரிசை"

"உங்களைக் கோத்ததுபோல. . . . . அப்பிடித்தானே!"

"அப்பிடி வைச்சுக்கொள்ளுங்களேன்"

"முத்து உங்களை ஒருபோதும் நான் கோத்துக் கொள்ளப் போற தில்லை"

இவன் முகத்தில் அறைந்தது போல அவள் சொல்லிக்கொண்டு போய்விட்டாள்.

பெண்ணை வசீகரிக்க வேண்டுமானால் அவள் அழகினைப் புகழ்ந்து பேசவேண்டும். அந்தப் போதையில் மயங்காத எந்த பெண்ணும் இல்லை. இதுதான் அவர்களை மயக்கும் வசிய மந்திரம் என்று விடுதி யில் நண்பர்கள் ஒருதினம் பேசிக்கொண்டார்கள். அந்த மந்திரத்தை உச்சாடனம் செய்து பரீட்சித்துப் பார்க்க இவன் விரும்பினான். ஆண்க ளுடன் குழைந்து குழைந்து பேசிப் பழகும் விஜயா இதற்குப் பொருத்த மானவள் என்று இவன் நம்பினான். அந்த நம்பிக்கையில் அவளோடு பேசப்போய் அந்த ஆசையில் மண் அள்ளிப்போட்டு இவனை அலட்சியம் பண்ணி அவமதித்துவிட்டு அவள் போய்விட்டாள்.

பலபேரை காலத்திற்குக் காலம் அவள் நேசித்துக் காட்டினாள்.

ஆனால் உண்மையில் அவளை நேசிக்கின்றவர்கள் யாரும் இறுதி யில் இருக்கவில்லை.

காதலுக்குக் கண் இல்லை என்று சொல்வதெல்லாம் இவன் வரையில் முழுப் பொய். கண் இருந்தும் இவனுக்குக் காதல் அல்லவா இல்லாமல் போனது! கண் இருந்தும் அதனால் இவனுக்கு என்ன பயன்? ஐம்பொறிகளில் உண்ணவும் பேசவும் என இரண்டு செயல்கள் செய்ய வல்லது வாய் ஒன்று மாத்திரம்தான் என்று சொல்வார்கள். அவர்களுக் குத் தெரியாது இந்த விழிகள் செய்யும் காரியங்கள். சும்மா காட்சிகளைக் காணும் விழிகள், இதயங்களைக் கவர்ந்து இழுத்து காதல் செய்யவும் விழிகள்.

இவனுக்கு இவன் விழிகள் வெறும் காட்சிகளையே காட்டுகின்றன.

காதலுக்கு இசைவான கண் இவனுக்கு இல்லாமல் போனது.

கண் இருந்தால் காதல் பிறந்திருக்கும்.

காதல் பிறக்காததினால் இவனுக்குக் கண் இல்லை.

கண் ஏன் இல்லாமல் போனது.

காதல் ஏன் பிறக்காமல் போனது.

கண் ஏன் இல்லாமல் போனது.

காதல் ஏன் பிறக்காமல் போனது.

இவன் தனக்குள்ளே திரும்பத் திரும்பத் தேடுகின்றான். இவன் தேடல்களும் மனவிசாரங்களும் நீண்ட நேரம் இவனுக்குள் நிலைக்க வில்லை. இவனுக்கு இப்போது அன்னவிசாரம். அது ஒழிந்த பிறகுதான் அடுத்த விசாரங்கள்!

வயிற்றில் மூண்டுவிட்ட அக்கினி உள்ளே பற்றி எரிய ஆரம்பித்து விட்டது. அந்த அக்கினிக்கு ஆகுதி சொரிந்து அடக்கிவிடும் எண்ணத் துடன் இவன் சயிக்கிள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றது. இன்னும் கைதட்டிக் கூப்பிடும் அளவு தூரம் புளியடிச் சந்தி. வழமையான அந்தத் தேநீர்க்கடைக்கு முன் வந்து சயிக்கிளில் இருந்து குதித்து இறங்கு கின்றான்.

"வாங்கையா. . . . . என்ன சாப்பிடப் போறியள்?" சமயமறிந்து இவன் தேவை உணர்ந்த இங்கிதமான வரவேற்பு.

"வடை கொண்டு வாங்கோ"

ஒரு கோப்பையை எடுத்து அதனுள் காகிதத்தை வைத்து, அதன் மேல் வடைகள் சிலவற்றை இட்டு வந்து இவன்முன் மேசைமேல் பவ்வியமாக வைக்கின்றார். இவன் கேட்காமலே ஆவி பறக்க தேநீரை ஊற்றி எடுத்து வந்து அதையும் இவனுக்கு முன் வைக்கின்றார். இவன் உள்ளம் அறிந்து உபசரிக்கும் இந்தப் பக்குவத்தில் இவனுக்கு மனசு நிறைந்து போகின்றது.

இந்தப் பிரியமான அனுசரிப்பு வேறெங்கும் கிடைக்கவில்லையே என்னும் ஏக்கம் இவன் நெஞ்சை இன்னொருபுறம் நெருடுகிறது.

வடை ஒன்றைக் கையிலெடுத்து மிக அவசரஅவசரமாக கடித்துத் தின்கின்றான். அப்படியொரு பசி. பிறகும் இன்னொரு வடையை எடுத்து தின்னவேண்டும்போல இவனுக்குத் தோன்றுகின்றது. ஆனால் கையில் இருந்த காசு மேலதிகமாக இன்று சிகரெற்றிற்கு செலவாகிப்போனது. கையிருப்பு வற்றிக்கொண்டு போய்விட்டது. ஒரு வடையே போதும் என்று எண்ணிக்கொண்டு தேநீரைக் கையில் எடுத்துப் பருக ஆரம்பிக்கின்றான்.

"ஐயோ! என்ன நிறுத்திப்போட்டியள்"

"போதும்"

"ஒரு வடை போதுமே! சாப்பிடுங்கோ!"

"வேண்டாம். . . . . வேண்டாம். . . . . வயிறு கொஞ்சம் சரியில்லை"

சேட் பையில் இருந்து காசை எடுத்துக் கொடுத்த பின்னர், நெல்லியடிச் சந்தி நோக்கி மீண்டும் இவன் சயிக்கிள் திரும்புகின்றது.

இவனுக்கு ஆகவேண்டிய காரியங்கள் என்று அப்படியொன்றும் இப்போது அங்கே இல்லை. ஆனால் மனசு அங்கே போவதற்குத் தூண்டுகின்றது. வீடு திரும்பவேண்டும் என்னும் எண்ணம் உள்ளத்தில் எழவே இல்லை.

இவனை அலட்சியம் பண்ணிவிட்டுப் போயிருக்கும் அவனும் அவளும் சில சமயம் திரும்பி வரக்கூடும். மீண்டும் அவர்களைச் சந்திக்க நேர்ந்தாலும் நேரலாம்.

அவர்களைத் திரும்பவும் சந்திக்கவேண்டும் என்ற உன்மத்தம் நெல்லியடி நோக்கி மீண்டும் உந்தித் தவிக்கிறது.

அவர்களைச் சந்திக்க நேரலாம் என்னும் எண்ணம் நெஞ்சில் எழுந்தபோது 'அவள் ஏன் சிரித்தாள்' என்ற கேள்வியும் உடன் கிளர்ந் தெழுகிறது.

'ஏன் சிரித்தாய்?. . . . . ஏன்? ஏன்?. . . . .'

இவன் அணிந்துகொண்டிருக்கும் இந்த ஆடைகள். . . . . இந்தக் கோலம் கண்டு அவள் சிரித்திருக்கலாம்.

# 13

பாலிய கால இவன் கதை அறிந்து அவள் சிரித்திருக்கவேண்டும். அல்லது இவன் இப்போது இருக்கும் கோலம் கண்டு அவள் ஏளனம் பண்ணிச் சிரித்திருக்க வேண்டும். இதுபோல் அண்மையில் இவன் கற்பிக்கும் பாடசாலையில் நிகழ்ந்த ஒரு சம்பவம் இவனுக்கு மறக்க முடியாதது.

பாடசாலை இடைவேளை நேரத்தில் ஆசிரியர்கள் தங்கும் அறைக் குச் செல்லாது தனது வகுப்பறையில் தங்கிவிடுவது இவன் வழக்கம். அப்படி இருப்பதற்கு எந்த விசேஷ காரணமுமில்லை. ஒதுங்கி இருப்ப தில் இவனுக்குத் தனியான ஒரு விருப்பம். ஏகாந்தம் இன்பம் தருவதாக இவன் உணருகின்றான். அத்தோடு சக ஆசிரியர் ஒருவருக்கு இவனைக் கண்டுகொண்டால் அலாதியான ஒரு குதூகலம் வந்துவிடுகின்றது. அதுவும் ஆசிரியைகள் சிலர் அந்த இடத்தில் இருந்துவிட்டால் அவர் உற்சாகம் கரை புரண்டோடும். அவர் தனது மேதாவிலாசத்தைக் காட்ட

அப்போது ஆரம்பித்து விடுவார். பகிடி என்ற பெயரில் கிண்டல் செய்யத் தொடங்குவார். இவனுக்கு அந்தக் கிண்டல்கள் கட்டோடு பிடிப்ப தில்லை. இதனால் ஆசிரியர்கள் கூடியிருக்கும் இடத்தில் தான் போய் இருப்பதை இவன் தவிர்த்து வந்தான். சக ஆசிரியர்களில் இருந்து முற்றாக விலகி இருக்கக்கூடாது என்ற எண்ணத்துடன் என்றாவது ஒரு நாள் அங்கு போவான். அப்படிப் போன ஒரு தினத்தில் குறிப்பிட்ட அந்த ஆசிரியர் இவனிடம் கேட்டார்.

"மாஸ்ரர் வீட்டிலே விசேஷம் போல"

"என்ன விசேஷம்"

"உங்களைப் பாக்கத் தெரியுது"

"என்ன தெரியுது"

"வீட்டிலே விசேஷமெண்டு"

"ஒரு விசேஷமுமில்லை"

"பொய் சொல்லுறியள்"

"நான் பொய் சொல்லவில்லை"

"விசேஷம் இல்லை எண்டால் ஏன் தாடி வளர்க்கிறியள்!"

பல நாட்கள் சவரம் செய்யாத முகத்துடன் இவன் இருப்பதை அவர் அப்படிக் கிண்டல் பண்ணுகின்றார். இதைப்போய் இப்படிச் சுற்றி வளைத்துப் பேசுகின்றாரே என்ற மன எரிச்சலோடு, "பிளேட் வாங்கக் காசில்லை" என்கின்றான் இவன்.

"உது பொய். காரணம் வேறை இருக்கு"

அங்கு கூடியிருக்கும் ஆசிரிய, ஆசிரியைகள் அடுத்து அவர் என்ன சொல்லப் போகின்றார் எனச் சுவாரசியமாக எதிர்பார்க்கின்றார்கள்.

"தெரிஞ்சா நீங்க சொல்லுங்கோ!"

"எப்பிடிச் சொல்லுறதெண்டுதான். . . . "

"யோசிக்கிறியள். யோசிக்காமல் சொல்லுங்கோ!"

"சரி, நீங்களும் விடுகிறியள் இல்லை. . . . சொல்லுறன். எல்லோரும் கேளுங்கோ! மாஸ்ரற்றை சொந்த விஷயத்தை நான் வெளியிலே சொல்லுறது சரியில்லை. எண்டாலும் அவரே சொல்லச் சொல்லி நிற்கிறார்"

அவர் போட்ட பீடிகையில் ஆசிரியர்கள் மத்தியில் ஆர்வம் பெருகிக் கொண்டு வருகின்றது. அவர் சொல்லப்போவதைக் கேட்டறியவேண்டும் என்னும் துடிப்பினால், "சொல்லுங்கோ ஸேர். . . . . சொல்லுங்கோ" எனத் தூண்டுகின்றார்கள்.

"மாஸ்ரற்றை மனிசி கர்ப்பமுற்றிருக்க வேணும்"

சுவாரசியமான ஒரு விஷயம் தான் கண்டுபிடித்து விட்டவர்போல ஒரு குண்டைத் தூக்கிப் போட்டுவிட்டதாக எண்ணிக் கெக்கலி கொட்டிச் சிரிக்கின்றார். அவரோடு சேர்ந்து அங்கு கூடி இருக்கும் ஆசிரியர்கள் அனைவரும் பலமாகச் சிரிக்கின்றார்கள்.

அந்தச் சிரிப்பொலி அடங்க சில நிமிடங்கள் கழிந்து போகின்றது.

அவர் சிரித்துச் சிரித்து கண்களில் இருந்து வடியும் நீரைக் கைக் குட்டையால் துடைத்து, மூக்கையும் அதற்குள் சீறுகின்றார்.

இவனுக்கு உண்மையில் ஒன்றுமே விளங்கவில்லை. தாடி வளர்க் கின்றது என்கிறார். . . . . மனைவி கர்ப்பம் என்கிறார். அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? ஒருவனுடைய மனைவி கர்ப்பம் என்றால் அதை இப்படி அசிங்கமாக அநாகரிகமாகவா பகிரங்கப்படுத்த வேண்டும்? இவனுக்கு உள்ளே சினம் மூண்டுகொண்டு வருகின்றது. ஆனால் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் அவர்களோடு சேர்ந்து இவனும் சிரிக்கின் றான்.

அவர்கள் மத்தியில் எழுந்த சிரிப்பலை மெல்ல மெல்ல அடங்கிய பிறகு தனக்குள் எழுந்த ஆர்வத்தை அடக்கிக்கொள்ள இயலாத ஓர் ஆசிரியை அந்த ஆசிரியரை நோக்கி கண்ணைச் சிமிட்டிக்கொண்டு கேட்கின்றார்.

"அதுசரி ஸேர், மொட்டந்தலைக்கும் முழந்தாளுக்கும் ஏன் முடிச்சுப் போடுகிறியள்! முத்துலிங்கம் மாஸ்ரர் தாடி வளர்க்கிறதுக்கும் மனிசி யின்ரை வயிற்றிலை குழந்தை இருக்கிறதுக்கும் என்ன உறவு?"

"அப்பிடி வாருங்கோ! நான் உங்கள் எல்லோருக்கும் சீனியர் மன். எனக்குத் தெரியாத பழைய சடங்குகள் சம்பிரதாயங்கள் இல்லை. அந்தக் காலத்திலே வயிற்றிலை குழந்தை இருந்தால் புருஷன் தாடி வளர்க்கிறது வழக்கம்.

"அப்பிடியா" கேட்டு எல்லோரும் வாயைப் பிளக்கின்றார்கள்.

"என்ரை வயிற்றைப் பாருங்கோ பெரிய வயிறு. இரட்டைக் குழந்தை இருக்கு." சொல்லிக்கொண்டு இவன் அங்கிருந்து எழுந்து போய்விடு கின்றான்.

உடைக்காக இவன் எவ்வளவு செலவு செய்திருக்கின்றான்! காண்பவர் கண்களை கவர்ந்திழுக்கும் எத்தனை சேட்டுகள். கம்பீரமாகக் காட்டும் எத்தனை பெல்ஸ்சுகள்! இவன் வாங்கும் சம்பளம் இவன் ஆடைக்கும் அலங்காரங்களுக்கும் போதாதிருந்தது. அந்தத் தேவைகளுக்கு தந்தையிடம் சென்று பணம் கேட்டு, அவருடன் முரண்பட்டு விடாப்பிடியாக நின்று பணம் பெற்றுச் செலவு செய்தான். பணத்தை அள்ளியிறைத்து அலங்கரித்துத் திரிந்ததெல்லாம் அவளுக்காக, அந்த மனோவுக்காக.

மனோ என்ற தேவதையைச் சுற்றித் திரிந்த காலம். அவள் அன்பு ஒன்றிற்காக ஏங்கித் தவம் கிடந்த இனிய பருவம். இவன் மனசில் அழியாத இன்ப நினைவுகளை இன்றும் பதித்து வைத்திருக்கும் மோகனப் பருவம்.

ஆசிரிய கலாசாலையில் வாழ்ந்த அந்த இரண்டு ஆண்டுகள் இளமையின் சோபனங்கள் நிறைந்த பசுமையான ஒரு காலம்.

எத்தனை வகையான ஆண்கள்!

எத்தனை வசீகரமான பெண்கள்!

பட்டாம்பூச்சிகளாக சிறகடித்துத் திரிந்த பெண்கள் கூட்டம்.

பூத்துக் குலுங்கும் மலர்த்தோட்டத்தில் சௌந்தரிய தேவதைகளாக விளங்கிய கன்னியர் கூட்டம்.

அந்தக் காலம் தேவதைக் கனவுகளைச் சுமந்து கொண்டு வாலிபச் சிறகுகளை விரித்து வானத்தில் மிதந்த காலம்.

ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்தின் உயர் கல்விப் பீடங்களாகத் திருநெல்வேலி, நல்லூர், கொழும்புத்துறை, கோப்பாய், பலாலி என்று ஐந்து ஆசிரிய கலாசாலைகள். சைவத்துக்கு திருநெல்வேலி, கத்தோலிக்கத்துக்கு கொழும்புத்துறை, கத்தோலிக்கம் அல்லாத கிறிஸ்தவத்துக்கு நல்லூர், பெண்களுக்கு மாத்திரமென்று கோப்பாய். விசேட பயிற்சிக்குப் பலாலி.

இவன் விஞ்ஞான பாட விசேட பயிற்சி பெறும் மாணவனாகப் பலாலிக்கு வந்தான். இவன் செய்த அதிஷ்டம் மனோவும் அந்தப் பயிற்சி பெறும் மாணவியாக வந்து சேர்ந்தாள். கலாசாலைக்கு வந்த இரண்டொரு மாதங்களில் பலர் தங்கள் சோடி யாரென்பதைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள். கலாசாலையில் பயிற்சி பெறும் மாணவர்கள் அனைவரும் சோடி சேர்ந்து கொள்கின்றார்கள் என்றில்லை. திருமணமானவர்கள், ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு வருவதற்கு முன்னரே உள்ளத்தை ஒருவரிடம் பறிகொடுத்துவிட்டு வந்து அந்த நினைவுகளில்

ஏங்கிக்கொண்டிருப்பவர்கள், இயல்பில் ஒதுங்கிப் போகும் சந்நியாசங்கள், இறுக்கமான குடும்பக் கட்டுப்பாடு உள்ளவர்கள் எனப் பல ரகங்கள் வருவார்கள். இவர்கள் அனைவரையும் உள்வாங்கி பருவ உணர்வுகள் பொங்கி வழியும் வாலிப உலகமாகக் கலாசாலை காட்சி அளிக்கும்.

இவனும் அந்த வெள்ளத்தில் அடிபட்டுத் திக்குத் திசை தெரியாது சுழன்று கொண்டிருந்தான்.

இவனை நேசிக்கும் ஓர் இதயம் இவனுக்குத் தேவைப்பட்டது. அந்த இதயம் எங்கே என்று இவன் தேடிக்கொண்டு இருந்தான். அந்தத் தேடலில் சில மாதங்கள் மெல்லக் கழிந்து போயின. தன்மீது பரிவு கொள்ளும் எந்த இதயத்தையும் இவன் கண்டுகொள்ளவில்லை. இவனுக்குள் ஒரே தாகம், அன்புத் தாகம். நேசத்திற்காக ஏங்கும் தாகம். இத்தனை வயதுகள் இவனுக்குக் கழிந்து போயின. ஒருவர் அன்புக்கு ஆளாகும் அந்த பாக்கியம் இன்னும் வந்து கிட்டவில்லை. இந்த ஏக்கத்துடன் கலாசாலைக்குள் அலைந்து கொண்டிருக்கின்றான். அந்த வேளையில்தான் ஒரு தினம் அந்த முத்துப் பல்லழகியின் அலட்சியத்திற்கு ஆளாக நேர்ந்தது. அவளிடம் பட்ட சூடு மனசை சதா வெதுப்பிக் கொண்டிருந்தது. புண்பட்ட இவன் உள்ளம் நிலையில்லாது அலைந்து கொண்டிருக்கும்போது மனோ இவன் கண்ணில் பட்டாள்.

அவள் ஒரு அழகு தேவதை என்று சொல்லுவதற்கில்லை. அவள் அழகியல்ல என்று ஒதுக்கி வைத்துவிடவும் இயலாது. அவளோடு ஒப்பிட்டுச் சொல்வதற்கு அருகதை இல்லாதவர்கள், குலுக்கி மினுக்கி சோடி சேர்ந்து புன்னகை பூத்துக் குலுங்குகின்றார்கள். ஆனால் அவள் மாத்திரம் அவர்களில் இருந்து ஒதுங்கி அமைதியாக இருக்கின்றாள். அவளின் இந்த விலகலால் இவன் மனசில் இனம்புரியாத ஒரு வேதனை. பொறுப்புணராது நடந்து கொள்ளும் ஒரு தந்தையின் குடும்பத்து மூத்த பெண்ணாக இவள் இருக்கலாம். இவளுக்கு உடன் பிறந்தவர்களாகப் பல பெண்கள் பிறந்திருக்கக்கூடும். அந்தக் குடும்பப் பாரம் சுமக்கும் பாசமுள்ள அக்காவாக இவள் இருக்கவேண்டும்.

சாந்தம் தவழும் அவள் முகம். விழிகளுக்குக் கீழ் இயல்பாக மை தடவியது போல அழகிய கருவிழிகள். அந்த விழிகளில் எப்பொழுதும் இனம் புரியாத ஒரு சோகம் அல்லது சாந்தம் தவழும் ஒரு அமைதி, எது என்று பேதம் காணவியலாத மௌன விழிகள். மலர்மொட்டாகத் தோன்றும் எடுப்பான கூர் நாசி. முழந்தாள்களை முத்தமிட்டு முத்தமிட்டு அசைந்தாடும் அலையலையான கருங்கூந்தல். அங்க அடையாளங்களுக்கு வெளிச்சம் போட்டு வாலிபக் கண்களை வளைத்து இழுக்காத அடக்கமான ஆடைகள். ஆர்ப்பாட்டம் இல்லாத மெல்லமெல்ல அசைந்து செல்லும் அமைதியான நடை. சிவந்த மேனி என்று சொல்வதற்கு இயலாத பொதுநிறம்.

இவன் மனசிற்கு அவளைப் பிடித்தது. அவள் அமைதி, அடக்கம் இவனைக் கவர்ந்தது. பலருடன் சேர்ந்து வாழும்போதும் அவளின் மெல்லிய விலகல் இவனுக்கு நம்பிக்கை ஊட்டுகிறது. இவன் உள்ளத்தில் இனம்புரியாத ஒரு அனுதாபம் அவள்மீது பிறந்தது. அவள் தன்னை ஏற்றுக்கொள்வாள் என்ற நம்பிக்கை இவன் நெஞ்சில் உறுதியாக எழுந்தது.

இவன் மனசிற்குள் அவள் விழுந்த பின்னர் அவளையொத்த இன்னொரு பேரழகி அந்தக் கலாசாலையில் இருப்பதாக இவன் கண்களுக்குத் தோன்றவில்லை. அவள் கவனம் தன்பக்கம் திரும்பவேண்டும், அவளோடு நெருக்கமான உறவை உருவாக்கவேண்டும், இவன் இதனை ஓயாது சிந்தித்தான். அவள் கண்களுக்கு விருந்தாகவேண்டும் என்பதற்காக அழகாக உடை உடுத்தான். தினம் தினம் அலங்காரங்கள் பல செய்தான். பிறர் நச்ச நாகரிகமாக நடந்துகொண்டான். சொகுசான மாணவனாக இன்றும் சுற்றித் திரிந்தான்.

கீரிமலை சென்று நீராடி மீண்டான். அந்தச் சமயம் மனோ இவனைப் பார்த்து ஒரு தடவை, ஒரேயொரு தடவை புன்னகைத்தாள். அவள் தந்த புன்னகைப் போதையில் இவன் கிறங்கியே போனான்.

மறுநாள் அந்த மகிழ்வுக்காகக் காத்திருந்தான்.

மறுநாள். . . . .

மறுநாள். . . . .

அந்த ஒருநாள். . . . . அந்த ஒரேயொரு தடவை இவனடைந்த பரவசம் மீண்டும் இவனுக்குக் கிட்டவேயில்லை.

அவள் இவனை நிராகரிக்கவில்லை. அலட்சியம் பண்ணவில்லை. அவமதிக்கவில்லை.

அவளோடு பேசவேண்டும். ஒரு பெண் தன் மனசு திறந்து தானாக முதலில் ஒருபோதும் பேசமாட்டாள். அவளுடன் எப்படியும் பேசியாக வேண்டும்.

விரிவுரை மண்டபத்தில் வைத்து விரும்பினால் அவளோடு பேசலாம். சக மாணவி ஒருத்தியுடன் பேசிக்கொள்ளும் சாதாரண உரையாடலாகத்தான் அது இருக்கும். இதயத்தின் தவிப்பை ஒருபோதும் அவளுக்கு உணர்த்தப்போவதில்லை. பல தினங்கள் எண்ணியெண்ணி இவன் குழம்பிக்கொண்டிருந்தான். வந்துபோன இரவுகள் எல்லாம் இவனுக்குப் பகலாகக் கழிந்தன. அந்த வேளைகளில் தனக்குள்ளே தான் பல தடவைகள் இவன் ஒத்திகை பார்த்துக்கொண்டான். அந்த ஒத்திகைகளை அரங்கேற்றத் தினமும் துடித்துக்கொண்டிருந்தான்.

இன்று மனோவோடு பேசத்தான் வேண்டும்.
இப்படி ஆரம்பிக்கவேண்டும்.
முதல் இதைச் சொல்லவேண்டும்.
அடுத்து இதைக் கேட்க வேண்டும்.
இப்படி விடை பெற்றுக்கொள்ளவேண்டும்.

இவன் திட்டமிட்டுக்கொண்டு பல தினங்கள் விரிவுரைக்கு வந்திருக்கின்றான். ஆனால் இவன் நினைத்ததுபோல அவளோடு பேச இவனுக்கு இயலாமல் தவித்த மனத்துடன் திரும்பி வந்திருக்கிறான்.

மனப்போராட்டத்தில் இப்படிச் சிலகாலம் இவனுக்குக் கழிந்து போனது. இனிப் பொறுக்க இயலாது என்ற நிலை, மனோவுடன் எப்படியும் பேசியாக வேண்டும். இதயம் திறந்து அவளுக்குக் காட்ட வேண்டும்.

ஒரு தினம் விரிவுரை முடிந்து மதிய உணவிற்கு விரைவாக எல்லோரும் விடுதி திரும்புகின்றனர். இவன் விரிவுரை மண்டப வாசலில் இருந்து சிறிது தூரம் விலகிச் சற்று நேரம் தயங்கித் தாமதிக்கின்றான்.

அவள் விரிவுரை மண்டபத்தில் இருந்து இன்னும் சிலருடன் வந்துகொண்டிருக்கின்றாள்.

"மிஸ்!" மெல்ல அழைக்கின்றான். இவன் குரல் இவன் செவிகளுக்கே கேட்கவில்லை. அவள் காதுகளில் எப்படி அது கேட்டிருக்க முடியும்.

அவள் தன் தோழிகளுடன் சேர்ந்து அமைதியாகத் தன்பாட்டில் போய்க்கொண்டிருக்கின்றாள்.

இவனுக்கு உடல் பதறுகின்றது. வியர்வை முத்துக்கள் அரும்புகின்றன. கைக்குட்டையை எடுத்து முகத்தை அழுத்தித் துடைத்து தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு தளர்ந்துபோய் விடுதிக்குத் திரும்புகின்றான்.

# 14

விடுதியில் கிடைக்கும் உணவை ஒதுக்கி வைக்காமல் முழுவதும் வயிறு நிறைய உண்ணும் மாணவர்களுள் இவனும் ஒருவன். அந்த உணவு வேண்டாம் என்று தூர வீசிவிட்டால், வயிற்றுப் பசி ஆற்றுவதற்குக் கலாசாலைக்கு வெளியே, வசாவிளான் சந்திச் சாப்பாட்டுக்கடை நாடிப் போகவேண்டும். வாங்கும் சம்பளம் வெளியில் போய்ச் சாப்பிடுவதற்குக் கட்டுப்படியாகக் கூடியதல்ல. விடுதிச் சாப்பாடு சுவையாக

இல்லையென்று இவன் தள்ளி வைப்பதுமில்லை. வீட்டுக்கு அடிக்கடி சென்று நல்ல உணவுகளை உண்டு களித்து வருகின்றவர்களுக்குத்தான் அந்தப் பிரச்சினை. இவனுக்கு அந்தப் பிரச்சினை இல்லை. கிடைப்பதை முகம் கோணாமல் உண்டுவிட்டு எழுந்து செல்ல வேண்டிய நிலையில் இவன் இருக்கின்றான்.

ஆனால் அன்று இவனுக்குத் தொண்டைக்குள் உணவு இறங்க வில்லை. சாப்பாட்டு மேசைக்குப் போகாமல் இவன் தவிர்த்திருப்பான். தவிர்த்திருந்தால், அதுவே ஒரு கதையாகிப் போயிருக்கும். வேண்டாத கதைகள் வராமல் இருக்கவேண்டும் என்பதற்காக இவன் மேசைக்குப் போனான், உணவு உண்பதாக அங்கு பாவனை பண்ணிவிட்டு எழுந்து தன் அறைக்கு மீண்டான்.

விரிவுரை திரும்ப எப்போது ஆரம்பிக்கும் என்று மனசு ஏங்கிக் கொண்டிருக்கின்றது. மதிய உணவுக்கு ஒரு மணி நேர அவகாசம் கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்று இன்று இவனுக்குத் தோன்றுகின்றது. இன்னும் அரை மணி நேரம் காத்திருக்கவேண்டும், அரை மணி நேரம் என்பதென்ன சொற்ப காலமா! முப்பது நிமிடங்கள் அல்லவா! அதுவரை கட்டிலின்மீது பொறுமையாக எப்படிப் படுத்துக் கிடக்க முடியும்? கட்டிலுக்குக் கீழ் கையை விட்டு சவர்க்காரப் பெட்டியை எடுத்துக்கொண்டு வெளியே வருகின்றான், தண்ணீர் பைப்பைத் திறந்து விட்டு குபுகுபு என்று கொட்டும் நீரை ஏந்தி ஏந்தி சவர்க்காரம் தேய்த்து முகம், கால், கைகளை நன்றாகக் கழுவுகின்றான். கழுவி முடித்த பிறகு தான், துடைத்துக் கொள்வதற்கு துவாய் கையில் எடுத்துவர மறந்து போனது இவன் கவனத்துக்கு வருகின்றது. ஈரம் கொட்டக்கொட்ட அறைக்கு திரும்பி துவாய் ஒன்றை எடுத்து துடைத்துப் போடுகின்றான். காலையில் அணிந்த ஆடைகளை மீண்டும் அணிவதைத் தவிர்த்து, இன்னொரு புதிய சோடியை எடுத்து அணிந்து கொள்ளுகின்றான்.

இவன் அறை நண்பர்கள் இப்பொழுதுதான் அறைக்குத் திரும்பு கின்றார்கள். அவர்களும் விரிவுரைகளுக்குப் போக வேண்டும். துவாய் எடுத்து அழுந்தி முகம் துடைத்து, பவுடர் பூசி, தலைசீவிக் கொண்டு புறப்படுகிறார்கள்.

அவர்களுள் ஒருவன் இவனைக் கவனித்துவிட்டு இன்னொருவ னுக்குச் சொல்லுகின்றான்.

“மச்சான், முத்துவைக் கவனி!”

“ஓமடா மச்சான், முத்து பெரிய ஆர்ப்பாட்டமாக கிடக்கு”

“மிஸ்ரர் முத்து என்ன சங்கதி?”

இவனுக்குப் பற்றிக்கொண்டு வருகிறது. ஒரு நாள் பார்த்து எவனாவது ஒருவன் 'மச்சான்' அல்லது 'மச்சான் முத்து' என்று அழைக்கின்றானா? 'டேய்' என்று விளிக்கின்றானா? அப்படி எல்லாம் அழைப்பதில்தான் எவ்வளவு உரிமை! எவ்வளவு அன்பு! எவ்வளவு நெருக்கம்! தங்களுக்குள் மச்சான் போட்டுக் கொள்கிறார்கள். இவன் வலிந்து வலிந்து 'மச்சான்' என்று அழைத்தாலும் யாரும் இவனைக் கணக்கெடுப்பதில்லை. "முத்து. . . . . மிஸ்ரர் முத்து" என்று கௌரவமான மூத்த மனிதனாக அந்நியப்படுத்துகின்றார்கள். இவர்களைவிட இவன் வயதில் மூத்தவனா! ஒத்த வயதுதானே? யாருக்கு வேண்டும் இந்தப் போலிக் கௌரவம்! இவன் நெஞ்சுக்கு நெருக்கமாக நேசிக்கும் இதயம் வேண்டும்.

இவன் வாய் திறந்து அவர்களோடு பேசவில்லை. அங்கிருந்து புறப்பட்டு விடுதியை விட்டு வெளியே வந்து விரிவுரை மண்டபம் நோக்கி நடக்கின்றான்.

மண்டபத்தில் இவனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. ஒரே அந்தரமாக இருக்கின்றது. முள்ளின்மேல் குந்தி இருப்பதுபோன்று ஒரு உறுத்தல். விரிவுரை நடந்து கொண்டிருக்கின்றது. கரும்பலகையில் படங்கள் வரைந்து மகரந்தச் சேர்க்கை பற்றி விஞ்ஞான விரிவுரையாளர் விளக்கிக் கொண்டிருக்கின்றார். இனப்பெருக்கம் நடைபெறும் வழிமுறைகளைப் படிப்படியாக எடுத்துச் சொல்லுகின்றார். தேனீக்களும் மலர்களும் பற்றிப் பேசுகின்றார். ஆண்கள் தேனீக்கள் என்றும் பெண்கள் மலர்கள் எனவும் பூடகமாகக் குறிப்பிடுகின்றார். விரிவுரை மண்டபம் களை தட்டிக் கலகலக்கிறது. உற்சாகம் கரைபுரண்டோடுகிறது. மாணவர்கள் அனைவரும் மிகுந்த ஈடுபாட்டுடன் விரிவுரையைத் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

இவன் செவிகளில் அந்த விரிவுரைகள் எவையும் ஏறவில்லை. இப்படியான சந்தர்ப்பங்களில் இவன் வழமையாக வெகு உற்சாகம் காட்டுவான். தனது இருப்பை அவர்கள் மத்தியில் தவறாது வெளிக்காட்டிக் கொண்டிருப்பான். இன்று விரிவுரையாளர் குறிப்பிட்ட 'பூவும் வண்டும்' இவன் இதயத்தைப் போட்டுக் குடைந்து குடைந்து அரிக்கின்றது. இந்த வண்டுக்குரிய பூ எது?

எந்தப் பூ இந்த வண்டை வரவேற்கப் போகிறது?

இது பூ இல்லாத வண்டு.

இவன் இதயச் சிறகுகள் ஒவ்வொன்றாக ஒடிந்து விழுகின்றன. மனோ. . . . . மனோ. . . . . என்றே அந்த மண்டபம் எங்கும் இவனுக்கு ஒலித்துக் கொண்டிருக்கிறது. அவள் நீக்கமற அந்த மண்டபம் எங்கும் நிறைந்து நிற்கின்றாள்.

“என்ன முத்து அந்தரப்படுகிறீர்?”

இவன் அருகில் அமர்ந்திருக்கும் மாணவன் இவனைப் பார்த்துக் கேட்கின்றான்.

“ஒண்டுமில்லை. . . . . ஒண்டுமில்லை. . . . .”

மறுத்துச் சொன்னபோதும் அலைபாயும் மனசை அடக்கி வைக்க முடியவில்லை. அது கட்டுக்கடங்காது தறிகெட்டு அலைகிறது.

மாலை நேர விரிவுரைகள் முடிந்துவிட்டன. அவை எப்படி முடிந்தன என்பது இவனுக்குத் தெரியாது. எத்தனை விரிவுரைகள் நடந்தன. விரிவுரையாளர்கள் யார் யார் வந்து போனார்கள், என்பதெல்லாம் இவன் அறியமாட்டான். எந்த ஒரு குறிப்பும் அந்த விரிவுரைகளைக் கேட்டு இவன் எழுதிக்கொள்ளவில்லை. விரிவுரை மண்டபத்தில் இருந்து எல்லோரும் வெளியேறும்போது இவனும் எழுந்து வெளியே வருகின் றான். அவர்கள் அனைவரும் உற்சாகமாகப் பேசிக்கொண்டு விடுதிகளை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றார்கள். அவர்களோடு சேர்ந்து விடுதிக்குச் செல்ல இவனுக்கு இயலவில்லை. அவர்களை விட்டுத் தந்திரமாக மெல்ல ஒதுங்கி, பெண்கள் விடுதி நோக்கிச் செல்லும் பாதைக்கு வந்து மாமரத்தின் கீழ் வேறு ஏதோ ஒரு கவனமாக நின்று கொண்டிருப்பவன் போலப் பாசாங்கு பண்ணிக்கொண்டு நிற்கின்றான்.

இவன் அதிஷ்டம், அவள். . . . . மனோ வேறு எவருமின்றித் தனித்து வந்து கொண்டிருக்கின்றாள். கையில் குறிப்புப் புத்தகங்கள் தாங்கி வெள்ளைத் துகில் உடுத்தித் தேவதைபோல வந்து கொண்டிருக்கின் றாள். அந்தக் குறிப்புப் புத்தகங்கள் கலைமகளின் கைஏடுகள். கலை வாணியே காலடி எடுத்து வருவதுபோல இவனுக்கு எதிரே வந்து கொண்டிருக்கின்றாள். முன்னோக்கி மெல்ல மெல்ல மிதந்து வரும் அவள் பாதபங்கஜங்கள் இவன் இதயத்தில் தடம் தடமாகப் பதிய, இதயம் படபட என்று வேகமாக அடித்துக் கொண்டிருக்கின்றது.

இன்று ஏமாந்து போகக்கூடாது. ஒரு வார்த்தை அவளோடு எப்படி யும் இன்று பேசித்தீர வேண்டும். மனவைராக்கியத்துடன் அவள் வரவை இவன் பார்த்து நிற்கின்றான்.

இவன் அருகே அவள் வந்து கொண்டிருக்கின்றாள். இவனுக்கு அது நன்றாகத் தெரிகிறது. ஆனால் அதை அறியாதவன்போல வேறு திசை நோக்கி நிற்கின்றான். தற்செயலாக அவள் வரும் பாதை நோக்கித் திரும்புகின்றவன் போலப் பார்வையைத் திருப்புகின்றான். அவள் நிழல் இவன் மீது விழுந்து இவனைத் தடவிக் கடந்து செல்கிறது.

“மிஸ்” இவன் மெல்லக் குரல் கொடுக்கின்றான்.

அவள் பட்டென்று தரித்து நிற்கின்றாள்.

இவனுக்கு அதிசயமாக இருக்கிறது. இவன் அழைப்பை எதிர்பார்த் தவள்போல அவள் நின்றுவிட்டாள்.

இவன் பக்கம் அவள் திரும்பி, ஆச்சரியமாக இவனை நோக்குகின் றாள். அந்த ஒரு பார்வை என்னும் மின்னல் வெட்டில் இவன் கண்கள் கூசுகின்றன. அவள் விழிகளில் "என்ன?" என்ற வினா எழுந்து நிற்கிறது.

"மிஸ் உங்கடை நோட்ஸ் கொப்பியைக் கொஞ்சம் தருவீங்களா?"

ஒவ்வொரு வார்த்தையாக இவன் அளந்து கேட்கின்றான்.

மனப்பாடம் செய்து வைத்துக்கொண்டிருந்த வார்த்தைகளை நினைந்து நினைந்து வரிசைப்படுத்தி விநயமாக ஒருவாறு சொல்லி முடித்துவிட்டான்.

அவள் மெல்லச் சிரிக்கின்றாள். அதுவும் ஒரு மின்னலாக இவன் இதயத்தில் பட்டுத் தெறிக்கின்றது.

குறிப்புப் புத்தகத்தைக் கையில் எடுத்து இவனை நோக்கி மெல்ல நீட்டுகின்றாள்.

இவனுக்குக் கைகள் நடுங்குகின்றன. மனசில் தோன்றும் பதற்றம் வெளியில் தோன்றாதவாறு அடக்கிக்கொண்டு அந்தக் குறிப்புப் புத்த கத்தை வாங்கிக் கொள்ளுகின்றான்.

அவள் திரும்பிப் போய்க் கொண்டிருக்கின்றாள்.

'செருப்பணிந்து வெள்ளை அன்னம் நடப்பதுபோல்' என்னும் கவிதை வரி இவன் இதயத்துக்குள் திரும்பத்திரும்ப ஒலித்துக் கொண்டி ருக்கின்றது. அவள் நடை பயிலும் ஒயிலைக் காலமெல்லாம் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருக்கலாம்போல ஒரு எண்ணம் இவன் நெஞ்சில் எழுகின்றது.

அவள் தந்த குறிப்புப் புத்தகத்தைத் தன் புத்தகங்களுக்கிடையில் மறைத்து வைத்துக்கொண்டு மலரை அணைப்பதுபோல நெஞ்சோடு அதனை அணைத்த வண்ணம் விடுதி நோக்கி நடக்கின்றான். இவன் பாதங்கள் மண்ணில் பாவாத ஓர் உணர்வுடன் விண்ணில் பறக்கும் பிரமையில் போய்க்கொண்டிருக்கின்றான்.

விரிவுரைகள் முடிந்து விடுதிக்குத் திரும்பியிருக்கும் மாணவர்கள் உடைகளை மாற்றிக்கொண்டு விளையாட்டு மைதானம் நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றார்கள். இவன் அறையில் இவனுடன் தங்கி இருக்கும் மாணவர்களும் அங்கிருந்து புறப்பட்டு, அறையை விட்டு வெளியே கிளம்புகின்றார்கள்.

அவர்களுள் ஒருவன் வெளியே போகும்போது இவனைப் பார்த்துக் கேட்கின்றான்.

"மிஸ்ரர் முத்து வெளியிலே போகயில்லையா?"

"தலை இடிக்குது"

"உம்முடைய தலையிடி தீர இன்னும் ஒரு மருந்தும் கிடைக்கவில்லையா?" கிண்டலாகச் சொல்லிக்கொண்டு அவன் போய்விட்டான்.

'மடையன், அவனுக்கென்ன தெரியும்! எனக்குக் கிடைச்சிருக்கிற மருந்து' இவன் தனக்குத்தானே சொல்லி, தன்னகத்துள் சிரித்துக் கொள்ளுகின்றான்.

அறைக்குள் இனி யாரும் இப்போதைக்கு வரப்போவதில்லை என்று தீர்மானித்துக்கொண்டு படுக்கைவிட்டு எழுந்து, அவள் தந்து விட்டுப் போன குறிப்புப் புத்தகத்தைப் பூவைக் கையில் பற்றுவதுபோல மெல்ல எடுத்துக் கொண்டு மீண்டும் கட்டிலில் அமருகின்றான்.

அந்தக் குறிப்பைக் கையில் எடுத்துக் கொண்டதும் மென்மையான இனிய சுகந்தமொன்று மெல்ல இவன் நாசியில் வந்து பரவுகின்றது. ஆகா. . . என்ன சுகம்! இவன் அருகில் அவள் வந்தவேளையிலும் இந்த இனிய வாசனை பரவி வந்ததை இப்போது உணருகின்றான். இது தமிழ் நாட்டு வியாபாரச் சஞ்சிகையில் தடவி விடப்படும் மயக்கும் மாய மணம் அல்ல. பாண்டியனுக்கு ஐயந்தரும் அவன் தேவியின் கூந்தல் மணமும் அல்ல, நக்கீரன் ஆட்சேபித்த உமையள் கூந்தல் மணமுமல்ல. இது மனோவின் மணம். அவள் பொன்மேனியின் இயற்கை மணம். மனசுக்கு ரம்மியமான மனோரஞ்சித மணம்.

அந்தக் குறிப்புப் புத்தகத்தைக் கையில் வைத்து மலர் இதழ்களை மெல்லமெல்ல வருடிக்கொண்டிருப்பதுபோல பவித்திரமாக ஒவ்வொரு பக்கங்களாகப் புரட்டுகின்றான். பக்கங்கள் புரளப் புரள மனசை மயக்கும் அந்த வாசனையும் பெருகிக்கொண்டு வருகின்றது. அந்தச் சுகந்தம் தரும் இதமான பரவசத்தில் சில கணங்கள் இவன் தன்னை மறந்து கிறங்குகின்றான்.

அவளுக்கு முத்து முத்தான எழுத்துகள். மணிமணியாகக் காகிதத்தில் சரந்தொடுத்து விட்டிருக்கின்றாள். ஒவ்வொரு எழுத்திலும் அவள் பூ முகமல்லவா புன்னகைக்கின்றது! குறிப்புப் புத்தகத்தை விரித்து தன் மார்பின்மீது வைத்துக்கொண்டு கட்டிலின்மேல் அப்படியே சரிகின்றான். விழிகள் மூடி அதனை மார்போடு இறுகத் தழுவிய வண்ணம் தன்னை மறந்து முயங்கிக் கிடக்கின்றான்.

இந்த மோனத் தவத்தில் இவன் எவ்வளவு நேரம் இவ்வாறு மூழ்கிக் கிடக்கின்றான் என்பது இவனுக்குத் தெரிய வராது.

"மிஸ்ரர் முத்து! இருட்டிலே என்ன தவம்?"

குரல் கேட்டுத் திடுக்கிட்டு, கண்டு கொண்டிருக்கும் கனவு பட்டென்ற றுந்து, திடீரெனக் கண்விழிக்கின்றான்.

அறைக்குள் இருள் அடைத்துக் கிடக்கிறது.

"முத்து என்ன கனவு காணுதோ!" இன்னொருவன் ஏளனத்துடன். 'பளிச்' சென்று மின்சாரம் பரவுகின்றது.

இவன் மெல்ல எழுந்து, அவர்கள் கண்களில் படாதவாறு அந்தக் குறிப்புப் புத்தகத்தை மூடி, தன் புத்தகங்களுக்கு இடையில் மறைத்து வைக்கின்றான்.

இவன் சயிக்கிள் இப்போது மீண்டும் நெல்லியடிச் சந்திக்கு வந்து விடுகிறது. முன்பு நின்ற பழைய இடத்துக்கு வந்து சயிக்கிளைக் கையில் பிடித்தவண்ணம் நிற்கின்றான்.

# 15

அவன் மனைவியுடன் மறுபடியும் திரும்பி இங்கு வரக்கூடும். அப்படி வந்தால், அவன் திரும்பவும் எப்படி நடந்து கொள்ளுகிறான் என்பதைப் பார்க்க வேண்டும்போல மனசில் ஒரு ஆவல் தோன்று கின்றது. அந்த எண்ணத்துடன் மேலும் சற்று நேரம் தாமதித்து நிற்கின் றான். நேரம் கொஞ்சம் கொஞ்சமாகக் கழிந்து போய்க் கொண்டிருக் கின்றது. அவனும் அவளும் மீண்டும் வருவதாக இல்லை.

அவர்களுக்காக ஏன்தான் காத்து நிற்க வேண்டும்?

இவன் சயிக்கிள் யாழ்ப்பாண வீதியில் மேற்கு நோக்கி மெல்லச் செல்லத் தொடங்குகிறது.

அவனைக் கண்டது முதல் ஏனோ இன்று பழைய நினைவுகளே மனசில் வந்து மிதக்கின்றன. மனோ. . . . . ஓ! மனோ!

மனோ. . . . . அவளோடு ஒதுங்கி ஒதுங்கி ஆரம்பத்தில் பேசத் தொடங்கினான். தயங்கித் தயங்கி மெல்ல நெருங்கிப் போனான். காலப்போக்கில் அந்த ஒதுக்கம், தயக்கம் எல்லாம் விடுபட்டுப்போக, பலபேர் முன்னிலையில் ஓடிப்போய்க் கதைக்க ஆரம்பித்தான். கண்க ளும், மனசும் எப்பொழுதும் அவளைத் தேடி அலைந்து கொண்டிருந் தன. இவன் தன்னை அறியாமல் அவள் நிழலாக மாறிப் போனான்.

இவனுக்கு நோய் நொடி வந்தாலும் விரிவுரைகளுக்கு மாத்திரம் இவன் போகாமல் இருந்து விடுவதில்லை. அவளைக் கண்களால் கண்டு மகிழும் அந்த ஒரு பாக்கியம் கிடைத்தால் மாத்திரம் போதும் என்ற எண்ணத்தில் விரிவுரைகளுக்குத் தவறாமல் போய் வருகின்றான். அவள் தங்கி இருக்கும் அந்தப் பெண்கள் விடுதி இப்போது தேவதை வாழும் கோயிலாக இவனுக்குத் தோன்றுகின்றது. அந்த விடுதியை எப்பொழுதும் தன் கண்களால் கண்டு மானசீகமாக மகிழ்ந்தவண்ணம் இருக்க வேண்டும்போல இவனுக்குள் ஓர் உணர்வு, இவன் தங்கிருக்கும் விடுதி அறை அதற்குத் தோதாக அமையவில்லை. இவன் தங்கி இருக்கும் இடத்தை மாற்ற வேண்டுமெனத் தீர்மானித்தான். ஆனால் கலாசாலை விடுதி என்பது இவன் சொந்த வீடா என்ன? இவன் நினைத்த நேரம், நினைத்த இடத்துக்கு மாற்றிக்கொண்டு போவதற்கு. காரணங்கள் பல கற்பித்து, பொய்க்குமேல் பல பொய்கள் சொல்லி ஒருவாறு தங்கும் இடத்தை இவன் மாற்றிக்கொண்டான். புதிய இடத்தில் தான் படுக்கும் கட்டிலையும் மாற்றிப் போட்டான். படுக்கையில் கிடந்தவண்ணம் கண்களைத் திறக்கும்போது யன்னலுக்கூடாக அந்தப் பெண்கள் விடுதி பார்வையில் வந்து விழ வேண்டும். தினம்தினம் காலையில் அந்தப் பெண்கள் விடுதியில்தான் கண் விழிக்கவேண்டும். அது வெறும் விடுதியாக இவன் கண்களுக்குத் தோன்றுவதில்லை. மனோவின் அழகிய வதனமாக இவன் மனசு கண்டு மகிழ்கின்றது.

கலாசாலையில் காலை உணவாகப் பெரும்பாலும் பாண் வழங்கப் படுவது வழக்கம். பாணோடு சேர்த்து அநேக தினங்களில் தேங்காய்ப்பூச் சம்பல் கிடைக்கும், வாரத்தில் ஒரு நாள் சம்பலுக்குப் பதிலாக ஜாம் தருவார்கள். கலாசாலை மாணவர்களுக்குரிய பாண், கலாசாலைக்கு அண்மையிலுள்ள வசாவிளான் சந்திப் பேக்கரியிலிருந்து தினமும் வந்து சேருகின்றது.

இவன் அதிகாலையில் எழுந்து வசாவிளான் சந்திக்குப் போக ஆரம்பித்தான். அந்த நேரத்தில் தனக்கொரு தேநீர் தேவைப்படுகின்றது என்று எல்லோருக்கும் பொய் சொல்லிக் கொண்டு போனான். ஆனால் இவன் வசாவிளான் சந்திக்குப் போய், கலாசாலைக்குப் பாண் விநியோகம் செய்யும் பேக்கரியில் வேலை செய்கின்றவர்களை அணுகி அவர்களுடன் சிநேகம் பண்ணிக் கொண்டான்.

அங்கு வேலை செய்யும் அவர்களுக்கு ஒரே ஆச்சரியம்! ஆசிரிய கலாசாலை மாணவனாக இருக்கும் இவன் பேக்கரியில் வேலை செய்யும் தங்களை மதித்து நாடி வந்து நட்புடன் பழகுவது, அவர்களைப் பொறுத்தவரை பெரிய அதிசயம். நல்ல குணமுள்ள உயர்ந்த மனிதனாக இவனை அவர்கள் கருதினார்கள்.

சில நாட்களின் பின் கலாசாலைக்கு எடுத்துச் செல்லும் பெட்டியில் அவர்கள் பாண் அடுக்குவதற்கு இவன் உதவி செய்ய ஆரம்பித்தான்.

அவர்கள் இவனுக்கு வீண் சிரமம் என்று எவ்வளவோ சொல்லித் தடுத்துப் பார்த்தார்கள். ஆனால் இவன் அவர்கள் சொல்வதைக் கேட்ப தாக இல்லை. சில நாட்கள் கழிந்த பின்னர், அவர்கள் அந்தப் பாணை எடுத்துப் பெட்டியில் அடுக்குவதை இவன் தடுக்கத் தொடங்கினான். அவர்கள் எவ்வளவு எடுத்துச் சொல்லியும், அவர்கள் அந்த வேலை செய்ய இவன் சந்தர்ப்பம் அளிக்கவில்லை. கலாசாலைக்கு எடுத்துச் செல்லப்படும் பாண் ஒவ்வொன்றையும் தனது கையினால் தொட்ட ளைந்து எண்ணி அடுக்குவான். அவர்கள் கூடி நின்று இவன் செய்யும் வேலையை வேடிக்கை பார்த்து தமக்குள் சிரித்துக் கொள்வார்கள். பாண் பெட்டி சயிக்கிளில் கட்டப்பட்டு கலாசாலை நோக்கி எடுத்துச் செல்லப் படும்போதுதான் இவன் அங்கிருந்து புறப்படுவான்.

இவன் ஏன் இப்படி நடந்து கொள்ளுகின்றான்! அவர்களுக்கு ஒரே வியப்பு.

இவன் வலிந்து வலிந்து வந்து கூலி இல்லாத இந்த வேலையை ஏன் தான் செய்கின்றான்?

அவர்களுக்குள் எழும் விடையில்லாத வினா.

ஆனால் இவனுக்கல்லவா தெரியும் அந்தச் சுகம்! அந்த ஆத்ம திருப்தி! அவர்களுக்கெங்கே இதெல்லாம் தெரியப்போகிறது?

இவன் தன் கைப்பட எடுத்து அடுக்கி அடுக்கி வைக்கும் அந்தப் பாண்களில் ஒன்றைத்தான் அவள். . . . . மனோ காலையில் உணவாக உண்ணப் போகின்றாள். அது ஒன்றே போதும் இவனுக்கு. அந்த இனிய நினைவில் இவன் உள்ளம் நிறைந்து போகின்றது.

ஆண்டுதோறும் ஆசிரிய கலாசாலை மாணவர்கள் மத்தியில் பல விதமான கலை, இலக்கியப் போட்டிகள் நடைபெறுவது வழக்கம். மாணவர்கள் ஒவ்வொருவரும் தமது திறமைகளை வெளிப்படுத்தி, எதிர்ப்பாலார் மத்தியில் தலை நிமிர்ந்து திரிவதற்கான ஒரு வாய்ப்பாக அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்வார்கள்.

இவன் அந்தப் போட்டிகளில் கலந்து கொள்ள ஆவல் கொண்டான். தான் கலந்துகொள்ளத் தகுந்த போட்டி எதுவென ஆலோசித்துப் பார்த் தான். துறைசார்ந்த போட்டிகள் எவையும் தனக்கு ஏற்றவையல்ல. நடுவர் கள் தமக்குள் மாத்திரம் படித்துப் பார்த்துத் தீர்ப்பைத் தந்து விட்டுப் போய்விடுவார்கள். பேச்சுப் போட்டியில் பங்குபற்றலாம். தன் இதயத்தின் துடிப்பை வெளிப்படுத்துவதற்கு பேச்சு உகந்ததல்ல. இறுதியில் பாட்டுப் போட்டியைத் தேர்ந்தெடுத்துக் கொண்டான். அந்தப் போட்டியில் பங்கு கொள்ளுகின்றவர்கள் தொகையும் மிகக்குறைவு. சிறந்த பாடகர்கள் என்று கலாசாலையில் பெயரெடுத்துக் கொண்ட சிலரே போட்டியில் பங்கேற்க முன்வந்தார்கள்.

இவனுக்கு ஒரு ஆசை. அவள் பார்த்திருக்கத் தான் மேடைமீதேறி நின்று பாடவேண்டும். போட்டியில் பங்குபற்றிப் பரிசு பெறுவது முக்கிய மல்ல. தன்னை மேடையில் வைத்து மனோ பார்க்கவேண்டும். தான் பாடுவதை அவள் காது கொடுத்துக் கேட்கவேண்டும். அது ஒன்றே போதும். அவள் இவனைப் பார்த்தாள், அவள் இவனைக் கேட்டாள் என்பதைவிட இவனுக்குச் சிறந்த பரிசில் வேறென்ன இருக்கிறது?

கர்நாடக சங்கீதப் பாடலும் சினிமாப் பாடலுமாக இரண்டு பாடல் கள் பாடி முடிக்க வேண்டும் என்பது போட்டி நிபந்தனை. கர்நாடக சங்கீதப் பாடலைத் தேர்ந்தெடுப்பதில் இவனுக்குச் சிரமம் எதுவும் இருக்கவில்லை. கலாசாலைச் சங்கீத விரிவுரையாளர் சொல்லிக் கொடுத்த பாடல் ஒன்றைத் தெரிவு செய்து கொண்டான். பரீட்சையில் புள்ளிகளைப் பெறுவதற்காகப் பாடும் பாடசாலை மாணவன் போலப் பாடி முடித்தான். அது இவன் நாவிலிருந்து பிறந்த பாடல். சினிமாப் பாடல் இவன் சில தினங்கள் சிந்தித்துத் தேர்ந்தெடுத்த பாடல், மனோவின் இதயத்தைத் தொடவேண்டும். அவள் அந்தப் பாடல் கேட்டு இதயம் உள்ளே நெகிழ்ந்து உருகவேண்டும். இவன் இதயம் கனிந்து காதல் ரசம் சொட்டுவதை அவள் உணரவேண்டும்.

அக்கால இளவட்டங்கள் வாயில் ஒலித்துக்கொண்டிருக்கும் காதல் பாடல் ஒன்றைத் தேர்ந்தெடுத்து இவன் தன் இதய நாதமாகப் பாட ஆரம்பித்தான்.

சபையில் ஒரே சலசலப்பு; சிரிப்பொலி. இவன் பாடல் முடிந்ததும் வானைத் தொடும் கரகோஷம் எழுகிறது.

அந்தக் கரகோஷமும் சிரிப்பொலியும் பற்றி இவனுக்கென்ன கவலை! யார் கேட்டால் என்ன! யார் சிரித்தால் என்ன! அவள் கேட்டுக் கொண்டிருக்கின்றாள். அவள் மகிழ்ந்து. . . . . நெஞ்சம் நெகிழ்ந்து. . . . . நெஞ்சில் இவனை வைத்தால் போதும்.

இவன் பாடல் கேட்டு மாணவர்கள் சிலர் இவனிடம் நேரில் வந்து இவனுக்குக் கைகுலுக்கி, இவனைக் கேலியாகப் பாராட்டினார்கள்.

"மிஸ்ரர் முத்து நல்ல பாட்டு"

"ஆர் உம்மடை குரு? சௌந்தரராஜனா. . . .! சீர்காழியா!

"திருவாளர் முத்துலிங்கம் ஆரை நினைச்சு உருகுகிறார்?"

"அவருக்குத்தான் தெரியும்"

"இல்லை, எனக்குந் தெரியும்"

"அப்ப சொல்லு மச்சான்!"

“இஞ்சை இருக்கிற ஒவ்வொரு சாறியையும் பார்த்து அவர் உருகு கிறார்.”

“அவர் உருகட்டும், அவரைப் பாத்து உருகுகிற சாறி எது மச்சான்?”

“அவரைத்தான் கேட்க வேணும்”

“மடையா, அவருக்கெப்பிடி அது தெரியும்”

“அவருக்குத் தெரியாமல். . . .”

“அது உருகிற சாறிதான் அறியும்”

எல்லோரும் சேர்ந்து இவனைக் கேலி பண்ணுகின்றார்கள்.

அவர்கள் கிண்டலும் கேலியும் இவனுக்கு மனசில் படவில்லை. இவன் அவர்களைப் பார்த்து இன்று சினக்கவில்லை.

அவள் இருந்தாள் அந்த மண்டபத்தில். இவன் பாடல் அவள் நெஞ்சில் மோகன இசை மீட்டிருக்கும்.

அதுதானே இவனுக்கு வேண்டும்.

கலாசாலை மாணவர்களை நான்கு இல்லங்களாகப் பிரித்து பலர் சேர்ந்து குழுக்களாகப் பங்கேற்கும் கலைப் போட்டிகள் அந்த இல்லங் களுக்கிடையில் நடைபெறுவதற்கு வேண்டிய ஒழுங்குகள் செய்யப் பட்டன. இவன் சார்ந்த இல்ல மாணவர்கள் ‘ஆசை’ என்னும் நாடகம் அரங்கேற்றுவதற்குத் தயாராகிக் கொண்டிருந்தார்கள். அந்த நாடக ஒத்திகைக்குத் தவறாது இவன் போய்வந்து கொண்டிருந்தான். தனது இல்லத்தின்மீது இவன் கொண்ட அபிமானம் காரணமாகத் தவறாது ஒத்திகைக்கு வருகிறான் என அவர்கள் கருதினார்கள். ஆனால் அந்த நாடகத்தில் பங்கேற்று நடிப்பதற்குத் தனக்கொரு பாத்திரம் அவர்கள் தரமாட்டார்களா என்று இவன் தினமும் எதிர்பார்த்தான். அந்த நாடகத்தில் ஒரு வேலைக்காரப் பாத்திரம் வருகிறான். நாடகங்கள், சினி மாக்களில் வேலைக்காரன், தோட்டக்காரன் என்றால் மலினமான நகைச் சுவைப் பாத்திரங்களாகக் காட்டுவது கலை உலக வேடிக்கை. அந்தப் பாத்திரம் ஏற்று நடிப்பதற்கு மாணவர்கள் யாரும் முன்வரவில்லை. நாடகத் தயாரிப்பாளன் பலரை அணுகிப் பார்த்து இறுதியில் ஏமாந்தான். யார் யாரையோ எல்லாம் கேட்டுக்கேட்டு ஏமாந்து போனவனுக்கு, இவன் ஒருவன் இருப்பது முற்றாக மறந்து போயிற்று. இவனுக்கு தான் மேடை ஏறி நாடகம் நடிக்கவேண்டும் என்று என்ன அவசியம்!

ஆனால் அவள் பார்ப்பாள். மனோ பார்ப்பாள். அவளுக்காக நாடக மேடை ஏறி நடிகனாகவும் இவன் மாறத் தயாராக இருக்கிறான்.

ஆனால் அவர்களிடம்போய் நாடகத்தில் நடிப்பதற்கு ஒரு பாத்திரம் தருமாறு வலிந்து இவன் கேட்பதா? இவனுக்கு அது ஒரு தன்மானப் பிரச்சினை. அவர்கள் வந்து தன்னிடம் கேட்கமாட்டார்களா! கேட்கமாட் டார்களா. . . . .! என்று பல தினங்கள் ஆவலுடன் எதிர்பார்த்தான். அப்படி எதுவும் நடப்பதாகத் தெரியவில்லை. இறுதியில் ஒரு தினம் இவன் தானாக வலிந்து முன்வந்து அந்த வேலைக்காரப் பாத்திரத்தை ஏற்று தான் நடிக்க விரும்புவதாகச் சொன்னான். அவர்களுக்கு மகிழ்ச்சி, அவர்கள் பிரச்சினை ஒன்று தீர்ந்தது. இவனுக்கு அந்தப் பாத்திரத்தை மனமுவந்து கொடுத்தார்கள்.

இவன் அந்த நாடகமேடையில் வேலைக்காரனாகத் தோன்றினான்.

உடல் பருத்து தொந்தி வைத்த வேலைக்காரன். திறந்த மார்பும் அரையில் சுருங்கக் கட்டிய நான்கு முழ வேட்டியுமாக மேடைக்கு வந்தான். அகன்ற தாடையும் மேல்வாய் உயர்ந்து கீழ்வாய் தட்டையா கச் சற்றுத் திறந்து, தலையை மேலே தூக்கி விழிமடல் திறந்து சபை யைப் பார்க்கின்றான் இந்த வேலைக்காரன்.

இவன் தோற்றமே சுவையான நகைச்சுவை. சபை குலுங்கிச் சிரித்துச் சுவைத்து ரசிக்கிறது.

இவனுக்கு இது போதும். இவன் பாத்திரம் ஏற்று நடித்த நாடகம் யார் பார்த்தால் என்ன பார்க்காது விட்டால் என்ன! அவள் பார்த்தி ருப்பாள், மனோ பார்த்திருப்பாள். அந்த ஒரு திருப்தியே இவனுக்குப் போதும்.

கலாசாலையில் வருடாந்த இல்ல மெய்வல்லுநர்ப் போட்டிகள் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. விளையாட்டு மைதானத்தில் தனக்கு ஈடிணை இல்லாத ஒரு மன்னனாகத் திகழ்கின் றவன் சந்தியாப்பிள்ளை. பயிற்சிகள் ஆரம்பிப்பதற்கு முன்னரே எல்லோ ருக்கும் அது தெரியும். உண்மையில், அவன் ஓர் ஆசிரியனாக இருக்க வேண்டியவன் அல்லன். பாதுகாப்புப் படையில் உயர் அதிகாரியாக விளங்குவதற்குத் தகுதியான ஒருவன். சிங்கம்போல அகன்று விரிந்த மார்பும், கீழ் ஒடுங்கி ஒட்டிய வயிறுமாக உயர்ந்த கம்பீரத் தோற்றம். எப்பொழுதும் எப்படி மகிழ்ச்சியாக இருக்கலாம் என்பது அறிந்த ஒருவன். சுமுகமான உறவு எல்லோருடனும் வைத்துக் கொள்ளத் தெரிந் தவன். இவனைச் சந்திக்கும் சமயங்களில் அவன் மற்றைவர்கள் செய்வ துபோல இவனை அலட்சியம் பண்ணுவதில்லை. அவனுக்கொரு பழக்கம்; கையைப் பொத்தி நண்பர்கள் தோளில் செல்லமாக மெல்ல இடிப்பான். இவன் தோள் மீதும் அவன் செல்லமாக இரண்டொரு தடவை இடித்திருக்கின்றான். அப்படி அவன் இடிக்கும்போதில், அதில் ஒரு நட்பும் நேசமுந்தான் மேலோங்கி இருக்கும்.

கலாசாலை விளையாட்டுப் போட்டியில் மனோவும் பங்குபற்றுகின் றாள் என்பது அறிந்து இவனும் மாலை வேளையில் மைதானத்துக்குப் போக ஆரம்பித்தான். விரிவுரை மண்டபத்தில் அவளைத் தரிசிக்கும் வாய்ப்புக்குப் பின்னர், மாலையில் மைதானத்திலும் அவளைக் கண்டு மகிழுவதற்கான அரிய சந்தர்ப்பமாக அது இருந்தது.

விளையாட்டுப் போட்டியில் இவன் கலந்து கொள்வதற்கு தனியாள் விளையாட்டு ஒன்றும் இவனுக்குக் கிடைக்கவில்லை. ஆனால் அந்த மைதானத்தில் அவள் கண்கள் காண இவன் விளையாட வேண்டும். அதற்கொரு விளையாட்டு இவனுக்கு வேண்டும். அந்தச் சந்தர்ப் பத்தைப் பெறுவதற்கு சந்தியாப்பிள்ளையை இவன் சிக்கெனப் பிடித்துக் கொண்டான். அவன் தான் தலைமை தாங்கும் அஞ்சல் ஓட்டக் குழுவில் இவனையும் ஒருவனாகச் சேர்த்துக் கொண்டான். போட்டியின்போது இவனுக்காகவும் சேர்த்து சந்தியாப்பிள்ளை ஓடி முடித்தான். இவன் குழு போட்டியில் வெற்றியைத் தட்டிக் கொண்டது.

இவன் தன்னால் இயன்றவரை ஓடி முடித்தான்.

மனோ பார்த்திருந்தாள், இவன் ஓடி முடித்தது.

அந்தத் திருப்தி ஒன்றுக்காகத்தான் இவன் அரைக் காற்சட்டை போட்டு மைதானத்தில் இறங்கி ஓடினான்.

# 16

பலருக்கும் முன்னதாக விரிவுரை மண்டபத்துக்கு இவன் போய் அவள் வரவை எதிர்பார்த்திருக்கின்றான். மாணவிகள் இருவர் மூவராகத் தோழியர்கள் ஒன்று சேர்ந்து அங்கு வந்து கொண்டிருக்கின்றார்கள். அவளுக்கு நெருக்கமான தோழியர்கள் இவர்கள்தான் என்று யாரையும் சொல்வதற்கில்லை. அவள் எல்லோருடனும் சகசமாகப் பழகுவாள். அதனால் குறிப்பிட்ட இன்னாருடன் சேர்ந்துதான் விரிவுரைக்கு வருவா ளென்றில்லை. அவள் பிறர் யாருமின்றித் தனித்து வருவதும் உண்டு. ஆனால் விரிவுரைகளுக்குத் தவறாமல் அவள் வந்துவிடுவாள்.

இன்றும் அவள் வருவாள், வருவாள் என்று இவன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றான். விரிவுரை ஆரம்பமாகிவிட்டது. ஆனால் அவள் வந்து சேரவில்லை. விரிவுரை நடந்து கொண்டிருக்கும்போது, தாமதமாக வந்ததற்கு விரிவுரையாளரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு மண்டபத் துக்குள் நுழையப் போகின்றாள் என்று நம்பிக்கையுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றான். அவள் குரல் கேட்கப் போகின்றது. அவள் உருவம் கண்முன் தோன்றப் போகின்றது. இவன் ஒவ்வொரு கணமும்

ஆவல் கொண்டிருக்கின்றான். ஏக்கமும் எதிர்பார்ப்பும் தவிப்புமாக காலம் கழிந்து போய்க்கொண்டிருக்கிறது. விரிவுரை முடிந்து போனது இவனுக்கு அது பற்றிய பிரக்ஞை எதுவுமில்லை. அவள் இன்று வரவில்லை என்பது ஒன்றுதான் இவன் உணர்விலிருக்கின்றது.

முதல் விரிவுரை நடந்து முடிந்து அடுத்த விரிவுரைக்கு அவள் வரத் தான் போகின்றாள். அடங்காத தாகத்துடன் இவன் நம்பி இருக்கின்றான்.

ஆனால் அவள் வரவில்லை.

அடுத்த விரிவுரை.

அவள் வரவில்லை.

அடுத்த விரிவுரை.

அவள் வரவே இல்லை.

இவனைத் திடீரென அந்தகாரம் வந்து சூழ்ந்து கொண்டது.

அவள் ஏன் வரவில்லை! அவளுக்கு ஏதும் சுகவீனமா! அப்படியா னால் என்ன சுகவீனம்! அந்தச் சுகவீனத்துடன் விடுதியில் தங்கி இருக் கின்றாளா? அல்லது வீட்டுக்குச் சென்றுவிட்டாளா? அல்லது வைத்திய சாலைக்குப் போய் அங்கு தங்கி இருக்கின்றாளா? அப்படிச் சுகவீனம் ஏதுமில்லை என்றால் ஏன் விரிவுரைக்கு வராமல் இருக்கின்றாள்? வீட்டுக்குப் போயிருக்காளோ! வீட்டில் அப்படி என்ன இடைஞ்சல்! அவள் வீடு அவளுக்கு மகிழ்ச்சியான வீடாக இல்லைப்போலும், அவளுக்கு என்ன கஷ்டமோ!

அவள் கஷ்டங்களுக்கு உதவி புரிவதற்கல்லவா இவன் காத்திருக் கின்றான்!

அவள் பற்றி யாரிடம் போய் இப்போது கேட்கலாம்? யார் இவனுக்கு விவரம் சொல்லுவதற்கு இருக்கிறார்கள்? அவளைப்பற்றி இவன் சென்று விசாரித்தால் அவர்கள் என்ன கருதுவார்கள்?

இவன் தலையைப் பிய்த்துக்கொண்டு தவியாகத் தவிக்கின்றான். விரிவுரைகள் முடிந்து விடுதிக்குச் சென்ற பின்னரும் இவனால் அங்கு தரித்திருக்க முடியவில்லை. அவள் தங்கியிருக்கும் பெண்கள் விடுதிப் பக்கம் ஒரு தடவை போய்ப் பார்த்தால் என்ன என்று எண்ணுகின்றான். என்ன காரணம் கொண்டும் பெண்கள் விடுதிக்கு ஆண்கள் போகக் கூடாது என்று கடுமையான கட்டுப்பாடு விதித்திருக்கின்றார்கள். அதனை மீறி நடந்தால் விசாரணை நடக்கும். அதன் பிறகு தண்டனை பெறவும் நேரலாம். அப்படி ஒரு இறுக்கம். சில சமயம் பயிற்சியிலிருந்து இடை நிறுத்தி வைக்கவும் கூடும். அப்படி நிகழ்ந்து விட்டால் அவளை எங்கே காண்பது?

இவன் விடுதியிலிருந்து புறப்பட்டு வசாவிளான் சந்தியை வந்தடைகின்றான். கலாசாலையை விட்டு யாராவது வெளியில் சென்றிருந்தால், பஸ்ஸில் வந்து வசாவிளான் சந்தியில் இறங்கித்தான் மீண்டும் கலாசாலைக்கு வந்தாக வேண்டும். அந்த மார்க்கம் ஒன்று தவிர திரும்பி வருவதற்கு வேறு எந்த வழியுமில்லை.

அவள் விடுதியில் இல்லாது வெளியில் போயிருந்தால் அங்கு வந்து இறங்குவாள். நிச்சயம் வந்து இறங்குவாள், அவள் நிச்சயம் வருவாள்.

இவன் நீண்ட பொழுதாக அந்தச் சந்தியில் காத்திருக்கின்றான். அந்தி சாயும் நேரம் மெல்ல நெருங்கிவிட்டது. அப்பொழுது வானம் விழிநீர் உதிர்க்க ஆரம்பித்திருக்கிறது.

அவள் வருவதாக இல்லை.

இவன் கலாசாலைக்கு இப்போது திரும்பிச் செல்வதாக இருந்தால், வானம் சிந்தும் தூறலில் நனைந்த வண்ணந்தான் போயாக வேண்டும். தூறலில் நனையாமல் எப்படிப் போய்ச் சேரலாம்? மழையில் சொட்டச் சொட்ட நனையலாம். தூறலில் நனைந்தால் நோய் நொடிகள் வருமாம். விலைகொடுத்து ஏன் நோய் வாங்கவேண்டும்.

இவன் எண்ணி எண்ணித் தயங்கி நிற்கின்றான்.

இந்தச் சமயம் பஸ் ஒன்று வந்து சந்தியில் தரித்து நிற்கின்றது. அந்த பஸ்ஸில் இருந்து சிலர் இறங்குகின்றனர். இறுதியில் அவள். . . . . மனோ நிதானமாக இறங்குகின்றாள்.

இவனுக்கு இவன் கண்களை நம்ப முடியவில்லை. இறைவனுக்கு நன்றி சொல்லவேண்டும். இவன் கண்களுக்கு அவளைக் கொண்டு வந்து காட்டி இருக்கின்றான். அவளைக் காண்பதற்காகத்தானே இது வரை இவன் கண்கள் காத்திருந்தன. வீதியில் பூத்திருந்தன. இது இறைவனின் கருணை. விதியின் விளையாட்டு. விதி அவளைக் கொண்டு வந்து இவனுடன் இணைத்து விட்டிருக்கின்றது.

மனோ. . . . . மனோ. . . . . உள்ளத்தில் ஆனந்தக்கூத்து ஆடரங்காக ஆடிக் களிக்கின்றன உணர்வுகள். அவள் பெயரை மனோ. . . . . மனோ எனப் பல தடவைகள் பாடிக் களிக்கும் வெறி பொங்கி எழுகின்றது. அந்த வெறியை ஒருவாறு அடக்கி வைத்துகொண்டு கடை ஒன்றின் முன்னே மழைக்கு மெல்ல ஒதுங்கி நிற்கின்றான்.

இவன் அங்கு வந்து காத்து நிற்கின்றான் என்பதை அவள் கண்டு கொள்ளப் போகின்றாள். அவள் கண்டுகொள்ள வேண்டும். இவன் கண்களுக்கு அவளைக் கொண்டு வந்து காட்டிய இறைவன், அவள் கண்களில் இவனைக் காட்டாமலா விடப்போகின்றான்? காட்டுவான். . . . . காட்டுவான். . . . . அந்தக் காட்சி மனோ கண்டு கொள்ளப் போகின்றாள.

அவள் பஸ்ஸை விட்டுக் கீழே இறங்கி கையில் கொண்டு வந்திருக் கும் குடையைச் சட்டென்று விரித்துப் பிடித்தவண்ணம் ஹான் பாய்க்கை ஒரு தோளில் கொழுவித் தொங்கவிட்டுக்கொண்டு கலாசாலை நோக்கி வீதியில் திரும்பி நடக்கின்றாள்.

அவள் பின்னால் இப்பொழுது போகவேண்டும். இப்படிப் போகக் கிடைத்துள்ளதன் அதிஷ்டத்தை எண்ணி உள்ளம் துள்ளிக் குதிக்கின்றது. கலாசாலை மாணவர்கள் வேறு யாராவது அங்கு வந்து நிற்கின்றார்களா என ஒரு தடவை இவன் நோட்டமிடுகின்றான். அப்படி எவரும் நிற்பதா கத் தெரியவில்லை. அதுவும் இவன் அதிஷ்டந்தான்.

இவன் தன்னை மறந்தான். தூறலாக விழுந்து கொண்டிருக்கும் மழையை மறந்தான். அவள் சென்று கொண்டிருக்கும் பாதையில் அவள் பின்னே அடியெடுத்து வைத்து நடக்கின்றான்.

அவள் தன் சேலையை ஒரு கையினால் லாவகமாக ஒதுக்கி, சற்று உயர்த்திப் பிடித்திருக்கின்றாள். அவள் கணைக்கால்களுக்கு மேல் உள் ளாடை றேந்தை மல்லிகைச் சரமாக சுற்றிப் படர்ந்து கிடப்பது கண்ணில் படுகின்றது. அவள் அணிந்துகொண்டிருக்கும் செருப்பிலிருந்து தெறித் துப் பறக்கும் அழுக்கு நீர் சேலையில் பாய்ந்து விழாதவண்ணம் மெல்ல அடியெடுத்து வைத்து நடந்து கொண்டிருக்கின்றான்.

பிரதான வீதியிலிருந்து இறங்கி பனங்கூடலுக்கூடாகச் செல்லும் குறுக்கு வழி ஒற்றையடிப் பாதையில் திரும்பி அவள் சென்று கொண்டி ருக்கின்றாள்.

வசாவிளான் பிரதேசத்துக்குரிய விசேஷங்கள் அந்த நிலத்தின் சிவந்த மண்ணும் உற்பத்தியாகும் நெல்லிரசமுந்தான். வசாவிளான் மண்ணும் நெல்லிரசமும் வேறெங்கு தேடினாலும் கிடைக்காதவை. அந்த மண்ணில் மழை நீர் விழத் தொடங்கிவிட்டால் தேங்கி நிற்பதும், பாய்ந்தோடுவதும் செஞ்சாந்துக் குழம்பாகத்தான் இருக்கும்.

தூறல் போட்டுக் கொண்டிருந்த வானம் குமுறிக்கொண்டு பெரு மழையாகக் கொட்ட ஆரம்பிக்கின்றது.

அவள் நடையில் அழுத்தமும் நிதானமும், விரைவில் விடுதி சென்றடையும் அந்தரமும் வெளிப்படுகின்றன.

மழையின் 'சோ' என்ற இரைச்சல், விடுதிக்குப் போய்ச் சேர வேண்டும் என்னும் அவசரம் எல்லாம் சேர்ந்து தன் பின்னால் இவன் வந்து கொண்டிருப்பது அறியாது அவள் போய்க் கொண்டிருக்கின்றாள்.

பனங்கூடல் ஒற்றையடிப் பாதையின் செம்மண் புழுதி கரைந்து அருகேயுள்ள புற்றரை எங்கும் பரவி ஓடுகிறது.

இன்னும் சிறிது தூரம் அவள் சென்றால் கலாசாலையின் பிரதான வாசலுக்கு வந்து, அலரிச் செடிகள் இரு வரிசையாக வளர்ந்து நிற்கும் கலாசாலை உள் வீதிக்குப் போய்ச் சேர்ந்துவிடுவாள்.

அதற்கிடையில், அவளுடன் இரண்டு வார்த்தைகள் பேசிவிட வேண்டும்.

என்ன பேசுவது?

எப்படிப் பேச்சை ஆரம்பிப்பது?

இவன் தடுமாறிக் கொண்டு அவள் பின் சென்று கொண்டிருக் கின்றான்.

அவள் மெல்ல மெல்ல முன்னேறிப் போய்க் கொண்டிருக்கின்றாள்.

அவள் கலாசாலை வாசல்வரை சென்று உள்வீதியில் நடக்கத் தொடங்கினால் அவளோடு பேசுவதற்கான வாய்ப்பு இல்லாமல் போய் விடும். அதற்கிடையில் பேச வேண்டும்.

விரைவாக இரண்டடி எடுத்து வைத்து அவளுக்கு நெருக்கமாக வருகின்றான்.

"மிஸ்"

அவள் திடுக்குற்றுப் பின்புறம் திரும்பி, குடையைச் சற்றுச் சரித்துப் பார்க்கின்றாள்.

இவன் சொட்டச் சொட்ட நனைந்து பின்னால் வந்து கொண்டிருக் கின்றான்.

இவனை அவள் எதிர்பார்க்கவில்லை.

இவனைக் கண்டு அவளுக்குப் பரிதாபமாக இருக்கிறது.

இவன் ஏன் இப்படி நனைகின்றான்! இவன் ஏன் இப்படி அலைகின் றான்!

"நனையிறியள் குடையில்லையா?" மரியாதைக்காக ஒரு வார்த்தை கேட்டு வைக்கிறாள்.

அவள் அறிவாள். தான் அவனிடம் கேட்டது வெறும் சம்பிரதாய மான ஒரு கேள்வி. குடை இருந்தால் இவன் ஏன் நனையப் போகின் றான்!

அவள் கேள்வியில் இவன் வாய் அடைத்துப் போனான்.

அவளுக்கு தன்மீது எவ்வளவு அக்கறை! அப்படி அக்கறை இல்லை யென்றால் அவள் இப்படிக் கேட்டிருக்க மாட்டாள்.

நினைக்க நினைக்க இவன் மனசு குளிர்ந்து பூரிக்கின்றது.

இவன் உள்ளத்தில் இன்னொரு ஆசை திடீரென்று எழுகின்றது.

நனைந்து கொண்டு வரும் தனக்கு அந்தக் குடையில் அவள் இடந் தரக்கூடும்.

அப்படித் தந்தால். . . . .

மனத்தவிப்புடன் அவளைப் பின் தொடர்ந்து வந்து கொண்டிருக் கின்றான்.

அவள் அதன் பிறகு ஒரு வார்த்தை பேசவில்லை.

இவனுக்கும் இவனாகப் பேசமுடியவில்லை.

ஒவ்வொரு கணமும் அவளிடமிருந்து அழைப்புக் கிடைக்கும் என்று எதிர்பார்த்தவண்ணம் அவளைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றான்.

அவள் கலாசாலையின் பிரதான வாயிலைக் கடந்து உள்ளே நுழை கின்றாள்.

இவனுக்குப் பெருத்த ஏமாற்றம்.

இனி, கலாசாலை வளாகத்துள் அவளைப் பின்தொடர்ந்து செல்லக் கூடாது. அவள் போகட்டும்.

இவன் தயங்கித் தயங்கி, அவளைப் போகவிட்டுத் தான் பின்தங்கி நிற்கின்றான்.

# 17

மழைநீரில் நனைந்து நனைந்து அவள் பின்னால் இவன் வந்த செய்தி, மறுதினம் கலாசாலையில் பனிகாலக் கடுங்குளிர்போல எங்கும் விரைந்து பரவியது. விடுதியில் இவன் கூட இருக்கும் சகபாடிகள் இவனைக் கண்டித்தார்கள். சேர்ந்து கிண்டலும் பண்ணினார்கள்.

"சீ. . . . .! நீ என்ன ஆளப்பா! அவள் குடையிலே வர நீ நனைஞ்சு நடுங்கிக் கொண்டு பின்னாலே வாறாய், தன்ரை குடையிலே உனக்கும் இடந்தந்து கூட்டி வந்திருக்கலாம். அவள் உன்னை மதிச்சு நடக்க வில்லை. ஆண்வர்க்கத்துக்கே உன்னாலே அவமானம். அவளுக்குப் பின்னாலே பேய் போலே அலைகிறாய், அவளொரு திமிர்பிடிச்சவள்"

அவள் பற்றி அழுத்தமாக இப்படிச் சொல்லுகிறான் ஒருவன். அவன் அவளிடம் சூடுபட்டவனாக இருக்கலாம். அல்லது அவள்

பின்னால் திரிந்து ஏமாந்தவனாகவும் இருக்கலாம். இந்த அந்தரங்கங்கள் எல்லாம் யாருக்குத் தெரியும்? எந்த மண்ணில் எந்த மிதிவெடி புதைந்து கிடக்கிறதோ! யார் கண்டார்?

ஆனால் உண்மையில் அவள் ஒன்றும் தப்பாக நடந்து கொள்ள வில்லை. அவளைக் குறைபட்டுக் கொள்வதற்கு எதுவுமில்லை. அந்தக் குடைக்குள் அவள் இடந்தந்தால் என்ன? என்று அப்போது இவனுந் தான் எண்ணித் தவித்தான். உள்ளம் ஏங்கித் துடிதுடித்தான். அவள் இடந் தந்திருந்தால் அந்த உணர்ச்சிப் பெருக்கில் இதயம் பொங்கி வெடித் திருக்கும். அந்தச் சமயம் இவன் உயிர் பிரிந்து போயிருந்தால் இவன் ஆத்மா ஆனந்தித்திருக்கும். இவைகள் எல்லாம் அந்தக் கணத்தில் இவன் உள்ளத்தில் எழுந்த உணர்ச்சி உன்னதங்கள். இப்பொழுது அந்த உணர்ச்சிக் கொந்தளிப்புகள் தணிந்து நிதானமாகச் சிந்திக்கும்போது அவள் மிகச் சரியாக நடந்து கொண்டாள் என்று மனசில் தோன்றுகிறது. அவள் வெகு ஒழுங்கான நடத்தையுள்ள ஒரு பெண். மழை பொழியும் வேளையில், தனிமையில் ஆடவன் ஒருவனைத் தன்னோடு நெருக்க மாகச் சேர்த்து எந்தப் பெண் தனது குடைக்குள் அழைத்து வருவாள்? அப்படி அழைத்து வருவதை யார் வரவேற்பார்கள்? இவன்கூட அவள் நடத்தை பற்றி பிறகு ஒருவேளை சந்தேகித்திருப்பான். இப்பொழுது இவன் உள்ளத்தில் அவள் உயர்ந்து நிற்கின்றாள். அவள் மிக நல்லவள்; பண்பானவள்.

முதல்நாள் சம்பவத்தின் எதிரொலியை விரிவுரை மண்டபத்திலும் இவன் கேட்க நேர்ந்தது.

அன்று முதற் பாடவேளை. ஆசிரிய மாணவர்கள் அனைவரும் வந்து தமது ஆசனங்களில் அமர்ந்திருக்கின்றார்கள். விரிவுரையாளர் இன்னும் அங்கு வந்து சேரவில்லை. இவர்கள் நாளை பாடசாலைகளில் தாங்கள் கண்டித்து ஒழுங்குபடுத்தி வைத்துக் கொண்டிருக்கப்போகும் சின்னஞ்சிறு சிறார்கள்போல வாய் ஓயாது பேசிச் சத்தமிட்டுக் கொண்டி ருக்கின்றார்கள். அந்த வேளையில் முன்வரிசையில் இருக்கும் குறும்புக் காரன் ஒருவன், பின்புறமாக இவன் இருக்கும் பக்கம் திரும்பி பலமாகக் கேட்கின்றான்.

“மிஸ்ரர் முத்து! உமக்கு நல்ல தடிமன் பிடிச்சிருக்க வேணுமே! நிலைமை இப்ப எப்பிடி இருக்கு?”

அவன் செய்த கிண்டலைக் கேட்டு எல்லோரும் இவனைப் பார்த்து சத்தமிட்டுக் கேலியாகச் சிரிக்கின்றார்கள். அந்தச் சிரிப்பொலி அடங்க சில நிமிட நேரம் கழிந்து போனது. அவனை அலட்சியம் பண்ணிவிட்டு ஒன்றும் நடக்காததுபோல சாதாரணமாக இவன் இருக்கின்றான். ஏளனம் பண்ண எண்ணியவன் ஏமாற்றத்துடன் மௌனமாகி விடுகின்றான்.

இவன் மனோவை அந்தச் சமயம் சாடையாக நோட்டமிடுகின்றான். அவள் என்றுமுள்ள அவள்தான். மற்றவர்களுடன் சேர்ந்து ஒரு தடவை சிரித்துவிட்டு தனக்குச் சம்பந்தமில்லாத விஷயம்போல அவள் அதில் நனையாமல் விலகி அமைதியாக இருக்கின்றாள். இவனைப் பார்த்துக் கேலி பண்ணுவதுபோல, அவளை எந்த ஒரு மாணவியும் ஒரு வார்த்தை சொல்லவில்லை. அவளிடம் அப்படி ஏன் நடந்து கொள்ளுகின்றார்கள்? என்பது இவனுக்கு விளங்கவில்லை. கௌரவமாக அவளை அப்படி விலக்கி வைத்துக் கொண்டிருப்பதற்கு என்ன காரணம்? எதுவும் புரியா மல் மனசு தவிக்கின்றது.

ஆசிரிய பயிற்சி முடிவடைவதற்கு இன்னும் நான்கு மாதங்கள் இருக்கின்றன. ஆண்டுதோறும் மாணவர்களால் வெளியிடப்படும் ‘கலாவதி’ சஞ்சிகை வெளியீட்டுக்கான ஏற்பாடுகள் துரிதமாகத் தொடங் கின. சஞ்சிகை வெளியிடுவதற்கு முதல், சஞ்சிகையின் இணை ஆசிரியர், வெளியீட்டுக் குழுவினர் என்போர் மாணவர்கள் மத்தியிலிருந்து தேர்ந் தெடுக்கப்பட்டார்கள். இவன் எப்படியோ முயன்று சஞ்சிகை வெளியீட்டுக் குழுவில் ஒருவாறு இடம் பிடித்துக் கொண்டான். கலாசாலைச் சஞ்சிகை தவறாது வெளிவர வேண்டும். அது சிறப்பான ஒரு வெளியீடாக இருக்க வேண்டும் என்ற விதமான நோக்கங்கள் எதுவும் இவனுக்கில்லை. அந்தச் சஞ்சிகையில் அவளுடைய ஆக்கம் தன்னுடைய ஆக்கம் இரண்டும் இடம்பெற்றால் அது போதும். இதற்குமேல் அந்தச் சஞ்சிகை பற்றி உள்ளூர இவனுக்கு எந்த ஈடுபாடுமில்லை. இது ஒன்றுக்காகவே சஞ்சிகை வெளியீட்டுக் குழுவுக்குள் இவன் தன் தலையைக் கொண்டு போய் நுழைத்துக் கொண்டான்.

சஞ்சிகையில் பிரசுரிப்பதற்கான ஆக்கங்களைத் தருமாறு மாணவர் களிடம் கோரி பொது அறிவித்தல் ஒன்றை விடுத்தார்கள். சஞ்சிகை வெளியீட்டுக்குப் பொறுப்பாக இருந்தவர்கள் தங்களுக்கு வேண்டிய வர்களின் ஆக்கங்கள் தவறாது அதில் இடம்பெற வேண்டும் என்னும் அக்கறையில் அவர்களை நேரில் கண்டு அவர்களிடம் ஆக்கங்களைத் தருமாறு கேட்டார்கள்.

அவள் படைப்புத் தாங்கி அந்தச் சஞ்சிகை வெளிவரவேண்டும். அப்படி இல்லாத சஞ்சிகை வெளிவந்தால் என்ன! வெளிவராது போனால்தான் என்ன! அவள் எழுத்தை எப்படியும் இடம்பெறச் செய்ய வேண்டும் என்ற அந்தரங்க நோக்கத்துடன் ஒரு தினம் அவளிடம் கேட்டான்:

“ரீச்சர், கலாவதிக்கு நீங்க என்ன எழுதுறீங்க” அவள் மௌனமாக மெல்ல விலகிப்போக எத்தனிக்கின்றாள்.

ஆனால் இவன் அவளை விடுவதாக இல்லை.

“கட்டுரை எழுதலாம் அல்லது கதை, கவிதை எதுவென்றாலும். . . . நான் போடுவிப்பேன்”

அவள் சற்றுத் தரித்து நின்று, இவன் பக்கம் திரும்பி அருகே வருமாறு இவனை அழைக்கின்றாள்.

இவன் துடித்துப் பதைத்துக்கொண்டு அவள் அருகே ஓடிச்சென்று, ஆவலோடு அவள் முகம் நோக்கி நிற்கின்றான்.

“பின்னேரம் வெளியிலே போறன், வாறீங்களா?”

இவனுக்கு நம்பமுடியவில்லை அவளை; அவள் வார்த்தைகளை; தன் செவியை.

வானத்தில் சிறகடித்துப் பறப்பது போன்று ஓர் உணர்வு.

இவன் தன்னுள் எல்லாம் ஒடுங்கி பரவச நிலையில் ஸ்தம்பித்து நிற்கின்றான்.

இவன் பதிலை எதிர்பார்த்து அவள் அங்கு காத்து நிற்கவில்லை.

அவளுக்கு நன்றாகத் தெரியும், இவன் தவறாமல் மாலையில் வரத் தான் போகின்றான்.

அவள் சொல்லிக்கொண்டு போய்விட்டாள். அவள் போனது முதல் இவனுக்குக் காலம் கரையவில்லை. அது நிலைத்து அப்படியே இறுகிக் கிடப்பது போலத் தோன்றுகின்றது. மாலைப்பொழுது எப்பொழுது வந்து சேரப் போகின்றது? அவள் எதற்காகத் தனிமையிலே அழைக்கின் றாள்? என்னென்ன சொல்லப் போகின்றாள்? அவளுக்கு எதை எதை எல்லாம் தான் எடுத்துச் சொல்லவேண்டும்? அவைகளை எப்படி எப்படிச் சொல்ல வேண்டுமெனத் தனக்குள் ஒழுங்குபடுத்தி கற்பனைகளும் ஒத்திகையுமாக, போகப் பொழுதை எண்ணி நொந்து கொண்டிருக்கின் றான். இவனுக்கு இதுவரை இருந்து வந்த குழப்பங்கள் நீங்கி மனசில் ஒன்று உறுதியாகி விட்டது. அவள் அன்பைத் தான் பெற்று விட்டேன். இனி அடுத்த கட்டம் என்ன என்பதை அவளோடு சேர்ந்து திட்டமிட்டுத் தீர்மானிக்க வேண்டும்.

இவன் மிக நேர்த்தியாக உடுத்து தன்னை அலங்கரித்துக்கொண்டு மாலை நான்கு மணியளவில் கலாசாலையில் இருந்து புறப்படுகின்றான். அங்கிருந்து புறப்படும்வரை அடக்கி வைத்துக்கொண்டிருந்த உணர்வு களை கலாசாலைக்கு வெளியே வந்த பிறகும் இவனால் கட்டுப்படுத்தி வைத்துக்கொள்ள இயலவில்லை. ஆனந்த பரவசத்தில் துள்ளிக்குதிக்க வேண்டும்போலத் தோன்றுகின்றது. அதையும் வீதியில் எப்படிச் செய்வது? தன்னை அடக்க முடியாமல் அடக்கிக்கொண்டு ஒரு துள்ளல் நடை போட்டு குதூகலத்துடன் போய்க்கொண்டிருக்கின்றான். வாயில்

சினிமாப் பாடல் ஒன்று மகிழ்ச்சியாகச் சீட்டியில் வெளிவருகின்றது. மனசு நிறைந்து 'மனோ. . . . . மனோ. . . . .' எனத் தன்னை மறந்து பிரேமை சொட்டச் சொல்லிக் கொள்ளுகிறது.

வசாவிளான் சந்திக்கு எப்படித்தான் வந்து சேர்ந்தான் என்பது இவனுக்குத் தெரியாது. சந்தியில் அவளைத் தேடுகின்றான். இன்னும் அவள் அங்கு வந்து சேரவில்லை. அவள் வரும் பாதையைப் பார்த்துப் பார்த்து நிற்கின்றான். பஸ் ஒன்று வந்து தரித்து நின்று புறப்பட்டுப் போகின்றது. மனோ இல்லாமல் இவனுக்கு இன்று எப்படி பஸ்ஸில் போய் ஏறி உட்கார முடியும்? பதினைந்து நிமிடங்கள் இவனுக்குப் பதினைந்து யுகங்களாக வளர்ந்து கொண்டு போகின்றன. அப்பொழுது அவள் வந்து சேருகின்றாள். அந்தச் சமயம் யாழ்நகர் நோக்கிச் செல்லும் பஸ் ஒன்று வந்து சந்தியில் தரித்து நிற்கின்றது. அவள் இவன் பக்கம் திரும்பி, இவன் முகத்தை ஒரு தடவை குறிப்பாகப் பார்த்துவிட்டு, அந்த பஸ்ஸை நோக்கிச் சென்று அதில் ஏறிக்கொள்ளுகின்றாள். அவள் பின்னால் ஓடிச் சென்று இவனும் அந்த பஸ்ஸில் தொற்றி ஏறுகின்றான். அவள் ஓர் ஆசனத்தில் போய் அமர்ந்திருக்கின்றாள். அவள் அருகே அந்த ஆசனத்தில் இன்னொருவர் சென்று உட்காரலாம். அதைப் பார்த்ததும் பெருமிதத்தில் இவனுக்கு நெஞ்சு பொருமி நிறைந்து போகின்றது. தனக்காகவே அந்த ஆசனத்தை அவள் பிடித்து வைத்துக் கொண்டிருக்கின்றாள் என்று இவன் உறுதியாக நம்புகின்றான். அவள் அருகே சென்று அந்த ஆசனத்தில் அமருவதற்கு இவனைத் தவிர இனி யாருக்கு உரிமை இருக்கிறது? இவன் சென்று அவள் அருகில் மிடுக்குடன் அமர்ந்து கொள்ளுகின்றான். யன்னல் ஓரமாக மெல்ல அவள் நகர்ந்து இவனுக்கு இடம் கொடுத்துவிட்டு மௌனமாக இருக்கின்றாள்.

பஸ்வண்டி ஓடிக் கொண்டிருக்கின்றது. அவள் அருகில் இப்படி நெருக்கமாக அமர்ந்திருந்து பிரயாணம் செய்வது மனசுக்கு ஆனந்த மான சுகானுபவந்தான். தன்னைக் கேலி, கிண்டல் செய்து ஏளனம் பண்ணியவர்கள் மத்தியில் நாளை பெருமையுடன் தான் தலை நிமிர்ந்து திரியப் போகின்றேன் என நினைத்து இறுமாந்திருக் கின்றான்.

இவனுக்கு மிக அருகில் ஒரே ஆசனத்தில் ஒன்றாக அவள் உட்கார்ந்திருக்கின்றாள். இவன் போய் இருப்பதற்கு வேறு ஆசனங்கள் காலியாக இல்லாமல் இல்லை. அப்படி இருந்தும் இருவரும் சோடியாக அமர்ந்து பிரயாணம் செய்கின்றார்கள். ஆசிரிய கலாசாலை மாணவர் கள் - தங்களை அறிந்தவர்கள் யாராவது அந்த பஸ்ஸில் இருக்கின் றார்களா? இவன் ஒரு தடவை உள்ளே நோட்டமிடுகின்றான். அப்படி யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. இல்லை, இருந்தால்தான் என்ன? இனி இருவரும் வேறில்லை. எவரைக் கண்டும் இனி அஞ்சப் போவ தில்லை. இவனைப் பொறுத்தவரை அந்த பஸ்ஸில் தானும் அவளும்

தவிர இப்போது வேறு யாருமில்லை. இருவரும் இணைந்த தனிமை, வேறு எவருமற்ற ஏகாந்தமுமாக அங்கு நிறைந்து கிடக்கிறது. இப்பொழுது அவளோடு என்ன பேசலாம்? என்று நீண்ட பொழுதாக நினைந்து அந்த நினைவில் இவன் மூழ்கிக் கிடக்கின்றான்.

ஒரு முறை அவள் பக்கம் மெல்லத் திரும்பி அவளை நோட்டமிடு கின்றான். இதுவரை சரியாக தான் அவளை அவதானிக்கவில்லை. இவன் எதிர்பார்த்தான், அவள் தன்னை விசேஷமாக அலங்கரித்து வந்திருப்பாள் என. ஆனால் இவன் எதிர்பார்த்ததுபோல அவள் இல்லை. உடையில் அப்படியொரு பிரமாதமாக அவள் வரவில்லை. என்றும் போல எளிமையும் அமைதியும் மௌனமுமாக இருக்கின்றாள் அவள். எளிமை, அமைதி அவளது முத்திரைகள். அவள் மௌனம், அவளுக்கு எழில். அந்த அழகு மௌனம் பேசாமல் நிறையப் பேசுகிறது. மௌனம் தரும் அந்த எழிலை, அந்த இனிய பேச்சைக் கலைக்கக் கூடாது என்று இவன் நினைத்துக் கொள்ளுகின்றான். தலை குனிந்திருக்கும் அவள் உருவம் சாரதிக்கு நேரே உயரவுள்ள கண்ணாடியில் தெளிவாகத் தெரி கிறது. கண்ணாடியில் அந்த உருவத்தையே இவன் பார்த்த வண்ணம் ஆனந்தத்துடன் பயணத்தை தொடருகின்றான்.

# 18

பஸ்வண்டி எப்படி வந்து சேர்ந்தது என்றே தெரியவில்லை. அதற்கு இப்படி ஒரு வேகமா? அல்லது அதற்கும் இவன்மீது பொல்லாத பொறா மையா? இவன் கனவுகளைக் கலைத்துக் கொண்டு யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் அது வந்து தரித்து நிற்கின்றது.

இவன் எழுந்து நின்று அவள் இறங்கிச் செல்வதற்கு வசதியாக விலகி இடம்விட்டு, அவள் முன்னே செல்ல அவளுக்கு உரியவனாகப் பொறுப்புடன் பின்னால் தொடருகின்றான்.

அவள் பஸ்ஸைவிட்டு இறங்கும்வரை அவளுக்குள் ஒரு தயக்கம் இருந்து கொண்டிருந்தது. அவள் எதிர்பார்க்காத விதமாக அருகில் வந்து இவன் அமர்ந்து கொண்டான். இப்படி வந்து அமர்ந்தவன் எப்படி நடப்பானோ? என்னென்ன அங்க சேஷ்டைகள் செய்வானோ? அவை களை எல்லாம் ஏற்றுக்கொள்ள, சகித்துக்கொள்ள அவள் தயாராக இல்லை. அவைகளைத் தாங்கிக் கொள்ளுகின்றவள், ஒரு வகையில் இணங்கிப் போகின்றவள்தான். இவன் அப்படி ஒன்றும் நடந்து கொள்ள வில்லை. இவன்மீது அவள் கொண்ட மதிப்பில் மேலும் இவன் உயர்ந்து நிற்கின்றான்.

அவள் பஸ்ஸிலிருந்து கீழே இறங்குகின்றாள். கந்தோர்களில் வேலை முடிந்து வருகின்றவர்கள், பட்டினத்தை ஒரு சுற்றுச் சுற்றிவிட்டு முதலாவது காட்சி சினிமாப் பார்ப்பதற்காக வந்திருக்கின்றவர்கள், பிரதான வைத்தியசாலையில் நோயாளர்களை மாலைவேளை பார்த்துப் போக வந்தவர்கள் என்று பஸ் நிலையம் நிறைந்து கிடக்கிறது. வந்து போய்க் கொண்டிருக்கும் பஸ்களில் முண்டியடித்து மக்கள் ஏறுவதும் இறங்குவதுமாக இருக்கின்றார்கள். அவள் அந்தச் சனக்கூட்டத்துக்குள் விலகி விலகி நடந்து ஆஸ்பத்திரி வீதிக்கு வருகின்றாள். அங்கிருந்து மேற்குத் திசையில் திரும்பி நடந்து கொண்டிருக்கின்றாள்.

இவன் வருவது பற்றி அவள் கவனித்ததாகவில்லை. அவளுக்குத் தெரியும் பின்னால் இவன் வந்து கொண்டிருப்பான்.

இவனுக்குள் ஒரு ஆசை. ஏதாவது பெரிய ஹோட்டல் ஒன்றுக்கு அவளை அழைத்துப்போக வேண்டும். தம்பதிகளுக்கென அடைத்து பிரத்தியேகமாக விடப்பட்டிருக்கும் சின்னஞ்சிறு அறையொன்றுள் அவளை அழைத்துப்போய் சுவாரசியமாகப் பேசிக்கொண்டு இருவரும் கோப்பி அருந்தவேண்டும். அதன் பிறகு வெளியே வந்து வசதியான இடந் தேடிப் போய் அங்கிருந்து மனந்திறந்து பேசவேண்டும். பேசி முடித்துக்கொண்டு மீண்டும் வந்து விரும்பிய உணவுகளை எல்லாம் உண்டு மகிழவேண்டும்.

'அவளைக் கேட்போமா? ஒரு கோப்பி குடிப்போம்' என. எப்படிக் கேட்கிறது? இன்னும் ஒரு வார்த்தை அவள் வாய் திறந்து பேசவில்லை.

யாழ்ப்பாண நகரத்தின் பிரதான வீதிகளில் அது ஒன்று. ஹோட்டல்கள் நிறைந்த வீதி, அந்தக் ஹோட்டல்கள், ஏனைய கடைகள் யாவும் திறந்து கிடக்கின்றன. மாலை நேர வியாபாரம் மும்முரமாக நடந்து கொண்டிருக்கிறது. வீதியில் வாகனங்களும் மக்களுமாக ஒரே நெரிசல், அவள் அவைகளை எல்லாம் விட்டு விலகிச் சத்திரத்துச் சந்தி வரை வந்து அங்கிருந்து தெற்குத் திசையில் திரும்பி முற்றவெளி நோக்கி நடக்கின்றாள்.

இவனுக்கு இப்போது எல்லாம் புரிந்து போய்விடுகிறது. முற்றவெளி ஆள் நடமாட்டம் குறைவான பகுதி. அமைதியாக மனந்திறந்து பேசுவதற்குப் பொருத்தமான இடம். அங்குதான் அவள் தன்னை அழைத்துப் போகின்றாள். இதுவரை வாய் திறந்து ஒரு வார்த்தை இவனோடு இன்னும் அவள் பேசவில்லை. உள்ளே பொங்கிக் கொண்டிருக்கும் எரிமலையாக உணர்ச்சிகள் பெண்ணுக்கு இருந்தாலும், பெண்ணென்றால் அவள் தன்னடக்கந்தான்.

யாழ்ப்பாணம் பிரதான தபாற் கந்தோரைக் கடந்து இவனோடு அவள் அருகருகே பக்கம் பக்கமாக நடந்து வந்து கொண்டிருக்கின்றாள்.

அந்த வீதியில் வாகனங்கள், பாதசாரிகள் நடமாட்டம் மிகக் குறைவாக இருக்கிறது.

காலம் வீணே கழிந்து போய்க் கொண்டிருப்பதாக இவன் மனசில் கவலை எழுகிறது, அந்த ஏக்கத்தில் இவன் இதயம் வேகமாக அடித்துக் கொள்ளுகிறது. ஒரு தடவையேனும் அவள் பார்வை இவன் பக்கம் இன்னும் திரும்பவில்லை. அவள், அவளாகப் பேசட்டும். இவன் தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி இதுவரை பொறுமையாக நடந்து வந்த பாதையில் மௌனமாக வந்து கொண்டிருக்கின்றான்.

வீரசிங்கம் மண்டபத்துக்கு எதிரில் இருவரும் வருகின்றார்கள். இவன் தவிப்பை இப்போதுதான் புரிந்து கொண்டவள்போல "மாஸ்ரர்" என மெல்ல அழைக்கின்றாள்.

"மனோ. . . . . . !" இதற்காக இதுவரை காத்திருந்த இவன் குரல் கமறுகிறது.

"மாஸ்ரர், மற்றவர்கள் மனம் நோக நான் நடப்பதில்லை. அதனாலே ஆரையும் நான் அலட்சியம் செய்வதுமில்லை. உங்களையும் அப்படித் தான். ஆனால் நீங்கள் என்னைத் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறீர் களோ என்று எனக்கொரு சந்தேகம்."

"அப்பிடியா?"

"ஓம்"

"அதுக்கு. . . . !"

"விபரீதமாக எதுவும் நடந்துவிடக்கூடாதல்லவா!"

"என்ன விபரீதம்?"

"நீங்கள் என்னைத் தவறாக விளங்கிக்கொண்டுவிட்டீர்கள், அப்படி நீங்கள் நினைக்க தகுந்ததாக நான் நடந்து கொள்ளவில்லை. உங்களை அனுதாபத்தோடு நான் பார்க்கின்றேன்"

இவனுக்கு வாய் அடைத்துப் போய்விட்டது. நா வரண்டு அண்ணத் தில் ஒட்டிக்கொண்டு விட்டது, என்ன பேசுவதென்று இவனுக்குப் புரிய வில்லை.

தொடர்ந்து அவள் சொல்லப் போவதைக் காது கொடுத்துக் கேட்ப தற்கு இயலாத நெஞ்சப் பதகளிப்புடன் வந்து கொண்டிருக் கின்றான்.

சற்றுநேரம் இருவரும் தலைகுனிந்து மௌனமாகச் சிறிது தூரம் நடக்கின்றார்கள், பொதுசன நூல் நிலையத்துக்கருகே வந்துவிட்டார்கள்.

இவன் இதயம் நம்பிக்கையை முற்றாக இன்னும் இழந்துபோய் விடவில்லை. இவன்மீது அவள் நெஞ்சில் அனுதாபம் இருக்கிறது. அது ஒன்று போதும். அந்த அனுதாபம் காதலாக ஏன் மாறக்கூடாது? மௌனமாக இப்படியே போய்க்கொண்டிருந்தால் என்ன நடக்கப் போகிறது? சுற்றி வளைத்துப் பேசாது அவளிடம் நேராகவே கேட்டு விடுவோம் என்று நினைக்கின்றான்.

"மனோ! உங்களை ஒன்று கேட்கலாமா?"

"ஓ. . . . . கேளுங்கோ!"

"நீங்கள் என்னை விரும்பவில்லையா?"

அவள் பதில் எதுவும் சொல்லாமல் மௌனமாகப் போய்க் கொண்டிருக்கின்றாள். அவள் மௌனம் இவனுக்கு மேலும் நம்பிக்கை ஊட்டுகிறது. "சொல்லுங்கோ! நான் அதை அறிய வேண்டும்" என்று கேட்டு அவளைத் தூண்டுகின்றான்.

"உங்கள்மேல் அனுதாபம் இருக்கிறது"

"ஆரம்பத்தில் அது அனுதாபமாக இருக்கலாம், பிறகு அன்பாக மலரலாந்தானே!"

"மனதில் நீங்கள் தவறான கற்பனைகளை வளர்த்துக் கொண்டிருக்கிறியள் என்பது இப்பதான் எனக்குத் தெரியும்"

"நான் உங்களுக்குத் தகுதியானவனல்ல என்று நீங்கள் கருதுகிறியள்"

"இல்லை. . . . . அப்பிடி இல்லை"

"அப்போ. . . . .?"

"என்மீது நீங்கள் கொண்டிருக்கும் விருப்பத்தைப் பார்க்கும்போது உங்களையே மணந்திருக்கலாம்"

"அதுக்கிப்ப என்ன தடை?"

அவள் விடையேதும் சொல்லாது, வேதனையோடு மெல்லச் சிரிக்கின்றாள்.

"சொல்லுங்கோ மனோ!"

"சொல்லுகிறதுக்கு ஒன்றுமில்லை"

"நீங்கள் ஆரையும் விரும்புகிறியளா? ஒளிக்காமல் சொல்லுங்கோ!"

"நான் ஒருவரை மனப்பூர்வமாக நேசிக்கிறன்"

"என்ன!" இவன் ஒரு கணம் அதிர்ந்து போகின்றான். அதிர்ந்துபோன இதயத்தின் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக்கொண்டு, "ஆர் அவன்? என்ரை கேளுடன் கதைக்கிறவனைக் கடவுள்தான் காப்பாத்த வேண்டும்" என பெருமூச்சு விடுகின்றான்.

"அந்தக் கடவுளாக நீங்களேன் இருக்கக்கூடாது?"

"என்னை நீங்கள் கடவுளாக்க வேண்டாம். நான் இந்தப் பூமியில் வந்து பிறந்தது முதல் கடவுளின் கருணை எனக்குக் கிடைக்கவில்லை. அவர் கருணை இருந்திருந்தால் எந்தவொரு மனித ஜீவனாலாவது நான் நேசிக்கப்பட்டிருப்பேன். அது உங்களிடம் கிடைத்ததாக எண்ணி இருந்தேன். அதுவும் இப்போ. . . . ?"

"மாஸ்ரர் நீங்கள் ஒரு பெண்ணை மணந்து கொள்ளுங்கள். உங்கடை மனைவி உங்களை நிச்சயமாக நேசிப்பாள். உங்கடை நல்ல மனதுக்கு அப்படியான ஒரு மனைவிதான் கிடைப்பாள். நீங்கள் தேடிக் கொண்டிருக்கும் அன்பு அவளிடம் உங்களுக்குக் கிடைக்க வேண்டுமென்று கடவுளிடம் நான் பிரார்த்திக்கிறேன்."

உண்மையில் இவனைப் புரிந்துகொண்டு மனம் நெகிழ்ந்து இவனுக்காக அவள் ஆசி கூறுகின்றாள்.

இதன் பிறகு அவளை எப்படி வற்புறுத்தலாம்? இவன் இதயத்தை இறுக்கிக் கொண்டு தனக்குள் ஒரு தீர்மானத்துக்கு வருகின்றான். அவளோடு இனித் தொடர்ந்து பேசுவதில் எந்தவிதப் பயனுமில்லை. அவளுக்குத் தொல்லையாக இருக்காது மெல்ல விலகிவிடவேண்டும். ஆனால் அவன் யார் என்பதை அறியும் ஆவலை அடக்க இயலவில்லை. அவளிடம் மெல்லக் கேட்கின்றான்!

"ரீச்சர், நான் கேட்டதற்கு நீங்கள் இன்னும் பதில் சொல்லயில்லை"

"கட்டாயம் அறிய வேணுமா?"

"ஓம், அந்தப் பாக்கியசாலியை நான் அறிய வேண்டாமா?"

"சந்தியாப்பிள்ளை"

இவன் அதிர்ந்து போகின்றான். தன் செவிகளை இவனுக்கு நம்ப முடியவில்லை. திரும்பவும் அவளை நோக்கிக் கேட்கின்றான்.

"என்ன ரீச்சர்?"

"சந்தியாப்பிள்ளை" அவள் நிதானமாகச் சொல்லுகின்றாள்.

"ரீச்சர், இது ஒருதலைக் காதல்?"

"ஒரு கை அடித்து ஓசை எழாது"

"அப்படியென்றால்?"

"நீங்கள் நினைப்பதுபோல இல்லை"

"அவன் ஒரு ஜென்ரில்மன் என்றல்லவா நான் கருதி இருந்தேன்"

"அவருக்கு இப்ப என்ன குறை?" பட்டென்று அவள் கேட்கின்றாள்.

"உங்களுக்குத் தெரியாதா?"

"எல்லாம் தெரியும்"

"என்ன தெரியும்?"

"அவருக்குக் குழந்தை இருக்கிறது"

"ரீச்சர் ஒரு குழந்தைக்குத் தந்தையாக இருக்கின்ற ஒருவனையா நீங்கள் காதலிக்க வேணும்!"

"காதல் என்பது இதையெல்லாம் பார்த்துக்கொண்டு வருவதில்லை."

"இப்ப உங்கள்மேல் எனக்கு அனுதாபம் உண்டாகிறது"

"நான் ஆருடைய அனுதாபத்தையும் பெற விரும்புவதில்லை" சொல்லிக் கொண்டு விரைவாக நடந்து மணிக்கூண்டுக் கோபுரத்தைத் தாண்டி ஆஸ்பத்திரி வீதி நோக்கிச் சென்று மறைந்து போகின்றாள்.

# 19

இவன் எல்லாவற்றையும் இழந்து இவனுக்கென்று ஒருவரு மில்லாது தனித்துப் போன ஒரு மனிதனானான். உலகம் இவனுக்குச் சூனியமானது. மனசில் மகிழ்ச்சி என்பது இல்லாது போனது. சிரிக்க மறந்தான். உறக்கத்தைத் துறந்தான். கலாசாலை இவனுக்குச் சிறைக் கூடம் போலானது. இவன் மேடையேறி அவளுக்காக நாடகம் நடித்தான். ஆசை நாடகம். அந்த நாடகத்தில் நகைச்சுவைப் பாத்திரமேற்று நகைச் சுவை நடிகனாக அரங்கேறினான். அப்பொழுது மேடையில் நின்று சபையில் இருந்தவர்கள் தன்னைப் பார்த்துச் சிரிக்கச் செய்தான். இப்பொழுது இவன் நடிக்கவில்லை. நகைச்சுவை முத்துக்களை அள்ளிச் சிந்தவுமில்லை. கலாசாலை இவனுக்கு நாடக மேடையுமல்ல. ஆனால் எல்லோரும் இவனைப் பார்த்துச் சிரிக்கின்றார்கள். கேலியும் கிண்டலும் பண்ணுகின்றார்கள்.

அவர்களைப் பார்த்து பதிலுக்கு இவனால் சிரிப்பதற்கு முடிய வில்லை. அவர்களை நகைச்சுவை நடிகர்களாகத் தனக்குள் கண்டு

இரசிக்க முடியவில்லை. அவர்கள் ஒவ்வொருவருக்கும் வாழ்வில் ஒரு பிடிப்பிருக்கிறது. ஒரு பற்றிருக்கிறது. மனைவி, குழந்தை, அன்னை, தந்தை, உடன் பிறந்தவர்கள் அல்லது காதலி இப்படி அவர்களை நேசிக் கின்றவர்கள் யாரோ, அவர்களுக்காகக் காத்திருக்கின்றார்கள். நேசம் நிறைந்த அந்த அன்பு இதயங்கள்தான் அவர்களை வாழ வைக்கின் றன. இவனுக்காக அப்படி யார் இருக்கின்றார்கள்? எண்ணி எண்ணி இவன் இதயம் ஏங்கிக் கொண்டிருக்கின்றது. இவனுக்கு எங்கும் வெறுப்பு; எதிலும் விரக்தி; வயிற்றில் பசி இல்லை. ஒழுங்காக உடுத்திக் கொள்ளும் மனசில்லை. ஏதோ இந்தப் பயிற்சிக்காலம் முடியும்வரை ஒருவாறு நாட் களைக் கடத்தியாக வேண்டுமென்ற எண்ணத்துடன் இவன் நடமாடிக் கொண்டிருக்கின்றான்.

கலாசாலையில் ஆசிரிய மாணவர்கள் அனைவரும் வந்து ஒன்று கூடும் ஒரு இடம் உண்டென்றால் அது உணவு மண்டபந்தான். விரிவுரை மண்டபத்திற்கூட எல்லோரும் சந்திக்க முடிவதில்லை. ஒரே சமயத்தில் வெவ்வேறு பாடங்களுக்கான விரிவுரைகள் அங்கு நடந்து கொண்டி ருக்கும், மாணவர்கள் பிரிந்து பிரிந்து தங்கள் தங்கள் பாடநெறிகளுக்குப் போவார்கள். ஆனால் உணவு மண்டபத்தில்தான் அனைவரும் வந்து ஒன்றாகக் கூடுவது வழக்கம். இரவு நேர உணவு முடிந்ததும் மற்றைய நேரங்கள்போல் மாணவர்கள் அந்தரப்பட்டு எழுந்து ஓடுவதில்லை, அங்கே எல்லோரும் ஒன்றாகக் கூடி இருந்து சற்றுநேரம் பேசி முடித்து விட்டுப் பின்னர் கலைந்து போவார்கள். விடுமுறை நாட்கள் என்றால் அங்கிருந்து விரைவில் எழுந்துபோக மாட்டார்கள்.

அப்படி ஒரு இரவு. அன்று விடுமுறை நாள், உணவு முடிந்த பிறகு எல்லோரும் வெகு ஆறுதலாக அமர்ந்து பேசிக் கொண்டிருக்கின்றார் கள். அப்பொழுது அவர்களில் ஒருவன் திடீரென மேசையின்மேல் ஏறி நிற்கின்றான். கலாசாலை மாணவர்களிடம் அவன் சொந்தப் பெயரைச் சொல்லி யாராவது விசாரித்தால் அவனை யாருக்கும் தெரிய வராது. மாணவர்கள் சூட்டி இருக்கும் 'பனியன்' என்ற பட்டப்பெயர் ஒன்று அவனுக்கு இருக்கிறது. அந்தப் பெயரைச் சொன்னால் அவனை எல்லோரும் அறிவர். அவன் சந்தர்ப்பம் வாய்க்கும் வேளைகளில் எல்லாம் இவனை நையாண்டி பண்ணிக்கொண்டிருந்தான். கடந்த காலங்களில் அவன் சேட்டைகளை இவன் சிரித்துச் சமாளித்துக் கொண்டு போய்விடுவான்.

அன்று மேசைமீது ஏறி நின்று இரண்டு கரங்களையும் இணைத்து ஒலிபெருக்கிபோல வாயில் வைத்து "இப்போது நகைச்சுவைத் திலகம் மிஸ்டர் முத்து அவர்கள் எல்லோருக்கும் ஹாசிய விருந்தளிப்பார்" என உரத்த குரலில் அறிவிக்கின்றான்.

இவன் இருக்கும் மனநிலையில் அவனைக் கொன்று போட்டாலும் அடங்காத சினம் மூண்டெழுகிறது. அவனை என்ன செய்வதென்று அறியாமல் அங்குமிங்கும் பார்க்கின்றான். அருகே மேசையின் மீது கிடக்கும் கோப்பை ஒன்றைப் பட்டென்று கையில் எடுக்கின்றான். அவனை நோக்கிக் குறி பார்ப்பதற்குள் அவன் மருண்டு அச்சத்தினால் மற்றவர்களுக்குப் பின் சட்டென்று பதுங்கிக் கொள்ளுகின்றான். இவனுக் குள் பொங்கி எழுந்த சினம் அடங்கவில்லை. அந்தச் சினத்தை எப்படி யும் தீர்க்க வேண்டும்போல மனசில் ஒரு வெறி, என்ன செய்வதென்று இவனுக்குத் தெரியவில்லை. தான் என்ன செய்கின்றேன் என்பதும் இவனுக்குப் புரியவில்லை. கையில் எடுத்த அந்தக் கோப்பையை ஓங்கித் தன் தலைமீது அடித்து உடைக்கின்றான். உடைந்து விழுந்த துண்டு களை எடுத்து எடுத்து மீண்டும் மீண்டும் தன் தலையில் போட்டு அடித்து அடித்து சிறு சிறு துண்டுகளாக உடைத்தவண்ணம் பாடி ஆட ஆரம்பிக் கின்றான்.

“நந்தவனத்தி லோராண்டி நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி
கொண்டுவந் தானொரு தோண்டி அதைக் கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி”
“நந்தவனத்தி லோராண்டி. . . .”

இவன் பாடி ஆடுவதைப் பார்த்து அந்த மண்டபம் அதிர எல்லாரும் சேர்ந்து சிரித்து கைதட்டி ஆரவாரம் செய்கின்றார்கள்.

அப்பொழுது மண்டபத்து வாசலில் நாய் ஒன்று வந்து உள்ளே எட்டிப் பார்த்த வண்ணம் நிற்கிறது. வழக்கமாக அங்கு வந்து அவர்கள் உண்டபின் போடும் மிச்ச சொச்சங்களைத் தின்று போகும் சொறிநாய் அது. அந்த நாய் அவர்கள் யாரைக் கண்டாலும் ஓடி வந்து வாலை ஆட்டி ஆட்டி காலுக்குள் குழைந்து குழைந்து உறவு கொண்டாடும். அது வந்து நிற்பதை இவன் கண்டு கொண்டான். உடனே இவன் அவக் கென்று பாய்ந்து அதன் கழுத்தில் பற்றிப் பிடித்து அணைத்தவண்ணம் மீண்டும் பாடுகின்றான்.

“நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்கு
தாயிற் சிறந்த தயவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கு மாரியனே”

சிவபுராணம் வளர்ந்து கொண்டு போகிறது. இப்பொழுதும் பலர் வேடிக்கையாக இவனைப் பார்த்துச் சிரித்துக்கொண்டு நிற்கின்றார்கள். சிலர் முகங்களில் ஆரம்பத்தில் தோன்றிய சிரிப்பு மறைந்து, கலவரம்

படர ஆரம்பிக்கின்றது. இவன் ஆடும் இந்த நாடகத்தை அவர்கள் மனசில் கவலையுடன் கூர்மையாக அவதானிக்கின்றார்கள். இவன் இப்போது ஆடுவது நகைச்சுவை நாடகமல்ல என்பது அவர்களுக்குப் புரிய ஆரம்பிக்கின்றது. அவர்களுள் ஒருவன் சந்தியாப்பிள்ளை. அவன் சட்டென்று எழுந்து அந்த நாயை இவன் பிடியிலிருந்து விடுவித்து காலைத் தூக்கி ஒரு உதை அதற்குக் கொடுக்கின்றான். நாய் ஊளை யிட்டுக்கொண்டு அங்கிருந்து ஓடுகின்றது. ஒரு குழந்தையை அன்புடன் அணைப்பதுபோல இவனைத் தன் கரங்களால் ஆதரவாக மெல்ல அணைத்துக் கொள்ளுகின்றான். அவன் மார்பில் இவன் முகம் புதைத் துக் குலுங்கிக் குலுங்கி அழுகின்றான். இவன் முதுகை அவன் மெல்ல மெல்ல வருடிக் கொடுக்கின்றான். பின்னர் இவனை அணைத்துப் பிடித்த வண்ணம் அழைத்துச்சென்று இவன் கட்டிலின் மீது ஓய்வாகப் படுக்க வைக்கின்றான்.

அதன் பிறகு இவனை யாரும் சீண்டிப் பார்ப்பதில்லை. எல்லோரும் இவனை அனுதாபத்துடன் நோக்க ஆரம்பித்தார்கள். அனுதாபம் என்பது அன்பென்றாகிவிடாது. அந்த அன்பினைச் செலுத்துவதற்கு என்று தனக் கொருவர் இல்லாத வெந்தழலில் இவன் உள்ளம் வேகின்றது. அந்த வேக்காட்டின் வெளிப்பாடு இவன் அறியாமல் இப்போது சில சமயங் களில் இவனிடம் தலைகாட்டுவதுண்டு.

ஒரு நாள் இந்துசமய பாட விரிவுரை நடைபெற்றுக் கொண்டிருக் கின்றது. பசு, பதி, பாசம் என்னும் முப்பொருள் பற்றி சைவசித்தாந்தம் கூறும் கருத்தினை விரிவுரையாளர் எடுத்து விளக்குகின்றார். பதி என்னும் இறைவன் கருணையே வடிவானவன், பசு என்னும் ஆன்மாக்கள் மீது தமது கருணையாகிய அருள்மழையை எப்பொழுதும் அவன் பொழிந்து கொண்டிருக்கின்றான். இறைவனின் பெருங்கருணைக்கு உதாரணம் சொல்வதானால் பன்றிக் குட்டிகளுக்குப் பரமசிவன் பாலூட்டிய கதை யைச் சொல்லலாம் எனக் கூறி, அந்தக் கதையையும் சுருக்கமாக எடுத்துக் கூறுகின்றார்.

கதை சொல்லி முடிந்தது. இவனுக்கு மனசு பொறுக்கவில்லை. இவன் தன்னை மறந்து “ஸேர்” என்று அழைத்த வண்ணம் மெல்ல எழுந்து நிற்கின்றான். விரிவுரையாளருக்கு வியப்பாக இருக்கின்றது. கலாசாலை மாணவர்கள் இப்படிச் சிறுபிள்ளைகள்போல எழுந்து நிற்ப தில்லை. மனசில் ஐயம் எழுந்தால் விரிவுரை முடிந்த பின்னர் தனிமை யில் கண்டு பேசுவார்கள். விரிவுரையாளர்களும் அவர்களைப் பாடசாலை மாணவர்கள் போல சிறுபிள்ளைகளாகப் பெரும்பாலும் நடத்துவ தில்லை. இப்படி எழுந்து நிற்பது அநேகமாக நடக்காத ஒரு சம்பவம். விரிவுரையாளர் ஆச்சரியத்துடன் இவன் பக்கம் திரும்பி, “என்ன?” என்ற வினாவைத் தன் விழிகளில் தேக்கி வைத்து இவனைக் குறிப்பாக நோக்குகின்றார்.

“ஸேர், பரமசிவன் இப்போதும் இருக்கிறாரா?”

இவன் அவரிடம் கேட்கின்றான்.

இவன் வினா அவருக்குள் சினத்தை மூட்டுகிறது. நாத்தடிக்க நாத்தி கம் பேசுகின்றவர்கள்தான் இப்படியொரு கேள்வியைத் தயக்கமின்றிக் கேட்பார்கள். இவனும் நாத்திகன்போன்று சந்தேகமல்லவா எழுப்பு கின்றான்! ஆனால் அவர் அவதானித்தவரை இவன் ஒரு நாத்திகனல்ல என்பது அவருக்கு நன்றாகத் தெரியும். சுவாமி விவேகானந்தரும் ஆரம்ப காலத்தில் இப்படியான ஒரு வினாவைப் பலரிடமும் கேட்டுக் கொண்டு தானே அலைந்தார் என்ற எண்ணம் அவர் மனசில் வேறு உதயமானது. இவனை அவர் சினந்து அலட்சியம் பண்ணாமல், “ஏன் அப்படிக் கேட்கிறீர்?” என்று மாத்திரம் இவனிடம் சாதாரணமாக வினவுகின்றார்.

“பன்றிக் குட்டிகளுக்கு பால் கொடுக்க ஒரு சிவன் இருந்தார். எங்க ளுக்கு அப்படி யாருமில்லையே!” இவன் மனசிலுள்ள ஆதங்கம் அப்பொழுது வெளிப்படுகின்றது. அவர் அனுதாபத்துடன் இவனை நோக்குகின்றார். மறுபுறம் சிரிப்பு வேறு வருகின்றது. சில விநாடிகள் தாமதித்துவிட்டு, மாணவிகள் பக்கம் திரும்பி, “உங்களுடைய சிவன் யாராவது இந்தப் பகுதியில் இருக்கலாம்” எனச் சிரித்துக்கொண்டு கூறுகின்றார்.

அந்த வகுப்பு ஒரு தடவை குலுங்கச் சிரித்து அடங்குகின்றது. அவரது நகைச்சுவையை இவனும் இரசித்த வண்ணம் மெல்லச் சிரித்துக்கொண்டு அமருகின்றான்.

ஆசிரிய கலாசாலை வாழ்வு நிறைவு பெறும் காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. இரண்டு ஆண்டு காலம் சிரித்து மகிழ்ந்த, சினந்து இணைந்த, அணைந்து நெகிழ்ந்த, சுவையான காலம். அந்த வாழ்வை, அந்தச் சூழலை, அந்த உறவுகளைப் பிரிந்துபோக வேண்டிய நேரம் நெருங்குகின்றது. தேசத்தின் திசைகள் தோறும் மூலை முடுக்குகளில் எல்லாம் ஆசிரியப்பணி புரியச் செல்ல வேண்டியவர்கள் இவர்கள். ஒவ்வொருவரும் வாய்விட்டு வெளியே சொல்வதற்கு இயலாத பிரிவுத் துயரினால் எல்லோர் இதயங்களும் ஏங்கிக் கொண்டிருக்கின்றன. பழகத் தொடங்கினால் பிசாசு மீதும் மனிதனுக்குப் பிரியம் ஏற்பட்டுவிடுகின்றது. அந்தப் பிரியத்தினால் உண்டான பிரிவுத்துயர், பாய்ந்து செல்லும் கால வெள்ளத்தில் ஆறிப்போய்விடும் என்பதை உணரத் தகுந்த மனநிலை யில் அவர்கள் இல்லை. காலமெல்லாம் இந்த உறவுகள் தொடரப் போகின்றன என்ற பிரமையில், ஒவ்வொருவரும் தமது ‘ஓட்டோ கிராஃப்’வை மற்றவரிடம் கொடுத்து அவர்கள் கைச்சாத்தை வாங்கும் வேட்டை ஆரம்பமானது. இவனுக்குக் கைச்சாத்து வாங்குவதில் பெரி தாக ஒரு நாட்டமுமில்லை. ஆனால் மனோ இவன் ‘ஓட்டோ கிராஃப்’ இல்

எதையாவது தனது கைப்பட எழுதி கைச்சாத்திட்டுத் தரவேண்டும் என்ற அவா இறுதிநேரத்தில் இவனுக்கு உள்ளத்தில் எழுந்தது. அதற்கு முன்னோடியாக விரிவுரையாளர்கள் ஒவ்வொருவரிடமும் சென்று அவர் களிடம் கைச்சாத்துப் பெற்றுக்கொண்டு வந்தான்.

அந்தக் கலாசாலை விரிவுரையாளர்களில் தமிழ்ப் பண்டிதர் இவன் உள்ளம் கவர்ந்த ஒரு ஆசான். உளவியல் அறிந்தவர். நல்ல கவிஞர். அவர்மீது இவனுக்குத் தனியான ஒரு மதிப்பு; பக்தி. சில சமயங்களில் அவரிடம் தனிமையிற் சென்று தனது மனக்குறைகளைச் சொல்லி இவன் கண்ணீர் விட்டிருக்கின்றான். அவர் கூறிய தேறுதல் மொழிகள் இவன் மனசுக்கு அவ்வப்போது தெம்பை அளித்தன. இவன் தனது ஓட்டோ கிராஃப்வை எடுத்துச்சென்று அவரிடம் கொடுத்துவிட்டு பணிவு டன் ஒதுங்கி நிற்கின்றான்.

பண்டிதர் அதை விரித்து மேசையின்மீது வைத்து விறுவிறென்று இவன் பற்றிய தனது மனப்பதிவை எழுதிக் கைச்சாத்துமிட்டு, திரும்ப வும் இவனிடம் கொடுக்கின்றார்.

இவன் அவருக்கு 'நன்றி' சொல்லி அதைப் பெற்றுக்கொண்டு திரும்பி வருகின்றான். என்னதான் பண்டிதர் தனக்கு எழுதி இருக்கின் றார்? என்பதை அறிய இவனுக்கு மிகுந்த ஆவல், ஆனால் அவர் முன் நின்று படித்துப் பார்ப்பது நாகரிகமில்லை எனக் கருதி, அவரைவிட்டு விலகி சற்றுத் தூர வந்தபின்னர், தனிமையில் அதை விரித்து அவசர மாகப் படிக்கின்றான்.

"செய்வதெல்லாம் நூற்றுக்கு நூறு பெற்றாலும்
முத்துலிங்கம் மனதிலொரு ஏக்கம்
உய்யவழி சொல்லுங்கோ என்று அழுதான் அந்த
உத்தமனும் கண்ணிடையே நிற்பான்"

பண்டிதர் 'உத்தமன்' என உயர்வாகத் தன்னைக் குறிப்பிட்டிருப்பது இவன் நெஞ்சைத் தொடுகின்றது. அந்த வார்த்தையைத் தொடர்ந்து "கண்ணிடையே நிற்பான்" எனப் பண்டிதர் எழுதி இருப்பதைப் படிக்கும் போது இவன் கண்கள் கலங்குகின்றன. தான் உள்ளத்தால் பணிந்து வணங்கும் மதிப்புக்குரிய அந்தப் பண்டிதருக்கும் தன்னால் அவர் கண்க ளிடையேதான் நிற்க முடிந்தது. அவர் இதயத்தில் நிற்க முடியவில் லையே என இவன் ஏங்கிக் கலங்குகின்றான்.

# 20

இவன் சயிக்கிள் கரணவாய் மூத்தநயினார் கோயில்வரை மெல்ல மெல்ல வந்து சேர்ந்துவிட்டது. கோயில் கண்ணில் பட்ட பிறகுதான் இவ்வளவு தூரம் தான் வந்திருப்பது இவன் கவனத்துக்கு வருகின்றது. இந்தப் பகுதியில் திரும்பின திக்கெல்லாம் கோயில், ஆனால் ஒரு தெய்வமும் தனக்கு அருள் செய்யவில்லையே என இவன் உள்ளத்துள் எண்ணி ஏங்குகின்றான். இனி தொடர்ந்து நீண்ட தூரம் இப்படியே போய்க் கொண்டிருக்க முடியாது. சயிக்கிளை வளைத்துத் திருப்பு கின்றான். இவன் வந்த பாதையில் நெல்லியடி நோக்கி மீண்டும் அது வந்து கொண்டிருக்கின்றது. இவன் நினைவுகளும் மீண்டும் வந்து கொண்டிருக்கின்றன.

இவன் 'ஓட்டோ கிராஃப்'வைக் கையில் தூக்கிக்கொண்டு கைச்சாத் துப் பெற்றுக்கொள்ள வேண்டுமென யாருக்காக அலைகின்றான்? அவளுக்காக. . . மனோவுக்காகத்தானே! அவள் ஒருத்தியிடம் மாத்திரம் போய் எப்படிக் கைச்சாத்தை வாங்கலாம்? தன்னைத் தவறாக யாரும் எண்ணக்கூடாது என்பதற்காகவே மற்றையவர்களிடம் எல்லாம் அதைக் கொண்டுபோய் நீட்டுகின்றான். கலாசாலை விரிவுரையாளர்கள் எல்லோ ரிடமும் கைச்சாத்துப் பெற்றுக் கொண்டுவிட்டான். இனிமேல் அவளை அணுகவேண்டும்.

இவன் அவளை விளங்கிக் கொண்ட பிறகு முன்போல அவளிடம் நெருங்கிப் போவதில்லை. அவள் மகிழ்ச்சியே தன் மகிழ்ச்சியாக மனசில் இவன் இப்போது கருதி இருக்கின்றான். அவளுக்கு மனச் சங்கடங்கள், தொல்லைகள் கொடுக்காது கண்ணியமாக விலகி இருப்பது இவன் மனசுக்கு ஒருவகை ஆறுதல் அளிக்கிறது. ஆனாலும் அவளிடம் ஒரு கையொப்பம் வாங்குவதில் என்ன தவறு இருக்கிறது! அவள் தனது கைப்பட மணிமணியாக எதனையாக எழுதி, ஒப்பமிட்டுத் தருவதை வாங்க இவன் மனசு நாடுகிறது. அவள் என்ன எழுதித் தருகின்றாள் என்பதை அறியும் ஆதங்கம் இன்னும் இவன் மனசில் இல்லாமல் போய்விடவில்லை.

அவளைத் தனியில் சந்திப்பதற்கான வாய்ப்பினைத் தேடி, சில தினங்கள் கலாசாலைக்குள் இவன் அலைந்தான். ஒரு நாள் தனிமையில் அவளைச் சந்திக்க நேர்ந்தது.

கையில் வைத்துக் கொண்டிருக்கும் 'ஓட்டோ கிராஃப்'பை அவளிடம் இவன் நீட்டுகின்றான். முன்போல் ஆவலாய் அவள் முகம் நோக்கி இப்பொழுதுதெல்லாம் இவன் பார்ப்பதில்லை. ஆனால் இன்று அவள் விழிகளுக்குள் தன் கோரிக்கையைப் பார்வையில் விடுத்து மௌனமாக

நிற்கின்றான். அவளும் தலை தூக்கி ஒரு தடவை இவன் முகம் பார்த்து பின்னர் முகம் வாடித் தலை கவிழ்ந்து போகின்றாள்.

இவன் நீட்டிய கரம் எடுக்கவில்லை. அவள் கரம், இவன் எதிர்பார்ப் பது போல நீண்டு அதனைப் பற்றிக் கொள்ளவில்லை. இருவரும் சிலை யாகி நிலைத்து நிற்க, சில கணங்கள் துடித்துக்கொண்டு ஓடுகின்றன.

உணர்வுகள் உள்ளே கொந்தளிக்கும் இரண்டு சிலைகள் அந்த உணர்வுகளை விழுங்கி அமுக்கி தொடர்ந்து இப்படியே நிற்க, இவனுக்கு இயலவில்லை. உயிர் பெற்ற சிலைபோலச் சலனித்து அவளை நோக்கி, "ரீச்சர் இதிலே ஒரு கையெழுத்துப் போட்டுத் தாருங்கோ" என மெல்லக் கேட்கின்றான்.

"அது வேண்டாம்" அவள் மறுக்கின்றாள்.

"ஏன்?"

"அது உங்களுக்கும் நல்லது எனக்கும் நல்லது" சொல்லிக் கொண்டு விரைந்து அவள் அங்கிருந்து விலகிப் போகின்றாள்.

அவள் போகின்றாள். அவள் போயே விட்டாள்.

ஆசிரிய கலாசாலைக் கல்வி முடிந்து வெளியேறிய பிறகு அவளை இவன் சந்தித்ததில்லை. அவள் எங்கிருக்கின்றாள்? என்ன ஆனாள் என்பதும் இவனுக்குத் தெரியவராது. இவனால் அவளை அடைவதற் குத்தான் முடியவில்லை. ஆனால் தனது இதயத்தில் மிக உயர்ந்த இடத்தில் அவளை இவன் இன்றும் வைத்துக் கொண்டிருக்கின்றான். அவள் தனக்கு எந்தத் தவறும் இழைத்ததாக இவன் கருதவில்லை. தவறான கற்பனையில் காலம் கழித்தது தன் குற்றமென இவன் இப்பொழுது உணருகின்றான். அவள் பெருந்தன்மை ஆனவள். நல்ல பண்புள்ளவள். இவனை அவமதிக்காது நடந்து கொண்ட அவள் நினைவு களை இவன் தன் மனசில் புனிதமாக வைத்துச் சுமக்கின்றான்.

இவனுக்கு மகள் பிறந்த சமயம், அந்தக் குழந்தைக்குப் பெயர் சூட்டுவதில் மனைவி இவனுடன் முரண்பட்டு நின்றாள். மனைவி, அவள் குடும்பத்தார் ஏதோ ஒரு இலட்சுமி என்று குழந்தைக்குப் பெயர் வைத்து விட விரும்பினார்கள். பொருளின்மீது அந்தக் குடும்பத்துக்கு அவ்வளவு அடங்காத வாஞ்சை. அவர்கள் எண்ணத்துக்கு இவன் இசைந்துபோக உறுதியாக மறுத்தான். தனது இதயத்தின் ஆழத்தில் அழியாது வாழ்ந்து கொண்டிருக்கும் அந்த நல்லவளின் நினைவாக அவள் பெயரைத் தன் குழந்தைக்குச் சூட்டவேண்டுமென விடாப்பிடியாக இவன் நின்றான். மனைவி குடும்பம் அந்தப் பெயரை இன்றும் ஏற்றுக்கொள்ளவில்லை. இலட்சுமி என்பது நாகரிகம் இல்லையென்று யாரோ அவர்களுக்குச் சொல்லி இருக்கவேண்டும். அதனால் அவர்களுக்கு நாகரிகமாக 'தனம்'

என்றே வீட்டில் இன்று அவர்கள் அழைக்கின் றார்கள். இவனுக்குத் தன் குழந்தை தேவமனோகரிதான். இவன் 'மனோ' என்றே மனசு நிறைய அழைத்துக்கொண்டிருக்கின்றான்.

சயிக்கிள் திரும்பவும் நெல்லியடிப் பட்டினம் வந்து சேருகின்றது. இன்றைக்கு பணம் எப்படியும் வாங்கவேண்டும் என்னும் எண்ணம் இவன் மனசில் மேலோங்குகின்றது.

காலையில் போனால், வியாபாரம் இன்னும் நடக்கவில்லையென முதலாளி தட்டிக் கழித்து விடுவார். இப்பொழுது அப்படித் தட்டிக் கழிப்பதற்கு இயலாது. காலைநேர வியாபாரம் பெருமளவு நடந்து முடிந்து கொண்டிருக்கும் நேரம், பணப்புழக்கத்துக்குக் குறைவிருக்காது. இந்த நேரத்தில் போனால் பணம் எப்படியும் கிடைத்துவிடும்.

நாட்டில் குழப்பமான சூழ்நிலைகள் உருவான பின்னர் அரசாங்கச் சம்பளம் பெறுவதில் எவ்வளவு சிரமம்! மாதம் தவறாமல் வங்கியில் பணமாகப் பெற்றுக் கொண்ட வேதனம் இப்பொழுது காசோலையாகக் கிடைக்கிறது. வங்கிகளில் பணக் கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டு விட்டன. அதனால் காசோலையைத் தூக்கிக் கொண்டுபோய் கடை முதலாளி கையில் கொடுத்துவிட்டு, அவர்கள் தயவை நாடித் தவங் கிடக்கவேண்டி இருக்கிறது. அவர்கள் பலரிடமும் காசோலைகளை வாங்கி அவற்றை மொத்தமாகக் கொடுத்து கொள்வனவு செய்து, வியாபாரம் பண்ணிப் பணம் சம்பாதித்துக் கொண்டிருக்கின்றார்கள். நாட்டில் குழப்பம், கலவரம் என்றால் இந்த வியாபாரிகள் முதல் செய்வது பொருள்களைப் பதுக்குவதுதான். பின்னர் பொருள் தட்டுப்பாடு என்று சொல்லிக்கொண்டு கொஞ்சம் கொஞ்சமாக வெளியே எடுத்து கொள்ளை விலைக்கு விற்று ஆதாயம் தேடுகின்றார்கள். ஒரு ஆசிரிய னுக்கு சாதாரணமாக ஆயிரத்து சொச்ச ரூபா ஒரு மாதச் சம்பளம். அதை வாங்கிப் பிடிப்பதற்கு பல தடவைகள் கடைக்கு ஏறி இறங்க வேண்டி இருக்கிறது. முதலாளி ஏதோ புண்ணியத்தில் பணம் தருகின் றவர் மாதிரி நடந்து கொள்ளுகின்றார். ஆயிரம் ரூபாவுக்கு இருபத் தைந்து முப்பது ரூபா கொமிஷனாகக் கழித்து இருந்த இடத்தில் வேறு சம்பாதித்துக் கொண்டிருக்கின்றார்.

காசோலைகளை இந்த முதலாளிமாரிடம் கொடுத்துவிட்டு, வீட்டுக்கு வேண்டிய பொருள்களை அந்தக் கடைகளிலேயே பலர் கொள்வனவு செய்கின்றார்கள். அதனால் காசோலைகளை மாற்றிக் கொடுக்கும் முதலாளிகளுக்கு வியாபாரத்துக்கும் குறைவில்லை. பொருள்களை வாங்கிய பிறகு மிச்சச் சொச்சமாக வரும் சொற்ப பணத்தைத்தானும் முதலாளிமார் மனசு விரும்பிக் கொடுப்பதில்லை. அவர்களுக்கென்று ஒரு குணம். வாங்குவதற்கு எப்பொழுதும் தயாராக இருப்பார்கள். ஆனால் கொடுப்பதற்கு அவர்கள் மனசு ஒருபோதும் விரும்புவதில்லை.

இவன் வீட்டுக்கு வேண்டிய பொருள்களை வாங்கிப் போகும் வழக்க மில்லாதவன். சிக்கனமாகச் செலவு செய்யும் உபாயம் தனக்கு மாத்திரம் கைவந்த கலை என்று இவன் மனைவி நம்புகின்றாள். அதனால் பண மாகத் தன் கைக்கு வந்து சேரவேண்டும் என்பது அவள் எதிர்பார்ப்பு. ஆனால் கடை முதலாளி காசு கொடுக்க வேண்டுமே! அவர் கொமிஷன் பணம் கழிக்காமலா இவனுக்குக் காசு கொடுக்கின்றார்? வீட்டுக்குத் தேவையான பொருள்களைத் தனது கடையில் வாங்கி, காசோலைப் பணத்தில் பெரும்பகுதியை இவன் கழித்துவிடாதது அவருக்குப் பெரிய மனக்குறைதான். காசோலைக்குப் பணம் கொடுப்பதில் என்றுமே அவருக்குத் திருப்தி இல்லை. தவிர்க்க இயலாமல் பணமாகக் கொடுக்க நேர்ந்தால் பல நாட்கள் இழுத்தடித்து பகுதி பகுதியாகப் பிரித்து சிறு சிறு தொகையாகக் கையில் கொடுத்து அனுப்புவார். அவரிடம் காசோலையைக் கொடுத்து பதினைந்து நாட்களுக்கு மேலாகிறது. மாதம் முடிந்தும் ஐந்து நாட்கள் கடந்து விட்டன. அந்த மாதம் முடிவதற்குள் மனைவி கையில் காசு கொடுத்தாக வேண்டும். அப்படிக் கொடுக்கத் தவறினால் சமையல் காரியங்களில் அவள் அசண்டையாக இருந்துவிடுவாள். இரண்டு தினங்களுக்கு முன்னர் யாருக்கோ சொல்வது போல அவள் வாய் திறந்து இவன் காது படச் சொன்னாள். அவள் அப்படிச் சொல்வதற்கு முன்னரே அவளின் அந்த அசண்டைக்குணம் ஆரம்பமாகிவிட்டது என்பதை இவன் அவதானித்திருக்கின்றான். இன்றைக்கு முதலாளியிடம் பணம் முழுவதும் வாங்கியாக வேண்டும்.

சயிக்கிளை வெளியே நிறுத்திவிட்டு இவன் கடைக்குள்ளே மெல்ல நுழைகின்றான். கடை வாசலிலும் உள்ளேயும் சனம், அப்பொழுது வியாபாரம் மும்முரமாக நடந்து கொண்டிருக்கிறது. இந்தப் பட்டினத்தில் பெரிய முதலையாக விளங்கும் முதலாளி அவர். குட்டி முதலாளிகள் பலரைக் குட்டி முந்தி முன்னுக்கு வந்தவர். யாழ்ப்பாணம், கொழும்பு, கண்டியிலும் அவருக்குக் கடைகள் உண்டு.

இவன் கடை வாசலில் கால் வைத்து உள்ளே நுழையும் பொழுதே மேசைக்குமுன் அமர்ந்திருக்கும் முதலாளி இவனைக் கண்டு கொள்ளுகின்றார்.

“வாங்க மாஸ்ரர், என்ன செய்கிறது. இண்டைக்கும் சரிவராது”

இவன் அவர் அருகில் வருவதற்கு முன்னரே முதலாளி அறிவித்தல் கொடுக்கின்றார்.

இவனுக்கு ஏமாற்றமாகத்தான் இருக்கிறது. ஆனால் அவர் இப்படிச் சொல்வது இவனுக்குப் புதிய சங்கதி அல்ல. பழகிப்போன ஒன்று. இவன் திரும்பி வெளியே போய் என்ன செய்வது! தன்னை மெல்லச் சுதாகரித்துக்கொண்டு அவர் முன் வந்து நிற்கின்றான்.

"என்ன மாஸ்ரர் செய்கிறது! நெருக்கடியாக்கிடக்கு, வாத்திமார் எல்லாரும் வந்து ஒரே நேரத்திலே காசை வை எண்டால், நான் என்ன செய்கிறது! இப்பதான் இரண்டு பேருக்குக் குடுத்திட்டிருக்கிறன்."

முதலாளி வாயில் பொய் தவிர வேறொன்றும் வராது என்பது இவனுக்குத் தெரியும். தெரிந்தும் வேறுவழி என்ன? அவர் தயவைத் தானே நாடி நிற்கவேண்டி இருக்கிறது. அவருக்கு இதயம் என்பது இல்லை என இவன் அறிவான். ஆனாலும் அவரைக் கொஞ்சம் கனிய வைத்துக் காரியம் பார்க்கவேண்டும் என்னும் நோக்கத்துடன், "எனக்கும் பெரிய நெருக்கடியாக இருக்கிது" எனக் குரலில் பணிகிறான்.

"என்ன செய்கிறது! நாட்டு நிலைமை அப்பிடி. எல்லோருக்கும் கரைச்சல்தான். நாளைக்கு வாருங்கோ பாப்பம்"

அவர் அரசியல் பேசி, சமூகநிலை எடுத்துச்சொல்லி, அனுதாபத் துடன் இவனை அனுப்பி வைக்கப் பார்க்கின்றார்.

"அப்ப. . . . நாளைக்கு வாறன். இப்ப. . . . ஒரு ஐம்பது ரூபா தாருங் கோவன்" குரல் மேலும் பணிந்து போகின்றது.

"என்ன மாஸ்ரர் நீங்கள்! இருந்தால் நான் முழுவதும் தந்துவிடுவன்" முதலாளியின் குரலில் சற்று இறுக்கம் தொனிக்கிறது.

"ஆ. . . . . ஒரு பத்து ரூபா இப்ப தாருங்கோ!"

அவர் நையாண்டியாகச் சிரித்துக்கொண்டு, "நீங்களும் விடுகிறதாக இல்லை" என்று சொன்னவாறு மேசை இலாச்சியை மெல்ல இழுத்து கசங்கிப்போன பத்து ரூபாத் தாள் ஒன்றைக் கையில் எடுத்து மேசையின் மேல் போடுகின்றார்.

இவன் தயக்கத்துடன் அந்த நோட்டைக் கையில் எடுக்கும்போது "அப்ப நாளைக்கு வாறன்" என்று ஞாபகப்படுத்திக்கொண்டு திரும்பி வெளியே நடக்கின்றான்.

"பிச்சைக்காற வாத்திமார்" முதலாளியின் உரத்த குரல் இவன் செவிகளில் வந்து குண்டாக விழுகின்றது. இவன் குனிந்த தலை நிமிர வில்லை. நேரே சென்று சயிக்கிளை எடுக்கின்றான்.

'அவன் சொல்வதில் உண்மை இல்லாமல் இல்லை. என்னிடம் இப்போது ஒரு பத்து ரூபா இருந்திருந்தால் ஏன் அவனிடம் கேட்க வேண்டும்!' என இவன் எண்ணிக்கொண்டு சுபாஸ் பேக்கறி நோக்கி வருகின்றான். அந்தப் பத்து ரூபாவைக் கொடுத்து பாண் ஒரு இறாத்தல் வாங்கி, சயிக்கிளில் தொங்கிக் கொண்டிருக்கும் பைக்குள் போட்டுக் கொண்டு வீடு நோக்கிப் புறப்படுகின்றான். நெல்லியடிச் சந்தி வந்ததும்

காலையில் இவன் பார்த்த அவன், அவன் மனைவி இருவரினதும் நினைவுகள் மீண்டும் எழுகின்றன. 'அவனும் அவளும் திரும்பி வந்து போயிருக்கக்கூடும்' என்ற தீர்மானத்துடன் சயிக்கிள் வடக்குத் திசை நோக்கி ஊர்ந்து கொண்டிருக்கின்றது.

தினசரிப் பத்திரிகைகள் இன்று இன்னும் இவன் படிக்கவில்லை. பொதுசன நூல் நிலையத்தில் வழமைபோல இதுவரை பத்திரிகைகள் இவன் படித்து முடித்திருக்கவேண்டும். மாலையில் திரும்பி வந்து சஞ்சிகைகள், புத்தகங்கள் அங்கு வாசிக்கலாம், வீடு போய் ஒரு மணி நேரத்துக்குள் நூல் நிலையம் திரும்பிவிட வேண்டும். இன்று வீட்டு நிலைமை இவனுக்கு எப்படி இருக்குமோ! கைகாவலாக எதற்கும் ஒரு இறாத்தல் பாண் இவனிடம் இருக்கவே செய்கிறது!

# 21

இப்படி ஒரு வாழ்க்கை அமைப்புக்குள் தான் வந்து சேர்ந்தது இவனுக்கொரு அதிசயந்தான். இது ஒரு விபத்துப்போல நிகழ்ந்து விட்ட தாகவே இவன் மனசில் இன்று தோன்றுகின்றது.

ஆசிரிய கலாசாலைக் கல்வியை முடித்துக்கொண்டு வட மாகாணத் தில் இருந்து ஊவாமாகாணத்துக்கு இவன் மாற்றலாகி வந்தான். ஆசிரிய கலாசாலை செல்வதற்கு முதல் வீட்டுக்கு அண்மையிலுள்ள ஒரு பாடசாலையில் மூன்றாண்டு காலம் ஆசிரியராகக் கடமை ஆற்றியிருக் கின்றான்.

இவனுக்குகொரு மாற்றம் இப்போது தேவைப்படுகின்றது. அது மனசுக்கு அமைதி தருவதாக இருக்கவேண்டும் என்று இவன் எதிர்பார்க் கின்றான். இவன் எதிர்பார்ப்புப்போல இடமும் வந்து வாய்த்தது. பதுளை யில் இருந்து கண்டி நோக்கிச் செல்லும் பிரதான வீதியில் பதுளைக்கும் வெலிமடைக்கும் இடையே உள்ள சிறிய ஒரு பட்டணம் அட்டம்பிட்டிய. அந்தப் பட்டணத்து மகாவித்தியாலயத்துக்கு ஆசிரியராக மாற்றலாகி வந்தான்.

அந்தப் பட்டணம் இவன் மனசுக்கு மிகவும் பிடிப்பானதாக அமைந் திருந்தது. பெரிய நகரங்களின் ஓழியாத பரபரப்பும், சிறிய கிராமங்களின் வசதியின்மையால் வரும் சிரமங்களும் அற்ற சிறிய பட்டணம். பட்டணத்தை அண்டி பிரதான வீதிக்கு அண்மையில் இருக்கிறது அந்த வித்தியாலயம். அது ஒரு சிங்கள மகாவித்தியாலயம். அதன் தமிழ்ப் பகுதியில் ஆசிரியராக இவன் நியமனம் பெற்று வந்திருக்கின்றான். நடுப்பகல் தாண்டிய பிறகுதான் அந்த வித்தியாலயத்தின் தமிழ்ப்பகுதி

வகுப்புகள் நடைபெறுகின்றன. காலைக் குளிரில் போர்த்து மூடிக் கொண்டு கட்டிலில் படுத்துக் கிடந்து, பின்பு நன்றாக வெயில் ஏறிய பிறகு மெல்ல எழுந்து சாவகாசமாகப் பாடசாலை புறப்பட்டுச் செல்வதற்கு இது வாய்ப்பான ஒரு வித்தியாலயம்.

அந்த வித்தியாலயமும் அந்தப் பிரதேசமும் இவன் நெஞ்சை பெரிதும் கவர்ந்தன. மனசுக்கு அமைதியும் ஆனந்தமும் தரும் பிரதேசம். கண்ணுக்கும் மனசுக்கும் குளுமையான தேயிலைச் செடிகள் போர்த்தி சிலிர்த்து நிற்கும் மலைக் குன்றுகள். அந்த மலைக் குன்றுகளில் இருந்து சலசலத்துச் சங்கீதம் பாடிவரும் நீரூற்றுக்கள். மலைமுகடு களைத் தழுவித் தழுவி முத்தமிட்டுத் தவழ்ந்து செல்லும் பஞ்சுப் பொதிகளான மேகக்கூட்டங்கள், மலைக் குன்றுகளுக்கிடையே, தாழ்ந்து எழுந்து கரும்பாம்பாக வளைந்து வளைந்து போகும் தார் வீதிகள். மறு புறம் பாதாளம்வரை பாய்ந்து செல்லும் பயங்கரப் பள்ளத்தாக்குகள். வீதி ஓரங்களிலும் காட்டுச் செடிகள்போல மலர்ந்து சிரித்து நிற்கும் றோசாக் கள். அமைதி தவழ்ந்து வர இயற்கை எழில் கொஞ்சும் இந்தச் சூழலில் வாழ நேர்ந்துள்ளது இவனுக்கொரு வரப்பிரசாதந்தான்.

மகாவித்தியாலயத்தின் தமிழ்ப் பகுதியில் மொத்தம் பதினைந்து ஆசிரியர்கள். இவர்கள் யாழ்ப்பாணம், மட்டக்களப்புப் பகுதிகளைச் சேர்ந்த தமிழ் ஆசிரியர்கள். இருவர் முஸ்லீங்கள், பெண்கள் மூவர். அவர்களில் இரண்டு ஆசிரியைகளின் கணவன்மார் இருவரும் வித்தி யாலயத்துக்கு அண்மையிலுள்ள தேயிலைத்தோட்ட உத்தியோகத் தர்கள். அந்த ஆசிரியைகள் தங்கள் கணவர்மார்களின் தேயிலைத் தோட்ட விடுதிகளில் தங்கி இருந்து வித்தியாலயத்துக்கு வருகின்றார்கள். முஸ்லீம் ஆசிரியை மூன்று கிலோமீற்றர் தூரம் தினமும் பஸ்ஸில் பிரயாணம் செய்து வித்தியாலயத்துக்கு வந்து போய்க்கொண்டிருக் கின்றார். ஆண் ஆசிரியர்கள் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து வாடகை விடுதி ஒன்றில் தங்கி இருக்கின்றார்கள்.

இவன் மாத்திரம் அவர்கள் அழைத்தபோதும், அந்த அழைப்பை ஏற்க மறுத்துவிட்டான். இவன் மனசுக்கு அமைதி தேவைப்படுகின்றது. அந்த அமைதியைக் கூட்டு வாழ்க்கையில் அவர்கள் குலைத்து விடுவார்கள். வித்தியாலயத்துக்கு அண்மையில் குடியிருக்கும் சோம ரட்ண இல்லத்தில் சிறிய அறையொன்று இவனுக்குக் கிடைத்தது. உணவு வசதியும் அவர்கள் செய்து கொடுத்தார்கள். வீட்டு வாடகைக்கும் உணவுக்கும் சம்பளத்தில் ஒரு பகுதியை மாதம் மாதம் சோமரட்ண வுக்கு இவன் கொடுத்துக் கொண்டிருக்கின்றான்.

இவன் வித்தியாலயத்தில் சக ஆசிரியர்களுடன் என்ன பேசினாலும் வார்த்தைகளை அளந்து அளவாகப் பேசுவான். யாரோடு பழகினாலும் புதிய உறவு பூண்டு மிக நெருங்கிப் போகாது எச்சரிக்கையாக இருக்கின் றான். எவரையும் வெறுத்து ஒதுக்கி இவன் தூர விலகி நிற்பதுமில்லை.

எல்லாவற்றுக்கும் தனக்கென்றொரு எல்லை வகுத்து வைத்துக்கொண்டு வாழுகின்றான்.

பாடசாலை நடைபெறாத ஓய்வு நேரங்களில் சுவாமி விவேகானந் தரின் ஆன்மீக நூல்களுக்குள் தன்னை மறந்து ஆழ்ந்து போவது இவன் வாழ்வாகிப்போனது. காந்தி அடிகளின் "இல்லறமும் பிரமசரியமும்" இவனுக்கு வேதநூலாக இப்போது விளங்குகிறது. தினம் அந்த நூலில் குறைந்தது ஒரு பக்கமாவது இவன் படிக்காது இருப்பதில்லை. "உலகத்தின் பேரழகியைத் தீண்டும்போது எவன் ஒருவன் பிணத்தைத் தீண்டும் உணர்வைப் பெறுகின்றானோ, அவன்தான் பிரமசாரி" எனக் காந்தியடிகள் சொல்லியிருக்கும் கருத்தைப் பாராயணம் பண்ணி, அடிக்கடி நினைவு கூர்ந்து தன்னுள்ளே மீட்டுக் கொள்ளுகின்றான். இவன் ஒரு முருக பக்தனாக மாறிப்போனான். குறுகியகால இடை வெளியில் இரு தடவைகள் கதிர்காமம் சென்று மாணிக்க கங்கையில் நீராடி கதிர்காமக் கந்தனைத் தரிசனம் செய்து அமைதியுடன் திரும்பி வந்தான். மாலை வேளைகளில் வித்தியாலயத்தைச் சூழவுள்ள தேயிலைத் தோட்டத்துக்குள்ளே உள்ள வீதியில் மெல்ல நடந்த வண்ணம் மஞ்சும் மலையும், பசுமையும் சீதளமும், பள்ளத்தாக்கும் வெள்ளி நீரும் பார்த்து இரசித்தவாறு நடந்து வருவான். வாரத்தில் வெள்ளிக்கிழமை தோறும் தோட்டத்துக் குமரன் ஆலயத்துக்கு மாலை யில் சென்று அமைதியாக வழிபடுவான். சுவாமி விவேகானந்தருக்குக் கன்னியாகுமரிபோல இவனுக்கு ஊவாவின் அட்டம்பிட்டிய.

வித்தியாலத்தில் இவன் ஒரு துறவி என்றே எல்லோரும் கருதுகின் றார்கள். வெளித் தோற்றத்தில் இவனிடம் அப்படி ஒரு வேஷமில்லை. வேஷங்களை வெறுக்கின்றவன் இவன். வேஷம் எதுவுமற்ற துறவு மனசை இவன் தனக்குள் வளர்த்துக் கொண்டிருக்கின்றான்.

வித்தியாலத்தில் இவனுக்கென்றொரு தனியான கௌரவம் மாண வர்களிடத்தில் உருவாகி இருக்கிறது. பாடசாலை நேரத்தில் மாணவர் களுக்கு ஒழுங்காக இவன் பாடங்களைக் கற்பிக்கின்றான். விடுமுறை நாட்களில் மாணவர்களை அழைத்து மேலதிக வகுப்புகளை நடத்து கின்றான். அந்த வித்தியாலயத்தில் லீவு என்பது எடுக்காமல் கடமை புரியும் ஆசிரியர் ஒருவர் உண்டென்றால் அது இவன்தான்.

மாணவர்கள் அனைவரும் காலப்போக்கில் பக்திமயமான ஒரு கௌரவம் இவனுக்குக் கொடுக்க ஆரம்பித்து விட்டார்கள்.

மாணவர்கள் மத்தியில், சமூகத்தில் இவனுக்கு வளர்ந்து கொண்டு வரும் செல்வாக்கும் கௌரவமும் ஆசிரியர்கள் சிலரின் உள்ளங்களில் பொறாமைத் தீயைப் பெருக்க ஆரம்பித்தது. மாணவர்கள் அந்தரங்க மாக ஆசிரியர்களுக்குப் பட்டப்பெயர் சூட்டி வைத்து தமக்குள் பேசிக்

கொள்வார்கள் என்றால் இங்கு அப்படி நடக்கவில்லை. ஆசிரியர்களே இவனுக்கு முத்துலிங்கச் சுவாமிஜி எனப் பெயர் சூட்டி வைத்திருக்கின் றார்கள். இவன் மனப்போக்கும் நடத்தையும் மாத்திரம் அதற்குக் காரணம் என்று சொல்வதற்கில்லை. இவன்மீது கொண்டுள்ள அதிருப் தியை வெளிப்படுத்திச் சொட்டை பண்ணுவதற்கான ஒரு மார்க்கமாக அதைக் கருதுகின்றார்கள். இவன் செல்வாக்குக் கண்டு மனம் பொறுக் காத சக ஆசிரியர் ஒருவர் ஒரு தினம் இவனிடம் நேரில் சொன்னார்;

“மிஸ்ரர் முத்துலிங்கம்! உம்மாலை பெரிய கரைச்சல்”

“என்ன விஷயம்?”

“விளங்காததுபோலப் பேசிறீர்”

“என்ன சொல்லுறியள்?”

“படிப்பிக்க வந்த இடத்திலே பிரச்சினைகளை உருவாக்க வேண் டாம்.”

“என்ன பிரச்சினை!”

“நீர் செய்கிற வேலைகள் எல்லாம் பாடசாலைக்குள்ளே பிரச்சினை களைத்தான் கொண்டு வருகிறது.”

“மன்னிக்க வேணும், விஷயத்தைச் சொல்லாமல் நீங்கள் சுத்தி வளைச்சுப் பேசிக்கொண்டிருக்கிறியள்”

“சின்னப் பிள்ளைபோல இன்னமும் விளங்கயில்லை எண்டு சொல் லுறீர்”

“சரி நான் விளங்காத சின்னப்பிள்ளைதான், கதையை அந்தளவிலே விடுங்கோ”

“உங்களுக்குக் கோபம் வருகுது மிஸ்ரர், ஆனால் பிரச்சினை எங்களுக்குத்தான்”

“என்ன பிரச்சினை அப்பா!”

“நீர் லீவு நாட்களிலும் வகுப்பு நடத்துகிறீர். தவணை விடுமுறை காலத்திலும் ஊருக்குப் போகாமல் நின்று பாடம் நடத்திக் கொண்டிருக் கிறீர்”

“ஓகோ! உங்களைக் குறைசொல்லுகிறார்கள், அப்படித்தானே!”

“உமக்கு ஊருக்குப் போக வேண்டிய தேவை இல்லாமல் இருக் கலாம்”

"ஓய்வு நேரங்களில் உங்களைப்போல காட்ஸ் விளையாட எனக்கு முடியாது. பாவம் இந்தப் பிள்ளைகள். அவர்களுக்கு ஏதாவது சொல்லிக் கொடுக்கலாம் என்று பார்த்தேன். உங்களுக்குப் பிரச்சினையாக இருந் தால் அதையும் விட்டு விடுகிறேன்"

"விட்டுவிட்டு பழியை எங்கடை தலையில் சுமத்தப் பார்க்கிறீர்"

"மாஸ்ரர், நீங்கள் இன்னும் என்னை விளங்கிக் கொள்ளவில்லை. நான் அப்பிடியான ஆளில்லை. நீங்கள் எல்லாருமாகச் சேர்ந்து ஆலோ சித்துவிட்டுச் சொல்லுங்கோ! நான் வகுப்பு நடத்திறதை நிறுத்தி விடு கிறன்"

இவன் அந்த ஆசிரியருக்கு சொல்லி அனுப்பினான், ஆனால் அதன் பிறகு இது பற்றி யாருமே இவனிடம் வந்து பேசவில்லை. இவன் தன் வேலைகளை என்றும் போல அக்கறையுடன் தொடர்ந்து செய்து கொண்டுதான் இருக்கின்றான்.

ஊவா மாகாணத்துக்கு இவன் மாற்றலாகி வந்து இரண்டு ஆண்டு கள் இவனுக்கு மௌனமாகக் கழிந்து போய்விட்டன. இந்த இரண்டு ஆண்டுகளில் ஒரு தடவை தங்கையின் திருமணத்துக்கென கடமைக் காக ஊர் போய் வந்தான். மறு தடவை தந்தையின் மரணச் செய்தி கிடைத்து உடனே புறப்பட்டு அங்கு போனான். இவன் ஊர் போய்ச் சேருவதற்கு முன்னர் அவர் சடலத்தைத் தகனம் செய்து யாவும் முடித்துவிட்டார்கள். மறுநாள் இவன் அங்கிருந்து புறப்பட்டு வந்தவன் தான், அதன் பிறகு ஊர்ப் பக்கம் திரும்பிப் பார்ப்பதே இல்லை.

# 22

ஆங்கில ஆசிரியையாக ஜெயசீலி அந்த வித்தியாலயத்துக்கு வந்து சேர்ந்தாள். அவள் கொழும்புக்காரி. கொழும்பு கொட்டாஞ்சேனை யில் அவள் வீடு இருந்தது. என்ன காரணத்தினாலோ அவள் ஊவா மாகாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறாள். இது அவளுக்கு முதல் நியமனம் என்பதால், நிராகரிக்காமல் ஏற்றுக்கொண்டு அவள் இங்கு வந்து சேர்ந்திருக்கவேண்டும்.

அவள் மிக நாகரிகமான ஒரு பெண். அவள் நடை உடைகளுக்கு கொஞ்சமும் ஒவ்வாதது அவள் வந்து சேர்ந்திருக்கும் இந்தச் சின்னஞ் சிறிய பட்டணம். அவளுக்குக் கிடைத்திருக்கும் இந்த நியமனம் உறுதி யான பிறகு, அவள் தொடர்ந்து இங்கு தங்கி இருக்கப்போவதில்லை.

சிங்களமொழி அவளுக்குத் தாய்மொழிபோல. சிங்கள இனத்தவர் கேட்டு வியக்கும் வண்ணம் சிங்களத்தில் சரளமாக அவள் உரையாடு வாள். ஆங்கிலமும் அவளுக்கு இயலும். தாய்மொழி தமிழில் அவள் பேசும்போது கேட்பதற்குச் சுவாரசியமாக இருக்கும். அவள் தமிழ் பேசுவது குழந்தை செல்லம் மொழிவதுபோல இருக்கும். கொஞ்சு தமிழ் என்பது ஒருவேளை அவள் பேசும் தமிழாக இருக்கலாம். அவள் பேச்சில் தமிழ் கொஞ்சுமோ, என்னவோ! அவள் போன்ற ஒரு பெண் பேசுவது கேட்டு அது கொச்சைத் தமிழ் என ஒருவர் துணிந்து கூறமாட்டார். அவளுக்குத் தன்னளவில் ஒரு பெருமை. 'எனக்குத் தமிழ் பேச வராது' என அந்தப் பெருமையை இடையிடையே வாய்விட்டுச் சொல்லிக் கொள்வாள்.

தோற்றத்திலும் ஒரு தமிழ்ப் பெண்போல அவள் இல்லை. அவள் சிங்கள இனப் பெண்ணாகவே இருப்பாள். அப்படி இருப்பது தனக்கொரு பாதுகாப்பு என்று அவள் கருதக்கூடும். அவள் அந்த வித்தியாலயத் துக்கு ஆசிரியையாக வந்து, வாடகைக்கு அறை எடுத்து ஒரு சிங்களக் குடும்பத்துடன் தங்கி இருக்கின்றாள்.

அந்த வித்தியாலயத்தில் சிங்கள மாணவர்களும் தமிழ் மாணவர் களும் கல்வி கற்கின்றார்கள், சிங்கள மாணவர்களின் வகுப்புக்கள் நடுப் பகலில் முடிவடைந்த பிறகு தமிழ் மாணவர்களுக்கு வகுப்புகள் ஆரம்பிக் கின்றன. சிங்கள ஆசிரியர்கள் வித்தியாலயத்தை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கும் சமயம், தமிழ் ஆசிரியர்கள் வித்தியாலயத்துக்குள் நுழைந்து கொண்டிருப்பார்கள். அதனால் இரண்டு பகுதி ஆசிரியர்களும் ஒன்றாக வித்தியாலயத்தில் சந்தித்து கலந்து பழகி உறவாடும் சந்தர்ப் பங்கள் மிகக் குறைவு. சிங்கள ஆசிரியர்களுக்குத் தமிழ் பேசத் தெரியாது. தமிழ் ஆசிரியர்களுக்குச் சிங்களம் பேச வராது. அதனால் இரண்டு பகுதி ஆசிரியர்களும் தூரத்தூர விலக்கிப் போய்க் கொண்டிருந் தார்கள்.

அவள் இரு பகுதி ஆசிரியர்களுக்கும் இடையில் ஓர் இணைப்புப் பாலமாக வந்து சேர்ந்திருக்கின்றாள். வகுப்புகள் முடிந்து வித்தியாலயத் தில் இருந்து புறப்பட்டுச் செல்லும் சிங்கள ஆசிரியர்கள், அப்பொழுது வித்தியாலயம் வந்து சேரும் அவளைக் கண்டு நலம் விசாரித்துச் சில வார்த்தைகள் பேசிக்கொண்டுதான் போகிறார்கள்.

வித்தியாலயத்திலும் வெளியிலும் சிங்களத்தில் சரளமாகப் பேசி நாகரிகமாக எல்லாரோடும் அவள் பழகுகின்றாள். பேச்சுப் பழக்க வழக்கம்போல உடையிலும் அவள் மிக நாகரிகம். சுருள் சுருளாக நெளிந்து பொங்கி நிற்கும் அழகிய மென்கம்பிக் கூந்தல். அந்த அழகிய கூந்தல் தோள்களைத் தொட்டுத் தழுவி நிற்கத் தகுந்த வண்ணம்

நவீனமாகக் கத்தரித்துவிட்டுக் கொண்டிருக்கின்றாள். மலையகத்துச் சீதளக் காற்றில், நேர்த்தியான அந்தக் கேசம் மெல்ல அசைந்தாடும் போது, தன் கரம் தூக்கி லாவகமாகப் பின்னே தள்ளிவிடுவதும் ஒரு தனி அழகுதான். புதிது புதிதாகத் தினம் ஒரு சேலை அவள் உடுத்தி வருகின் றாள். அந்தச் சேலையின் வண்ணம் அன்றைய அவள் அலங்காரங் களின் ஆதார மையமாக இருக்கும். சேலை நிகர்த்த வண்ணத்தில் கைகளில்லாத சிங்காரச்சட்டை, கழுத்தில் அதே வண்ணத்தில் கச்சித மான மாலை, காதுகளில் சேலை வண்ணத் தோடுகள். செங்கமல உதட்டில் செம்பவளச் சாயம், பேசும் விழிகளில் போதை ஊட்டும் கருமைப் புருவங்கள் நீண்டு கரும்பு வில்லாக வளையும் கருவண்ணக் கீற்று. இடது கரத்தில், பளிச்சிடும் தங்கக் கடிகாரம், அன்றைய அலங்கா ரங்களுக்கு ஏற்ற குதியுயர்ந்த செருப்பு, அணிந்திருக்கும் ஆடை நிறத் தில் வண்ணக் குடை, பூப்பூவாகச் சொரியும் தலையில் கட்டிக்கொள்ளும் பட்டுத் துண்டு, அவள் வெகுதூரத்தில் வரும்போதே காற்றில் கலந்து வந்து நாசியைத் தொட்டு கிறங்க வைக்கும் ரம்மியமான சுகந்தம், ஏதோ ஒரு சினிமாவின் கதாநாயகி தவறுதலாக அந்த வித்தியாலயத்துக்குள் வந்து நிற்பதுபோலத்தான் அவள் தோன்றுவாள்.

புயலாக அவள் அங்கு வந்து சேர்ந்தாள். அவள் ஒரு இளம்புயல். அந்த புயலின் வருகை வித்தியாலயத்துக்குள்ளேயும் புயலை மெல்லக் கிளப்பிவிடுகிறது. குறிப்பாக ஆசிரியைகள் மூவரும் தமக்குள் தினமும் பேசிக்கொள்வதற்கு உவப்பான பேசுபொருள் கிடைத்து விட்டதான புளுகம், அவளது நாகரிக நடை உடை அலங்காரம் கண்டு அவர்கள் தமக்குள் கண் சிமிட்டிக் கொள்ளுகின்றார்கள். வலிந்துகொண்டு அவ ளோடு தேடித் தேடிப் பேசுகிறார்கள். அவள் பற்றிய தகவல்களை அவளிடம் இருந்து சிரமமில்லாது திரட்டுகிறார்கள், பின்னர் தங்கள் எண்ணம்போல விமர்சனங்கள் செய்து அவளைக் கேலி பண்ணி நகைத்துக் கொண்டு இருக்கின்றார்கள். அந்த நாகரிகப் புயல் அவர்கள் உள்ளங்களில் எப்பொழுதும் பொறாமைப் புயலைக் கிளப்பி விடுகின் றாள். அவள் அவர்களைப் பற்றி அலட்டிக் கொள்வதில்லை. அவர்கள் இருக்கின்றார்கள் என அவள் கவனத்தில் கொண்டதாகவுமில்லை. அதுவே அவர்கள் உள்ளங்களைப் பற்றி எரிய வைக்கின்றது.

ஆசிரியைகள்தான் இப்படி என்றால், ஆசிரியர்கள் பற்றிப் பேச வேண்டாம். அவர்கள் நடை உடையில் நவநாகரிக மெருகு திடீரென ஏறிக்கொண்டு வருகின்றது. ஒவ்வொரு ஆசிரியரும் வலிந்து வலிந்து சென்று அவளோடு தனிமையில் பேசுகின்றார்கள். ஒரு பாடவேளை முடிந்து இன்னொரு வகுப்பறைக்கு மாறிச் செல்லும் மார்க்கத்தில், அவள் எதிரில் போய் அந்தரங்கமாக ஒரு புன்னகையைப் பகிர்ந்து கொள்ளத் தவிக்கின்றார்கள். திறந்த வகுப்பறைகளில் அவள் அருகே இருப்பதற்கு வாய்க்கும் சமயங்களில் அவள் விழிகளை அந்தரங்கமாகச்

சந்திக்கத் தேடுகிறார்கள். அவளை நெருங்கிச் சென்று சளசள என்று எதையாவது பேசி உறவு வளர்க்கத் துடிக்கின்றார்கள். கௌரவமான பெரிய மனிதன்போல தூர விலகி நின்று இரகசிய மோகனப் பார்வையில் அவளைத் தன்பால் ஈர்க்க எத்தனிக்கின்றார்கள்.

ஆட்சி அதிகாரங்களுடைய அதிபரினாலும் அவளைப் பார்த்துக் கொண்டு சும்மா இருப்பதற்கு இயலவில்லை. எல்லோரையும் கண்காணித்து நேர்பட நடத்திக் கொண்டிருப்பவர் தான் எனப் பாவனை பண்ணிக்கொண்டிருக்கும் மனிதர் அவர். அவருக்கு இருக்கும் அதிபர் என்னும் அதிகார உரிமையை வாய்ப்பாகக் கொண்டு சின்னச்சின்னக் காரியங்களுக்கு எல்லாம் தனது காரியாலயத்துக்கு அவளை அழைத்து நீண்ட நேரம் தனிமையில் பேசிக்கொண்டிருக்கின்றார்.

ஆசிரியர்கள் மத்தியில் பனிப்போர் ஒன்று நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. அவர்கள் ஒவ்வொருவர் மனசிலும் ஒரே ஆசை. அவள் விழிச்சுடர் வீச்சொளி தங்கள்மீது வந்து விழவேண்டும். அவளைத் தங்கள் பக்கம் கவரவேண்டும். அவள் உள்ளத்தில் எப்படியாவது இடம்பிடித்தாக வேண்டும். இப்படி அவர்கள் இதயம் அவளை நினைந்து துடியாகத் துடிக்கிறது. அவளை எண்ணி எண்ணி தவண்டை அடித்து ஏங்குகின்றது.

அவள் அவர்களின் கனவுக்கன்னி ஆனாள். அவர்களில் சிலர் தூக்கம் துறந்தனர். நெஞ்சில் ஏக்கமே வந்து நிறைந்தது.

அவள் நாகரிகமான ஒரு பெண். ஒன்றாக வேலை செய்யும் இடத்தில் யாரையும் ஒதுக்கித் தான் தூர விலகிப் போகக்கூடாது என்பது அவள் எண்ணம். ஆசிரியர்கள் அனைவரோடும் தாராளமாகப் பேசுகின்றாள். எல்லோருடனும் சகசமாகப் பழகுகின்றாள்.

ஆனால் அவளுக்குள் அவளைப் பற்றித் தனியான ஒரு பெருமை. ஆசிரியர்கள் எல்லோரும் தன்னைச் சுற்றிச் சுழன்று கொண்டிருக்கின்றார்கள் என்பது அறிந்தும் அறியாதவள் போலச் சிரித்துச் சிரித்துப் பேசிக்கொண்டிருக்கின்றாள். அதில் அவளுக்கொரு ஆனந்தம். அதிபர் கள்ளன். ஆசிரியர் ஒருவர் அவளோடு தனிமையில் பேசிக்கொண்டு நிற்பது கண்டுவிட்டால் போதும். ஏதோ ஒரு அலுவலாக தான் அந்தப் பக்கம் வருவதுபோல வருவார். அந்த ஆசிரியரைப் பார்த்து முறைப்பார். ஆனால் அவளை நோக்கிக் கள்ளமாகச் சிரிப்பார். அவள் அறிவாள் அவர் அந்தரங்கம். ஆண்களின் உண்மை வடிவம் அறிந்தவள் அவள். அவள் போன்ற கன்னிப் பெண்ணிடந்தான் இந்த ஆண்கள் பற்றிக் கேட்க வேண்டும்.

அவள் தன்னைப் பற்றி உள்ளூரப் பெருமைப்படும்படியாக அவர்கள் செயல்கள் இருக்கின்றன.

ஆனால் முத்துலிங்கம் அவளுக்கு ஒரு புதுமையாகத் தோன்று கின்றான்.

இவன் ஒரு பிரச்சினையாக அவள் மனசில் படுகின்றான்.

இவனைத் தனக்கொரு சவாலாக அவள் எண்ண ஆரம்பிக்கின்றாள்.

ஆண்களைச் 'சுழட்டிவிட்டு' அவர்கள் படும் அவஸ்தை கண்டு ஆனந்தமாக இரசிப்பதில் ஒரு இன்பம் இருக்கிறது. பலர் கண்களுக்கும் காட்சிப் பொருளாக விருந்தளித்து அவர்கள் உள்ளங்களில் போதை ஊட்டுவதில் ஒரு பொழுதுபோக்கு இருக்கிறது.

முத்துலிங்கம் அவளைக் கண்டும் காணாதவனாகத் தானும் தன் பாடுமாக இருக்கின்றான். அவள்மீது மோகம் கொண்டு போட்டியும் பூசலுமாகத் தமக்குள் மோதிக்கொண்டிருக்கும் ஆசிரியர்களைப் பார்த்து இவன் தனக்குள் நகைத்துக் கொண்டு இருக்கின்றான்.

இவனுக்குச் 'செக்கும் சிவலிங்கமும்' எல்லாம் ஒன்றுதான். 'உலகத் தின் பேரழகியைத் தீண்டும்போது பிணத்தைத் தீண்டும் உணர்வைப் பெறுகின்றவன்' தான் என தன்னுள்ளே எண்ண அலைகளைச் சதா மீட்டிக்கொண்டு இருக்கின்றான். நவீன நாகரிகம் இப்படி ஒரு நங்கையாக உருவெடுத்து தங்கள் வித்தியாலயத்துக்கு வந்திருக்கிறது என்னும் பிரக்ஞை அற்றவனாக இவன் காலம் கழிந்து கொண்டிருக்கிறது.

அவளை எதிரில் சந்திக்க நேரும் சமயங்களில் இவன் 'குட் ஈவினிங்' சொல்லிக் கொண்டு போய்விடுவான். அதற்குமேல் ஒரு வார்த்தை தானும் இவன் பேசிக்கொண்டதில்லை. 'பட்டது போதும் இனிப் பட மாட்டேன்' என மனசு இவனை எப்பொழுதும் எச்சரிக்கை செய்து கொண்டிருக்கின்றது.

இவன் அலட்சியம் அவள் மனசுக்குப் பெரும் பாரமாக இருக்கிறது. இப்படி எந்த ஒரு ஆடவன் கவனத்தையும் தன்னால் கலைப்பதற்கு இயலாமல் அவள் ஏமாந்து போனதில்லை, வித்தியாலயத்தில் இத்தனை ஆசிரியர்களும் பின்னால் ஏக்கத்துடன் அலைந்து கொண்டிருக்க இவன் மாத்திரம் என்ன உதாசீனம் செய்வது? எவன் அலட்சியம் பண்ணி ஒதுக்கிவிட எண்ணுகின்றானோ அவனை நாடி இந்த மனசு பின்னால் ஓடுகின்றது. விந்தையான மனசு. மனசின் விந்தையை விடுவிப்பது என்பதும் மர்மமான விந்தைதான்.

காலம் குளிரும் கூதலுமாகத் தவழ்ந்து மெல்லப் போய்க் கொண்டி ருக்கின்றது.

வித்தியாலயத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கும் சம்பவங்கள் சில வற்றை இவனால் நம்புவதற்கு இயலவில்லை. கட்டழகு வாலிபர்கள

அவள் காதலுக்காகத் தவங்கிடக்கின்றார்கள். யௌவன புருஷர்கள் அவள் கடைக்கண் பார்வைக்காக ஏங்கிக் கிடக்கின்றார்கள். அவள் ஒருத்தியின் நேசத்தைப் பெறுவதில் அவர்களுக்குள் எத்தனை போட்டி பூசல்கள்! ஆனால் வெளியில் வேறு ஏதேதோ காரணங்கள் சொல்லிக் கொண்டு தமக்குள்ளே மோதிய வண்ணம் இருக்கின்றார்கள். அவர்களை எல்லாம் அவள் ஒதுக்கி வைத்துவிட்டு இவன் உறவுக்காகத் துடிக்கின் றாள். இவன் ஒன்றும் அறியாதவன்போல ஒதுங்கி ஒதுங்கிப் போகின் றான். அவள் இவனை விட்டுவிடுவதாக இல்லை. இவனைத் தேடி வலிந்து வலிந்து வந்து பேசுகிறாள். இவன் கவனத்தைத் தன்பக்கம் ஈர்க்க எண்ணி இவனைச் சுற்றி எப்பொழுதும் சுழன்று கொண்டிருக் கின்றாள்.

அவள் இவனுக்குப் பெரும் தொல்லையாகத் தோன்றுகின்றாள். அவள் ஏன் சும்மா சுற்றுகின்றாள்? உபத்திரங்களை உருவாக்குகின் றாள்? இவனிடத்தில் எதனைக் கண்டு அவள் மயங்குகின்றாள்? இவன் மனசுக்கு எதுவும் வெளிச்சமாகவில்லை. மனசு வெறுமனே சலித்துக் கொள்ளுகிறது.

ஆனால் அவள் ஒரு பெண். அவள் மனம் நோகும்படி நடக்கக் கூடாது. தன்மீது இச்சை கொண்டு நாடிவந்த ஒரு பெண்ணின் ஆசை களை நிறைவேற்றி வைக்காது அவளை ஒதுக்கிவிடுவது ஓர் ஆடவன் செய்யும் பாவமான காரியம் என மனு கூறி இருக்கின்றார். இந்த மனு மிகச் சுவாரசியமான தர்மங்கள் பலவற்றை மக்களுக்கு எடுத்துச் சொன்ன மனிதன். மனு இருக்கட்டும், மனோ காட்டிய மார்க்கத்தை மறந்து ஒதுக்கி வைத்துவிட முடியாது. பிறர் மனசு நோக நடக்கக்கூடாது. இவன் மனசு புண்படக்கூடாது என மனோ பார்த்து நடந்தாள். மனோ வின் அந்த உள்ளத்தை இவன் தவறாகப் புரிந்து கொண்டான், அது போல அவளும் இப்போது தன்னைத் தவறாகக் கருதக்கூடாதன முன்னெச்சரிக்கையோடு இவன் நடந்து கொள்ளுகின்றான்.

அவள் எப்படியும் இவன் மனநிலையை விளங்கிக்கொள்ள வேண் டும். அதன் பிறகு இவனை நாடுவதை விட்டு அவள் விலகிப் போய்விட வேண்டும்.

அவளுக்கு எப்படி இதை உணர்த்துவது? பல தினங்கள் சிந்தித்து சிந்தித்து மனசு குழம்புகிறான். இறுதியில் ஒரு முடிவுக்கு வந்தான். அவளிடம் நாகரிகமாக எடுத்துச் சொல்லிவிடுவோம்.

“மிஸ் தனிமைதான் எனக்கு மிக விருப்பம்”

“எனக்கது முடியாது” பட்டென்று அவள் சொல்கிறாள்.

“இருவரும் இரண்டு துருவம்”

*"நான் உங்களைத் தொந்தரவு செய்கிறேன்"*

*"இல்லை, அப்பிடி இல்லை"*

*"அப்ப. . . . .?"*

*"உங்களோட பழகிற விருப்பத்தோட பலர் இருக்கிறார்கள்"*

*"அது தெரியும்"*

*"பிறகு. . . . . சொல்லுங்கோ!"*

*"நான் அவர்களோடை பழக விரும்பவேணுமே!"*

*"தனிமைதான் எனக்குச் சுகம்"*

*"எனக்கு அதிலே சுகமில்லை"*

இவன் எவ்வளவுதான் எடுத்துச் சொல்லியும் என்ன பயன்! அவள் கேட்பதாக இல்லை. அவள் இவனையே சுற்றிச்சுற்றி வந்து கொண்டிருக் கின்றாள்.

ஆசிரியர்கள் மத்தியில் ஒரே வியப்பு. நடக்கக்கூடாத காரியம் ஒன்று நடந்து கொண்டிருப்பதாக அவர்களுக்குத் தோன்றுகிறது.

மலரை நாடி வண்டு போகும், இங்கு வண்டை நாடியல்லவா பூ ஒன்று போகிறது.

அவர்கள் எல்லோரும் தங்களுக்குள் பேசிக்கொண்டு இருக்கின் றார்கள்.

# 23

இவன் எவ்வளவுதான் எடுத்துச் சொன்னபோதும் அவள் கேட்ப தாக இல்லை. எல்லோரையும் அலட்சியமாக ஒதுக்கி வைத்துவிட்டு இவனை பின்தொடர்ந்து கொண்டு இருக்கின்றாள். பாடசாலை இடை வேளையில் கையில் விவேகானந்தரை வைத்துக்கொண்டு தனித்திருப் பது இவன் வழக்கம். ஆசிரியர்கள் ஒன்றுகூடி சந்தித்துப் பேசிக் கொண்டி ருக்கும் இடத்துக்கு ஒருபோதும் போகமாட்டான். அவர்களும் இவன் இயல்பு உணர்ந்து இவனைக் குழப்பாமல் இஷ்டம்போல் விட்டு விடுவார்கள்.

இப்பொழுது தனிமையில் அமர்ந்திருக்கும் இவனைத் தேடிக் கொண்டு அவள் வந்து விடுகின்றாள். அந்த இடைவேளையில் ஒரு நிமிட

நேரம் தானும் அவள் இவனை விட்டுப் பிரிவதில்லை. இடைவேளைக்கு பிறகு மீண்டும் பாடம் தொடங்குவதற்கு மணி அடித்த பின்னரும் அவள் இவன் அருகிருந்து இலகுவில் அசையமாட்டாள். வகுப்புக்குச் செல்ல வேண்டும் என இவன் அங்கிருந்து எழுந்த பின்புதான் அவள் வேண்டா வெறுப்போடு எழுந்திருக்கின்றாள். அடுத்திருக்கும் வகுப்பறையில் இவன் இருந்தால், அந்தப் பாடம் முடிவதற்கு ஐந்து அல்லது பத்து நிமிடம் முன்னதாக இவனைத் தேடிக்கொண்டு போய் இவனோடு பேசிக் கொண்டு நிற்கின்றாள். ஒரு வகுப்பறையில் இருந்து இன்னொரு வகுப்பறைக்கு மாறிச் செல்லும் வேளையில் இவனை எதிரில் கண்டு கொண்டால் இரண்டு நிமிடம் தரித்து நின்று பேசிக் கொண்டுதான் போகின்றாள்.

வித்தியாலயத்தில் இவனையும் அவளையும் இணைத்துக் கதைகள் பல பரவ ஆரம்பித்தன. அவள் பின்னால் அலைந்து ஏமாந்துபோன ஆசிரியர்கள் தீவிரமாக வதந்திகளைப் பரப்பிக் கொண்டிருக்கின்றார்கள். அதிபருக்கு அவள் விஷயத்தில் வெளியில் சொல்லிக்கொள்ள இயலாத வெப்பிசாரம். அவர் இருவரையும் அவதானித்து வைத்திருப்பதுடன் காரியாலயத்துக்குள் அவர் இருந்தாலும் அவருக்குத் தினமும் தகவல் கள் போய்க் கொண்டிருக்கின்றன. அதிகாரத்தில் இருக்கின்றவர்களுடன் அந்தரங்கமான உறவை வைத்துக்கொண்டு தங்கள் காரியங்களைச் சுளுவாகச் சாதித்துக்கொண்டு போகின்றவர்கள் எங்குதான் இல்லை? அவர்கள் தங்கள் பாதுகாப்புக்காகக் கழுத்தில் ஒரு தாலி கட்டிக்கொண்டு இருக்கின்றார்கள்.

அவர்கள் பற்றி யாரும் வெளியில் பேசிக்கொள்ள முடியாது. அதிகாரத்தில் இருக்கின்றவர், கழுத்தில் தாலி கட்டினவன் அவர்களுக்கு எப்பொழுதும் தகுந்த அரண்.

வித்தியாலயத்தில் அதிபருக்கு அந்தரங்கமானவள் ஓர் ஆசிரியை. அந்த ஆசிரியை இருவரையும் பற்றி மூக்கு முழி வைத்துத் தினமும் தகவல்கள் கொடுத்துக்கொண்டு இருக்கின்றாள்.

அவள் யாரையும் பொருட்படுத்துவதாக இல்லை. எதற்கும் அவள் விசனப்படவில்லை. அவளுக்கு இலக்கு இவன்; இவன் நிழலாக அவள் இவனைப் பின் தொடர்ந்து கொண்டு இருக்கின்றாள்.

வித்தியாலயத்தில் இவனுடன் பழகுவதோடு மாத்திரம் அவள் தனது உறவை வைத்துக்கொள்ளவில்லை. இவன் தங்கி இருக்கும் குடும்பத்தா ருடன் தேடிச் சினேகமானாள். அந்த உறவில், உண்மையில் இவனைத் தேடிக்கொண்டு அந்த வீட்டுக்கு வந்து போகத் தொடங்கி னாள்.

ஒரு சமயம் அவளைத் தேடி கொழும்பிலிருந்து அவள் சகோதரன் அங்கு வந்திருந்தான். இவன் தங்கி இருக்கும் அறைக்கு அவள் அழைத்து வந்து இவனுக்கு அவனை அறிமுகஞ்செய்து வைத்தாள்.

உண்மையில் அவளை இவனால் புரிந்துகொள்ள முடியவில்லை. அவள் ஏன் இப்படி இருக்கின்றாள்? அவளால் வேண்டாத அபவாதங் களுக்கு தான் ஆளாக வேண்டி இருக்கிறது. எல்லாவற்றையும் விட்டு ஒதுங்கி இருப்பதற்கும் இந்த உலகம் விடுவதாக இல்லை. இதற்கு என்ன செய்யலாம்?

நாடி ஓடிவரும் அவளை வராதே என்று எப்படித் தடுக்கலாம்? இவன் எண்ணி எண்ணி மனஞ் சாம்புகின்றான்.

இன்று அவளைப் பார்த்து நடத்தை கெட்டவள் என்று தூற்றி அவள் மீது பழி சுமத்துகின்றார்கள். அவர்கள் மனங்களில் எல்லாம் எவ்வளவு அழுக்கு. உண்மையில் அவள் அவர்களில் ஒருவனை விரும்பக் கூடாதா? அப்படி அவளால் விரும்பப்படுகின்றவன் அவளைப் பற்றி என்ன சொல்வான்? இப்பொழுது செய்து கொண்டிருப்பதுபோல அவளைத் தூற்றிக்கொண்டிருப்பானா? அவளைப் பழித்துப் பழித்துப் பேசுவானா? தங்களுக்கு அவள் ஆதரவு கிட்டவில்லை என்பதால் அவளை இழிவுபடுத்திப் பார்க்கும் அற்ப குணம் அவர்களுக்கு.

அவளால் நேசிக்கப்படும் ஆடவனாக இவன் ஏன் இருக்கக்கூடாது! இவனைச் சுற்றி இவன் பின்னால் எதற்காக அவள் அலைகின்றாள்! இவனைக் கண்டு மலராக மலர்ந்து பனி நீராகக் குளிர்ந்த அவள் ஏன் சிலிர்கின்றாள்?

அவள் தனது எதிர்காலம் பற்றித் திடமான ஒரு முடிவுக்கு வந்திருக்க வேண்டும். அதனால் சிரத்தையுடன் தன் சகோதரனை அழைத்து வந்து இவனுக்கு அறிமுகஞ்செய்து வைத்திருக்க வேண்டும்.

அவளுக்கு. . . . . அவள் நாகரிக நளினங்களுக்குத் தகுந்த ஒருவனாக இருக்க முடியுமா? இவன் அதிகம் உயரமற்ற தடித்த குட்டையான தோற்றம். சப்பை மூக்கு முகம், கீழ்த்தாடை முன்னுயர்ந்து மேற் பல்வரிசையைக் கவ்வி மூடிக் கொள்ளும் வாய். நேர்கோட்டில் நோக்கும்போது மூடிக்கிடப்பதுபோலத் தோன்றும் விழிகள். எதைப் பார்க்க வேண்டுமானாலும் தலையை மேல்நோக்கி மெல்லத் தூக்கி விழிமடல்களைத் திறந்து பார்க்கும் பார்வை, அப்பொழுதும் ஒரு விழிமடல் முழுமையாகத் திறக்காது கொஞ்சம் மூடிச் சற்றுச் சிறுத்து குறைக்கண்ணாகத் தோன்றும் பாங்கு. இந்த உருவம் அவளுக்கு இணையாக எப்படித் தோன்றும்! அதுதான் சொல்லி இருக்கிறார்களே! 'காதலுக்குக் கண்ணில்லை' என்று, அவள் மனசுக்குப் பிடித்துக்கொண்டு விட்டது. அதன்பிறகு, அவள் அன்புக்குரியவனாக இருப்பதற்கு இவன் என்ன தகுதி இல்லாதவனா? இவன்மீது வித்தியாலயத்தில் இப்பொழுது பலருக்குப் பொறாமை. அவர்களுக்குச் சவாலாகவேனும் அவள் சொரியும் அன்பு மழையில் நனைந்து, அவளை ஏற்றுக்கொள்ளத்தான்

வேண்டும். அலட்சியமாக இனிமேல் அவளைத் தூர வைக்க இயலாது. ஒரு பெண்ணின் மென்மையான உணர்வுகளைப் புரிந்து கொள்ளாமல் அவள் உள்ளம் நோக நடக்கக்கூடாது.

இவன் தீர்மானித்து விட்டான்.

இனி என்ன! விவேகானந்தர், காந்தி மகான் ஆகியோர் இவனை விட்டு ஒதுங்கிக்கொண்டார்கள்.

அதன் பிறகு அவள்போல இவனும் அவளைத் தேட ஆரம்பிக் கின்றான். வித்தியாலயத்தில் தானாக அவளைத் தேடிக்கொண்டு இவன் போகின்றான். சந்தர்ப்பம் வாய்த்த போதெல்லாம் தனிமையில் கண்டு அவளோடு உரையாடுகின்றான். வித்தியாலயம் முடிந்த பிறகு ஒருவரை ஒருவர் காத்து நின்று ஒன்றாகச் சேர்ந்து வெளியே செல்கின்றார்கள். மாலை வேளைகளில், விடுமுறை நாட்களில் அவள் தங்கி இருக்கும் அறைக்கு இவன் சென்று அவளோடு சேர்ந்து தேநீர் அருந்தி பொழுது போக்குகின்றான். ஒரு நேரம் இவனைக் காணாது போனால் இவன் தங்கி இருக்கும் அறைக்குத் தேடிக்கொண்டு ஓடோடி வந்துவிடுகின்றாள். அந்தச் சிறிய பட்டணத்தில் இருவரும் ஒன்றாகவே 'சொப்பிங்' போகின் றார்கள். விடுமுறை நாட்களில் பதுளை, பண்டாரவளை நகரங்களுக்குப் பஸ் ஏறிப் போய் வருகின்றார்கள்.

மாலை நேரங்களில் முன்போலத் தனித்து உலாவ இப்பொழுது இவன் போவதில்லை.

மலையகத்து மனோரம்மியமான தேயிலைக் குன்றுகளுக்கூடே வளைந்து வளைந்து செல்லும் வீதிகளில், இருவரும் ஒன்றாக உலா வருகின்றார்கள். மலைகளைப் போர்த்தி நிற்கும் மரகதப் பச்சையைப் பார்த்து மனம் மகிழ்ந்து மணிக்கணக்காகத் தம்மை மறந்து நிற்கின் றார்கள். அந்த மலைகளைத் தழுவிச் செல்லும் முகில்களில் தான் எத்தனை பரவசங்கள். பாய்ந்தோடும் பந்தயக் குதிரைகள், வாயைப் பிளக்கும் இராட்சத முதலைகள், துள்ளிப் பாயும் வெண்முயற் கூட்டங் கள், ஒன்றை ஒன்று இறுகத் தழுவும் கருயானைக் குன்றுகள், கோவிற் சிற்பங்கள்போல நெருக்கமாக இணைந்திருக்கும் ஆண்கள், பெண்கள். அத்தனையும் பார்க்கப் பார்க்க மனங்கொள்ளாப் பரவசங்கள். பீறிவரும் ஊற்று நீரில் கால்களை நனைப்பதும், மலர்களைக் கொய்து ஒருவர்க்கு மற்றவர் முகர்ந்து கொடுப்பதும், இச்சை மொழி பேசி உள்ளம் நெகிழ்ந்து மகிழ்வதும், இவன் பிழியும் கன்னல் மொழி கேட்டு அவள் கன்னம் சிவப்பதுமாக காலம் மெல்லக் கரைந்துகொண்டு இருக்கின்றது.

ஒரு நாளில் உறங்கும் ஒருவேளை தவிர மற்றப் பொழுதெல்லாம் இருவரும் ஒன்றாகவே இணைந்திருக்கின்றார்கள்.

இவனுக்கு வாழ்வு இனிக்கிறது. அது தேனாக என்றில்லை, அதற்கு மேலாக இனிக்கிறது, இப்படி ஒரு வாழ்வு தனக்கு வந்து சேருமென்று இவன் கற்பனை பண்ணியதுமில்லை. தனது வாழ்வில் வசந்தத்தின் மென்மையான இனிய வருடல்களை இவன் கனவுகூடக் கண்டதில்லை.

தன்னை, தனது இருப்பை இப்பொழுதுதான் இவனுக்கு விளங்கிக் கொள்ள முடிகின்றது.

வித்தியாலயத்தில், வெளியில் இப்பொழுது இவர்கள் இருவர் பற்றியுமே பேச்சு,

“ஆட்டக்காரி அந்தச் சாமியை வளைச்சுப் பிடிச்சுப்போட்டாள்”

“ஒரு பெண் நினைச்சால் எதுதான் செய்து முடிக்க இயலாது”

“தன்னை ஒதுக்கின சாமியை தன்ரை காலடிக்குக் கொண்டு வந்து விட்டாள்”

“என்ன சாமி! உருத்திராட்சப் பூனை”

“இப்ப உருத்திராட்சத்தைக் கழற்றி வைத்துவிட்டு, கண்ணை மூடிக் கொண்டு பால் குடிக்குது”

“பால் குடிச்சாலென்ன! எதைக் குடிச்சாலென்ன!”

“இதுகளாலே ஸ்கூலுக்கும் கூடாத பேர்”

“இதுக்கொரு முடிவு கட்டவேணும்”

“அதிபரின் கவனத்துக்குக் கொண்டு வருவோம்”

இப்படி எதனையாவது ஆசிரியர்கள் தினமும் தமக்குள்ளே பேசிக் கொண்டு இருக்கின்றார்கள்.

# 24

இவன் திடீரென மலையகத்திலிருந்து ஒரு தினம் கொழும்புக்குப் புறப்பட்டான். அவளிடம் முன்கூட்டிச் சொல்லிக் கொள்ளாமல் இருந் தாற்போல இவன் புறப்படுவது அவளுக்கு அதிசயமாக இருக்கிறது. இவன் அப்படி நடப்பதில்லை. முன் கூட்டியே அவளுக்கு எல்லாம் சொல்லி வைப்பான். ஆனால் இந்தத் தகவலை அப்படி ஏன் சொல்ல வில்லை? அவள் மீண்டும் மீண்டும் தனக்குள் கேட்டுக் கொண்டாள். வித்தியாலயத்திலும் எல்லோருக்கும் வியப்பாகத்தான் இருக்கின்றது.

பாடசாலை விடுமுறை காலத்திலும் சொந்த ஊருக்குப் போகாது இங்கு தங்கியிருக்கிறவன். தனக்குரிய லீவைக்கூட எடுக்காது மாணவர்களுக்கு கல்வி கற்பிக்கின்றவன். கொழும்புக்கு எதற்காக இப்பொழுது போகின் றான்? இவனிடம் கேட்டவர்களுக்குத் தெளிவாக எதனையும் இவன் சொல்லி வைக்கவில்லை. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான மழுப்பல் காரணம் சொன்னான். அவளுக்கு மாத்திரம் கல்வித் திணைக் களத்தில் முக்கியமான காரியம் ஒன்று பார்க்க வேண்டி இருக்கிறது என்று பட்டுப்படாமல் கூறினான். அவள் அது கேட்டு நம்பவில்லை. ஆனால் தான் நம்பவில்லை என்பதை அவள் வாய் திறந்து வெளியில் சொல்லிக்கொள்ளவுமில்லை.

ஆசிரியர் மனசுகளில் கற்பனைகள் வேறுவிதமாக வளர்ந்தன. இவன் புறப்பட்டதைத் தொடர்ந்து மறுநாள் அவளும் கொழும்பு போய்ச் சேரப் போகின்றாள்!

அவர்கள் இருவரும் ஹோட்டல் ஒன்றில் ஓர் அறையில் சில தினங் கள் தங்கி இருக்கப் போகின்றார்கள். கோல்பேஸில் சோடியாகச் சுற்றித் திரிந்து காற்று வாங்குவார்கள். சினிமாவுக்கு இணைந்து போவார்கள். எல்லாம் முடித்துக்கொண்டு ஒருவர் பின் ஒருவராகத் திரும்பி இங்கு வந்து சேருவார்கள்.

ஆனால் அவர்கள் எதிர்பார்த்ததுபோல அப்படி ஒன்றும் நடந்துவிட வில்லை, அவள் கொழும்புக்குச் செல்லாமல் அங்கேயே தங்கி இருந்தாள்.

இவன் மிக எச்சரிக்கையாகத் திட்டமிட்டு நடந்து கொண்டான். தன்னோடு சேர்ந்து அவள் கொழும்பு புறப்பட்டு வந்துவிடக்கூடாது என்று இவன் விழிப்பாக இருந்தான்.

இவன் கொழும்பு சென்று, பரமானந்த மாவத்தையில் அவள் வீடு தேடி அலைந்தான். இறுதியில் ஒருவாறாக அவள் வீட்டை அடையாளம் கண்டுகொள்ளுகின்றான். அந்த வீட்டு வாசல்வரை வந்த பின்னர், இவனுக்கு இன்னொரு பிரச்சினை எழுகிறது. முன்பின் அறிமுகம் இல்லாத அந்த வீட்டுக்குள் எப்படி நுழைகிறது? அந்த வீட்டில் உள்ளவர் களுக்குப் புதியவனான தன்னை யாரென்று அறிமுகஞ் செய்வது? இவன் தடுமாறிய வண்ணம் சில கணங்கள் தயங்கி நிற்கின்றான். பின்பு வீட்டு வாசல்வரை வந்து சேரும்போது இல்லாத தடுமாற்றம் இனி எதற்கு? என்ன நடந்தாலும் அது நடக்கட்டும்! இவன் மனசில் உறுதி யான ஒரு தீர்மானத்துக்கு வருகின்றான்.

வீட்டுக் கதவில் நாகரிகமாக மெல்ல ஒரு தடவை தட்டுகின்றான்.

என்ன அதிசயம்! இவன் வரவை எதிர்பார்த்து உள்ளே காத்திருந் தவர்கள்போல மறுகணம் அந்தக் கதவு திறக்கின்றது. அந்தக் கதவைத்

திறந்தவனைக் கண்டு இவனுக்குத் தன் கண்களை நம்புவதற்கு இயல வில்லை. வாழ்க்கை என்பது நம்புவதற்கு இயலாத அதிசயங்களும் புதிரும் நிறைந்ததுதான்,

இவனுக்கு அப்படி என்ன அதிஷ்டம்!

“ஹலோ. . . . .! வெல்க்கம் வெல்க்கம்!” எனக் கைகொடுத்து ஆர்ப்பாட்டமாக இவனை வரவேற்கின்றான் அவள் சகோதரன். இவன் ‘ஹலோ’ சொல்லி அவனோடு கைகுலுக்கிக் கொண்டு உள்ளே வந்து சொகுசு கதிரை ஒன்றில் மெல்ல அமருகின்றான். ‘அவள்போல என்ன சுகமான குஷன்போட்ட கதிரை!’ இவன் மனசு சொல்லுகிறது. அவள் அண்ணா டாடி, மம்மிக்கு உள்ளே பார்த்துத் தகவல் சொல்லுகின்றான். அங்கு இருவரும் ஒன்றாக வருகின்றார்கள். அவர்கள் இருவருக்கும் இவனை அறிமுகஞ் செய்து வைக்கின்றான். அவர்கள் முகம் குளிர்ந்து மலர்கிறது. அம்மாவுக்குப் புது உற்சாகம் வந்து பிறந்துவிட்டதாக இவனுக்குத் தோன்றுகின்றது. வீட்டுக்கு வந்திருக்கின்றவனை வரவேற்று ஒரு சில வார்த்தைகள் நாகரிகத்துக்காக இவனுடன் பேசிக்கொண்டு அவசரமாக எழுந்து பரபரப்புடன் உள்ளே செல்கின்றாள். எத்தகைய நாகரிகமான எந்த வீடாக இருந்தால்தான் என்ன? குசினி எப்பொழுதும் பெண்களுக்குத்தான்! அம்மா அவசரமாக எழுந்து போனதற்கான காரணம் இதுதான் என்று இவன் விளங்கிக்கொள்ளுகின்றான். சற்று நேரத்தின்பின் அவள் தேநீர்க் கோப்பையைக் கையில் எடுத்து வந்து பரிவோடு இவனுக்கு வழங்குகின்றாள்.

தந்தை, அண்ணா இருவரும் இவனோடு சாவகாசமாகப் பேசுகின் றார்கள். ஜெயசீலியின் சுகம் கேட்கின்றார்கள். வித்தியாலய செய்திகளை விசாரிக்கின்றார்கள். கதையோடு கதையாக இவன் பற்றிய தகவல் களையும் மெல்லக் கேட்டறிகிறார்கள்.

இவன் அவர்களுடன் இருந்து உரையாடிக்கொண்டு அந்த வீட்டை மெல்ல நோட்டமிடுகின்றான். சிறிய வீடு, நான்கு சின்ன அறைகள், சின்னதாக ஒரு வரவேற்பறை. அடுக்களை, பாத்ரூம் என்று சிறிய ஒரு நிலப்பரப்பு முழுவதும் வீடாக நிறைந்து கிடக்கிறது. அது கொழும்பு நகரத்து நிலம், முற்றமில்லாத வீட்டு நிலம், அந்த வீட்டுக் கதவுகள், யன்னல்களில் அழகிய பூக்கள் பதித்த றேந்தைத் துணிகள், எங்கு நோக்கினாலும் நறுக்காகப் பார்வையில் படும் சுத்தம், நேர்த்தியான சிறிய ஒரு ஷோக்கேஸ், அதன்மீது சிலுவையில் அறையப் பெற்ற யேசுவின் திருச்சொரூபம், அமைதியான அடக்கமான ஒரு கிறிஸ்தவக் குடும்பம் என்பது அந்த வீட்டின் ஒவ்வொரு மூலையும் இவனுக்குத் துலக்குகிறது. அந்த அடக்கம், சாந்தம் இவன் மனசுக்கு நிரம்பவும் பிடித்துப் போய்விடுகிறது.

ஆனால் அவள் அப்படி அல்ல, சற்று ஆடம்பரமாக இருக்கின்றாள்.

அவள் தலைநகரில் அல்லவா பிறந்தவள்? அவள் இன்றைய காலத்தின் பிரதிநிதி.

அவள் தந்தை இவனோடு பேசிக்கொண்டு இருக்கின்றார். பொதுவாகப் பல விஷயங்களும் பேசி பின்னர் கதையோடு கதையாக இவனுக்கிருக்கும் மத ஈடுபாடு பற்றி மெல்ல அவர் கதை திரும்புகின்றது. கிறிஸ்தவர்கள் தங்கள் மதம்மீது கொண்டுள்ள இறுக்கம் இவன் அறியாததல்ல. அவர்கள் கணிப்பில் இவன் அஞ்ஞானி. இவன் சொல்வதாக இருந்தால் அவர்கள் மிலேச்சர்கள். இவன் அஞ்ஞானிகள், மிலேச்சர்கள் கண்டு தன்னுள் நகைத்துக் கொள்ளும் சர்வமத சமரசவாதி. மதங்கள் பிரிவினைகளுக்கல்ல என்று கருதுகின்றவன். சுவாமி விவேகானந்தர்மீது பற்றுக் கொண்டவன். இவனுக்குத் தனது மதநெறியில் நெகிழ்ச்சி உண்டாவென அறிந்து கொள்வது அவர் உள் நோக்கமாக இருக்க வேண்டும். அவர் மனசுக்கு உவந்த பதில் சொல்ல வேண்டுமென எண்ணி "நான் நல்ல இறைபக்தி உள்ளவன். ஆனால் அது இறுக்கமான மதபக்தி அல்ல" என நயமாக எடுத்துச் சொல்லுகின்றான். அவர் அது கேட்டு மனசு நிறைந்து முகம் மலர்கின்றார். தொடர்ந்து யாழ்ப்பாணம் நோக்கி கதையை அவர் திசை திருப்புகின்றார்;

"தம்பி, யாழ்ப்பாணத்திலே எந்தப் பக்கம்?"

"வடமராட்சி"

"வடமராட்சியிலே. . . . .?"

"தாமோதர உடையாற்றை பூட்டன்"

"அப்ப தம்பி பெரிய பரம்பரைதான்"

"ஓமோம்"

தன் குலங்கோத்திரத்தை நாகரிகமாக அவருக்குக் காட்டிவிட்டதான பெருமை இவனுக்கு.

அவர் அந்த அளவில் விட்டு விடுவதாக இல்லை. தொடர்ந்து சொல்கிறார்;

"தம்பி நானும் யாழ்ப்பாணந்தான்"

"அப்படியா?" இவன் அதிசயமாகக் கேட்கின்றான்.

"வட்டுக்கோட்டை என்ரை சொந்த இடம். ஆனால் என்ரை பிள்ளைகளுக்கு யாழ்ப்பாணம் தெரியாது"

"நீங்கள் இப்ப கொழும்புவாசி ஆகிவிட்டீங்கள்"

"அது உண்மைதான் தம்பி. யாழ்ப்பாணத்திலே சீதனக் கெடுபிடிகள் அதிகமாமே!"

"உண்மைதான். ஆனால் நான் ஒரு தனிக்கட்டை, சீதனம் பற்றி எனக்கு எந்த அக்கறையுமில்லை. அதனாலே அது பற்றி விசாரிப்பது மில்லை."

"கௌரவத்துக்காகவும் சீதனம் வாங்கிறார்கள்"

"இதில் என்ன கௌரவம்! எனக்கது பிடிக்காது"

"நீங்கள் வித்தியாசமான ஆள்தான்"

இவன் நற்சான்று ஒன்றைச் சுலபமாகத் தட்டிக்கொண்டு விடுகின் றான்.

"இருங்கோ பேபிக்கொரு கடிதம் எழுதித் தரவேணும்" எனச் சொல்லிக்கொண்டு அவர் எழுந்து உள்ளே போகின்றார்.

அவள் அண்ணன் அப்போது வந்து இவன் எதிரில் அமருகின்றான்.

"மிஸ்ரர் முத்துலிங்கம், யாழ்ப்பாணம் எப்பிடி இருக்கு?"

"எதைக் கேட்கிறியள்!"

"நீங்கள் என்ன! அங்கை நடக்கிறதுகளைப் பார்த்தால், நாங்கள் கொழும்பிலே சுகமாக வாழேலாது போல இருக்கு.

அவன் சொல்வதைக் கேட்ட வண்ணம், மௌனமாக இவன் அவனைப் பார்த்துக் கொண்டு இருக்கின்றான்.

"நானுந் தமிலன்தான், ஆனா யாழ்ப்பாணம் கறுப்பா சிவப்பா எண்டு கூட எனக்குத் தெரியாது. கொழும்பிலிருந்து என்னைத் துரத்திவிட்டால். . . . ." அச்சம் நிறைந்த அவன் பேச்சில் திடீரெனச் சினம் தெறித்து விழுகிறது.

அவள் தந்தை கடிதத்தை உறையில் இட்டு கையில் எடுத்துக் கொண்டு வர, அவர் பின்னால் வந்த அவள் தாய், இவன் அங்கிருந்து புறப்படுவதற்குத் தயாராவது கண்டு துடித்துப் போனாள்.

"அதென்ன! இவளவு தூரம் வந்திட்டு உடனே கிளம்புறீங்க! பேபி அறிஞ்சா என்ன சொல்லும்! லஞ்சை முடிச்சுக்கொண்டு அப்புறம் போகலாம்."

வீட்டில் அவள் 'பேபி' என்பது இப்போதுதான் இவன் அறிந்து கொள்ளுகின்றான். 'ஓ பேபி. . . . . சுவீற்றி பேபி. . . . ' மனசு நினைந்து சுவைக்கிறது. நினைவு தரும் சுகம் இருக்கிறதே அது மிக அலாதியான துதான். இவன் அவள்மீது மனசை அலையவிட்டு, அவள் அன்னையின் அழைப்பைச் சில கணம் மறந்து போனான். பின்பு தன்னைச் சுதாகரித் துக்கொண்டு நாகரிகத்துக்காகச் சொல்லுகின்றான்.

"இன்னொரு நாளைக்கு ஆறுதலாக வாறன்"

"இப்ப லஞ் ரைம்" அம்மா திரும்பச் சொல்லுகின்றாள்.

"லஞ் எடுக்கத்தானே வேணும்" அப்பா வற்புறுத்துகின்றார்.

"என்ன அவசரம்!" அண்ணா கேட்கின்றான்.

அவர்கள் மூவரும் ஒருமனதாக இவனைத் தடுக்கின்றார்கள்.

"நீங்கள் விடுவதாக இல்லை"

இவன் சொல்லிக்கொண்டு அவர்களோடு சாப்பாட்டு மேசைக்குப் போகின்றான்.

அப்பா, அண்ணா, இவன் மூவருக்கும் அம்மா உணவு பரிமாறு கின்றாள். புதிய விருந்தினர் ஒருவர் தங்கள் வீட்டுக்கு வந்திருக்கின்றார் என்ற பதகளிப்பு எதுவுமின்றி பக்குவமாக அவள் பரிமாறிக் கொண்டிருக் கின்றாள்.

நீண்ட காலத்துக்குப் பிறகு இவனுக்கு இப்படி ஒரு வீட்டுச் சாப்பாடு உண்ணக் கிடைத்திருக்கிறது. இவன் மனம் வைத்து உண்டு மகிழ்ந்த தில், இவனுக்கு உள்ளமும் நிறைந்து போகின்றது.

மீண்டும் சற்று நேரம் அமர்ந்து அவர்களோடு பேசிக்கொண்டு இருக்கின்றான்!

அப்பொழுது பார்த்து மழைத்தூறல் விழ ஆரம்பிக்கிறது.

மழை தூறலாக விழும்போது சிறுவயதில் தான் பாடிய ஒரு பாடல் இவன் நினைவுக்கு வருகிறது. அந்தப் பாடலை இடைவிடாது தொடர்ந்து பாடிக் கொண்டிருந்தால் தூறல் மழை பெருமழையாகக் கொட்டும் என்பது நம்பிக்கை. இவன் அவர்களோடு பேசிக்கொண்டு மனசில் அந்தப் பாடலைப் பாடுகின்றான்.

"மழையே மழையே மெத்தப் பெய்
வண்ணான் சாடி நிறையப் பெய்"

மந்திர உச்சாடனம்போல திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டு இருக்கின்றான்.

வானம் கவிழ்ந்து பூமியில் கடலாக இப்போது பெருக வேண்டும்.

அப்படி இவனுக்கொரு ஆசை. நெஞ்சில் கனக்கும் நினைப்பு.

ஆனால் அங்கிருந்து உடனே புறப்பட்டுச் செல்ல விரும்புகின்றவன் போல, "அப்ப, புறப்படுகிறன்" எனத் தயாராகின்றான்.

“மழை. . . . .கொஞ்சம் பாத்துப் போகலாம்” அவர்கள் தடுக்கின் றார்கள்.

“மழையே மழையே மெத்தப்பெய்
வண்ணான் சாடி நிறையப் பெய்”

மனசு ஓதிக்கொண்டு இருக்கிறது.

“அவசர வேலைகள் கொஞ்சம் இருக்கு. . . .” இவன் பொய்யாகப் பரபரக்கின்றான்.

மழைக்கும் அந்தப் பரபரப்பு. தூறல் கனத்துத் தடித்து வானம் பூமி நோக்கி வழிய ஆரம்பிக்கின்றது.

இவன் மனசு குளிர்ந்து குதூகலித்து ஆனந்தத்தில் நனைந்து சிலிர்க்கிறது.

“ச்ச். . . கொஞ்சம் ஓய்ஞ்சால் நான் போய்விடுவன்” இவன் சலித்துக் கொள்ளுகின்றான்.

வானம் பொழிந்து களைத்துப் போனதாக இல்லை. இவன் மனசு அறிந்து முக்கி முக்கி ஊற்றுகிறது.

“ஒரு குடை தந்தால் போதும்!”

“குடை பிடிச்சு நடக்கிற மழையல்ல இது. முழுக்க நனைச்சுப் போடும்” தாய் மறுத்துத் தடுக்கின்றாள்.

மாலைக் காலம் நெருங்கிக்கொண்டு இருக்கின்றது. மழை ஓய்வ தாக இல்லை.

“இனி எங்கே போறது! மழை நேரம் பயணம் பண்ணக்கூடாது. காலையிலே போகலாம்”

தாய் தீர்மானமாகச் சொல்லுகின்றாள். தகப்பனும் அண்ணாவும் அவள் கருத்தையே ஆதரிக்கின்றார்கள்.

அங்கு தங்கி நிற்பதில் கொஞ்சமும் விருப்பம் இல்லாதவன்போல மெல்ல நெளிந்தவண்ணம், “வீண் சிரமம்” என்கின்றான்.

“என்ன சிரமம்! எங்களுக்கு ஒரு சிரமமும் இல்லை”

இப்பொழுது யாரை அல்ல எதனை நன்றியுடன் நினைத்துக் கொள்ளலாம்! அந்த மழையா? அவள் தாயா? அந்தப் பாடலா? இவன் மனசு இவனைக் கேட்கிறது.

இரவு நீண்ட நேரமாக உறக்கம் நெருங்கி வந்து இவனை அணைத் துக் கொள்ளத் தயங்கி விலகி நிற்கின்றது. என்ன சொகுசான மெத்தை!

அந்த மெத்தையில் கிடக்கும் இவனை உறக்கம் வந்து எப்படித் தொடும்? தொட வேண்டிய அவள் இப்பொழுது அருகில் இல்லை. இது சாதாரண வீடல்ல, மாளிகை. இந்த மாளிகையின் இளவரசி அவள். அந்த இளவரசிக்கு மாலை சூடப்போகும் மன்னவன் இவன்.

இவன் இங்கு வந்தது முதல் நடந்தேறிய சம்பவங்கள் அனைத்தை யும் மனசு ஒவ்வொன்றாக அசைபோட்டுப் பார்க்கின்றது. அவள் தந்தை யின் வினாக்கள். அந்த வினாக்களுக்குள் பொதிந்து கிடக்கும் அந்தரங் கங்களை இவன் மனசு மெல்ல அவிழ்த்துப் பார்க்கின்றது. சாதி தங்க ளுக்குத் தடையாகக் குறுக்கே வந்து நிற்குமா? சமயம் திசை திருப்பி விட்டுவிடுமா? சீதனம் அதல பாதாளத்தில் தள்ளி வீழ்த்துமா? அவர் அறிந்துகொள்ள அவாவிய தேடல்கள் இவைகள் தான். இவைகள் எல்லாம் தடைக்கற்களல்ல என்பது இதுவரை அவருக்கு வெளிச்சமாகி இருக்கும்.

அவள் இவனுக்குத்தான் உரியவள் என இவன் மனசு இவனுக்குச் சொல்லிக்கொண்டு இருக்கின்றது.

இவன் அவளுக்குத்தான் உரியவன் என அவர்கள் உள்ளம் அவர்க ளுக்கு உரைக்காமலா இருக்கும்?

தேவபாலன் பிறந்ததுபோல மறுநாட்காலை இவனுக்கு விடிந்தது.

காலை ஆகாரம் உண்ணாமல் அந்த இல்லத்தில் இருந்து இவன் இனிப் புறப்பட்டுப் போவதற்கு இயலுமா? உணவை முடித்துக்கொண்டு, அவர்கள் ஒவ்வொருவருக்கும் சொல்லி விடைபெற்று மகிழ்ச்சியுடன் புறப்படுகின்றான்.

அப்பொழுது தன் சொந்த வீட்டிலிருந்து புறப்பட்டு வெளியே செல்வ தான ஓர் உணர்வு இவன் நெஞ்சை நிறைத்துக் கொண்டிருக்கின்றது.

# 25

இவன் கொழும்பில் இருந்து மலையகம் திரும்பி வந்து கொண்டி ருக்கும்போது தன்னை ஒரு தேவதூதனாகக் கருதிக் கற்பனையில் மிதந்திருந்தான். அவள் தந்தை இவன் கையில் கொடுத்து அனுப்பி வைத்துள்ள அந்தக் கடிதம் தேவதூதன் சுமந்து வரும் நற்செய்தியாக இவனுக்குத் தோன்றுகின்றது. அவள் தந்தை இவனைச் சந்தித்து இவனோடு பேசி, உறவாடிய பிறகு தனது பூரண சம்மதத்தை மகளுக் குத் தெரிவித்திருப்பார். அந்த மடலைத் தானே கொண்டு வருவதில் இவனுக்கு அளவில்லாத ஆனந்தம்.

அவள் இவனோடு மிக நெருக்கமாகப் பழகி வந்த போதிலும், இவனுக்குள் ஒரு தயக்கம் இதுவரை இருக்கத்தான் செய்தது. இவன் சூடுகண்ட பூனை. மீண்டும் சூடுபட்டுக் கொள்ளமுடியாது என்ற ஒரு அச்சம் இவனை எச்சரித்துக் கொண்டு இருந்தது. இப்பொழுது அந்த அச்சம் எல்லாம் அகன்று அவள் தனக்குரியவள் என்னும் உறுதியான எண்ணம் உள்ளத்தில் நிலைக்கிறது.

வித்தியாலயத்தில் இப்பொழுது மிகநெருக்கமாக அவளுடன் இவன் பழக ஆரம்பிக்கின்றான். அவள் உறவு வெகு இறுக்கமான பிறகு, நடை முறைகளும் அங்கு மாறிப்போகின்றன. முன்னரெல்லாம் சக ஆசிரியர் களிடம் இருந்து விலகி விலகிப்போய் தனித்து நிற்கும் இவன் இப்பொழுது அவர்களைத் தேடித் தேடிப் போய்க்கொண்டிருக்கின்றான். சந்தர்ப்பம் வாய்த்த போதில் எல்லாம் வேடிக்கை பேசிக் குதித்துக் குதித்து மகிழ்கின்றான்.

இவனின் இந்த மாற்றங்கள் ஆசிரியர்கள் நெஞ்சங்களில் எல்லாம் எரிச்சல் மூட்டுகின்றன.

இவன் தங்களை வெற்றி கண்டுவிட்டதாகக் கருதுகின்றார்கள். அத னால் ஒதுங்கி வாழ்ந்தவன் தங்களை இப்போது கேலி பண்ணு வதற் காக நெருங்கி வருகின்றான். எல்லோரையும் அவமதிப்பதுதான் இவன் மனசின் அந்தரங்க நோக்கம். இவனை, அவளைச் சும்மா விடக்கூடாது. நல்ல பாடம் படிப்பிக்க வேண்டும். அவர்கள் எண்ணி எண்ணி மனம் பொருமிக்கொண்டு இருக்கின்றார்கள்.

இவன் அவர்களைக் கண்டும் காணாதவன்போல் நடந்து கொள்ளு கின்றான். அவர்கள் மனக்குரோதம் அறிந்தும் இவன் மனசு குழம்ப வில்லை. அவர்களை முற்றாக விளங்கிக்கொண்டு, ஒன்றும் அறியாத வன்போல நடந்துகொண்டு இருக்கின்றான்.

அவர்கள் எல்லோருக்கும் ஒரே வியப்பு. அவளின் நவநாகரிகப் போக்குகளுக்கு இப்படி அவள் நடப்பது ஒன்றும் புதுமை இல்லை. ஆனால் இவன்! துறவிபோல ஒதுங்கி வாழ்ந்த இவனா இப்படி மாறிப் போனான்! வித்தியாலயத்திலும் வெளியிலும் யாராலும் நம்ப முடிய வில்லை. ஆனால் நம்புவதனால் பொய்யானது ஒருபோதும் உண்மை யாகிவிடப் போவதில்லை. நம்ப மறுப்பதனால் உண்மையானது எந்தச் சந்தர்ப்பத்திலும் பொய்யாகிவிடவும் மாட்டாது.

வித்தியாலயத்தில், வெளியில் எங்கும் இவர்கள் பற்றியே பேச்சாக இருக்கின்றது.

அதிபர் ஒரு தினம் இவனைத் தனது காரியாலயத்துக்கு அழைக் கின்றார். இவனோடு இது பற்றி எப்படிப் பேசுவது என்பதில் அவருக்கும்

மனசில் சங்கடம் இல்லாமல் இல்லை. இவன் ஏடாகூடமாக எதனை யாவது கேட்டுவிட்டால் என்றொரு தயக்கம். நேருக்குநேர் தனது முகத்தில் இவன் கரி பூசிவிடுவானோ என்றொரு அச்சம். அதிபர் என்னும் அதிகார முகமூடி எல்லாவற்றையும் ஒளித்து மறைத்துவிடும் என்னும் நம்பிக்கை அவருக்கு. அந்த நம்பிக்கையுடன் அவர்முன் அமர்ந்திருக்கும் இவனை பார்த்துச் சொல்லுகின்றார்.

"மிஸ்ரர் முத்துலிங்கம்! நீங்கள் ஒரு நல்ல ஆசிரியர். உங்களுக்கு நல்ல பேர் இருந்தது"

இவன் மெல்லச் சிரித்தவண்ணம் அவர் பேச்சுக்கேட்டு தலை அசைத்துக்கொண்டு இருக்கின்றான்.

"ஆனால் இப்ப. . . . ."

"நான் ஒழுங்காகப் படிப்பிக்கவில்லையா?" இவன் சட்டென்று இடைமறிக்கின்றான்.

"இல்லை. . . . .இல்லை. . . . . அப்படி நான் சொல்லவில்லை"

"அப்போ. . . . .?"

"உங்களுடைய கற்பித்தலிலே ஒரு குறையுமில்லை"

"எதிலே குறையிருக்கு?"

"உங்களைப் பற்றி. . . . ."

"என்னைப் பற்றி?"

"குறை கூறுகிறார்கள்"

"என்னவாம்?"

"அந்த ரீச்சரோடை கொஞ்சம் அதிகமாகப் பழகிறியள்"

"அப்படியா. . . . .?" கேட்டுக்கொண்டு அவர் முகத்தைக் குறிப்பாக நோக்கி உரக்கச் சிரிக்கின்றான்.

அவர் தலை சற்றுத் தாழ்ந்து, பின்னர் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு அதிகாரியாக நிமிருகின்றார்.

"நீங்கள் கொஞ்சம் விலகி நடக்கவேண்டும் அல்லது. . . . ."

"அல்லது. . . . .?"

"இங்கே இருந்து மாறிப்போக வேண்டிவரும்"

"நான் மாத்திரமா?" கேட்டுக்கொண்டு பலமாக இவன் சிரிக்கின் றான்.

அவர் சொன்னவைகள் எவையும் இவன் தன் நெஞ்சுக்கு எடுத்துக் கொள்ளவில்லை. இவன் மனசில் அவைகள் ஒன்றுமே பதியவில்லை. மிக விரைவில் தம்பதிகளாகப் போகின்றவர்கள் பற்றி இப்படி ஒரு அபவாதம் வெளிவருவதால் யாருக்கு, என்ன இலாபம்! இதற்காக யாருக்கிவன் அஞ்சவேண்டும்? பொறாமைக்காரர்கள். எத்தனை நாட் களுக்கு மனசு பொறுக்காது பொருமப் போகின்றார்கள்! இவன் நினைந்து உள்ளுக்குள் நகைத்துக் கொள்ளுகின்றான்.

இறுதியாக இவனிடம் ஒளிவு மறைவின்றி நேரடியாக அதிபர் கேட்டுவிடுகின்றார்.

"நீங்கள் மரி பண்ணப் போறியளா?"

"யெஸ்" என்று சொல்லவே வாய் வந்தது. மனசு அப்படித்தான் சொல்லுகிறது. இன்னும் சில தினங்கள் தாமதித்து அதிபர் கேட்டிருக் கலாம். அப்பொழுது உறுதியான பதில் சொல்ல முடிந்திருக்கும். முடிவு செய்வதற்கு இனி என்ன இருக்கிறது! எல்லாம் முடிந்த முடிவுதான். யோகர்சுவாமி சொன்னதுபோல, "எல்லாம் எப்போதோ முடிந்த காரியந் தான்." ஆனால் ஒரு வார்த்தை வாய் திறந்து சொல்லிக் கேட்காமல் எப்படித் தீர்மானமாக அதைச் சொல்வது இவன் மனசில் நினைத்துக் கொண்டு கதிரையை விட்டு எழுகின்றான்.

"நல்லது விரைவிலே நடக்கட்டும். இல்லையென்றால். . . ." அவர் ஆசீர்வதிக்கின்றாரோ அல்லது எச்சரிக்கின்றாரோ என விளங்காத வண்ணம் சொல்லிக் கொண்டிருக்க, இவன் அறையைவிட்டு வெளியே வந்துவிடுகின்றான்.

அதிபர் அவளை அழைத்து அவளோடும் தனிமையில் பேசி இருக்கவேண்டும். வெளியில் வெகு இறுக்கமான ஒருவராகத் தன்னைக் காட்டிக்கொள்ளும் அவர், அவளோடு நெளிந்து குழைந்து பேசி இருப் பார் என்பது இவன் அறியாததல்ல. தான் எல்லாம் அறிந்த ஒருவராகத் தனக்குள் எண்ணிக்கொண்டு பெண்களுக்கு ஆண் ஒருவன் சொல்லக் கூடாத விஷயங்களில் எல்லாம் ஆலோசனை கூறி அக மகிழ்கின்ற பிரகிருதி அவர்.

அவள் நேரே தன்னிடம் வந்து அது பற்றிச் சொல்லுவாள் என்று இவன் எதிர்பார்த்தான். ஆனால் இவன் எதிர்பார்த்ததுபோல அதுபற்றி இவனிடம் அவள் எதுவும் மூச்சுவிடவில்லை. அப்படி அவர் கூப்பிட்டுச் சொன்னதாக அவள் காட்டிக்கொள்ளவில்லை. இவன் வலிந்து கொண்டு அவளிடம் போய் கேட்பது நாகரிகமில்லை என எண்ணி மௌனமாக இருந்துவிட்டான்.

விடுமுறைக்கு வீடு சென்றவள் மீண்டும் வித்தியாலயம் ஆரம்பிப் பதற்கு முதல்நாள் அங்குவந்து சேருவாள் என்று இவன் ஆவலோடு

எதிர்பார்க்கின்றான். ஆனால் அவள் அன்று வந்து சேரவில்லை. மறு நாள்...... மறுநாள்...... ஒருவார காலம் நத்தையாக நகர்ந்து போய்விட்டது.

தவணை விடுமுறை எப்படிக் கழிந்து போகப் போகின்றது என்று முதலில் இவன் ஏங்கிக் கொண்டிருந்தான். அந்த மூன்று வார காலத்தில் அவள் பிரிவு தாங்காமல் இவன் தூண்டில் புழுவாகத் துடித்துப் போனான். அந்த நாட்களில் ஒரு தடவை கொழும்பு சென்று அவளைக் கண்டு வந்தால் என்ன என்று எண்ணினான். ஆனால் அவர்கள் அழைக் காமல் எப்படி அந்த வீட்டுக்கு வலிந்துகொண்டு போவது! அவளைத் தேடிக்கொண்டு வந்திருப்பதாக அல்லவா அவர்கள் கருதுவார்கள்! அதனால் யாருக்கு மதிப்புக் குறைவு? இவனுக்குத்தானே!

அவளும் இவன்போல வேதனைப்பட்டுக் கொண்டிருந்திருப்பாள். பெற்றவர்களுடன் கூட வாழ்ந்தாலும் 'பேபி' பேபிதான். இவன் இல்லாது கொய்தெடுத்த தேயிலைக் கொழுந்தாக பேபி வாடிப்போய் இருப்பாள்.

ஆனால் அவளைத் தேடிக்கொண்டு அவள் வீடுவரை எப்படிப் போகலாம்?

மலையகக் குளிருக்கும் கொடுகாத பல்லை இறுகக் கடித்துக் கொண்டு அவள் வருகைக்காகக் காத்திருந்தான்.

அவள் இங்கிருந்து புறப்பட்டுப் போகும்பொழுது இவனிடம் வந்து கொஞ்சு மொழியில் செல்லமாகச் சொல்லிக்கொண்டு போனாள். அந்தக் கொஞ்சுமொழி இவன் செவிகளில் இப்பொழுது ஓயாது ரீங்காரித்துக் கொண்டிருக்கின்றது.

அவள் இல்லாது எல்லாம் இழந்து தான் தனித்துப்போன நிலை இவனுக்கு. இப்போது என்ன செய்யலாமென்று அறியாத குழப்ப நிலை யில் அந்தரப்படுகின்றான். கொழும்பு சென்று அவளைப் பார்த்து வரவா? என மனசு இடையிடையே துடிக்கும். அவளுக்கு ஏதும் சுகவீனமோ? அதனால்தான் திரும்பி இன்னும் வராமல் இருக்கின்றாளோ! எதற்கும் ஒரு கடிதம் அவள் அனுப்பி வைத்திருக்கலாம். லீவு விண்ணப்பம் அதிபருக்கு அனுப்பி வைத்திருக்கத்தானே வேண்டும். அந்தக் கள்ளனி டம் இருந்து ஒன்றையும் அறிந்து கொள்ள இயலாது.

வித்தியாலயம் ஆரம்பித்து ஒரு வாரம். இவனுக்கொரு ஜென்மாந் திரமாகக் கழிந்துபோனது.

ஒரு தடவை அவள் வீடு போய் வந்தால்தான் என்ன!

அந்தக் குடும்பம் மிக நாகரிகமானது. இப்பொழுது அங்கு இவன் சென்றால் அவர்கள் அநாகரிகமாக நடந்து கொள்ளமாட்டார்கள்.

ஆனால் பதறிப்போய் அங்கு சென்று காரியம் சிதறிக் கெட்டுப் போகக்கூடாது என மனசோடு தடுத்துவிட்டான்.

வித்தியாலயம் வெறுமையாக, தெய்வமில்லாத கோயில்போல இவனுக்குத் தோன்றுகின்றது. இயல்பாக நடந்துகொள்ள இவனுக்கு இயலவில்லை. கடமைக்காக ஒவ்வொரு வகுப்புக்கும் போய் வந்து கொண்டிருக்கின்றான். முன்புபோல இவனால் உற்சாகமாகக் கற்பிக்க முடியவில்லை.

சக ஆசிரியர்கள் இவனைப் பார்த்து நையாண்டிபண்ண ஆரம்பித்து விட்டார்கள். தங்களுக்குள் இரகசியமாகப் பேசி நகைத்துக் கொண்டிருக் கின்றார்கள். சிலர் பகிடியாகச் சொல்வதுபோல நேரிலும் இவனைக் கண்டு கேலி பண்ணத் தொடங்கிவிட்டார்கள்.

இவன் அவர்கள் எவரையும் பொருட்படுத்துவதாக இல்லை. அவர்கள் இவனுக்கொரு பிரச்சினை அல்ல, சிரிக்கின்றவர்கள் தங்க ளுக்குள் சிரித்துக்கொண்டு இருக்கட்டும், அந்தச் சிரிப்பு அவர்கள் அனுபவங்களின், அவர்கள் அறியாத வெளிப்பாடாகவும் இருக்கலாம். அல்லது அவள் பின்னால் அலைந்து திரிந்து ஏமாந்துபோன வெப்பி சாரத்தின் வேக்காடாகவும் இருக்கலாம்.

எப்படி இருந்தால் என்ன!

அவர்கள் பற்றி யாருக்கு இப்போது கவலை!

அவள் இன்னும் ஏன் இங்கு வந்து சேரவில்லை?

அவளுக்கு என்ன நடந்தது!

அடுத்த வாரம் ஆரம்பமாகி இரண்டு தினங்கள் வேதனையுடன் மெல்ல மறைந்து போயின.

மறுநாள் நடுப்பகல்வேளை வழமைபோல வகுப்புகள் தொடங்கி விட்டன.

இன்றும் அவள் இல்லை. இவன் மனசு தீர்மானத்துக்கு வந்து விடு கின்றது.

அந்தச் சமயம் பார்த்து திடீரென அவள் அங்கு தோன்றுகின்றாள்.

அவளைக் கண்டு இவனுக்கு வேகமாக இதயம் அடிக்கிறது. எதிர் பாராமல் ஏற்பட்ட ஆனந்தத்தில் தன்னை மறந்து துள்ளிக் குதிக்க வேண்டும் போல ஒரே பரபரப்பு.

இனி என்ன அவள் வந்துவிட்டாள்.

இவர்கள் எல்லாம் வாய் அடைத்துப்போய் இருக்கவேண்டியது தான். இவனைத் தேடிக்கொண்டு வரப்போகின்றாள்.

அவள், அவள்தான்; எந்தவித மாற்றமும் அவளிடமில்லை; என்று முள்ள அந்தக் குதூகலம். குறும்பு, குறுகுறுப்பு, துள்ளல் எல்லாம்.

காலம் கடந்து கொண்டிருந்தது. அவள் இன்னும் இவனிடம் வரவில்லை. இவனால் அதைத் தாங்கிக்கொள்ள இயலவில்லை. அவள் . . . . புரிந்துணர்வுடன் இவனை அணுகும் அவள். . . . இப்போது வந்து விடுவாள்.

அதிபர் காரியாலயத்துக்குள் அவள் சென்றிருக்கின்றாள். அங்கு தான் முதலில் செல்ல வேண்டும். வரவைக் கைச்சாத்திட்டுப் பதிந்து கொண்டு வகுப்புக்குச் செல்ல வேண்டும். அவள் கைச்சாத்து இட்டு விட்டு இவனைத் தேடிக்கொண்டு வரப் போகிறாள்.

அவளோடு முதலில் என்ன பேசுவது?

அவள் மேல் சிறிய கோபத்தை வெளிப்படுத்தலாம்.

அவள் பிரிவினால் பட்ட துயரங்களை எல்லாம் அவளுக்கு இப்போது உணர்த்தவா முடியும்?

இவன் சிந்தித்துக் கொண்டு இருக்கின்றான்.

இவன் எதிர்பார்த்தது போல அதிபர் காரியாலயத்தில் இருந்து சற்று நேரத் தாமதத்தின் பின்னர் அவள் வெளியே வருகின்றாள். வருகின்றவள் நேரே இவனிடம் வர வேண்டாம்? அப்படி ஏதும் நடக்கவில்லை, அதிபர் காரியாலயத்தை அடுத்துள்ள வகுப்பறைக்குள் நுழைகிறாள்.

அவள் என்ன கிராமத்துப் பெண்ணா! சின்னச் சின்ன முரண்பாடு களுக்கும் அடிதடியில் இறங்குவதற்கு! கொழும்பு மாநகரத்து நவநாகரிக நங்கை. இத்தனை நாள் லீவில் நின்று இன்று வித்தியாலயம் வந்திருக்கும் அவளைக் கண்டு அந்த வகுப்பறைக்குள் நிற்கும் ஆசிரியர் நலம் விசாரித்திருப்பார். அவள் நாகரிகம் தெரிந்தவள். நாலு வார்த்தை பேசிக்கொண்டு வருவாள்.

அங்கிருந்து வெளியே வந்து அடுத்துள்ள வகுப்பறைக்குள் அவள் போகின்றாள். அங்கு நிற்கின்றவரும் கதைகொடுத்திருப்பார். அதன் பிறகு அடுத்துள்ள அறைக்குள் செல்கின்றாள். இது என்ன கொடுமை! இவனிடம் அவள் வந்து சேருவதை வேண்டுமென்றே தாமதப்படுத்து கின்றார்களோ!

அவள் வருகை தாமதப்பட்டுக் கொண்டுவர, இவனுக்கு இதயம் வெடித்துவிடும்போலப் பொருமிக்கொண்டு வருகின்றது.

அப்பாடா! அவள் இப்பொழுது இவனைத் தேடிக்கொண்டு வருகின் றாள். அவளிடம் அதே நளினம். . . . . அதே நாகரிகம். . . . . அதே சிரிப்பு.

வகுப்பறையில் இருக்கும் மாணவர்கள் இருவரையும் மாறிமாறி அவதானமாகப் பார்க்கின்றார்கள்.

மனசில் எழும் ஆவலை அடக்க இயலாது இவன் பட்டென்று கதிரையை விட்டு எழுந்து, தன்னை மறந்து அவளை நோக்கி இரண்டடி எடுத்து வைக்கின்றான். அவள் ஒயிலாக மெல்ல நடந்து வந்து இவன் முன்னே நின்று, தோளில் தொங்கும் ஹான்பாய்க்கை மெல்லத் திறந்து அழைப்பிதழ் ஒன்றினை எடுத்து இவன் கையில் கொடுக்கின்றாள். "நீங்க கட்டாயம் வரணும். . . . . உங்களை எதிர்பார்ப்பேன்" சொல்லிக்கொண்டு அடுத்துள்ள வகுப்பறை நோக்கிப் போய்கொண்டிருக்கின்றாள்.

இவன் அவசர அவசரமாக அந்த அழைப்பிதழை விரித்துப் பார்க் கின்றான். மறுகணம் மெல்ல நகர்ந்து ஆசிரியர் மேசையை இறுகப் பிடித்துக் கொள்கின்றான். மலை ஒன்று புரண்டு இவன் தலைமீது வந்து விழுந்ததுபோல அதிரடித் திகைப்பில் கண்கள் இருண்டு கொண்டு வருகின்றன. மாணவர்கள் தன்னைக் கண்டு கொள்ளாத வண்ணம் கதிரையை நோக்கிச் சென்று தொப்பென்று அமருகின்றான்.

மீண்டும் மீளாத அந்தகாரம் சூழ்ந்த நரகில் இவன் தூக்கி வீசப்படு கின்றான்.

அதன் பிறகு திரும்ப அவள் அந்த வித்தியாலயத்துக்கு வரவே இல்லை. திருமணம் முடிந்து இடமாற்றமும் பெற்றுக்கொண்டு அவள் கொழும்பு போய்ச் சேர்ந்துவிட்டாள்.

அவள் இப்படி ஏன் நடந்து கொண்டாள்?

அவள் மனசார இவனை நேசிக்கவில்லையா?

இவன் யாருடைய அன்பையும் பெறுவதற்கு அருகதை அற்றவனா?

பெண்மனம் என்பது பிறர் கண்டு கொள்ள இயலாத சூக்மமா?

அதனைப் புரிந்த கொள்ளாது அவள் பின்னால் அலைந்த பித்தனா இவன்?

"அத்தி மலரும் அருங்காக்கை வெண்ணிறமும்
கத்து புனல்மீன் பதமும் கண்டாலும்? - பித்தரே
கானார் தெரியற் கடவுளருங் காண்பரோ
மன்னார் விழியார் மனம்"

எனச் சொல்லி இருக்கின்றார்களே! எவ்வளவு பெரிய உண்மை.

கடவுளால் கண்டுகொள்ள இயலாத பெண் மனம் இவனால் எப்படிக் கண்டுகொள்ளமுடியும்?

சில காலம் இவன் ஒதுக்கி வைத்திருந்த விவேகானந்தர், மகாத்மா காந்தியோடு சேர்ந்து பதினெண் சித்தர்களும் இவனுக்குத் துணைக்கு வந்து சேர்ந்தார்கள்.

# 26

இவன் சயிக்கிள் நெல்லியடியில் இருந்து புளியடிச்சந்தி நோக்கி வந்து கொண்டிருக்கின்றது. மதியம் தாண்டிப்போன வேளை, பசி வயிற்றைக் கிள்ள ஆரம்பித்து வெகு நேரமாகிறது. இனித் தாங்கிக் கொள்ள இயலாது, தாமதிக்காது வீடு போய்ச் சேர்ந்து கிடைப்பதை உண்டு பசியைப் போக்கிக்கொள்ளவேண்டும்.

ஆனால் வீட்டில் உணவு கிடைக்கும் என்று திடமாக இன்று நம்ப முடியாது. இவனுக்குரிய உணவை இவன் அறைக்குள் வைத்து பனை யோலைப் பெட்டி ஒன்றினால் மூடி வைத்து விடுவது அவள் வழக்கம். இவன் வீடு போய்ச் சேரும் நேரம் அந்த உணவை எடுத்து உண்ண வேண்டியதுதான். கடந்த இரவு இவனுக்கு உணவெதுவும் அங்கு கிடைக்கவில்லை. இவன் அறையில் உணவு கொண்டு வந்து அவள் வைக்கவில்லை. இவனுக்கு உணவு வைக்கப்படாது போனால் இதுபற்றி அவளிடம் இவன் கேட்பதில்லை. கேட்கப் போனால் "காசில்லை சமைக்க" என்றுதான் அவள் பதில் சொல்லுவாள். அவளும் மகளும் பட்டினி கிடக்க மாட்டார்கள் என்பது இவனுக்குத் தெரியும். தெரிந்துந் தான் என்ன! அது பற்றி எல்லாம் இவன் பேசுவதில்லை.

வீட்டுக்குப் போனால் அவள் இப்போது, "காசு கொண்டந்தனீங் களா?" என்றுதான் முதலில் கேட்கப் போகின்றாள். நேற்றைய தினமே, 'காசில்லை' எனச் சொன்னாள். அவள் கவனமெல்லாம் எப்பொழுதும் காசில்தான். காசு கைக்கு வந்து சேராது போனால் இவனுக்காக அவள் அடுப்பு மூட்டமாட்டாள். இவன் சம்பளப் பணம் வாங்கித்தான் அவள் அடுப்பு எரிக்க வேண்டுமென்றில்லை. இவன் அறியாமல் பணம் சேர்த்து, அதை வட்டிக்குக் கொடுத்து அவள் பெருக்கிக்கொண்டு இருக்கின்றாள். முதிசமாக நிறையக் காணி பூமி உள்ளவள் அவள். அந்த நிலபுலன் களில் இருந்து வரும் வருமானத்துக்கும் இவனுக்கும் சம்பந்தமில்லை என்பது அவள் கருத்து. சேர்ந்த பணம் செலவு செய்வதற்கல்ல, பெருக்குவதற்கே என்பது அவள் கொள்கை. பணம் ஒன்று மாத்திரம் அவள் பூசனைக்கும் மதிப்புக்கும் உரியது. அந்த எண்ணம் அவளுக்கு மாத்திரமல்ல, அவள் குடும்பத்து மனப்போக்கு அதுதான்.

அந்தக் குடும்பத்தில் அவளை மனைவியாக இவன் அடைந்திருப் பது எதிர்பார்க்காத ஒன்றுதான்.

பேபி தன் விளையாட்டுப் பொம்மையாகப் பாவித்து இவனைத் தூக்கி தூர வீசிவிட்டுப் போன பின்னர் ஆறு மாத காலம் கழிந்திருக்கும். யாழ்ப்பாணத்தில் இருந்து இவன் பெயருக்கே கடிதமொன்று வந்து சேர்ந்தது. அந்த வித்தியாலய ஆசிரியர்களுள் உறவினர்கள், நண்பர்க ளிடம் இருந்து கடிதம் வரப்பெறாத ஒருவன் உண்டென்றால் அது

இவன்தான். அப்படி இவனை அக்கறையாக விசாரித்து இவனுக்குக் கடிதம் எழுதி அனுப்பி வைப்பதற்கு யார் இருக்கின்றார்கள்? இவனுந் தான் உறவு தேடி யாருக்கு எழுதப் போகின்றான்? வந்திருக்கும் கடிதம் கண்டு இவனுக்கே வியப்பாக இருக்கிறது. அந்த கடிதத்தைப் பிரித்துப் படித்தபோது அந்த வியப்பு மேலும் அதிகரிக்கிறது. இவனுக்கு அதை நம்ப முடியவில்லை. இவனை மாப்பிள்ளை கேட்டு அவள் தமையன் இவனுக்குக் கடிதம் எழுதி இருந்தான். அந்தக் கடிதத்தைப் படித்துப் பார்த்து தனக்குள்ளே கேலியாகச் சிரித்துத் தூக்கி ஒருபுறம் போட்டு விட்டு இவன் சும்மா இருந்து விட்டான்.

அப்படி ஒரு கடிதம் தனக்கு வந்தது என்பது இவனுக்கு முற்றாக மறந்து போயிற்று. ஒரு மாத காலம் கழிந்து மீண்டும் ஒரு கடிதம் வந்து சேர்ந்தது. அப்பொழுதுதான் முதல் வந்திருந்த கடிதம் திரும்ப இவன் நினைவுக்கு வருகின்றது. இது என்ன? வங்கிக் கடனாளிக்கு இடையி டையே வந்துசேரும் நினைவுறுத்தல் கடிதம்போல் வந்து கொண்டிருக் கிறது? ஏதோ கடன் இருக்கிறதோ! ஒரு தடவை நினைத்துப் பார்த்தான். பிறகு தான் திருமணஞ் செய்து கொள்வதில் எந்தவித அக்கறையு மில்லாது அந்தக் கடிதத்தை முன்போலத் தூக்கிப் போட்டுவிட்டு அலட்சியமாக இருந்து விட்டான். அதன்மேல் இன்னும் இரண்டு மாத காலம் கழிந்திருக்கும் தவணை விடுமுறைக்காகப் பாடசாலைகள் மூடப் பட்ட சமயம். அவள் தமையன் இவனைத் தேடிக்கொண்டு இவன் தங்கி இருக்கும் வீட்டுக்கு வந்து சேர்ந்தான். அவனைக் கண்டபோது முன்னர் பார்த்த ஒரு முகமாக இவனுக்குத் தோன்றுகின்றது. பலாலி ஆசிரிய கலாசாலையில் விவசாய பாடநெறியில் பயிற்சி பெற்ற ஓர் ஆசிரியன். இவனுக்கு ஓராண்டு மூத்த மாணவன் என்பது அவனிடம் இவன் கேட்டறிந்து கொண்டான். யாழ்ப்பாணத்தில் இருந்து தன்னை மதித்து தேடிக் கொண்டு அவன் இப்படி வருவான் என்று இவன் எதிர்பார்க்க வில்லை. அவன் திடீர் வருகையில் இவன் மனசு குழம்புகிறது. தான் ஏதோ தவறு செய்துவிட்டதான குற்ற உணர்வு இவன் நெஞ்சைச் சுடுகிறது. அவன் எழுதிய கடிதங்களுக்கு இவன் பதில் எழுதி இருக்க வேண்டும். அப்போது மறுத்திருந்தால் இந்தச் சமயத்தில் இப்படித் தேடிக்கொண்டு இங்கு இப்போது வந்திருக்கமாட்டான். அப்படிச் செய்யாது அசட்டையாக அன்று இருந்துவிட்டது தான் செய்த தவறு.

அந்தத் தவறுக்குச் செய்யத் தகுந்த பிராயச்சித்தம் என்ன என்று இவன் சிந்தித்தான்.

அவன் வேண்டுகோளுக்குத் தான் என்ன பதில் சொல்லப் போகின் றேன் என்று யோசித்துக் குழம்பினான்.

இப்படி ஒரு திருமண பந்தம் தன்னைத் தேடி வந்து சேரும் என்று இவன் எதிர்பார்க்கவில்லை. திருமணம் செய்து கொள்ளவேண்டும்

என்னும் எண்ணம் இவன் மனசில் அணுவும் இருக்கவில்லை. அதனால் அவன் கடிதத்தை ஒருபுறம் தூக்கிப் போட்டுவிட்டு இவன் மௌனமாக இருந்தான்.

தங்கையின் புகைப்படம் ஒன்று கையோடு அவன் கொண்டு வந்திருக்கின்றான். உடல் ஊதிப் பருத்த ஒருவனாக அவன் இருக்கின்ற போதும் அவன் தங்கை அப்படி இல்லை. கொடிபோலத் தோன்றுகின்றாள். அவள் ஒரு கிராமத்துப் பூங்கொடி. பாசி படர்ந்த தங்கம், அவனுக்கும் தங்கைக்கும் உள்ள ஒரே ஒற்றுமை அவர்கள் மூக்குத்தான். அவர்களின் குறியீடாகக் கேலிச் சித்திரக்காரர் கண்களில் படத் தகுந்த கொழுத்துத் தடித்த மூக்கு.

அவளைப் பார்த்து வேண்டாம் என்று தட்டிக் கழிக்க இயலாது. வேண்டுமானால் முடிவு சொல்வதற்கு சற்றுக் கால அவகாசம் கேட்கலாம். ஆனால் அவன் ஒரு தீர்மானம் எடுத்துக்கொண்டு ஊருக்குத் திரும்புவதற்கு விரும்புகின்றான். அவன் பக்கத்தில் நியாயம் இருக்கிறது. இவனைத் தேடிக்கொண்டு இவ்வளவு தூரம் வந்திருப்பவன் தீர்க்கமான ஒரு முடிவை அறிந்துகொள்ளாமல் எப்படித் திரும்பிப் போவான்?

வாழ்க்கையில் வந்து வந்து போய்க்கொண்டு இருக்கின்றவர்களுக்கு மீண்டும் மீண்டும் ஏமாற்றத்துடன் வழிவிட்டுக்கொண்டு இருக்க வேண்டுமா என்ற அதிருப்தி வேறு இவன் மனசில் எழுகிறது.

ஆனால் மனோவின் ஆசீர்வாதம் இவன் இதயத்தில் ஆழப் பதிந்து இவனுக்கு நம்பிக்கை ஊட்டுகின்றது. "நீங்கள் ஒரு பெண்ணை மணந்து கொள்ளுங்கள். உங்கள் மனைவி நிச்சயமாக உங்களை நேசிப்பாள். நீங்கள் தேடிக்கொண்டிருக்கும் அந்த அன்பு அவளிடம் கிடைக்க வேண்டுமென்று கடவுளை நான் பிரார்த்திக்கின்றேன்" என அவள் ஆசீர்வதித்தாள். அவள் உண்மையான ஒரு பெண். மனம் நெகிழ்ந்து அவள் சொன்ன வார்த்தைகள் நிச்சயம் நிறைவேறத்தானே வேண்டும்.

இந்தச் சம்பந்தம் இப்பொழுது தேடிக்கொண்டு வருகின்றது. அந்தப் பெண் யார் என்று அறியாத இடத்தில் இருந்து வருகின்றது. ஆசிரியன் ஒருவனுக்கு அவள் தங்கை. முன்னர் அவனை இவன் அறிந்து வைத்திருக்காத போதும், அவன் இவனை அறிந்திருக்கின்றான். ஆசிரியனின் தங்கை படித்த, பழகத் தெரிந்த, பண்பான பெண்ணாக இருப்பாள். இவனைப் புரிந்து கொண்டு வாழத் தெரிந்தவளாகவும் இருப்பாள்.

மனைவி என்று வருகின்றவள் கணவனை நேசிக்காமலா இருப்பாள்? குழந்தைகள் தந்தைமீது அன்பு செலுத்தாமல் விட்டு விடுவார்களா?

பூரண மனத்திருப்தியுடன் அவள் அண்ணன் அங்கிருந்து புறப்படுகின்றான்.

"என்ன அவசரம்! இரண்டு நாள் தங்கிப் போகலாம்!" உரிமையோடு இவன் தடுக்கின்றான்.

"வெலிமடையிலே சொந்தக்காரற்ரை கடை இருக்கு. அவை எதிர் பார்ப்பினம்" அவன் சொல்லிக்கொண்டு கிளம்பிவிட்டான்.

பஸ் நிலையம் வரை வந்து அவனை பஸ்ஸில் ஏற்றி அனுப்புவ தற்காக இவன் கூட வருகின்றான். பஸ் நிலையம் நோக்கி அவன் பின்னால் இவன் நடந்துகொண்டு இருக்கின்றான். வேட்டி உடுத்தி யாழ்ப் பாணத்தில் இருந்து பிரயாணம் செய்து அவன் இங்கு வந்திருக்கின் றான். அவன் பின்புறத்தில் அந்த வேட்டியில் மேடிட்டு திரணையாகத் தோன்றும் அந்த முடிச்சு இவன் கண்களில் அப்போது படுகின்றது. இவன் வாயை நன்றாக இறுக மூடிக்கொண்டு உதட்டுக்குள் நகைத்த வண்ணம் அவனைப் பின்தொடர்ந்து வருகின்றான்.

மனசில் ஒட்டாத பட்டணத்து நாகரிக உறவு வேண்டாம், இதயத் தால் உறவாடும் கிராமியமே நெஞ்சுக்கு வேண்டும் என அப்பொழுது இவன் நினைத்துக் கொள்ளுகின்றான்.

இவன் சயிக்கிள் புளியடிச் சந்தியில் இருக்கும் அந்தத் தேநீர்க் கடைவரை வந்து விடுகிறது.

வீட்டுக்கு இப்பொழுது போனால் இவன் வரப்போகின்றானே என்று ஆவலுடன் எதிர்பார்த்து அவள் சோறா சமைத்து வைத்திருக்கப் போகின்றாள்? "கண்ட கண்ட கடைகளெல்லாம் திண்டு கொண்டு திரிகிறார். அவருக்கேன் சாப்பாடு" என்றுதான் அவள் சொல்லிக் கொண் டிருப்பாள். இப்போது வீட்டுக்குப் போவது வீண் அலைச்சல்.

சயிக்கிளை வழமைபோல நிழல் மரவள்ளியில் சார்த்திவிட்டு, ஹான்டிலில் தொங்கிக்கொண்டு இருக்கும் பாய்க்கைக் கழற்றிக் கையில் எடுத்துக்கொண்டு கடைக்குள் நுழைகின்றான்.

"ஐயா, வாங்கோ. . . . . வாங்கோ!" முதலாளி வழமைபோல வரவேற் கின்றார்.

இவன் உள்ளே சென்று கதிரை ஒன்றில் ஆறஅமர இருந்து, முகத்தில் வடிந்து கொண்டிருக்கும் வியர்வையை இரு கரங்களினாலும் அழுத்தி அழுத்தித் துடைத்து விடுகின்றான்.

"ஐயா நல்லாகக் களைச்சுப் போனியள். . . . . என்ன சாப்பிடப் போகிறியள்?"

"சம்பல் இருக்கா?"

"பாண் சாப்பிடப் போகிறியள்"

இவன் பாணை வெளியே எடுக்கின்றான். அவர் இவனிடம் அதை வாங்கி வெட்டத் தொடங்குகின்றார்.

"அரை றாத்தல் போதும்"

"சரி" சொல்லிக்கொண்டு அரைப்பங்கை வெட்டி இவனிடம் கொடுத்துவிட்டு, மீதியை மெல்லிய துண்டு துண்டாக அரிந்து ஒரு கோப்பையில் வைத்து, சம்பல் போட்டு இவன் முன் மேசைமீது கொண்டு வந்து வைக்கின்றார். மேசையில் இருக்கும் தண்ணீர்ச் செம்பை எடுத்து கைகளைக் கழுவிக்கொண்டு வந்தமர்ந்து, சிறிது நீரை முதலில் பருகிய பிறகு சாப்பிடத் தொடங்குகின்றான்.

பாண் என்றால் பண்டாரவளை சிங்ககிரி பேக்கரிப் பாண்தான். அதற்கு ஜாமும் வேண்டாம், பட்டரும் வேண்டாம், சம்பலும் வேண்டாம். எதுவுமில்லாமல் சும்மா சுவைத்துச் சாப்பிடலாம். இப்போதிருக்கும் பசிக்கொடுமைக்கு எது கிடைத்தால்தான் என்ன! பாணைத் தின்ற வண்ணம் இவன் நினைத்துக் கொள்ளுகின்றான்.

"ஐயாவுக்குக் குடிக்கிறதுக்கு. . . . .?"

"வேண்டாம். . . . . வேண்டாம்"

கோப்பையிலுள்ள பாண் முழுவதும் தின்று முடித்துவிட்டு, செம்பை எடுத்து வயிறு நிறையக் குளிர்ந்த நீரைப் பருகுகின்றான். மிகுதியாக வுள்ள பாணைப் பாய்க்குக்குள் வைத்துப் பத்திரமாக எடுத்துக்கொண்டு, "அப்ப வாறன்" என்று சொல்லிக்கொண்டு வெளியே வந்து சயிக்கிளை எடுக்கின்றான்.

நெஞ்சில் லேசாக வலிக்கிறது. நடுநெஞ்சில் வலிக்கக்கூடாது என்று எங்கோ படித்ததாக ஒரு ஞாபகம். நாளை டொக்ரருக்குக் காட்ட வேண்டும். இவன் தீர்மானித்துக் கொண்டு வடக்கு நோக்கி வந்து கொண்டிருக்கின்றான்.

# 27

பட்டினசபை நூலகத்துக்கு இவன் சயிக்கிள் வந்து சேருகின்றது.

நூலகத்துக்குள் இரண்டொருவர் மாத்திரம் இருக்கின்றார்கள். இந்த நேரத்தில் வழமையாகப் பலர் அங்கு வந்திருந்து ஏதாவது படித்துக் கொண்டு இருப்பார்கள். நூலகத்துக்கு வெளியே கூடிநின்று பேசிப் பொழுதுபோக்கும் இளைஞர்களையும் இன்று காணவில்லை. தேநீர்க் கடையிலும் வேறு யாரும் இருக்கவில்லை என்பதும் இப்பொழுதுதான் இவன் கவனத்துக்கு வருகின்றது.

என்ன நடந்தது?

வழமையாக வந்து கூடுகின்ற அவர்கள் எல்லோரும் எங்கே போனவர்கள்?

எங்காவது, ஏதாவது நடந்திருக்கும். அப்படி நடப்பதொன்றும் இப்போது இங்கு புதுமை இல்லை. இவன் தனக்குள் எண்ணிக்கொண்டு அன்றைய தினசரிகள் ஒவ்வொன்றையும் மேலோட்டமாகப் பார்க்கின் றான். பத்திரிகை படிப்பதும் சில சமயங்களில் சடங்காசாரம் போலத் தான். படிக்கின்ற செய்திகள் எதுவும் மனசில் ஒட்டாது. ஆனால் பத்திரிகை படித்து முடிந்துவிடும். இதுவரை படித்தது என்ன என்று மீட்டுப் பார்த்தால் ஒன்றுமே தேறி வராது. அது பத்திரிகைகளின் குறை யல்ல. படிக்கின்றவர் மனசின் பசையற்றநிலை. இவனும் பத்திரிகை களைப் புரட்டிக்கொண்டிருக்கின்றான். மனசு அதில் ஒன்றிப்போக மறுக் கின்றது. சலிப்புடன் புரட்டிக் கொண்டிருக்கும் அவன் விழிகளில் சிறிய கட்டுரை ஒன்றின் தலையங்கம் ஒன்றுபடுகின்றது. "அன்பைச் சுவைக் காத மனிதன் பரிதாபத்திற்குரியவன்" வாய்விட்டு அதைப் படித்துப் பார்க்கின்றான். மீண்டும் மீண்டும் அந்தத் தலையங்கத்தையே படிக்கின் றான். அந்த தலையங்கம் தாங்கி வந்திருக்கும் கட்டுரையைப் படிக்கும் ஆவல் இவன் நெஞ்சில் எழவில்லை. தலையங்கம் எல்லாம் இவனுக்கு உணர்த்துகின்றது.

மீண்டும் இவனுக்கு நெஞ்சு வலிக்க ஆரம்பிக்கின்றது.

பத்திரிகையை மூடி வைத்துவிட்டு நிமிர்ந்து பார்க்கின்றான். நூல கரைத் தவிர அங்கு வேறு யாரும் இல்லை. இவன் மெல்ல எழுந்து வெளியே வருகின்றான். வீதியில் போய் வந்துகொண்டிருக்கின்றவர்கள் தவிர அங்கும் வேறு யாரும் இல்லை.

இவன் வெளியே வந்து நூலகத்துச் சுவரில் சாய்ந்தவண்ணம் மெல்ல அமருகின்றான். யார் வரவையோ எதிர்பார்த்திருப்பவன்போல பாவனை பண்ணி இடையிடையே வீதியை நோக்குகின்றான்.

வீட்டுக்கு இப்போது போய் என்ன செய்வது!

அங்கு செல்வதும் இங்கே இருப்பதும் ஒன்றுதான்.

இப்பொழுது அங்கு போய்ச் சேர்ந்தால் அவள் இன்றைக்கும் கேட் கலாம்;

"நீங்கள் ஏன் சீதனம் வாங்க இல்லை?"

"நான் அதுக்காக வரயில்லை"

"அப்ப என்னத்தைத் தேடி வந்தனீங்கள்?"

இவனுக்குச் சொல்லமுடியவில்லைதான். எதைத் தேடி வந்தேன் என்பதனை எப்படி அவளுக்குச் சொல்லலாம்? சொன்னால்தான் அதை புரிந்துகொள்ளத் தகுந்தவளா அவள்?

திருமணத்துக்கு முன்னர் சில இலட்சங்களைச் சீதனமாக அவள் தமையனிடம் வாங்கி அந்தப் பணத்தைத் தன்னிடத்தில் தரவில்லை என்பது அவள் மனக்குறை.

"அம்மாவின்ரை தாலிக்கொடி, நகையளை எல்லாம் அவர் அடாசிப் போட்டார். அவர்தான் சாச்செலவு பார்த்தவராம். ஆம்பிளைப் பிள்ளை யள்தானே எல்லாம் பார்க்கிறது. தாயின்ரை நகைநட்டு பொம்பிளைப் பிள்ளையளுக்குத்தானே குடுக்கவேணும். எனக்கொரு நூல் தரயில்லை அவர். எனக்கெண்டு வந்தது வாய்பாத்தது. சரியான ஆம்பிளையள் எண்டால் விடுவாங்களே!"

வீட்டில் அவள் இப்படி மங்களம் பாடிக்கொண்டிருப்பாள். அவள் ஏச்சுப் பேச்சைக் கேட்டுக்கொண்டு இருப்பதற்கு இவனுக்கு முடிவ தில்லை.

அவளின் தாய் இறந்ததைத் தொடர்ந்து அவளுக்கும் அவள் அக்காவுக்கும் தமையனோடு இருந்த உறவு முற்றாக முறிந்துபோனது. இறந்துபோன தாய் விட்டுப்போன சொத்தில் தங்களுக்கு அவர் பங்கு தரவில்லை என்பதுதான் இவர்கள் இருவர் மனசிலுமுள்ள வெப்பிசாரம்.

பணம் சம்பாதிப்பதற்கான மார்க்கம் என்ன என்பது அந்தக் குடும் பத்தில் தோன்றிய அனைவரும் பிறக்கும்போதே அறிந்த இரகசியம். தனக்கென்று ஒரு தொழில் இல்லாத பெண்ணாக இருந்தாலும் ஒரு நாளில் ஒரு பத்து ரூபாவேனும் சம்பாதிக்காது இருந்துவிட்டால் அவளுக்கு அன்றிரவு உறக்கம் வராது.

அவர்கள் மச்சமாமிசம் உண்ணாத சைவக்காரர்.

ஆனால் கோழி வளர்த்து முட்டை விற்பார்கள்.

பசு வளர்த்து பால் வியாபாரம் செய்வார்கள்.

புழுங்கல் நெல்லை உரலில் இட்டுக் குற்றி, 'குத்தரிசி' அதிக விலைக்கு விற்பார்கள்.

பனை மரங்களில் இருந்து பதநீர் இறக்கும் காலம் வந்துவிட்டால், தங்கள் பனை மரங்களைச் சீவற் தொழிலாளிக்குக் கொடுத்து ஒன்று விட்டு ஒருநாள் அவனிடமிருந்து தங்களுக்குரிய பதநீரைப் பெற்று, அடுப்பு மூட்டி இரவுபகலாக அதனைக் காய்ச்சி பாணி ஆக்குவார்கள். அந்தப் பாணியிலிருந்து பனங்கட்டி தயாரித்து விற்பார்கள். அல்லது புகையிலை உற்பத்தி செய்கின்றவர்களுக்குப் பாணியாகக் கொடுப்பார்கள். பனங்காய்களை அக்கறையாகச் சேகரித்து ஓரிடத்தில் பாத்திகளாகப் போட்டு பின்னர் கிழங்கு கிண்டி பச்சையாக ஒரு பகுதியைக்

கொடுப்பார்கள். கிழித்து வெயிலில் காயப்போட்டு ஒடியலாக்கிக் காசாக்கு வார்கள். கிழங்கை அவித்து, கிழித்து வெயிலில் காயவைத்து புழுக் கொடியல் தயாரித்து விற்பனை செய்வார்கள்.

இவைகள் எல்லாவற்றிற்கும் மேலாக பனாட்டுத் தயாரிப்பதில் அந்தப் பகுதியில் மிகக் கைதேர்ந்தது அந்தக் குடும்பம். பனம் பழங்கள் பழுத்து பனைகளிலிருந்து விழுவதற்கு ஆரம்பித்துவிட்டால் அந்த வளவிற்குள் பனாட்டுப் பந்தல்கள் முளைத்துவிடும். மூன்று முழ உயரத் தில் ஏழு எட்டு முழ நீளம், மூன்று நான்கு முழ அகலத்தில் பனாட்டுப் பந்தல்களை போட்டுக் கொள்வார்கள். களி மிகுந்த பனம் பழங்களைத் தேர்ந்தெடுத்து வந்து அந்தப் பந்தலின்கீழ் முதலில் அடுக்கி வைப்பார் கள். பெரிய பனையோலைக் கடகங்கள் இரண்டினை அருகருகே வைத்துக்கொண்டு பனம்பழங்கள் ஒவ்வொன்றையும் கையில் எடுத்து பருமுளை நீக்கிவிட்டு மரக்குற்றியில் அல்லது கல்லின்மீது நன்றாகக் குற்றிக்குற்றி நெகிழ்த்தெடுத்த பின்பு கருக்கை உரித்துப் போடுவார்கள். அதன் பின்னர் கடகத்திலுள்ள நீரில் அதைப் போட்டுப் பிசைந்து பிசைந்து களியைக் கறந்து எடுத்துக்கொண்டு வெறுங் கொட்டையை வெளியில் போடுவார்கள். இப்படிஅடுக்கி வைத்திருக்கும் பனம்பழங் களில் இருந்து களியைக் கறந்து எடுத்த பிறகு கடகத்தில் ததும்பி நிற்கும் பனங்களியை களிதுண்டினால் வெறுமையாகக் கிடக்கும் மறு கடகத்திற்குள் வடித்து விடுவார்கள். பனாட்டுப் பந்தலின் மேல் நீண்டு அகன்ற பனாட்டுப் பாய் விரித்து அந்தப் பாயின்மீது பினைந்தெடுத்த பனங்களியை வார்த்து கையினால் பரப்பித் தடவி சூரிய வெப்பத்தில் காய விடுவார்கள். ஒன்றுவிட்டு ஒருநாள் இப்படி பனங்களி பரப்பிக் காய விடப் படும். ஆறு அல்லது ஏழு தடவைகள் இவ்வாறு செய்து நன்றாகக் காய்ந்த பின்னர் கூர்ந்த சத்தகக் கத்தியினால் ஒரு சாண் சதுரத் தட்டுத் துண்டுகளாகக் கீறி பாயிலிருந்து கிளப்பி எடுப்பார்கள். அது தட்டுப் பனாட்டு என்று சொல்லப்படும். தட்டுப் பனாட்டைப் பனையோலைப் பெட்டியில் அடுக்கிக்கொண்டு தாய் சந்தைக்குப் போவாள். செத்தல் மிளகாயில் சம்பல் அரைத்து தட்டுப் பனாட்டின் மேல் வைத்துக்கொண்டு பனாட்டைப் பிய்த்துப் பிய்த்து சம்பலில் அதைத் தொட்டு உண்பது ஒரு சுவைதான்.

அவர்கள் தயாரிக்கும் பாணிப் பானாட்டு இன்னொரு விசேஷம். தட்டுப் பனாட்டைச் சிறுசிறு துண்டுகளாக வெட்டி எடுப்பார்கள். பத நீரைக் காய்ச்சி வைத்திருக்கும் பனம்பாணிக்குள், இடித்தெடுத்த மிளகு சீரக மா, வறுத்தரிசி என்பவைகளைப் போட்டுக் கலக்குவார்கள். அதன் பிறகு சிறுசிறு துண்டுகளாக வெட்டி எடுத்த பனாட்டை அதனுள் இட்டு நன்றாகப் புரட்டி எடுத்ததும், பாணிப் பனாட்டுத் தயாரித்து முடிந்து விடும். அந்தப் பனாட்டை மண் பானையில் இட்டு மொத்தமாக விற்பனை செய்வார்கள். சில சமயங்களில் தட்டுப் பனாட்டுப்போலச் சந்தைக்குக் கொண்டுசென்று பூவரசம் இலைகளில் சிறுசிறு கூறுகளாக வைத்து

பாணி ஒழுக ஒழுக விற்பனை செய்வாள் அவர்கள் தாய். பாணிப் பனாட்டின் சுவை அதனை உண்டவர்கள்தான் அறிவார்கள். யாழ்ப் பாணத்து அதிவிசேஷங்களுள் ஒன்று இந்தப் பாணிப் பனாட்டு.

பணம் சம்பாதிக்கத் தெரிந்த அந்தக் குடும்பத்துப் பெண்கள் வாழ்க்கையின் வேறு சுகங்களை அனுபவிக்க அறியாதவர்கள். நாகரிக மாக நல்ல சேலை உடுத்திக்கொண்டு வெளியே அவர்கள் சென்றது இவன் கண்டதில்லை. திருமணமான ஆரம்ப காலத்தில் மனைவியைக் கொஞ்சம் மாற்றி அமைக்க முயற்சித்துப் பார்த்துத் தோற்றுப்போனான்.

இவன் எதைச் சொன்னாலும், "ஏன் வீண்சிலவு? உங்களுக்கு ஊதாரிக் குணம்" என்று இவன் மீது அவள் பழி சுமத்துவாள்.

அவர்கள் சிக்கனத்துக்கு நல்ல உதாரணம் அந்த வீட்டு வளவுக்குள் தோண்டி இருக்கும் கிணறு. அவள் குடியிருக்கும் வீட்டு வளவுக்கும் அவள் அக்கா குடியிருக்கும் வளவுக்கும் இடையே எல்லையாக இரண்டு நிலத்தையும் பிரிக்கிறது ஒரு பொது வேலி. அந்த எல்லை வேலியை மையவிட்டமாகக் கொண்டு அரைக் கிணறு அவள் நிலத்திலும் மிகுதி அரைப்பாகம் அவள் அக்கா நிலத்திலுமாகத் தோண்டி விட்டிருக் கின்றார்கள். கிணற்றுக்கு மேலே முகமறைப்பாக ஒரு தகர வேலி. அவளுக்கும் அவள் சகோதரிக்கும் அரை அரைக் கிணறு சொந்தம்.

அவள் தாய் உயிரோடு வாழ்ந்த காலத்தில் இரண்டு நாள் அவள் வீட்டில் ஒற்றுமையாகத் தங்கி இருப்பாள். இருந்தால்போல அவளோடு முரண்பட்டுக்கொண்டு மூத்த மகளைத் தேடிக்கொண்டு அடுத்த வீடு போய்ச் சேர்ந்து விடுவாள். அவளுக்கும் தாய்க்குமிடையே மனக்கசப் புக்குரிய காரணம் என்ன என்று ஆராயப்போனால், ஒரு நெருப்புக்குச்சு காரணமாக இருக்கும். மூத்த மகளோடும் சில நாட்கள்தான், அங்கும் முரண்பட்டுக் கொண்டு பின்பு அவளிடம் திரும்பி வருவாள்.

மூத்த மகளோடு அவள் கணவன் என்பவன் இப்போது இல்லை. அவன் வெலிமடையில் யாழ்ப்பாணத்து முதலாளி ஒருவரின் கடையில் விற்பனையாளனாக இருந்தான். ஆண்டுக்கணக்காக அவன் ஊருக்கு வந்து போகாது அங்கு தங்கி இருப்பான். வெளிநாட்டில் இருந்து வரு பவன் போல எப்பொழுதாவது ஒரு சமயம் ஊருக்கு வந்து இரண்டொரு தினங்கள் தங்கி இருந்துவிட்டு மீண்டும் திரும்பிப் போய் விடுவான். அநேகமாக ஊரிலுள்ள கோவில் கொடியேறும் சமயம் வருவான். அப்பொழுது வந்தால் அவனுக்குப் பிரியமான பனங்கள்ளும் பருகலாம். அவனுக்குக் குழந்தை குட்டிகளும் இல்லை. ஆனால் மனைவியான வளுக்குக் காசு அனுப்பி வைப்பதற்கு என்றும் அவன் தவறுவதில்லை.

இப்போது நோயாளியாகி ஊரோடு திரும்பி வந்தான். வீட்டோடு வந்து சேர்ந்து இரண்டு வாரம் கழிந்திருக்கும். மனைவி நச்சரிக்க ஆரம் பித்து விட்டாள்.

“உழைச்சு ஆராருக்கோ குடுத்திட்டு இஞ்சை வந்து கிடக்கிறார்”

“சும்மா இருந்து தின்ன இஞ்சை என்ன கொட்டிக் கிடக்குது?”

“தங்கச்சிக்கும் பிள்ளையளுக்கும் குடுத்துப்போட்டு திண்ணைக்குப் பாரமாகக் கிடக்கிறார்”

“மலடனை என்னத்துக்கு இஞ்சை!”

“எந்த நேரமும் வயித்துக்குக் கொட்டினபடிதான்”

“இதிலே கிடந்து செத்தால் சா சிலவுக்கு என்ன வைச்சிருக்கிறாய்?”

இடையிடையே இப்படி அவன் நெஞ்சை புண்படுத்திக் கொண்டிருந்தாள். இனிப் பொறுக்க இயலாதென்ற நிலையில் அவன் வீட்டை விட்டுப் புறப்பட்டுப் போய்விட்டான்.

பனங்காய்கள் பழுத்து விழும் காலத்தில் இவன் மனைவியும் சகோதரியும் நன்றாக இருள் கலைய முன்னர் எழுந்து பனையோலைக் கடகங்களைக் கையில் எடுத்துக்கொண்டு தங்களுக்குச் சொந்தமான பனங்காணிகளை நோக்கிப் போவார்கள். அனேகமாக எல்லாக் காணி நிலங்களும் சொரியலாக இருவருக்கும் சொந்தம். ஒரு காணியிலுள்ள பனைகளை இருவரும் பிரித்தெடுத்துக்கொண்டு ஆட்சி பண்ணுகின்றார்கள். ஒருவருக்குரிய பனையில் இருந்து விழும் பனங்காயை மற்றவர் எடுத்துக்கொள்ளக்கூடாது. அப்படி எடுத்தால் வீண் சச்சரவு.

ஒரு நாள் காலையில் எழுந்து இருவரும் ஒற்றுமையாகப் பனங்காய் பொறுக்கி வரப்போனார்கள். திரும்பி வரும்பொழுது இருவரும் சண்டையிட்டுக்கொண்டு வந்தார்கள். அக்காவுக்குரிய பனையில் இருந்து விழுந்த ஒரு பனங்காயைத் தங்கை எடுத்துவிட்டாளாம். பனங்காணிக்குள் ஆரம்பித்து வாய்ச்சண்டை வழிக்கு வழி வளர்ந்து வந்து வீட்டிலும் ஓயவில்லை. அக்கா தங்கை இருவருக்குமிடையில் இப்பொழுது பேச்சு வார்த்தை இல்லை. இருவரும் தங்கள் தங்கள் வீட்டு வளவுக்குள் நின்றுகொண்டு அடுத்த வளவுக்குள் வாய்க்கல்லை வீசிக்கொண்டிருப்பார்கள். இரண்டு வளவுகளுக்கும் எல்லையாக இருக்கும் நடுவேலி தாண்டி கோழி உள்ளே புகுந்து விட்டால் சண்டை. ஆடு நுழைந்துவிட்டால் சண்டை. முட்டையைக் காணவில்லை என்று ஏசுவார்கள். முருங்கையிலே காயைக் காணவில்லை என்று திட்டுவார்கள்.

இந்தச் சண்டை சச்சரவுகள் தோன்றுவதற்கெல்லாம் காரணம் ஒரே ஒரு பனங்காய்.

‘ஒரு பனங்காய் என்றால் அது என்ன பெறுமதி குறைந்ததா? அதன் களியைப் பிழிந்தெடுத்து ஒரு தட்டுப் பனாட்டுத் தயாரிக்கலாம்.

முக்காளிப் பனங்காயின் மூன்று விதைகளில் இருந்தும் மூன்று கிழங்கு கள் முளைத்து வளரும். கிழங்கைக் கிண்டி எடுத்த பின்னர் அதன் ஊமல்கள் விலைக்கு விற்கலாம். பருமல் வீட்டுத் தேவைக்கு அடுப் பெரிக்கலாம். இப்பொழுது சொல்லுங்கள் ஒரு பனங்காயின் பெறுமதி என்ன என்று?' என அவர்கள் கேட்கக்கூடும்.

அவர்கள் சண்டை சச்சரவுகள் இவனுக்கு வேடிக்கையாக இருக்கும். சில சமயங்களில் சுவாரசியமாக அனுபவிப்பதற்கும் இவன் தன்னைப் பழக்கப்படுத்திக் கொண்டுவிட்டான்.

அவர்களுக்கிடையில் உருவாகும் சண்டையில் தலையிட்டு சமரசம் செய்து வைப்பதற்கு இவன் போவதில்லை. அப்படித் தலையிடப் போனால் இவன்மீது வசைமாரி பொழிவார்கள். அதனால் அவர்கள் போடும் சண்டை சச்சரவுகளைக் கண்டும் காணாதவனாக இவன் இருந்து விடுவான்.

சகோதரிகள் இருவரும் ஒருவரை ஒருவர் அறியாமல் வட்டிக்குப் பணம் கொடுத்து வாங்கிக்கொண்டு இருக்கின்றார்கள்.

இப்படி எல்லாம் பொருள் தேடிக் கொண்டிருக்கும் அவள், இவன் சம்பளப் பணம் கைக்கு வந்து சேருவதற்குக் காலதாமதமானால் இவனுக்குக் காய்ச்சித் தரக் காசில்லை என்கின்றாள். இவைகளை எல்லாம் நினைத்துப் பார்த்து வேதனையுடன் இவன் தனக்குள் சிரித்துக் கொண்டிருக்கின்றான்.

அந்தப் பொதுசன நூல் நிலையத்துக்குப் பொறுப்பாக இருக்கும் நூலகர் நூல் நிலையத்தைப் பூட்டிக் கொண்டு புறப்படும் சமயம் இவன் அங்கு இருப்பதைக் கண்டு கொள்ளுகின்றார்.

"வீட்டுக்குப் போகவில்லையா?"

"ஒராள் வரவேணும். . . . . பார்த்துக் கொண்டிருக்கிறன்"

"சரி, இருந்து போங்கோ"

சொல்லிக்கொண்டு அவர் போய்விடுகின்றார்.

இவன் தனித்துப்போய் இருக்கின்றான். யாருக்காகவும் இவன் காத்திருக்கவில்லை. இனி யாருமங்கு வரப்போவதுமில்லை. இன்னும் சற்றுநேரம் தாமதித்துத்தான் இவன் வீடு போய்ச் சேரவேண்டும். மாலைப்பொழுது மறைந்து இருள் பரவ ஆரம்பிக்கின்றது. வீட்டுக்கு விளக்கேற்றும் நேரம் நெருங்கிக்கொண்டு இருக்கின்றது. இனிமேலும் அங்கு இருக்கக்கூடாது என்று எண்ணிக்கொண்டு இவன் அங்கிருந்து புறப்படுகின்றான்.

# 28

இவன் தேவரையாளி இந்துக் கல்லூரி வீதியில் மெல்ல மெல்ல ஊர்ந்து வந்து கொண்டிருக்கின்றான். அந்தக் கல்லூரி தாண்டி மேற்குத் திசை நோக்கித் திரும்பி வழமையான பாதையில் சென்றால், பூமகள் சனசமூகநிலையம் சென்றடையலாம். அந்தச் சனசமூக நிலையத்துக்கு முன் இவனுக்கு அறிமுகமானவர்கள் யாராவது சிலவேளை பொழுது போக்காகப் பேசிக்கொண்டு நிற்பதுண்டு. இவன் இப்பொழுது நேரே அங்கு சென்றால் சற்று நேரம் தரித்துநின்று அவர்களோடு பேசலாம். அதன் பிறகு சாவகாசமாக வீடு போய்ச் சேரலாம். ஆனால் யாராவது அங்கு நிற்பார்கள் என்று எப்படி நம்பிப் போவது? எதிர்பார்த்தது போல யாரும் இல்லாது போனால். . . . .? இவன் நினைத்துக் கொள்கிறான். சயிக்கிள் தொடர்ந்து செல்லாது ஆலங்கட்டை வீதியில் சிறிது தூரம் சென்றால் ஆலங்கட்டைச் சுடலை வருகின்றது. தேவரையாளி இந்துக் கல்லூரி தாண்டிச் சற்றுத் தூரம் நேரே சென்றால் பங்கு வேம்படிச் சுடலை வருகின்றது. இரண்டு சுடலைகளுக்கும் மிக நெருக்கமாக இரண்டு கள்ளுத் தவறணைகளை நிறுவி இருக்கின்றார்கள். சுடலை களுக்கும் கள்ளுத் தவறணைகளுக்கும் அப்படி என்ன மிக நெருக்க மான உறவு? சுடலையில் பிறப்பது சுடலை ஞானம் என்பது போன்று கள்ளால் வரும் போதை ஞானம் ஒன்று உண்டல்லவா? சுடலையும் கள்ளுத் தவறணையும் ஞானம் பிறக்கும் பூமிகள்தான். சுடலைக்குள் புகுந்து நின்றால் ஞானம் வரும். கள்ளுத் தவறணைக்கு அருகில் வந்தாலும் ஞானம் பிறக்கும்போல இவனுக்குத் தோன்றுகின்றது.

சுடலைக்கு அருகேயுள்ள கள்ளுத் தவறணைவரை இவன் வந்து சேருகின்றான். சற்றுத் தூரத்தில் வரும்போது அந்தத் தவறணையில் இருந்து எழுந்து கொண்டிருக்கும் நாடகப் பாடல்கள் இவன் செவிகளில் வந்து விழுந்தன. இப்பொழுது வெகுதெளிவாக அந்தப் பாடல்களைக் கேட்பதற்கு முடிகின்றது. இவன் தவறணைக்கு எதிரில் சயிக்கிளில் இருந்து இறங்கி வீதி ஓரத்தில் நிற்கின்றான். தவறணைக்குள் இரண்டு குப்பி விளக்குகள் எரிந்து கொண்டிருக்கின்றன. அந்த விளக்குகளின் ஒளியில் பலர் கூடியிருந்து கள்ளுப் பருகுகின்றார்கள். அவர்களில் ஒருவர் காலை மடித்து தகரப்பேணி ஒன்றை அதன்கீழ் வைத்து, தலையை அசைத்தசைத்து தன்னை மறந்து மிருதங்கம் அடித்துக் கொண்டிருக் கின்றார். இன்னொருவர் எழுந்து நின்று காத்தவராயன் கூத்துப் பாடல் களைப் பாவனையோடு பாடி நடித்துக்கொண்டு நிற்கின்றார்.

"தாலிபறி போகுதடி பார்வதியே பெண்ணே - உந்தன்
தலைவன் இங்கே மாளுகிறான் பார்வதியே பெண்ணே
கூறைபறி போகுதடி பார்வதியே பெண்ணே - உந்தன்
கொழுந்தன் இங்கே மாளுகிறான் பார்வதியே பெண்ணே"

இவனுக்கு அந்தப் பாடல்களைக் கேட்டபிறகு அங்கிருந்து அசைய முடியவில்லை. இசையின் வசமாகி தன்னை மறந்து இலயித்து நிற்கின் றான். அப்படி எவ்வளவு நேரம் நின்றிருப்பானோ! இவனுக்குள் இருந்தாற் போல ஓர் எண்ணம். தூர விலகி இதில் ஏன் நின்று கொண்டிருக்க வேண்டும்? உள்ளே போய் அவர்களோடு ஒருவனாகச் சேர்ந்திருந்து இசை இன்பத்தை அனுபவிப்பதில் என்ன தவறு? அவர்களிடம் இருந்து பெருகிவரும் இசைவெள்ளத்தில் மூழ்கி நெஞ்சம் திளைக்கலாம். ஆனால் அவர்களுடன் நெருக்கமான உறவு மாத்திரம் வைத்துக் கொள்ளக்கூடாது என்பது எவ்வளவு போலித்தனம்? அப்படியான ஒரு போலி மனிதனல்ல தான் என இவன் தீவிரமாக எண்ணுகின்றான்.

இவன் சயிக்கிளைத் தவறணைக்கு முன்னுள்ள வேலியில் சார்த்தி விட்டு வேகமாக உள்ளே போய்த் தரித்து நிற்கின்றான். இவன் திடீர் வருகை கண்டு அவர்கள் மத்தியில் ஏகப்பட்ட வரவேற்பு; புதிய உற்சாகம் பிறக்கின்றது.

"மாஸ்ரர் வாங்கோ. . . . . மாஸ்ரர் வாங்கோ. . . . ."

"ஸேர், அப்பிடி இருங்கோ"

"ஸேருக்கும். . . . . ஒண்டு. . . . ."

"டேய், மடையா! ஸேர் குடிக்கிறதில்லை"

"அப்ப. . . எங்கடை பாட்டு ஸேரை இழுத்துக்கொண்டு வந்திருக்கிது"

"அப்பிடியா. . . . .?"

அவர்களிடம் மேலும் உற்சாகம் தோன்றுகிறது. இதுவரை பாடிக் கொண்டிருந்த காத்தவராயன் பாடல்களைத் தொடர்ந்து சத்தியவான் சாவித்திரி, அரிச்சந்திர மயான காண்டம், பக்த நந்தனார் இசை நாடகப் பாடல்களைப் பாடி நடித்து அரங்கேற்றுகின்றார்கள். இவர்களுடைய உலகம் எவ்வளவு மகிழ்ச்சியானது? அவர்கள் எவ்வளவு மகிழ்ச்சியான மனிதர்கள். இவர்களிடம் பொய் இல்லை. முகமூடி இல்லை. இவர் களைப்போல் இருப்பதற்கு ஏன் முடியவில்லை? இவன் எண்ணிக் கொண்டிருக்கும்போது ஒருவன் பருகிக்கொண்டிருக்கும் பிளாஸ்ரிக் கப்பை கையில் ஏந்தியவண்ணம் இவன் அருகே வந்து அமருகின்றான்.

"ஸேர் குடிக்கிறதில்லை எண்டு எனக்குத் தெரியும். எண்டாலும் ஒரு மிடறு. . . . ."

"மச்சான் மாஸ்ரரை ஆய்கினை பண்ணாதே"

"இல்லை மச்சான், ஸேர் ஒருக்கால் ரேஸ்ட் பண்ணிப் பாக்கட்டும்"

இவன் மௌனமாக இருக்கின்றான்.

அவன் கையில் வைத்துக்கொண்டிருக்கும் 'கப்'பில் வாய் வைத்து ஒரு தடவை பருகிக்கொண்டு, இவனிடம் "ஸேர், பிளீஸ். . . ." என நீட்டு கின்றான்.

அவன் வேண்டுகோளை நிராகரிக்க இவனுக்கு இயலவில்லை. அவனிடம் இருந்து அதை வாங்கி ஒரு தடவை பருகிக்கொண்டு திரும்ப வும் கொடுக்கின்றான். இன்னொருவன் பொரித்த மீன் துண்டு ஒன்றைக் கொண்டு வந்து "மாஸ்ரர் பிளீஸ். . . . ." என நீட்டுகின்றான். அந்த மீன் துண்டை இவன் சுவைத்துத் தின்று கொண்டிருக்கும்போது மீண்டும் கள்ளேந்தி கப்பை நீட்டியவண்ணம் அவன் "பிளீஸ். . . . ." என வேண்டுகோள் விடுகின்றான். "வேண்டாம்" என இவன் மறுத்துவிட்டு அந்த மீன் துண்டை ருசித்து உண்டு முடிக்கின்றான்.

"எட்டுமணி ஆகுது, இனிப் பூட்டப்போறம்" விற்பனையாளன் சொல்லிக்கொண்டு தவறணையை மூடுவதற்கு தயாராகின்றான்.

"கொஞ்சம் பொறப்பா" அவர்களில் ஒருவனின் வேண்டுகோள்.

"எட்டு மணிக்குப் பிறகு திறந்து வைச்சிருக்கக்கூடாது"

மிச்சச் சொச்சமாகக் "கப்பில்" வைத்துக் கொண்டிருக்கும் கள்ளு முழுவதையும் அவசர அவசரமாக எல்லோரும் பருகி முடிக்கின்றார்கள்.

"மாஸ்ரர் நாளைக்கும் வாருங்கோ! நாடகம் நடத்துவம்"

இவன் சிரித்துக்கொண்டு அங்கிருந்து கிளம்புகின்றான்.

இனி எங்கே வீட்டுக்குத்தான்.

பழகிப்போன அந்தப் பாதையில் மெல்ல வந்து வீட்டை அடைகின் றான்.

வீடு இருளில் மூழ்கிக் கிடக்கின்றது.

சயிக்கிளைத் தூக்கி விறாந்தையில் நிறுத்திவிட்டு அறைக்குள் நுழைகின்றான்.

வியர்வையில் நனைந்து கிடக்கும் சேட்டைக் கழற்றி ஒரு மூலையில் வீசிவிட்டு, நிலத்தில் சரிந்து இருளை வெறித்தவண்ணம் கிடக்கின்றான். உடலெங்கும் வியர்த்து, வியர்வை நீராகப் பெருகி வழிகின்றது. நடு நெஞ்சில் லேசாக வலிக்கிறது. "நேசிக்கப்படாதவன் பரிதாபத்துக்குரி யவன்" மாலையில் பத்திரிகையில் படித்த வாக்கியம் மீண்டும் நினைவுக்கு வருகிறது.

அவள் அடுத்துள்ள அறைக்குள் இப்பொழுது படுத்துக் கிடக் கின்றாள்.

மகள் மனோ அவளோடுதான். மகள் அப்பாவை நெருங்கி வருவ தில்லை. அப்படி மகளை அவள் வளர்த்து உருவாக்கி விட்டிருக்கின்றாள்.

இந்த மகளாவது அப்பாவுக்கொரு முத்தம் தருவாளா?

மகள் என்ன! இவனைப் பெற்றவளே இவனுக்கொரு முத்தம் தந்த தில்லை.

மனைவி. . . . .?

எத்தனை கற்பனையோடு இவன் அவளிடம் வந்து சேர்ந்தான்!

"தித்திக்கும் முதலிரவில் நாணிக்கோணி

தேர்போல அசைந்து வந்து புதுப் பெண்போடும்

முத்தத்துக் கொப்பாக மூவுலகில் வேறெதுமில்லை"

என்னும் கவிதை தரும் இன்ப உணர்வு இவன் நெஞ்சில் நிறைந் திருந்தது. அந்தக் கவிதை தரும் இன்ப சுகம் ஒன்றே இவன் இதயத்தில் எஞ்சி நின்றது.

முத்தம் என்பது நெஞ்சு நிறைந்த நேசத்தின் முத்திரை.

அந்த முத்திரைக்காக இவன் கன்னங்கள் ஏங்குகின்றன. இவன் இதயம் ஏங்குகின்றது. ஒரு முத்திரை. . . . . ஒரேயொரு முத்திரை வாழ்வில் இதுவரை இவன் பெற்றதே இல்லை. அவளுக்குக் கொடுத்துக் கொடுத்து ஏமாந்து போனான்.

"நேசிக்கப்படாதவன் பரிதாபத்துக்குரியவன்" அந்தப் பரிதாபத்துக்கு உரியவர்கள் பலர் வெளியில் சொல்லிக் கொள்ள இயலாத குடும்ப உறவுகளுக்குள் கிடந்து அவஸ்தைப்படுகின்றார்களோ?

நூல் நிலையத்துக்கு முன் நின்று பேசிக் கொண்டிருந்த வேளை, அன்றொரு நாள் ஒருவர் இவனிடம் மெல்லக் கேட்டாரே.

"உங்களிடம் ஒன்றை அறிய விரும்புகிறேன்"

"தாராளமாகக் கேட்கலாம்"

"தவறாக. . . . ."

"எண்ணமாட்டேன் கேளுங்கோ"

"உங்கடை மகளுக்கு இப்ப பத்து வயதிருக்கும்"

"ஓமோம் அச்சொட்டாகச் சொல்லுகிறியள்"

"திருமணமாகி ஒரு வருடத்துக்குள்ளே பிறந்த குழந்தை"

"உங்களுக்கு நல்ல ஞாபக சக்தி"

அவர் இதன்மேல் கேட்பதற்குத் தயங்கி இவன் முகத்தைக் குறிப் பாக நோக்கியவண்ணம் நிற்கின்றார்.

அவருக்கு உண்டான தயக்கத்தை அவதானித்துக்கொண்டு “என்ன யோசிக்கிறியள்! கேளுங்கோ!” என இவன் தூண்டுகின்றான்.

இவன் என்னதான் சொன்னபோதும் அவர் மனசிலுண்டான தயக்கம் முற்றாக அவருக்கு நீங்கவில்லை.

“இல்லை, நீங்கள் தவறாக எண்ணக்கூடும்”

“அப்படி எண்ணமாட்டேன்” இவன் உறுதியாகச் சொல்லுகின்றான்.

அதன் பிறகு, “படித்தவர்கள் எதிலும் திட்டமிட்டுத்தான்” என்கின்றார் அவர்.

“ஓ. . . . . ஓ. . . . . இப்ப எனக்கு விளங்குது. படிச்சவர்கள்தான் திட்ட மிடாமல் நடக்கிறார்கள்”

“நீங்கள் என்ன சொல்லுகிறியள்?”

“எனக்குத் தெரிஞ்ச ஒரு ரீச்சர், ஒரே ஆண்டிலே இரண்டு தடவை பிரசவிச்சிருக்கிறா”

“ஓ. . . . . அப்பிடியா? கின்னஸ் சாதனைதான். அப்ப உங்கடை இடைவெளி கொஞ்சம் அதிகம் இல்லையா?”

“நான் சந்தோஷமாக இருந்திருந்தால் இன்னொரு குழந்தை பெற்றி ருப்பேன்”

அவர் முகம் வாடிப்போகின்றது.

இவன் தலைகுனிந்து நிறகின்றான்.

“மனோ. . . . . மனோ. . . . .”

அவள் பெற்ற குழந்தையாவது தன் பிஞ்சுப் பாதங்கள் தூக்கி தத்துப்பித்தன மெல்ல நடந்து வந்து இவனுக்கொரு முத்தம் தருமா?

இவனுள்ளே இருந்து எழுந்து கொண்டிருக்கும் இவன் இதயத்தின் குரல் அலை அலையாக மேலே பொங்கி மீண்டும் மெல்ல மெல்ல உள்ளே மடிந்து கொண்டிருக்கின்றது. அடுத்துள்ள அறையினுள் படுத்துக் கிடக்கும் மகளின் செவிகளில் எப்படித்தான் இந்தக் குரல் போய்விழும்?

அவள் செவிகளில் போய் விழுந்தும் என்ன?

இவனுக்கு நெஞ்சு வலிக்கின்றது.

விழிகள் இருண்டு மெல்ல மெல்ல மூடிக்கொண்டு வருகின்றன.

வியர்வையில் நனைந்து உடல் முழுவதும் குளிர்ந்து போகின்றது.

இவன் ஆத்மாவின் தாகம் அலைபோல மீண்டும் எழுகின்றது.

“மனோ. . . . . மனோ. . . . . மனோ. . . . .”

நிறைந்தது.

பூபாலசிங்கம் புத்தகசாலை
340, செட்டியார் தெரு, கொழும்பு - 11.
☎ 422321, 337313
வெள்ளவத்தை : ☎ 504266, 074 515775
இலண்டன் : ☎ 020 8470 4416

ISBN 955-9396-07-2